# யாழ்பாடி

## கலாசார மலர் - 4



யாழ்ப்பாணப் பிரதேச கலாசாரப் பேரவை

பிரதேச செயலகம் யாழ்ப்பாணம்.

2020

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்பாடி

## கலாசார மலர் - 4

## பிரதேச செயலகம் யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்பாடி

## கலாசார மலர் - 04

யாழ்ப்பாண பிரதேச கலாசார பேரவை

பிரதேச செயலகம்,

யாழ்ப்பாணம்.

2020

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விபரம்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | யாழ்பாடி கலாசார மலர் – 4 |
| பதிப்புரிமை | : | யாழ்ப்பாண பிரதேச கலாசார பேரவை,<br>பிரதேச செயலகம், யாழ்ப்பாணம். |
| வெளியீடு | : | யாழ்ப்பாண பிரதேச கலாசார பேரவை,<br>பிரதேச செயலகம், யாழ்ப்பாணம். |
| பதிப்பு | : | 2020 |
| பக்கங்கள் | : | xviii – 108 |
| பக்க அளவு | : | B5 |
| பிரதிகள் | : | 300 |
| அட்டைப்பட வடிவமைப்பு | : | கலாபூஷணம் ம. அன்ரன் யோசப் |
| நிதி அனுசரணை | : | பண்பாட்டலுவல்கள் திணைக்களம்<br>வடமாகாணம். |
| அச்சப் பதிப்பு | : | குரு பிறிண்டேர்ஸ்<br>39/2, ஆடியபாதம் வீதி,<br>திருநெல்வேலி.<br>தொ.பே : 021 222 8266 / 021 221 4777 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் தாய் வாழ்த்து



நீராருங் கடலுடுத்த நில மடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ் பரத கண்டமிதில்
தக்கசிறு பிறைநுதலும் தரித்த நறுந்திலகமுமே
தெக்கணமும் அதிற் சிறந்த திராவிட நல்திருநாடும்
அத்திலக வாசனை போல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ் மணக்க இருந்த பெருந் தமிழணங்கே!

பல் உயிரும் பல உலகும் படைத்து அளித்து துடைக்கினும் ஓர்
எல்லை அறுபரம் பொருள் முன் இருந்தபடி இருப்பது போல்
கன்னடமும் களிதெலுங்கும் கவின் மலையாளமும் துளுவும்
உன்னுதரத் தேயுதித்தே ஒன்று பல வாகிடினும்
ஆரியம் போல உலக வழக்கு அழிந்து ஒழிந்து சிதையா உன்
சீர் இளமைத் திறம் வியந்து செயல் மறந்து வாழ்த்துதுமே!

மனோன்மணியம் - பெ. சுந்தரம்பிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே!

வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே!

ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
இசை கொண்டு வாழியவே!

எங்கள் தமிழ்மொழி! எங்கள் தமிழ் மொழி!
என்றென்றும் வாழியவே!

சூழ்கலி நீங்கத் தமிழ் மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!

தொல்லை வினை தரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ்நாடே!

வாழ்க தமிழ் மொழி! வாழ்க தமிழ் மொழி!
வாழ்க தமிழ் மொழியே!
வானம் அறிந்த அனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழியவே!

மகாகவி சுப்பிரமணிய பாரதியார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண பிரதேச கலாசார பேரவை

**பதவி நிலையினர்**

| | | |
|---|---|---|
| தலைவர் | :- | திரு. எஸ். சுதர்சன் |
| உபதலைவர் | :- | திரு. இரா. செல்வவடிவேல் |
| செயலாளர் | :- | திருமதி. ம. மேர்சி சுஜந்தினி |
| பொருளாளர் | :- | திரு. பி. யூல்ஸ்கொலின் |
| செயற்குழு உறுப்பினர்கள் | :- | |

| | |
|---|---|
| திரு. கா. சுரேன் | திரு.பெ. ஸ்ரீகந்தநேசன் |
| திரு. A .பிராங்கிலின் | திரு. நீ. ம. பாலச்சந்திரன் |
| திரு. ம. அன்ரன் யோசப் | திரு. அ. றஜீவ் |
| திரு. கு. இராயப்பு | திரு. க. திருவம்பலம் |
| திரு. ந. தனேந்திரன் | திரு. அ. அல்போன்ஸ் |
| திரு. கி.மா. நெல்சன் | திரு. அ. யோசப் |
| திருமதி ந. சேர்ச்சிலம்மா | திரு. மீரா லெவ்வை லாபீர் |
| திரு. தொ. அருள்ராசா | திரு. பா. வின்சன்ற் |
| திரு. பொ. கரன்சன் | திரு. இ. விஜேந்திரன் |
| திரு. க. விஜயரெட்ணம் | திரு. பு. ஐயாத்துரை |
| செல்வி . நா. பவித்திராயணி | திருமதி. அப்துல் அசீஸ் நசீரா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் பிரதேச கலாசார பேரவை கீதம்

வாழிய வாழியவே - எங்கள் யாழ் பிரதேச
கலை கலாசார பேரவை வாழியவே - 02

கடல் படு திரவியம் தரை தரு பயிர் வளம்
ஆயிரம் ஆயிரமே - உடன்
அறிவியலொடு பல கலை வளம் இங்கே
வளர்வதும் ஆனந்தமே

பாணன் கலை பாடி பெற்ற பரிசெங்கள்
யாழ் மண் என மகிழ்ந்ததே - தினம்
நாமும் கலை பாடி பாரில் நிலைபெறவே
பணி பல புரிந்திடுவோம்

வாழி

கூத்தொடு பண்ணிசை நடனமும் வளமுற
வளருது யாமுனிலே - உடன்
சேர்த்துயர் கலைஞர்கள் மனமகிழ்த்தொன்றாய்
உயர்ந்திடும் நாளிதுவே

வாழி

மண்ணின் கலையாவும் விண்ணைத் தொட நின்று
வளர்ந்திடக் கரம் தொடுத்தே - யாழ்
மண்ணின் கலை பாரில் ஓங்கி உயர்ந்திடவே
உறுதியாய் உழைத்திடுவே

வாழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்க் குழு

## ஆலோசனையும் வழிகாட்டலும்

**திரு. எஸ். சுதர்சன்**

பிரதேச செயலாளரும், கலாசாரப் பேரவை தலைவரும்

பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்

**திருமதி. ம. மேர்சி சுஜந்தினி**

செயலாளர், கலாசார பேரவை,

கலாசார உத்தியோகத்தர்

பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்

| | | |
|---|---|---|
| திரு. இரா. செல்வவடிவேல் | - | உறுப்பினர் |
| திரு. கு. இராயப்பு | - | உறுப்பினர் |
| திரு. மீரா லெவ்வை லாபீர் | - | உறுப்பினர் |
| திரு.பெ.ஶ்ரீகந்தநேசன் | - | உறுப்பினர் |
| செல்வி. ப. தர்மினி | - | உறுப்பினர் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலரினினுள்ளே....


| | | |
|---|---|---|
| 01. | நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன முதல்வரின் அருளாசிச் செய்தி | ix |
| 02. | யாழ் மறைமாவட்ட ஆயரின் ஆசிச் செய்தி | x |
| 03. | மௌளவியின் ஆசிச் செய்தி | xi |
| 04. | அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி | xii |
| 05. | வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு செயலாளரின் வாழ்த்துச் செய்தி | xiv |
| 06. | பண்பாட்டலுவல்கள் திணைக்கள முன்னாள் உதவிப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி | xv |
| 07. | பிரதேச செயலாளரின் வாழ்த்துச் செய்தி | xvi |
| 08. | மலர் குழுசார்பாக | xviii |
| 09. | பரவசமான பண்பாட்டுப் பயணம்! | 01 |
| 10. | கலை வடிவங்கள் ஊடாக வகுப்பறைக் கற்றல் கற்பித்தல் .......... | 07 |
| 11. | வலிந்து முயல்வோம் வெற்றிக்காக! | 17 |
| 12. | தமிழாய் வாழ்வோம், எல்லாம் உனக்காக | 18 |
| 13. | பிரதேச மக்களின் சமய பண்பாடடு அம்சங்களோடு, இணைந்த ..... | 19 |
| 14. | பயணிப்போம் இன்றே நாகரிக பண்பாட்டுடனே | 22 |
| 15. | யாழ்ப்பாணக் கோட்டையின் அமைவிடச் சிறப்பும், வரலாற்றுத் தொன்மையும் | 23 |
| 16. | எங்கள் திருநாடே!! | 27 |
| 17. | பண்பாட்டு வளர்ச்சியில் கலைகளின் வகிபாகம் | 28 |
| 18. | பண்பாட்டைக் காத்திட இனித்திடும் பயணங்கள் | 32 |
| 19. | வளர்ந்து வரும் உலகில் பண்பாட்டை பேணுவோம் | 33 |
| 20. | அன்றும் இன்றும் | 37 |
| 21. | பண்பாடு மறவாதே........ | 38 |
| 22. | வளர்ச்சிப் பாதையில் பண்பாடு | 40 |
| 23. | புலம்பெயர் நண்பனுக்கு ஈழத்திலிருந்து வரையும் மடல் | 42 |
| 24. | படிமம் என்றால் என்ன? | 45 |
| 25. | நவீன உலகில் பண்பாட்டுடன் பயணிப்போம் | 52 |
| 26. | "தமிழர் பாரம்பரிய கடல்சார் விளையாட்டுக்களை மீட்டெடுத்தல்" | 54 |
| 27. | நவீன காலத்தில் பண்பாட்டுடன் பயணிப்போம் ! | 61 |
| 28. | நவீனத்துடன் பண்பாட்டு அடையாளங்களை பதிவாக்குவோம் | 62 |
| 29. | ஒளியினால் வரையும் ஒளிப்படக்கலை | 64 |
| 30. | நவீன வாழ்வியல் ஊடாக எம் பண்பாட்டை பாதுகாப்போம் | 66 |
| 31. | போர்க்கால அனுபவங்கள் | 68 |
| 32. | மலர் | 83 |
| 33. | ஈழத்து நூல்களை ஆதரித்தல்! | 89 |
| 34. | ஈழத்து திரைப்பட நடிகரும் நாடக நடிகருமானஅரிதாஸ் அவர்களுடனான...... | 92 |
| 35. | நவீனத்திலும் நலிவுறாத பண்பாட்டோடு பயணிப்பீர் பார்போற்ற | 94 |
| 36. | பண்பாட்டுடன் ஒன்றி வாழாமையால்...... | 96 |
| 37. | தொ(ல்)லை பேசி | 105 |
| 38. | நன்றிகளுடன் | 108 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
சிவமயம்
குருபாதம்

# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்



ஸ்தாபகர் :- ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்
(முதலாவது குருமஹா சந்நிதானம்)
ஆதீனகுரு முதல்வர் :- ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்
இரண்டாவது குருமஹா சந்நிதானம்

021 222 2870 ஸ்தாபிதம் : 1966

பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம், இலங்கை.



## அருளாசிச் செய்தி

அன்புள்ளவர்களுக்கு!

யாழ்ப்பாணப் பிரதேச செயலகம் யாழ்பாடி எனும் கலாசார மலரை வெளியிடுவது மகிழ்ச்சியைத் தருகின்றது. கலாசாரப் பேரவையின் பணிகளை வெளிப்படுத்தி 4ஆவது மலராக வெளியிடுவது யாழ்ப்பாணத்தின் அனைத்து மக்களையும் மகிழ்விக்கின்றது. யாழ்ப்பாண மக்களின் வாழ்க்கை, பண்பாட்டு மரபுகள், கலை இலக்கிய பணிகளை மேலும் வளர்க்கும் நிலையில் கலை சார்ந்த மக்களை ஊக்குவிப்பதாக இப்பணி அமைந்துள்ளது. இசைக்கருவி எனும் யாழை இசைத்து பரிசாகப் பெற்ற மண் யாழ்ப்பாண மண். அனைத்து உயிர்களுக்கும் இசையினால் வசப்படுகின்றன. இசையை ஆதாரமாக கொண்ட இப் பிரதேசத்தில் யாழ்பாடி எனும் நூல் இன்றைய பிரதேச செயலர் எஸ். சுதர்சன் தலைமையில் சிந்தனையான கட்டுரையுடன் வெளிவருவது மகிழ்ச்சிக்குரியதாகும். இப்பணியில் ஈடுபட்டிருக்கும் அனைத்து உள்ளங்களையும் வாழ்த்தி பாராட்டுகின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

**ஸ்ரீலஸ்ரீ சோமஸ்சுந்தர தேசிக**
**ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்**
ஆதீன குருமுதல்வர்
நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Rt.Revd.Dr.Justin B Gnanapragasam*
*Bishop of Jaffna*

*Bishop's House,*
*P.O.Box No. 02*
*Jaffna - Sri Lanka.*
**Tel: +94(0) 21 222 2649(O)**
**Email: gnanamjb48@gmail.com**

17.02.2020

# யாழ் மறைமாவட்ட ஆயரின் ஆசிச் செய்தி



யாழ்ப்பாண கலாச்சாரத்தின் பெருமையினையும், சிறப்பினையும் வெளிக்கொணருகின்ற "யாழ்பாடி கலாசார மலர் - 04" என்னும் சிறப்பு மலரினை "நவீன உலகில் பண்பாட்டுடன் பயணிப்போம்" என்னும் தொனிப் பொருளில் யாழ்ப்பாண பிரதேச கலாசாரப் பேரவை மீண்டும் வெளியீடு செய்கின்றமையையிட்டு ஆசிகூறுவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

யாழ்ப்பாண பிரதேசம் பல்வேறு எழுத்தாளர்களை, கலைஞர்களை இன்னும் கல்வியாளர்களை உருவாக்கியிருக்கின்றது. உருவாக்கிக் கொண்டும் இருக்கின்றது. பல்துறை சார்ந்த படைப்பாளிகளால் இப்பிரதேசத்தின் கலை, கலாசாரம், சமூக, வாழ்வியல், தொன்மைகள், நாட்டுப்புறவியல், ஆன்மீகம், மரபுரிமைகள் போன்ற வகையிலான கட்டுரை, கவிதை, சிறுகவிதை போன்ற ஆக்கங்களால் இம் மலர் அலங்கரிக்கப்பட்டுள்ளமை இம் மலரின் சிறப்பம்சமாகும். யாழ்ப்பாணத் தமிழர்களாகிய நாமும், நமது எதிர்கால சந்தத்தியினரும் எமது மண்ணின் அருமை பெருமைகளையும், எமது கலாசாரத்தின் பெறுமதிமிக்க அம்சங்களையும் பேணிப்பாதுகாத்து, அதை வளர்ச்சியடையச் செய்வதும் எமது தலையாய கடமையாகும். அந்த வகையில் இவ்வாறான இலக்கியப் படைப்புக்கள் வெளிவருவது காலத்தில் தேவையுமாகும். அத்தகைய ஒரு மகத்தான பணியை இம்மலர் வழியாக யாழ்ப்பாண பிரதேச கலாசாரப் பேரவை முன்னெடுப்பது பாராட்டத்தக்க ஒன்றாகும். இத்தகைய மகத்தான பணியை முன்னெடுக்கின்ற ஒவ்வொருவரையும் மனதார வாழ்த்தி இறை ஆசி கூறி நிற்கின்றேன்.

கிறிஸ்துவிலும் மரியன்னையிலும் பக்தியுள்ள

**பேரருட் திரு. கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம்**

யாழ் ஆயர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா

ALL CEYLON JAMIYATHUL ULAMA

(Council of Muslim Theologians)
Jaffna, Killinochchi Brabch

Sivala Palli Mosqu, Haathi Aboobakar Road, Moor Street, Jaffna.

# ஆசிச் செய்தி



"அளவற்ற அருளாலனும் அன்புடையோனுமாகிய இறைவனுக்கே! எல்லாப்புகழும்"

"அல்ஹம்துலிலாஹ்"

யாழ் மண்ணின் பெருமை பாடி ஆண்டுக்கொருமுறை சிறகடித்துப் பறக்கும் யாழ் பாடி கலாசார மலர் - 04 என்னும் சிறப்பு மலரினை யாழ்ப்பாண கலாசார பேரவை மீண்டும் வெளியீடு செய்கின்றமையை பாராட்டி ஆசி கூறுவதில் மகிழ்ச்சியடைகின்றேன். சாதி என்றும் மதம் என்றும் இனம் என்றும் பல்வேறு கூறுகளாக பிரித்தாளும் இவ்வுலகில் சாந்தியற்று மகிழ்ச்சியற்று வேகமாய் மலரும் மனித மனங்களில் அமைதியை ஏற்படுத்தும் ஆயுதமாய் எழுத்தும் என்னும் ஆயுதம் மூலம் இவ்வுலகமே சாந்தியடையும் வகையில் சிறந்த ஆக்கங்களை இம்மலர் தாங்கி காலத்தால் அழியாத கலைப் பொக்கிஷமாக காலத்தின் தேவையுணர்ந்து வெளிவருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஆதலால் இம்மலர் பரந்து விரிந்து பல பல மலர்களாக பூத்துக் குலுங்கிச் சிரிக்கவும் இதற்காக அயராது இரவு பகல் பாராது இன்முகத்துடன் பாடுபட்ட மலர்க்குழுவினருக்கும், இதற்காக முயற்சித்தோர், ஆக்கமளித்தோர், ஊக்கமளித்தோர் அனைவருக்கும் வள்ள அல்லாஹ் ஆலாவின் அருள் கலைநிறைவும் அவர்களுக்கான நலமும், வேண்டி பிரார்த்தித்து தமிழ்த்தாய் மண்ணின் தமிழ் பேசும் இனம் இந்து, கிறிஸ்தவ, முஸ்லிம் மக்கள் ஒற்றுமை உயர்ந்து இம் மலர் இன்னும் உயர்ந்து மணம் பரப்பிட இருகரம் ஏந்தி துவா செய்கின்றேன். ஆமீன்! ஆமீன்!! யாரப்பல் ஆலமீன் வஸ்ஸலாத்து வஸ்ஸலாம்!

**அல்ஹாஜ் ஏ.எம்.ஏ அஸீஸ் மௌலவி (காஸிமி)**

யாழ், கிளி மாவட்ட சர்வமத முன்னாள் தலைவர் (ஜே.பி) உலமா சபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

දිසාපති / දිස්ත්‍රික් ලේකම්
அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளர்
Government Agent / District Secretary

දුරකථනය
தொலைபேசி } 021-222 2235
Telephone

ෆැක්ස්
பக்ஸ் } 021-222 2355
Fax

E-mail: gajaffna@sltnet.lk

දුරකථනය පොදු
பொது தொலைபேசி } 021-222 2233, 021-222 2234
General Telephone

දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය, යාපනය.
மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.
District Secretariat, Jaffna.

| | | |
|---|---|---|
| මගේ අංකය / எனது எண் / My No. Jf/GA-Val/03/2019 | ඔබේ අංකය / உமது எண் / Your No. | දිනය / திகதி / Date 2020 /02/18 |

# யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி



**யாழ்பாடி - 4 கலாசார மலர் வரலாற்றில் தடம் பதிக்கட்டும்.**

வடக்கே நல்லூரையும் கிழக்கே தென்மராட்சியினையும் தெற்கே தீவகத்தினையும் மேற்கே வலிகாமத்தினையும் எல்லைகளாகக் கொண்டு யாழ்ப்பாண மாவட்டத்தின் தலைநகராய்த் திகழும் யாழ்ப்பாணப் பிரதேச செயலர் பிரிவானது வரலாற்றுப் புகழ் கொண்ட தொல்லியல் மையங் களையும் அமைதிக்கு வழிகாட்டும் வழிபாட்டிடங்களையும் தன்னகத்தே கொண்டமைந்ததுடன் நில வளத்தாலும் நீர்நிலைகளாலும் எழிலமைந்த பிரதேசத்தில் வாழ்கின்ற கலைஞர்களின் ஆக்கங்களைத் தாங்கி வெளிவருகின்ற யாழ்பாடி - 4 கலாசார மலரை வாழ்த்தி வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

இப்பிரதேசத்தில் வாழ்கின்ற கலைஞர்களினதும் வரலாற்று அம்சங்களினதும் தொல்லியல் எச்சங்களினதும் பதிவுகளை உள்வாங்கி பிரதேசத்தின் சிறப்பினை வெளிப்படுத்துவதுடன் பிரதேச பெருமைகளை அடுத்த சந்ததியினருக்கு கையளிக்கின்ற பெரும் முயற்சியாக யாழ்பாடி-4 கலாசார மலர் கொள்ளப்பட வேண்டும். ஒரு பிரதேசமானது தனது வளங்களையும் தொல்லியல் அம்சங்களையும் ஆவணப்படுத்துவது மட்டுமன்றி ஆக்கத்திறன் படைப்பாளிகளையும் ஊக்குவித்து அவர்களது படைப்பாற்றலை மேம்படுத்தும் முயற்சியினை மேற்கொள்வதும் பாராட்டப்படவேண்டிய ஒன்றாகும். இம்மலரில் காத்திரமான வரலாற்றுக் கட்டுரைகள், இலக்கியப் படைப்பாளிகளின் ஆக்கங்கள், பிரதேசத்தின் வளங்கள், கவிஞர்களின் கவிப்புனைவுகள் போன்ற பல்வேறு அம்சங்களை உள்ளடக்கியதாக யாழ்பாடி - 4 கலாசார மலர் மலரவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஒரு இனத்தின் பண்பாட்டு வாழ்வியலை அடுத்த சந்ததியினருக்கு கற்றுக் கொடுக்கும் அறிவியல் செயற்பாடாய் அமைவதே பண்பாட்டு விழாக்களின் மூலாதாரம் எனலாம். வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் நிதி ஒதுக்கீட்டிலும் ஆலோசனையிலும் இவ்வாறான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை பாராட்டத்தக்கதுடன் இத்தகைய வெளியீடுகளானது இலகுவில் நிறைவேற்றிக்கொள்ள முடியாத செயற்பாடாக இருக்கின்றமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவனத்திற் கொள்ளப்படக் கூடியது. மலருக்கு தேவையான ஆக்கங்களை பெறுவதிலிருந்து அதனை அச்சேற்றி உரிய முறையில் எதுவித பிழைகளுமின்றி வாசகர்களுக்கு கொடுக்கும் செயற்பாடானது பாராட்டப்பட வேண்டியதாகும். யாழ்பாடி - 4 கலாசார மலர் வெளிவருதற்கு உறுதுணை வழங்கிய பிரதேச செயலருக்கும் அவருடன் பின்நின்றுழைத்த நூலாக்கக் குழுவினருக்கும் வெளிவருகின்ற யாழ்பாடி - 4 கலாசார மலர் நீள நின்று சங்கிலித்தொடராய் நிலைக்க எல்லையிலாத எனது மனமார்ந்த வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நன்றி

**க.மகேசன்,**
அரசாங்க அதிபர்,
மாவட்டச் செயலகம்
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு
අධ්‍යාපන, සංස්කෘතික, ක්‍රීඩා සහ යෞවන කටයුතු අමාත්‍යාංශය
Ministry of Education, Cultural Affairs, Sports & Youth Affairs
வடக்கு மாகாண சபை. උතුරු පළාත් සභාව. Northern Provincial Council

செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
චෙම්මනි පාර, නල්ලූර්, යාපනය
Chemmany Road, Nallur, Jaffna

Website: www.np.gov.lk
e-mail: npplane@yahoo.com, npmoeplan@gmail.com


# வடமாகாணக் கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு செயலாளரின் வாழ்த்துச் செய்தி



யாழ்ப்பாண பிரதேச செயலகத்தால் வெளியிடப்படும் 'யாழ்பாடி - 04' பிரதேச மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி யடைகின்றேன். யாழ்ப்பாண பிரதேசத்தின் கலை, இலக்கியம், பண்பாடு, தொல்லியல், புவியியல் மற்றும் மக்களின் வாழ்க்கை முறை ஆகியவற்றை ஆவணப்படுத்தும் விதமாக இம் மலரானது அமைந்துள்ளமை பாராட் டத்தக்கதாகும்.

கூட்டுணர்வுடனான வாழ்வில் மக்கள் பின்னிப் பிணைக்கப்பட்டுள்ளனர். இதனால் சமூகத்தை சார்ந்தே வாழவேண்டிய கடப்பாடு மனிதர்களுக் குரியதாகும். ஒரு சமூகத்தின் நிலைப்பானது அதன் வாழ்க்கை முறைகளை அடுத்த தலை முறையினருக்கு வழங்குவதில் நிலை கொண்டுள்ளது. நல்ல சமூக மயமாக்கத்தின் மூலமாக சிறந்த மனிதர்களை உருவாக்க வேண்டிய பொறுப்பும் கடப்பாடும் எம் அனைவருக்கும் உரியதாகும். எமது எதிர்காலத்தின் சொத்துக்களான பிள்ளைகளை சரியான வழியில் வழிநடத்த சிறப்புற்று வாழ்வதற்கான வழிவகைகளை ஏற்படுத்திக் கொடுக்கும் பொறுப்பும் எமக் குரியதாகும். பிரதேசத்திற்கான சிறப்புக்களும் அதன் விசேட அம்சங்களும் மறைந்திருக்கக் கூடும். அவற்றை வெளிப்படுத்தி அதனை பலரும் அறியச் செய்யும் முயற்சியாக இம் மலர் அமையும் என நம்புகின்றேன். இன்றைய காலத்தின் தேவையாக எமது பண்பாடும் எங்களின் தொன்மங்களும் நமது தலை முறையினருக்கு எடுத்துச் சொல்ல வேண்டிய கடப்பாடு கொண்டது. இப் பிரதேசமானது சிறந்த வளங்களைக் கொண்டு காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. இப் பிரதேசத்தின் பண்பாட்டு அம்சங்கள், வரலாறு, தொல்லியல்,புவியியல் நிலமைகள், மற்றும் கலையம்சங்கள் ஆவணப்படுத்தப்படுவது பாராட்டுக்குரிய விடயம்.

இம்மலரானது தொடர்ந்தும் வெளிவர வேண்டும் என எல்லாம் வல்ல இறைவனை வேண்டி இச் செயற்பாட்டினை முன்னெடுத்து வரும் பிரதேச செயலர், கலாசார உத்தியோகத்தர் மற்றும் கலாசார பேரவையினர் அனைவருக்கும் எனது நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

இ. இளங்கோவன்
செயலாளர்,
கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை
மற்றும் இளைஞர் விவகார அமைச்சு. வடமாகாணம்.


செயலாளர் / ලේකම් / Secretary — 021-3202704
அலுவலகம் / කාර්යාලය / Office — 021-3202704 (Admn.), 021-3202568 (DSW), 021-3202281 (Plan), 021-3202309 (Acct)
தொலைநகல் / ෆැක්ස් / Fax — 021-2220794




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு
අධ්‍යාපන, සංස්කෘතික, ක්‍රීඩා සහ යෞවන කටයුතු අමාත්‍යාංශය
Ministry of Education, Cultural Affairs, Sports & Youth Affairs
வடக்கு மாகாண சபை, උතුරු පළාත් සභාව, Northern Provincial Council

செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்
චෙම්මනි පාර, නල්ලූර්, යාපනය
Chemmany Road, Nallur, Jaffna

Website: www.np.gov.lk
e-mail: npplanc@yahoo.com, npmoeplan@gmail.com


எனது இல / මගේ අංකය / My No. NP/03/09/Cul.Pro/2019 | உமது இல / ඔබේ අංකය / Your No. | திகதி / දිනය / Date

# பண்பாட்டலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி



யாழப்பாண பிரதேச செயலக கலாசாரப் பேரவையினால் வெளிவரும் "யாழ்பாடி - 04" எனும் கலாசார மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகிறேன். மக்கள் வாழ்வியலோடு பண்பாடு இரண்டறக் கலந்துள்ளது. சமூக இருப்பினடியாகவும், வரலாற்றுப் பார்வையோடும், மத அனுட்டானங்கள், நம்பிக்கைகளோடும் சமூக மேம்பாட்டிற்கு பிரதானமாக விளங்குவது பண்பாட்டியல் கூறுகளில் வகிபங்காகும் கலை மரபுகளே. இன, மதம் கடந்து மகிழ்விப்பின் பாடுபொருளாகவும் விளங்குகிறது.

வருடந்தோறும் மேற்கொள்ளும் முயற்சியின் விளைவாக யாழ்ப்பாண பிரதேச செயலக கலாசாரப் பேரவையினால் வெளிவரும் "யாழ்பாடி - 04" மலரும் கலையோடு இணைந்த பல சிந்தனைகளையும் பேராற்றல்களையும் வெளிப்படுத்துகிறது. கலை சார் விழுமியங்கள் தலைமுறைக்கு பயன்பட வேண்டுமென்ற நல்லெண்ணத்தின் விளைவாக வெளிவரும் இம் மலர் எதிர்பார்பிற்குரியது.

கலைச் செயற்றிட்டங்கள் சார்ந்தும் கலைஞர் கௌரவிப்புக்கள் சார்ந்தும், கலைத்திறன் போட்டிகள் சார்ந்தும் மேற்கொள்ளும் நடவடிக்கைகளுடான பெறுபேறுகள் இன்னும் கலை மீதான ஈடுபாட்டினையும் ஆர்வத்தையும் ஏற்படுத்துவதோடு பல கலைஞர்களை உருவாக்கவும் வழிவகுக்கும். இக் கலைஞர்களுடாகவே நம் பிரதேச கலையம்சங்கள் பேணி வளர்ந்து பாதுகாக்கப்பட வேண்டிய மனநிலைகளும் வலுப்பெறும்.

எனவே "யாழ்பாடி - 04" மலரூடாக வெளிக்கொணரும் பல ஆக்கங்கள் சமூகத்திற்கு பயன்படுவதோடு வாழ்வியல் நெறிமுறைகளை ஏற்கும் சிறந்த சமூகத்தை உருவாக்கும் என்பதில் ஐயமில்லை. எனவே பல்வேறு பயன்தரும் விடயங்களைத் தாங்கி பரிணமிக்கும் இம் மலரானது வெளிவர உழைத்த பிரதேச செயலாளர், மலர்க்குழு, கலாசார உத்தியோகத்தர் மற்றும் கலாசார பேரவை உறுப்பினர்கள் அனைவரையும் பாராட்டுவதோடு இம் மலர் சிறப்பாகவும் காத்திரமாகவும் வெளிவருவதையிட்டு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திருமதி. சுஜீவா சிவதாஸ்.**
உதவிப் பணிப்பாளர்,
பண்பாட்டலுவல்கள் திணைக்களம், வடக்கு மாகாணம்.


செயலாளர் / ලේකම් / Secretary: 021-3202704
அலுவலகம் / කාර්යාලය / Office: 021-3202704 (Admn.), 021-3202568 (DSW), 021-3202281 (Plan), 021-3202309 (Acct)
தொலைநகல் / ෆැක්ස් / Fax: 021-2220794





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேச செயலகம் - யாழ்ப்பாணம்
ප්‍රාදේශීය ලේකම් කාර්යාලය - යාපනය
Divisional Secretariat - Jaffna

Divisional Secretary

My No | Your No | Date 05.07.2019


# பிரதேச செயலாளரின் வாழ்த்துச் செய்தி



இலங்கைத் திருநாட்டின் பல கேந்திர முக்கியத்துவம் வாய்ந்ததும் சிறந்த பல கலைகளையும், கலைஞர்களையும் இலக்கியப் படைப்புக் களையும் தனித்துவமான கலாசாரத்தினையும் வந்தோரையெல்லாம் வாழவைக்கும் பண்பும் செழுமையும் கொண்ட மாவட்டமாகவும் யாழ்ப்பாணம் பொலிவுற்று விளங்குகின்றது. அதனுள் ஒரு பிரிவான யாழ்ப்பாணப் பிரதேச செயலக பிரிவு இளங்கலைஞர் முதல் மூத்த கலைஞர் வரை இலக்கியம், கூத்து, இசை, நாடகம், நடனம், சிற்பம், ஓவியம், சிறுகதை, குறும்படம், வாத்தியக்கலை, கிராமியக்கலை, ஒப்பனைக்கலை என பல்வேறு துறைகளிலும் பல அரசவிருதுகளை தட்டிச்சென்ற கலைஞர்களை தன்னகத்தே கொண்டு சிறப்புடன் விளங்குகின்றது.

மரபு ரீதியான கலைகள் கலை இலக்கிய பயணத்தின் ஊடாக தமிழர் பண்பாடு, வாழ்வியல் விழுமியங்கள் மற்றும் வரலாற்றை நிலை நிறுத்த வேண்டும் எனும் மேன்மையான நோக்குடன் யாழ்ப்பாண பிரதேச கலாசாரப் பேரவையினால் "நவீன உலகில் பண்பாட்டுடன் பயணிப்போம்" எனும் தொனிப்பொருளில் "யாழ்பாடி மலர் - 04" எனும் கலாசார மலருக்கான வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

சிறப்பாக எமது பிரதேசத்தின் பெருமைகளையும் சிறப்பம்சங்களையும் எழுத்துருவில் வடித்து பாதுகாத்து பலரும் அறிந்துகொள்ளும் வண்ணம் ஆவன செய்யும் அனைவரையும் நன்றியோடு நினைவு கூறுகின்றேன். எமது பிரதேசத்தின் எழுத்தாளர்கள் மற்றும் படைப்பாளர்களின் ஆக்கங்களிற்கு களம் அமைத்து அவர்களை ஊக்கப்படுத்தி இலை மறை காயாக உள்ளவர் களிற்கு உந்து சக்தியாக விளங்குகின்ற யாழ்ப்பாண பிரதேச கலாசாரப் பேரவைக்கு நன்றி களைத் தெரிவித்துக் கொள்வதில் பெருமிதம் கொள்கின்றேன்.

ஓர் இனத்தின் கலைகலாசாரப் பண்பாடுகளும் யாழ்ப்பாணத்தை ஆண்ட மன்னர்களின் வரலாற்றுப் பாரம்பரியங்களும் , இலக்கியப் படைப்புக்களினூடாகவே வெளிப்படுத்தப்ப டுகின்றன. எமது தாய் மொழியை, பண்பாட்டை, இலக்கியங்கள் காட்டுகின்ற வாழ்க்கை


116, Old Park Road, Jaffna.
"Efficient public service with zero corruption and bribery"





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறைகளையும் ஆன்மீகம் சார்ந்த விடயங்களையும் வாழ்வியல் ஒழுங்கு முறைகள் சடங்குகள் சம்பிரதாயங்களினூடாக கடைப்பிடித்து ஒழுகும் போது முழுமையான வாழ்க்கை ஒன்றினை வாழ்ந்தமைக்கான அர்த்தம் நிறைவு பெறும்.

ஆயினும் கலைகலாசாரப் பண்பாடுகள் பல்வேறு நவீனத்துவமான காரணிகளால் அருகிச் செல்கின்ற காலகட்டத்தில் இளம் தலை முறையினருக்கு எமது பண்பாட்டையும் கலை கலாசாரத்தையும் கொண்டு செல்ல வேண்டிய தேவை இக்காலகட்டத்தில் எழுந்துள்ளது.

எனவே கலைகலாசாரப் பண்பாட்டு விழுமியங்களோடு வெளியிடப்பட இருக்கின்ற "யாழ்பாடி கலாசாரமலர் - 04" எனும் நூலிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதுடன் இவ் கலாசார மலரின் ஆக்கத்திற்காக தம்மை முழுமையாக அர்ப்பணித்து சேவையாற்றிய எழுத்தாளர்கள், கலைஞர்கள், கலாசாரப் பேரவை உறுப்பினர்கள், மலர்க் குழுவினர்களிற்கும் இம் மலர் வெளியீட்டிற்கு கலாசார அபிவிருத்திச் செயற்றிட்டம் 2020ன் கீழ் நிதி அனுசரணை வழங்கிய பண் பாட்டலுவல்கள் திணைக்களத்திற்கும் இணைநிதி அனுசரணை வழங்கிய விளம்பர தாரர்களிற்கும் நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு. எஸ். சுதர்சன்**
பிரதேச செயலாளரும் கலாசாரப் பேரவைத் தலைவரும்,
பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் - பிரதேச கலாசார பேரவை

பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்.

JAFFNA DIVISIONAL CULTURAL COUNCIL

DIVISIONAL SECRETARIART, JAFFNA.


## மலர்க்குழு சார்பாக

யாழ்ப்பாண பிரதேச செயலகம் சார்பாக, கலாசார பேரவையினரும் கலாசார அதிகார சபையினரும் இணைந்து நடாத்தும் பண்பாட்டு பெருவிழாவில் 'யாழ் பாடி கலாசார மலர் - 4' வெளியிடுவதையிட்டு மலர்க்குழுவினராகிய நாங்கள் பெருமகிழ்வடைகின்றோம்.

வழமை போல இம்முறையும் யாழ்ப்பாண பிரதேச செயலக பகுதிக்கு உட்பட்டவர்களின் ஆக்கங்களை உள்ளடக்கிய இம்மலரில் 'நவீன உலகில் பண்பாட்டுடன் பயணிப்போம்' எனும் கருப்பொருளில் கட்டுரைகள் பெறப்பட்டுள்ளன.

புதியவர்களின் எழுத்துக்கள் மூலம் உருவம் பெற்றுள்ள 'யாழ் பாடி- 4' மலரை உங்களுக்கு சமர்ப்பிப்பதில் பெருமிதமடைகிறோம்.

மலர்க்குழுவினர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**திரு. சாம்பசிவம் சுதர்சன்**

பிரதேச செயலாளர்,
பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் பிரதேச கலாசாரப்பேரவையின் நிர்வாக சபை உறுப்பினர்கள் - 2020



இருப்பவர்கள் (இ.வ) : திருமதி ந. சேர்ச்சிலம்மா, திரு. சி. எம். நெல்சன், திரு. மீரா லெப்பை லாபீர், திரு. பி. யூல்ஸ்கொலின் (பொருளாளர்) திரு. எஸ். சுதர்சன் (தலைவர், பிரதேச செயலாளர்), திரு. இரா. செல்வவடிவேல் (உப தலைவர்), திரு. அ. யோசப், திரு. கு. இராயப்பு, திருமதி ம. மேர்சி சுஜந்தினி (கலாசார உத்தியோகத்தர்)

நிற்பவர்கள் (இ.வ) : திரு. தோ. அருள்ராசா, திரு. ம. அன்ரன்யோசப், திரு. க. விஜயரட்னம், திரு. க. திருவம்பலம், திரு. பெ. ஸ்ரீகந்தநேசன், திரு. அ. றஜீவ், திரு. நீ. ம. பாலச்சந்திரன், திரு. கு. ஐயாத்துரை, திரு. அ. சகாயராஜா, திரு. நா. தனேந்திரன், திரு. கா. சுரேன், திரு. கொ. கரன்சன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்பாடி - 4 மலர்க்குழு உறுப்பினர்கள்.




இருப்பவர்கள் (இ.வ) : திருமதி ம. மேர்சி சுஜந்தினி (கலாசார உத்தியோகத்தர்) திரு. எஸ் சுதர்சன் (பிரதேச செயலாளர்), திரு. இரா. செல்வவடிவேல்
நிற்பவர்கள் (இ.வ) : திரு. மீரா லெப்பை லாபீர், திரு. பெ. ஸ்ரீகந்தநேசன், திரு. கு. இராயப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# யாழ்ப்பாண பிரதேச செயலக கிராம அலுவலர் பிரிவுகள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# யாழ்ப்பாண பிரதேச செயலக கிராம அலுவலர் பிரிவிலுள்ள வணக்க ஸ்தலங்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண பிரதேச செயலக பிரிவிலுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரவசமான பண்பாட்டுப் பயணம்!



**அருட்கலாநிதி டேவிற் வி. பற்றிக் அ.ம.தி.**
தொடர்பக முதல்வர், யாழ்ப்பாணம்.

"வணக்கம், நல் வாழ்த்துக்கள், தயவு செய்து, வளமுடன் வாழுங்கள், மன்னியுங்கள், நன்றி" போன்ற சொற்றொடர்களை அடிக்கடி பிரயோகியுங்கள். நல்ல பழக்க வழக்கங்கள் நாளாந்த தொடர் பயிற்சிகளினாலும் மனம் வைத்த முயற்சிகளினாலும் உருவாக்கம் பெறுகின்றன. அன்றாட வாழ்வின் நிகழ்வுகள் ஒரு கட்டுக்கோப்பிற்குள் திட்மிட்டு முன்னெடுக்கப்படும்பொழுது பழக்கங்கள் பரிணாமம் பெறுகின்றன.

**பகிர்தல்**

அண்மையில் நான் பேரூந்தில் பயணம் செய்த பொழுது அதிஸ்டவசமாக இரண்டு வயதுக் குழந்தை ஒன்று எனது மடியில் இடம் பிடித்துக் கொண்டது.

அப்போது அருகிருந்த 11 வயதுச் சிறுவன் தனது பேத்தியாரிடம் கேட்டான்: "பேள்சைப் பிள்ளைக்குக் கொடுக்கட்டா?"

பேத்தி"ஆம்" என்று தலையசைத்தார்.

ஒவ்வொன்றாகப் பக்குவமாகப் பரிமாறியவன் ஈற்றில் தனக்கென்று எதையும் வைத்திராது அனைத்தையுமே தாரை வார்த்துக் கொடுத்தான். இந்தச் சிறுவனின் தாராளமான மனப்பான்மை என்னைப் பெரிதும் கவர்ந்தது. சிறுவர்கள் நல்ல பழக்க வழக்கங்களில் வேரூன்றுவதற்கு பெற்றோர், பெரியோர், ஆசிரியர், நண்பர்கள் போன்றோர் நல்ல வழிகாட்டிகளாக அமைவது, பிறரை உற்சாகமூட்டி வாழ்வது இன்று அவசியமாகின்றது.

**நல் வாழ்வியல் இயந்திரம்**

"நல்ல பிள்ளை, நல்ல பிள்ளை" என்று அடிக்கடி பேசி ஆளை ஆள் உற்சாகப்படுத்துங்கள்.

நல்லதையே பாருங்கள்.
நல்லதையே கேளுங்கள்.
நல்லதையே பேசுங்கள்.
நல்லதையே சிந்தியுங்கள்.
நல்லதையே எழுதுங்கள்.
நல்லதையே வாசியுங்கள்.
நல்லதையே மனனம் செய்யுங்கள்.

இவ்வாறு நல்லபடி வாழ்வதற்கு மேற்படி ஏழு திறன்களை அனுசரியுங்கள். நல்லபடி வாழ்வதற்கான நல்ல பழக்கங்களை நீங்களே நாளாந்தம் உருவாக்குங்கள். மன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாக்கத்தில் உள்ளக சக்தி பெரும் பங்கு வகிக்கின்றது. நல்ல உடற்பாங்கான தன்மை, நல்ல பழக்க வழக்கங்கள், நல்ல நட்புடமை, சீரான நடையுடை பாவனைகள் போன்றவற்றை நாளாந்தம் மெருகூட்டுங்கள். போலி முகங்களை வெளிக்காட்டாது நாணயமாக, நேர்மையாக வாழுங்கள்.

**நற் பழக்கம்**

பிறரோடு சுகமாக, சந்தோசமாக வாழ்விக்கும் கலையே நற்பழக்கமாகும். இது ஆரம்பத்தில் கடினமாகத் தோன்றினாலும் தொடர்பயிற்சியினால் காலப் போக்கில் சாத்தியமாகும். "நல்ல பழக்கக் கலைக்கு ஈடாக வேறெந்த நுண்கலையும் இல்லை" என்றார் கெவென்ரி பற்மோர். இது பேரிதயத்திலிருந்து ஊற்றெடுக்கின்றது. இது நன்மைத்தனத்தையே வெளிக்காட்டுகின்றது. "நேற்றுப் பெய்த மழைக்கு இன்றைக்கு முளைத்த காளான்கள்" மாதிரி அவ்வப்போது தோன்றி மறைவது தேவையன்று. பிறரால் அடிக்கடி பிழையாக விமர்சிக்கப்படுவதற்கு இடம் கொடுக்காதீர்கள். இதயத்தால் நெறிப்படுத்தப்பட்டு நியாயத்தால் நிலைநாட்டப்படுவது நல்ல பழக்கமாகும்.

நல்ல முறையில் சாப்பிடுதல், நல்ல முறையில் ஆடை அணிதல், நல்ல முறையில் பேசுதல், நல்ல முறையில் பிறரோடு உறவு கொண்டு நாகரீகமாகப் பழகுதல், மற்றவர்களை, குறிப்பாகச் சிறுவர்களை, முதியோரை, மாற்றாற்றல் உள்ளவர்களை, கைவிடப்பட்டோரை, தெருவாசிகளை மதித்தல் போன்ற அம்சங்கள் உள்ளடங்குகின்றன. இவற்றை "மற்றவர்களுக்கான கரிசனை" என எல். எவ். சல்ஸ்மன் சுருக்கமாகக் கூறுகின்றார். மற்றவர்களின் உணர்வுகள், உரிமைகள், விருப்புக்கள் தொடர்பாக நீங்கள் கரிசனை காட்டும் பொழுது நல்ல பழக்கத்தை சுவீகரித்துக் கொள்வீர்கள். அத்தகைய பண்புடைய சிருஸ்டியாக நீங்கள் மாறும்பொழுது சமூகச் சீராளராகவும் வாழ்க்கையின் வெற்றியாளராகவும் சிறந்து விளங்குவீர்கள்.

தனிமனிதன் சமூகத்தின் வழியாக செய்யும் மதிப்பு நிலைப்பாட்டைப் பொறுத்து, மற்றவர் சார்பான கரிசனையின் கனாகனம் மாறுபடும். அவர் யாராகவும் இருக்கலாம். அவர் பெற்றோராக அல்லது ஆசிரியராக அல்லது சமூகத்தொண்டராக அல்லது சமயத் தலைவராக, இருக்கலாம். நல்ல பழக்கங்கள் சமூக வாழ்வில் வெற்றியையும் சமூக பிரதிபலிப்பில் ஒருங்கிணைப்பையும் வெளிக்காட்டுகின்றது. நல்ல பண்புகளால் நீங்கள் ஆட்கொள்ளப்படும்போது வசீகரப்படுத்தப்பட்ட ஆளுமையோடு கம்பீரமாகக் காணப்படுவீர்கள். உலகிற்கும் வீட்டிற்கும் நீங்கள் காட்டும் முகமே மீண்டும் உங்களில் எதிரொலிக்கும். ஒரு குறிப்பிட்ட காலத்தில் விரிசல்படுத்தப்பட்ட நியதிகள் இன்னொரு காலத்தில் மாறுபடலாம். முற்றுமுழுதாகக் கட்டமைப்பு பெற்ற பண்பாகப் பழக்கம் இருப்பதில்லை. தேவைகள் சந்தர்ப்பங்களுக்கு ஏற்ப பழக்கத்தின் வடிவம் மாறுபடலாம்.

பிள்ளைகளே! சிறு வயதிலிருந்தே சிரித்த முகத்தோடு, புன்முறுவலோடு வாழக் கற்றுக் கொள்ளுங்கள். கூனிக் குறுகி இருக்காது, நிமிர்ந்து வாழக் கற்றுக் கொள்ளுங்கள். எரிச்சல் ஊட்டாது, ஏமாளிகளாகக் கீழ் இறங்காது, கோமாளிகளாகக் குதூகலிக்காது,'காவாலி' என்ற பட்டம் பெறுவதில் ஆர்வம் காட்டாது, 'நல்ல பிள்ளைகள்' என்ற உயர் பட்டத்தை பெறவே திட்டமிட்டு முன்னேறுங்கள். "வாழ்வது ஒரு முறை, வாழ்த்தட்டும் தலைமுறை" என்ற அன்னை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெராசாவின் வார்த்தைகளை வாழ்வாக்குங்கள். 'சாதனையாளராகியே சாவேன்' என்ற நேர்காண் விருதுவாக்கை ஏற்றுச் செயற்படுங்கள். களைகளை நீக்கி, குறைகளைப் போக்கி, நிறைவாய் வாழக் கற்றுக் கொள்ளுங்கள்.

### கற்றலுக்கான மந்திரம்

ஆரம்பம் பாடசாலையில் ஏற்படலாம். 'எல்லாம் தெரியும், கற்றுக்கொள்வதற்கு ஒன்றுமில்லை' என்ற மனப்போக்கினை மாற்றி அமையுங்கள். நீங்கள் சரியாக நடந்து கொள்கிறீர்கள் என்பதை ஒழுங்காகப் புரிந்து கொள்ளாமல் உங்களைப் பற்றிய தப்பான படத்தைச் சித்தரிப்பதை தவறாக விமர்சிப்பதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

பழக்க வழக்கக் கோர்ப்புக்கள் மாற்றப்படலாம். ஆனால் அவற்றின் சில தன்மைகள் மாற்றத்திற்கு உள்ளாகாமல் கவர்ச்சியாகத் தொடர்ந்து இருக்கலாம். பண்புள்ள நபர் தன்னலமில்லாமல், தன்னை வழங்குபவராக விளங்குவார். ஒருவர் ஆற்றும் பணிகளுக்கும் அப்பால் ஒவ்வொரு தனிமனிதனிலும் உள்ள மதிப்பைக் கண்டு கொள்ளுங்கள். ஒருவர் எவ்வாறு உள்ளாரோ அவரை அவ்வாறு அவதானித்து, மனதில் நல்லவராக பதிவு செய்வதே மதிப்பளித்தலாகும். சிலர் மற்றவர்களை அவர்களின் நிஜ நிலையில் ஏற்றுக் கொள்ளத் தவறுவதால் அவர்கள் மிகுந்த பாதிப்பிற்கு உள்ளாகி வேதனைப்படுகிறார்கள்.

வாழ்க்கை சிக்கல் வாய்ந்தது. மக்கள் வலுக்குறைந்தவர்கள். பல காரணிகள் சேர்ந்து அவர்களைச் சீர்குலைக்கின்றன. மற்றவர்களோடு சந்தோசமாகக் நல்லுறவு கொண்டு வாழ்க்கையை அனுபவியுங்கள். அவர்களைக் குறைநிறைகளோடு அவர்களாகவே ஏற்றிடுங்கள். மற்றவர்களைச் சுரண்டாத நிலையில் செயற்பட்டு மற்றவர்களுக்கு மதிப்பளியுங்கள்.

### நீங்கள் நீங்களாகவே இருங்கள்.

நீங்கள் தனித்துவமானவர்கள். உங்களிடம் புதைந்துள்ள திறன்களைப் பயன்படுத்தி வளர வேண்டியவர்கள். உங்களைப் பற்றி நன்றாகவே சிந்தியுங்கள். உங்களிடம் இல்லாத ஒன்றை மற்றவர்கள் நம்பும்படி பாசாங்கு செய்யாதீர்கள். அச்சமின்றி உங்களை நீங்களாகவே வெளிப்படுத்துங்கள்.

ஒருவர் பண்புகளைப் பற்றித் தெரிந்தாலும் அன்புக் குறைவினால் தன்னைப் புரிந்து கொள்ளத் தவறின் அவரது வாழ்வு பிரச்சனைக்குரியதாக மாறிவிடும். புரிந்துணர்வுடன் வாழ்பவர் ஆழமான முறையில் அறிந்தவராய் செயற்படுவார். தன்னையே முற்று முழுதாக அறிவதில் சஞ்சலம் அடையும் ஒருவர் பிறரை எவ்வாறு முற்று முழுதாக அறிந்து கொள்ள முடியும்? நீங்கள் உங்களைப் புரிந்து கொண்டு, தெரிந்து கொண்டு உங்களையே ஏற்று வாழக் கற்றுக் கொள்ளும் பொழுது உங்களது வாழ்வு இனிதாக அமையும்.

### திறந்த மனப்பான்மையும் முயற்சியும்

தனக்குள்ளே முடக்கப்பட்டு கிடப்பவர் தனக்கென்று ஓர் உலகம் அமைத்து, தனித் தீவாய் விளங்குவார். அவர் ஒத்துணர்வின்றி, பிறரது தேவைகளை நிறைவு செய்வதில் தனக்கும் பங்குண்டு என்பதை மறந்தவராய், பிறர் துன்புறும்பொழுது துயர் துடைக்க மறுப்பவராய்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்வையற்றவன் நடுத் தெருவில் தடுமாறும்பொழுது கரம் கொடுத்து வழிகாட்டத் தவறியவராய், இரக்கமற்ற இதயத்தோடு காணப்படுவார். திறந்த மனப்பாங்குடன் வாழுதல் தியாக உணர்வையும் தன்னல மறுப்பையும் தாங்கி நிற்கிறது. உற்சாகமாகப் பிறரன்புப் பணியில் ஈடுபட வைக்கின்றது.

முதிர்ச்சி உணர்வுகளை நெறிப்படுத்தியவாறு நெகிழ்வுத் தன்மையை வெளிப்படுத்துகின்றது. 'நான் இயல்பாகவே கோபப்படுகிறவன், நான் இயல்பாகவே உணர்ச்சிவசப்படுபவன்' என்று தப்பான தீர்ப்பு அளிப்பது தேவையற்றதே. புலன்சார் முதிர்ச்சி குறைந்தவர் குழந்தைத்தனம் உடையவராய், இலகுவில் பாதிப்பிற்குள்ளாகுபவராய், கோப சுபாவமுடையவராய், மன்னிக்க மறுப்பவராய் காணப்படுவார்.

மாறாக புலன்சார் முதிர்ச்சியுடையவர் இரக்கம், மிருதுவான தன்மை, நேர்மை, நகைச் சுவையுணர்வு போன்ற பண்புகள் தன்னில் ஆட்சி செலுத்தும் நிலையில் காணப்படுவார். பிறரைப் புண்படுத்தாது, பக்குவமாய் கனிவோடு கரிசனை காட்டி, பரிவுடன் வாழ்பவர்களே பண்புள்ள மனிதர்கள் ஆவர். அவர்கள் நீரோடையோரம் நடப்பட்ட தாவரங்கள் போல மிகுந்த கனி கொடுத்து மகிழ்வுறுவர். அவர்கள் வயதிற்கேற்ற முதிர்ச்சியை வெளிக் காட்டுவார்கள். உங்களது வயதை ஒத்தவர்களோடு கூடுதலாகப் பழகுங்கள். குறையப் பேசி கூடுதலாகச் சிந்தியுங்கள். வளவள என்று பேசுவதைத் தவிருங்கள். கண்களும் கண்களும் உற்றுநோக்கிய வண்ணம் கரிசனையுடன் பேசிக் கவனமாக செவிமடுங்கள். நல்ல பிள்ளைகள் என்ற பெயரை எடுக்க அயராது பாடுபடுங்கள்.

**நெகிழ்ச்சி**

பிள்ளைகளே, பிறர்சார்பாக இறுக்கமாக இராது நெகிழ்ச்சியோடு பழகக் கற்றுக்கொள்ளுங்கள். 'எங்களது மனம் கரும்பு, மற்றவர்களது மனம் இரும்பு' என்று நினைத்துச் செயற்படாதீர்கள். பிஞ்சு மனம் கொண்ட வெள்ளை உள்ளங்களாக வாழ்ந்து காட்டுங்கள். கொடுக்கக் கொடுக்க கூடும் அன்பினை நீங்கள் நிறைவாக கொண்டுள்ளீர்கள் என்பதனை ஏற்று வளமாக வாழ, மகிழ்ச்சியோடு வளர, வாழத் துடியுங்கள்.

> "அறிமின் அறநெறி அஞ்சுமின் கூற்றம்
> பெறுமின் பிறர் கடுஞ்சொல் போற்றுமின் வஞ்சம் வெறுமின் வினைதீயார் எண்ணம் எஞ்ஞான்றும்
> பெறுமின் பெரியார் வாய்ச் சொல்"

என்கிறது நாலடியார்.

அதாவது,
மற்றவர் கூறும் கடுஞ்சொற்களைக் கேட்டுச் சினமடையாது பொறுத்துக் கொள்ளுங்கள். நல்ல பண்புகளைப் பாராட்டுங்கள். தீயார் நட்பை விட்டொழியுங்கள். நல்லவர் கூறும் அறிவுரைகளை என்றும் கேட்டு வாழுங்கள்.

**செய்யவேண்டியவை சில:**

- ☞ குழந்தைகளின் வளர்ச்சியில் அக்கறையோடு ஈடுபடுங்கள்.
- ☞ முதியோரை மதித்து கரிசனை காட்டுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஏழையின் தோழராயிருங்கள்.
- ஏற்றத்தாழ்வற்ற சமுதாயத்தை உருவாக்குங்கள்.
- பரிவன்புள்ள புதியதொரு சமூகத்தைக் கட்டியெழுப்புங்கள்.
- பசித்தோருக்கு உணவளியுங்கள்.
- நேர் சிந்தனையை வளருங்கள்.
- நிஜமாக வாழப் பழகுங்கள்.
- நித்தியமும் சத்தியத்தோடு தொடர்பு கொள்ளுங்கள்.

**தவிர்க்க வேண்டியவை:**

- மது, போதை, வெற்றிலை போன்றவை.
- சூதாட்டம், களியாட்டம், ஆடம்பரச் செலவுகள்.
- களவு, காமம், கொள்ளை, தற்கொலை முயற்சி, முரட்டுப் பழக்க வழக்கங்கள்.
- வன்முறையான தொடர்பாடல்.
- பிறரது நற்பெயரைக் கெடுத்தல்.
- பேராசை, பழிவாங்குதல்.
- ஏனோதானோ மனப்பான்மை. ஏமாற்றுதல், ஏமாறுதல்.

**மகிழ்வியல் வித்துக்கள்**

- பரிவன்பு
- பகிர்தல், புரிந்துணர்வு
- எளிமை, சுயமதிப்பு
- சுயநெறிப்படுத்தல், சூழல் இயைபாக்கம்
- நிறைகாண் மனப்பான்மை போன்றவற்றை நடைமுறைப்படுத்துங்கள்.
- நல் எண்ணங்களே நல் வாழ்விற்கு வித்தாகும்.

"எப்படிச் சிந்திக்கிறீர்களோ அப்படியே இருப்பீர்கள்" என்கிறார் கௌதம புத்தர். ஆரோக்கிய எண்ணங்களாக 'நான் நல்லவன், நீங்கள் நல்லவர்கள், என்னால் முடியும் என்ற எண்ணத்தோடு முயற்சி எடுக்கிறேன், பிறரது இன்ப துன்பங்களில் அக்கறையோடு பங்கெடுக்கிறேன்' போன்றவை அமைகின்றன.

பிள்ளைகளே, உங்களில் இயல்பாகவுள்ள நல்ல பண்புகளை ஏற்றுக்கொண்டு அவற்றிற்கு ஆதாரமாய் இயங்க முயற்சி எடுங்கள்.

**உள்ளவாறே பேசுதலும் நன்றியுணர்வும்**

பிள்ளைகளே, உங்களது உள்ளத்தின் உண்மைத்தன்மையை உணர்ந்து அன்புடன் பேச ஆரம்பியுங்கள். உள்ளொன்று வைத்து புறம் ஒன்று பேசாதீர்கள். பேச வேண்டும் என்ற சந்தர்ப்பம் எழும்போது மகிழ்வுடன் பேச முற்படுங்கள். எவ்வளவிற்கு எவ்வளவு உங்களது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேச்சைக் குறைக்கிறீர்களோ அவ்வளவிற்கு அவ்வளவு ஆற்றல் அதிகரிக்கும். சிலர் அதிகமாகப் பேசிக்கொண்டிருப்பார்கள். அவர்களுக்கு சலிப்புத் தட்டாது. கேட்பவர்களுக்குப் பெரும் தொல்லை. உங்களது பேச்சுக்களை ஆக்கபூர்வமானதாக அமைத்துக் கொள்ளுங்கள். உள்ளத்தில் அன்பு அமைதி, தெளிவு. கனிவு இருக்கும்பொழுது வெளிப்படும் வார்த்தைகள் வசீகரமானவையாய் பேசுவோருக்கும் கேட்போருக்கும் இனிய அனுபவத்தை தோற்று விப்பவையாய் இருக்கும். பிள்ளைகளே, உள்ளதை உள்ளவாறு பேசி உவப்புடன் வாழுங்கள். எல்லாச் சந்தர்ப்பங்களிலும் நன்மையே செய்து நன்றியுணர்வுடன் வாழுங்கள்.

ஒருமுறை ஒரு கழுகு ஒரு வேடன் விரித்த வலையில் சிக்கிவிட்டது. வேடன் கழுகின் சிறகுகளை வெட்டிக் கழுகைக் கட்டி வைத்திருந்தான். அப்பொழுது அவ்வழியே வந்த ஒரு பெரியவர் காசு கொடுத்து அக் கழுகை வாங்கித் தனது வீட்டிற்கு சென்று அக்கழுகை வளர்த்து வந்தார். சிறகுகள் வளர்ந்ததும் பெரியவர் கழுகைப் பறக்க விட்டார். பறந்து சென்ற கழுகு முயல் ஒன்றைக் கௌவி வந்து பெரியவருக்கு காணிக்கையாகக் கொடுத்துவிட்டுப் பறந்து சென்றது. இதனைக் கண்ணுற்ற நரி கழுகோடு பேசியது. "நீ வேடனிடம் அந்த முயலைக் கொடுத்திருந்தால் அவன் திரும்பவும் உன்னைப் பிடிக்காமல் இருப்பான். பெரியவரிடம் முயலைக் கொடுத்ததால் உனக்கு என்ன லாபம்?" என்றது. கழுகு சொன்னது: "உனது சிந்தனை தவறு. ஆபத்தில் என்னைக் காப்பாற்றிய பெரியவருக்கு எனது நன்றியைத் தெரிவிக்கவே முயலை நான் காணிக்கையாக்கினேன். உதவி வழங்கியவருக்கு நன்றியோடு வாழ்வதுதான் பண்புள்ள செயல். அதுதான் நல்லவர்களுக்கு அழகு."

**புன்னகையும் பொறுப்புணர்வும்**

"புன்முறுவல் அகத்தில் தெரியும் ஒரு வளைகோடு, ஆனால் அது வாழ்க்கையில் எத்தனையோ காரியங்களைத் நேராக்குகின்றது." என்று வரைகின்றார் ஓர் ஆங்கில எழுத்தாளர். பிள்ளைகளே, புன்னகை பூத்த முகத்தால் பிறர் மனங்களில் மகிழ்ச்சியை விளைவிக்க முனையுங்கள். பழைய உறவுகளைப் புதுப்பிக்கவும் புதிய உறவுகளைத் தோற்றுவிக்கவும் புன்னகை உதவுகின்றது. கபடற்ற சின்னஞ் சிறுசுகளின் புன்னகையை உங்களுடையதாக்குங்கள்.

பிள்ளைகளே, நீங்களே உங்களது நல்வாழ்விற்குப் பொறுப்பு என்பதை மறந்து விடாதீர்கள். வாழ்வா அல்லது சாவா என்று தீர்மானம் எடுப்பது நீங்களே. உங்களது மேலான தேர்வு உங்கள் கைகளிலேயே தங்கியுள்ளது. உங்களது வாழ்விற்கு நீங்களே பொறுப்பு என்பதை உணரும்பொழுது நீங்களாகவே வாழ்வியல் நியமங்களைக் கற்று ஒழுகுவீர்கள். பொறுமையோடு பொறுப்புணர்வைச் சுவீகரித்துக்கொண்டு பொன்னான வாழ்வைப் புடமிடுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலை வடிவங்கள் ஊடாக வகுப்பறைக் கற்றல் கற்பித்தல் கவிநிலைச் செயலொழுங்கை மேம்படுத்தல்



**திரு. கந்தன் கணபதி** (J.P)
ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர்
J/77, மருதடி முதியோர் சங்கத் தலைவர்

கருவறை தொடங்கி கல்லறை வரை கல்வி என்ற உன்னத பொக்கிஷமானது என்றும் அழியாத ஆன்மாவைப் போன்று எம் யாவரையும் சூழ்ந்து நிற்கக்கூடிய பண்பு மிக்கதாக விளங்கி வருகிறது. கற்றல் மூன்று வகையில் இடம்பெறுகிறது. முறைசார்ந்த கல்வி (Formal education), முறைசாராக் கல்வி (Non formal education), முறைமையில் கல்வி (Informal education). இவை அனைத்திலும் நேரடியாகவும், மறைமுகமாகவும் புலப்பாடு அற்ற முறையில் கற்றல், கற்பித்தல் நிகழ்ந்து கொண்டே இருக்கிறது. இந்த செயற்பாடுகள் நேர், மறை இடைவினைத் தொடர்புகள் மூலமாக வகுப்பறையில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. கற்றல் கற்பித்தல் சிறந்த வினைத்திறன் மூலம் ஒழுங்கமைக்கப்பட்டு நல்ல வினைத்திறனை மேம்படுத்துவதற்கு பல உத்திகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் கலைவடிவங்களை சிறந்த முறையில் திட்டமிட்டு, ஒழுங்கமைத்து செயற்படுத்துவதன் மூலம் வகுப்பறைக் கற்றல் கற்பித்தலை மேம்படுத்து வதற்கான சிறந்த சாதகமான நிலைமைகளை ஆராய்வதே இக் கட்டுரையின் நோக்கமாகக் கொள்ளப்படுகிறது.

**கற்றல் கற்பித்தல்**

கற்றல், கற்பித்தல் செயற்பாடானது கல்வியில் இரு கூறுகளாக ஆதிகாலத்திலிருந்தே ஆரம்பித்து அதாவது முதல் மனிதன் படைக்கப்பட்டதும் (ஆதாம்) முதலில் இடம்பெற்ற செயற்பாடு கற்றல் கற்பித்தலாகும். ஏன் கருவறையிலேயே அபிமன்யு சக்கரவியூகத்தை எப்படி உடைத்து வெளியேற முடியும் என்பதையும் கற்றுக்கொண்டான். ஆயினும் கற்றல், கற்பித்தல் பற்றிய கருத்துக்கள் மனித நாகரிகம் மேம்பட்டுக் கொண்டு செல்லச் செல்ல அவையும் மாறுபட்டுக் கொண்டு செல்வதும் தவிர்க்க முடியாததொன்றாகும்.


**வகுப்பறைக் கற்றல் கற்பித்தல்**

இக் கற்றல் கற்பித்தல் நிகழும் இடம் வகுப்பறையாகும். இது மாணவர்கள் தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கும், தமது கற்றல் குறிக்கோளை அடைவதற்குமான ஆற்றலை மேம்பாடு செய்யும் ஒரு முறைமையையும் சூழலையும் அமைக்க வேண்டும். இதற்காக ஆசிரியர்கள் மாணவரின் தேவைகள் எவை என்ற விரிவான விளக்கத்தைப் பெற்றிருக்க வேண்டும். அந்த வகையில் ஒரு ஆசிரியர் மாணவனின் தேவைகள் பற்றிய ஆழமான அறிவையும் அனுபவத்தையும் தன்னிடத்தே வளர்த்தெடுக்க வேண்டும். தேவை பற்றிய கருத்தை முன்வைத்தவர் W.I தோமஸ் ஆவார்.அவர்கள் பின்வருமாறு வகைப்படுத்துகின்றார். காப்புத் தேவை, புது அனுபவத்தேவை, பொறுப்புத்தேவை, கணிப்புத் தேவை. எனினும் பல உளவியலாளர்கள் தேவைக் கொள்கைகளை வெளியிட்டிருப்பினும் A.H. மாஸ்லோ அவர்கள் மனிதத் தேவைகளை ஆற்றலுக்கேற்ப வகைப்படுத்தி ஏறுவரிசைப்படுத்தினார். (1 - 7)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மாஸ்லோவின் தேவைக் கூம்பு – மனிதத் தேவை வரிசைகளும்




மாணவர்கள் வகுப்பறையில் தன் திறமைகளை வெளியிட்டு நிறைவு பெறவும், அதில் மற்றவர்களின் கணிப்பைப் பெறவுமான தேவை மாஸ்லோவின் பட்டியலில் இறுதியானதாகவே இருக்கிறது. எனவே மாணவனின் உடலியல் காப்பு, அன்பு, கணிப்புத் தேவைகள் நிறைவு செய்யப்படாத நிலையில் அவனில் பொதிந்து கிடக்கும்.

### மாணவர்களின் திறன்களும் தேர்ச்சிகளும்

ஆசிரியர்கள் மாணவர்களைப் பார்ப்பதும் ஒரு திறன்தான். ஒரு பார்வையில் மாணவர்கள் அனைவரையும் ஏற்கலாம். ஒரு பார்வையில் உற்றுக் கவனிக்கலாம். கண்பார்வையில் கவனத்தைத் தம்மீது ஈர்க்கலாம். இவ்வாறு பார்த்தால் நூற்றுக்கணக்கான திறன்களைப் பட்டியல்படுத்தலாம். நுண்நிலைப்பயிற்சி முன்னோடியான அலன் - ராயன் (Alan - Ryan) இவர்கள் 13 திறன்களை விளக்கியுள்ளனர். பரோடாபல் (Paradobal University) பல்கலைக்கழகம் 21 திறன்களை விளக்கியுள்ளது. அவுஸ்திரேலிய நாடு 100க்கு மேற்பட்ட திறன்களை விளக்கியுள்ளது. எனவே இவர்களின் கருத்துப்படி "கற்றலானது திறன் அடிப்படையில் செயற்படுவது என்றும், இதனடிப்படையிலேயே திறன்களின் எண்ணிக்கை உறுதிப் படுத்தப்படுகிறது" என்றும் பேராசிரியர்கள் குறிப்பிடுகிறார்கள். இதன்படி அலன் - ராயன் குறிப்பிடும் திறன்களைப் பார்க்கலாம். இன்று இவற்றிற்கு முக்கியத்துவம் வழங்கும் முகமாக திறன் விருத்தி வகுப்பறைகள் Smart Class Room என்பன ஒவ்வொரு பாடசாலைகளிலும் திறக்கப்பட்டு வருவது இங்கு கவனிக்கத்தக்க விடயமாகும்.

1. பல்வகைத் தூண்டல்கள் (Stimulus variation)
2. பாடம் தொடங்குதல் (Set induction)
3. முடித்தல் (Closures)
4. மௌனமும் மொழிச்சார்பற்ற கணிகளும்(Sukebce abd bib verbal cues)
5. மாணவர் பங்கேற்பை வலுவூப்படுத்தல் (Reinforcement of student participation)
6. வினாக்கேட்டலில் சரளமுடைமை (Fluency in asking question)
7. கிளர் வினாக்கள் (Probing question)
8. உயர்நிலை வினாக்கள் (Higher question)
9. விரிசிந்தனையைத் தூண்டும் வினாக்கள் (Divergent question)
10. கவனிக்கும் நடத்தைகளை அறிதல் (Recognizin gattending beha viors)
11. எடுத்துக்காட்டுக்கள் பயன்படுத்தும் திறன் (illustration and use of example)
12. சொற்பொழிவு (Lecturing)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. திட்டமிட்டு மீண்டும் கூறல் (Planning reputation)
14. செய்தி இணைப்பு நிறைவு செய்தல் (Completeness of communication)

ஆற்றல்களை வெளிக்கொணர எடுக்கும் முயற்சிகள் பயனற்றவையாகவே முடிவடையும். அத்துடன் மாணவனும் கல்வியில் வெறுப்படைந்து வகுப்பறை வேலைகளையும் உதாசீனம் செய்து ஆசிரியரால் ஒழுங்கமைக்கப்பட்ட ஒழுக்கக் கட்டுக்கோப்பை சீர்குலைக்கின்ற நிலைமை தோற்றம் பெறும். இந்த நிலைமையில் மாணவன் ஆசிரியர்கள், நண்பர்களின் அன்பை இழந்த நிலையில் வீட்டிலும், பாடசாலையிலும் கவனிப்புப் பெறாத நிலையில் தனது திறமைகளை வெளியிட்டு நிறைவு பெற முடியாத நிலைமைக்குத் தள்ளப்படுகின்றார். இதற்கும் மேலாக ஓர் ஆசிரியர் தமது கற்பித்தலை செவ்வனே நிகழ்த்தி மாணவர்களின் திருப்தியைப் பெற்றுக்கொள்ளும் அதே வேளையில் தன் நடத்தையிலும் முன்மாதிரி காட்டும் ஆசிரியருக்கு வகுப்பறை ஒழுங்காக நிலைநாட்டுதல் மிக மிக இலகுவாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

ஆசிரியர்கள் மேற்படி குறித்த திறன்களில் உள்ள பலவகையான உட்கூறுகளையும் அறிந்து தகுந்த முறையில் பயன்படுத்தி கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபடும் போது மாணவர்கள் சிறந்த வினைத்திறனான கற்றல் திறன்களைப் பெறுகிறார்கள். மாணவர் பல்வகைமையுடையவர்கள் என்பதனையும் உணர்ந்து அனைவருக்கும் கல்வி என்ற உண்மையை உணர்ந்து ஆசிரியர்கள் மாணவமையக் கல்வியை முன்னெடுக்க முடியும். ஆயினும். மாணவர்களின் அறிவுதிறன், மனப்பாங்கு, பயிற்சி தொடர்பில் அவர்களது நாட்டம், ஈடுபாடுகளையும் உன்னிப்பாக அவதானித்து ஆசிரியர்கள் தனது கற்றல், கற்பித்தல் செயல் ஒழுங்கை வடிவமைத்துக்கொள்ள முடியும். அதேவேளை வகுப்பையும் வினைத்திறனானதாக ஒழுங்கு அமைத்துக் கொள்ள முடியும். ஒவ்வொரு மாணவனும் தனிப்பட்ட ஓர் ஆளுமையைப் பெற்றவனாகத் திகழ்கின்றான். ஒவ்வொருவரும் பொது ஆற்றலிலும் சிறப்பு ஆற்றலிலும் செய்திறன்களிலும் கற்றலில் ஈடுபடும் முறை (Learning style) ஆனது அவர்களின் விருப்பங்கள், மனப்போக்குகள், மனவெழுச்சிச் சமநிலை (Emotional balance), மனப்பான்மை ஆகியவற்றில் வேறுபட்டுக் காணப்படுகிறார்கள் என்ற உண்மையை ஆசிரியர்கள் அறிந்திருக்க வேண்டும். இத்தகைய மனத்தின் ஆற்றல்களை பிளேட்டோ, அரிஸ்ரோட்டில் போன்ற அறிஞர்கள் கூறியிருந்த போதும் காஸ்டன் பிளே என்ற உளவியலாளரால் திட்டமாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

இன்று ஒரு மாணவன் தான் வாழும் குடும்பம், வகுப்பறை, பாடசாலைச் சூழலுடன் பொருந்தி வாழ்வதற்கான அடிப்படைத் தேர்ச்சிகளை வளர்த்தெடுப்பதற்கான கலைத் திட்டத்தினை அறிமுகப்படுத்தி நடைமுறைப்படுத்தி வருகின்றது. அந்த வகையில் மாணவர் களிடையே அடிப்படைத் தேர்ச்சி மையக்கல்வி

1. தொடர்பாடல் சார்ந்த தேர்ச்சிகள் - எண் அறிவு, எழுத்தறிவு, சித்திர அறிவு
2. சூழல் சார்ந்த தேர்ச்சிகள் - சமூகச் சூழல், உயிர்ச் சூழல், பௌதிகச் சூழல் சார்ந்த அறிவுகள்
3. சமயம் ஒழுக்கம் சார்ந்த தேர்ச்சிகள், சமய விழுமியங்கள், சம்பிரதாயங்கள்
4. விளையாட்டு ஓய்வு நேரம் சார்ந்த தேர்ச்சிகள், ஒத்துழைப்பு, குழு முயற்சி, ஆரோக்கியமான போட்டி
5. கற்றலுக்கான கற்றல் சார்ந்த தேர்ச்சிகள், பல்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறு ஊடகங்கள் மூலம் கற்றல், சுயகற்றலுக்கான வழிகளைக் காணும் தேர்ச்சிகள்

இவை யாவும் இன்று கற்பித்தல் கலாசாரத்தில் இருந்து கற்றல் கலாசாரத்திற்கும் மதிப்பீட்டுக் கலாசாரத்திலிருந்து கணிப்பீட்டுக் கலாசாரத்திற்கும் பாடமையத்திலிருந்து தேர்ச்சி தழுவிய மாணவர் மையத்திற்கும் வித்திடப்பட்டுள்ளது. இவ்வாறாக தேர்ச்சிதழுவிய அறிமுகமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவசியமும் இன்று வகுப்பறைக் கற்றல் கற்பித்தல் செயல் ஒழுங்கை ஆசிரியர் தமது ஆற்றலுக்கும் ஆளுமைக்குக்கும் ஏற்ப திட்டமிட்டு, ஒழுங்கமைத்து மாணவர்களின் ஆற்றல், ஆளுமையை மதிப்பீடு செய்து முகாமைத்துவத் திறனடிப்படையில் மாணவர்களின் நாட்டம், விருப்பினை நுட்பமாகத் தெரிந்து கொண்டு பொருத்தமான கலை வடிவங்களை (செயல்திறன், வெளிப்படுத்தும் திறன், பேச்சாற்றல் முன்வைக்கும் திறன், முயன்று தவறும் திறன், தற்காப்புத்திறன், பிரச்சினை விடுவிக்கும் திறன்) தனியாள் திறன்களை இனங்கண்டு வகுப்பறைக் கற்றல் திறன்களை இனங்கண்டு வகுப்பறைக் கற்றல், கற்பித்தல் செயல் ஒழுங்கைத் திட்டமிட்டு முகாமை செய்வதன் மூலம் மாணவர்களின் அறிவு, திறன், மனப்பாங்கு, பயிற்சி (KASP)களை வளர்த்து தரமான கல்வியை,மாணவர்களுக்கு வழங்குவது, சமூகத்திற்கு பயனுள்ள பிரஜையை உருவாக்க முடியும்.

ஆசிரியரின் வினைத்திறனான கற்பித்தல் படிமுறை

1. தெளிவான கற்பித்தல், இலக்குகளை நிர்ணயித்தல்
2. நிதமும் மாணவரின் நலன், வகுப்பில் அக்கறையாக இருத்தல்
3. கற்றலுக்கு உதவக்கூடிய பாடசாலைக் கலாசாரம் கவிநிலைகளை உருவாக்குதல்
4. தமது பாடசாலைகளின் நோக்கத்தையும் தூரப்பார்வையையும் கலந்துரையாடல்
5. தமது உயர் எதிர்பார்ப்பை அமைத்துக் கொள்ளல்
6. தமது ஆளுமையையும் தலைமைத்துவப் பண்பையும் விருத்தி செய்தல்
7. மாணவர்கள், பாடசாலை உத்தியோகத்தர்கள், பெற்றோர் தொடர்பாக நேர்மனப் பாண்மையைப் பேணுதல்

இது தொடர்பாக ஆசிரியரிடம் சுய மதிப்பீட்டு வினா எழுப்பப்பட வேண்டும். குறிப்பாக

1. இதை நடைமுறையில் எப்படி சாத்தியமாக்குவது?
2. இவ்வாறான தீர்மானங்கள் அதிபர் பார்வையில் (கண்காணிப்பில்) இருப்பதுடன் இதை எவ்வாறு செய்வது?
3. பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து அதிலிருந்து சுமூகமாக விடுபட்டு வெற்றிபெற முடியுமா?
4. சமூக உறவைப் பேண முடியுமா?

இதற்கான தந்திரோபாயத் திட்டத்தை (Strategy plane) உருவாக்கி இதில் மேலதிக பயிற்சிகளைப் பெற்று நடைமுறையில் சிறந்த கற்பித்தல் தலைவராக முடியும்.

கலைவடிவங்களை கற்றல், கற்பித்தலில் புகுத்துவது புதிய விடயமல்ல

பாடசாலைக் கலைத்திட்டத்தில் கலைப்பாடங்கள், அழகியல் பாடங்கள், வர்த்தகப் பாடங்கள், தொழில்நுட்பப் பாடங்கள், கணிதப் பாடங்கள், விஞ்ஞானப்பாடங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. முன்பள்ளிக் கல்வி, ஆரம்பக்கல்வி, இடைநிலைக்கல்வி, உயர்தரக் கல்வி, பல்கலைப் பட்டக்கல்விகளில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. முன்பள்ளிக்கல்வியில் செயல்திறன் கற்றல், கற்பித்தலுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. கிறுக்குதல், வரைதல், படம் பார்த்தல், படம் பார்த்து கதை சொல்லுதல், விளையாடுதல், விளையாட்டின் மூலம் கற்றல் போன்றவை ஊடாக கற்றல், கற்பித்தல் இடம்பெறுகின்றது. இங்கு மாணவர் செயற்பாட்டுக்கு முக்கியத்துவம் வழங்கப்படுவதனால் மாணவர்கள் ஆர்வமாக முன்வந்து கற்றலில் வெறுப்படையாமல் விரும்பிக் கற்கின்ற தன்மையை அவதானிக்க முடிகிறது.

இங்கு ஆர்வத்துடன் விரும்பி விளையாட்டு மூலம் எண், எழுத்துக்களை விளங்கி சுதந்திரமாகக் கற்கின்ற தகைமையைக் காணலாம். இங்கு ஆடல், பாடல், நடித்தல்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளையாடுதல் கலைகள் மூலம் விரும்பிக் கற்கிறார்கள். ஆரம்ப இடைநிலைக் கல்விக்கு வரும் போது 6, 7, 8 தரங்களுக்கு மாணவர்கள் கற்றலில் ஆர்வம் காட்டாமையும், இடைவிலகும் தன்மையும் அதிகரித்து வருவதை நாம் கவனிக்க முடிகிறது.

அழகியல் கலை பாடல்களை கீதம், நடனம், வயலின், மிருதங்கம், வீணை, புல்லாங்குழல், மோர்சிங், இத்தகைய பாடங்களைத் தெரிவு செய்யும் மாணவர்களின் சதவீதம் மிகவும் குறைவாகவே உள்ளது. கற்றல், கற்பித்தலில் மாணவர்களும் சரி ஆசிரியர்களும் ஆர்வம் காட்டி வருகிறார்கள். இப்பாடங்களைத் தெரிவு செய்யும் மாணவர்களாயினும் அவர்கள் அழகுணர்வையும், ரசனை, அன்பும் அரவணைப்பும் மிகுந்தவர்களாகவும் மிளிர்கிறார்கள். ஆனால் தொழில் நோக்கிலும், வருமான நோக்கிலும் கற்க ஆர்வம் காட்டும் போது எதிர்பார்க்கும் நிலையை எட்ட முடியாத போது மனம் உடைந்து ஆர்வம் குன்றி தம்மைத் தாமே குறைத்து தாழ்வு மனப்பாங்குடன் வாழ்பவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். வாழ்க்கையை வளப்படுத்துவது கலை. இந்தக்கலைகள் மூலம் தாமும் தம் குடும்பமும் சமூகமும் பயன்பெறுகிறது. அதில் நாம் மகிழ்ச்சியடைகிறோம் என்றும் வாழ்பவர்கள் இருக்கும் வரை கலைகள் வளர்ந்து கொண்டே இருக்கும். அவ்வாறின்றி மனம் குன்றி கலைகளும் குன்றிவிடும்.

கலைவடிவங்களில் முப்பெரும் கலைகளாக இயல், இசை, நாடகம் என விளங்கினாலும் ஒவ்வொரு கலைகளிலும் பல வேறு கலை வடிவங்களை இனங்காண முடியும். அந்த வகையில் கீழ்வரும் பட்டியலை அவதானிக்க முடியும்.

| இயல் | இசை | நாடகம்/ அசைவு |
|---|---|---|
| கவிதை | மேலைத்தேய சங்கீதம் | வரலாற்று நாடகம் |
| கட்டுரை | கர்நாடக சங்கீதம் | புராண நாடகம் |
| இலக்கியம் | கதாபிரசங்கம், வில்லிசை | வடமோடி கூத்து |
| ஆய்வு நூல்கள் | நாட்டார் பாடல் | தென்மோடி கூத்து |
| சிறுகதை | கிராமிய பாடல் | சமூக நாடகம் |
| பிரசங்கம் | கிராமிய நடனம் | விஞ்ஞான நாடகம் |
| வர்ணனை | தனி, குழு இசை | தனி நடிப்பு |
| விவாதம் | இசை அமைத்தல் | பொம்மலாட்டம் |
| அறிவிப்பாளர் | பாடல்கள் பாடுதல் | ஒயிலாட்டம் |
| சுயசரிதம் | பண் இசைத்தல் | கும்மி நடனம் |
| நயப்புரை | தேவாரம் பாடுதல் | ஓரங்க நாடகம் |
| மேடைப்பேச்சு | வாத்திய கருவிகள் | கோலாட்டம் |
| விமர்சனம்செய்தல் | மிருதங்கம் | பொய்க்கால் குதிரையாட்டம் |
| கதை சொல்லல் | வீணை | காவடி |
| பேச்சுப் போட்டி | புல்லாங்குழல் | கரகம் |
| வாசிப்புப் போட்டி | வயலின் | |
| உறுப்பமைய எழுதுதல் | ஆர்மோனியம் | |
| | கிற்றார் | |
| | தம்புரா | |
| | மோர்சிங் | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இவை தவிர வேறும் உள்ளடக்கப்படலாம். இவை எடுத்துக்காட்டுகளே.பெருமட்டான வகைப்படுத்தலாகும்.)

இன்றைய காலகட்டத்தில் பாடசாலைக் கல்வி கற்ற காலத்தில் இருந்த இடத்திலிருந்து உடைநலுங்கா உத்தியோகம் பார்த்து சம்பாதித்து கௌரவமாக வேலை பார்த்து சம்பாதிப்பதே வாழ்க்கை என்ற உணர்வு பாடசாலைக் கல்விக் காலத்தில் விதைக்கப்பட்டதோ என்னவோ கலைகளில் நாட்டம் காட்டாமையும் மேற்படி கலைகள் கைவிடப்பட்டு நாடகம் என்றால் என்ன? வில்லிசை என்றால் என்ன? என்று எதிர்கால சந்ததியினர் கேட்குமளவிற்கு கலைகள் கைவிடப்படுகின்ற நிலைமையில் பாடசாலைகளில் எமது பாரம்பரிய கலைகளை வளர்ப்பதிலும், கலைகள் ஊடாக மாணவர்களுக்குப் பாடங்களை இலகுவில் புரியவைத்தற்குரிய ஒரு நுட்பமாக கலைகளைப் பயன்படுத்தி பாடங்களை கற்பித்தல் மூலம் கலைகளை அழிவின் விளிம்பிலிருந்து காப்பாற்ற முடியும் என்பதில் ஐயமில்லை. இது பற்றி நாம் விரிவாக நோக்க முடியும்.

**விரும்பிய ஏதாவது ஒரு கலைத்துறையில் வல்லுநராக்குதல்/ பயிற்சி வழங்குதல்**

உயிரிகள் அனைத்திலும் இரசனை உணர்வு இயல்பாகவே இருக்கிறது என்ற உண்மையை நாம் மறந்து வாழ்கிறோம். பிறக்கின்ற குழந்தையின் அழுகையும் ஒரு ஓசைதான். இறப்புக் காலத்தில் பெண்கள் வைக்கும் ஒப்பாரியும் ஒருவகை ஓசைதான். இயற்கையில் வண்டுகளின் ரீங்காரமும் ஒரு ஓசைதான். காலையில் எமை எழுப்பும் பறவைகளின் சத்தமும் நம் காதுக்கினிய ஓசைதான். திருப்பள்ளி எழுச்சியும் மனதுக்கு இதம் தரும் ஓசைதான். இசைக்கு வசமாகாதவர்கள் உலகில் யாரும் இருக்க முடியாது.

இயேசுநாதரின் சிலுவைப்பாடல் தொட்டு சிவபெருமானின் திருவிளையாடற் பாடல் தொட்டுபுத்த பகவானினதும், முகமது நபிகள் அவர்களினது சரிதம் வரை மக்களால் அறியப்பட்ட கதைகள் நாடகமாகவோ கூத்தாகவோ நடித்துக் காண்பிக்கப்படும் போது அந்த கதை அல்லது வரலாறு அனைவரது மனதில் ஆழமாகப் பதிந்துவிடும். வகுப்பறைக் கற்றலிலும் நாம் ஏன் இதனைக் கையாளக்கூடாது? பார்க்கின்றேன், மறந்து விடுகின்றேன், செய்கின்றேன் ஞாபகத்தில் வைத்திருக்கிறேன் எனக் கற்றல் கற்பித்தலில் ஒரு கொள்கைக் கருவாக இது விளங்குகிறது. இதன் உண்மைத் தன்மை யாதெனில் ஒன்றைப் பார்த்து கற்கின்றோம். ஆனால் குறிப்பிட்ட காலத்தில் அதனை மறந்து போகிறோம். ஆனால் செய்கின்றேன், செய்து ஞாபகத்தில் வைத்திருக்கிறேன். ஈடுபட்டு கற்றால் "செயல்முறைக்கல்வி" வாழ்நாளில் மறக்க முடியாத ஞாபகத்தில் வைத்திருக்கும். கற்றல், கற்பித்தலின் பொருத்தமான பாட அலகில் தெரிவு செய்த கலைவடிவத்தில் புகுத்துவதன் மூலம் கற்றலை மேற்கொள்வதன் மூலம் கற்றலும் இலகுவாகும். ஞாபகம் வைத்திருப்பதும் சுகமானது.

**எண்ணக்கருவும் எண்ணக்கரு உருவாக்கமும்**

மாணவர்கள் தாம் கற்கும் விடயங்கள் யாவற்றிலும் கருத்தறிந்து கற்றலே கல்வியின் ஆதாரமாகும். எண்ணக்கரு என்பதன் பொருள் நாம் எமது ஐம்புலன்கள் மூலம் ஒரு பொருள் அல்லது விடயம் பற்றிப் பெறும் தகவலில் இருந்து நாம் பெறும் அறிவு என்று கூறலாம். எனவே எண்ணக்கரு ஒரு பொதுவான தன்மைகளைக் கொண்ட ஒரு தூண்டிப்பன்று அவை தூண்டிகளின் தொகுதியாகும். உதாரணமாக, மாம்பழத்தின் சுவை மாத்திரம் மாம்பழம் என்ற எண்ணக்கரு ஆகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணமாக, வரலாற்றுப் பாடத்தைக் கற்கும் மாணவர்கள் மகாசேனன், சங்கிலிய மன்னன் பற்றிக் கற்கும் போது சாதாரணமாக நாடக வடிவில் வடிவமைத்து தாய், தந்தையர், தோற்றம், வளர்ச்சி, மன்னர் ஆன முறை, சேவைகள், சாதனைகள் என்று பல பரிமானங்களில் அந்த மன்னன் பற்றிய எண்ணக்கருவை நாடகம் மூலம் நடிப்பதால் அவனது ஆளுமைப் பண்புகள் விருத்தியாகிறது. தன்னால் எதுவும் முடியும் என்ற உறுதிப்பாட்டையும் நல்ல பண்புகளையும் வளர்த்தெடுக்க உதவுகிறது.

நாம் பாடசாலைகளில் காலையில் (KEEP FIT) இலகு பயிற்சியை பாடசாலை ஆரம்பமாகும் போது செயற்படுத்துகிறோம். பாடத்திலுள்ள ஏதாவது ஒரு கருப்பொருளை வைத்து வில்லிசை செய்யலாம். அதாவது பேச்சுப்போட்டி நடத்தலாம் அல்லது நாடகமாக நடிக்கலாம். அப்போது உடலின் ஐம்புலன்களுக்கும் பயிற்சி அளிக்கப்படுகிறது. இதனால் மாணவன் கற்பதற்கு தயார்நிலைக்கு ஆளாக்கப்படுகின்றனர். தான் மகிழ்வது மட்டுமன்றி தம்மைச் சார்ந்தவர்களையும் இந்தக் கலை மகிழ்விப்பதாக விளங்குகிறது. அந்தவகையில் யாழ் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பாடசாலைகளில் பிரதேச ரீதியாகப் பார்க்கும் போது கொழும்புத்துறை, பாசையூர், குருநகர், நாவாந்துறை பிரதேச பாடசாலைகள் கலை வளர்ச்சியில் ஆர்வம் காட்டி கூத்துக்கள், நாடகம், அரச, சமய நாடகங்களில் நடித்தும் போட்டிகளில் பங்கு பற்றியும் வருகிறார்கள். இத்தகைய ஆற்றலுள்ள மாணவர்களுக்கு பாடங்களின் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் காலகாலமாகத் தொடர்புபடுத்தி கற்றலை மேம்படுத்த முடியாதா? முடியும் என நான் கருதுகிறேன். அதற்கு ஆசிரியரின் கற்பித்தல் செயல்திறனை மேம்படுத்துவதுடன் அவர்களுக்கு வழிகாட்டலையும் தகுதியையும் உயர்நிலை அதிகாரிகளால் வழிகாட்டும் திறனையும் ஆற்றலையும் பயிற்சியையும் வழங்கத் தயாராக இருக்க வேண்டும்.

**உயிர்ப்பான வகுப்பறையும் – ஆரோக்கியமான தொடர்பாடல்களின் பங்களிப்பும்**


ஒரு வகுப்பறையானது மாணவர்களின் செயலாக்கத்திலேயே அதன் உயிர்ப்பான தகைமையை வெளிப்படுத்துகிறது. குழுச் செயற்பாட்டை வகுப்பறையில் நடை முறைப்படுத்துவதற்கான ஆற்றலும் ஆளுமையும் ஆசிரியர் பெற்றிருக்க வேண்டும்.

மாதிரி (1) என்ற எண்ணக்கரு விளக்கப்படத்தைப் பார்த்தால் மாணவர்கள் கூட்டாகச் செயற்படக்கூடிய தன்மை கொண்டதாகவும் மாணவர்களை மையப்படுத்தியதாகவும் குழுச் செயற்பாட்டை மையப்படுத்தியதாகவும், பகிர்ந்து செயற்படும் மனப்பாங்கை வளர்ப்பதாக உதவும். உதாரணமாக விளையாட்டுக்கள் மூலம் ஏதேனும் கலைவடிவங்களை உட்படுத்தி மாணவர்களுக்கான கற்றலை வடிவமைத்து செயற்படும் போது அது உயிர்ப்புள்ள வகுப்பறையாகவும் ஆரோக்கியமான தொடர்பாடற்றிறன் செறிந்த வகுப்பறையாகவும் மாணவர்களிடையே உற்சாகத்தையும், புதினத்தையும் ஏற்படுத்துவடன் தர்க்க ரீதியாக சிந்திக்கும் பழக்கத்தையும், மகிழ்வையும் வழங்கும் முறையாக வகுப்பறை அமைகிறது.

உதாரணமாக, மாணவர்களுக்கான சுதந்திரமான அரங்கப்பயிற்சி செயற்பாட்டு மாதிரி மூலம் மாணவர்களின் செயற்பாட்டுக்கும் இடம்கொடுத்தல் என்ற எண்ணக்கருவுக்கு முக்கியத்துவம் கொடுத்து மாணவர்களை இனங்காணப்பதற்கு ஒரு வாய்ப்பாகவும் பயன்படுத்திக் கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**அரங்கச் செயற்பாடு**

"ஆரம்பகால மாணவ வாழ்க்கை ஒரு உகந்த வாழ்க்கையாகவே அமையப்பெற்றது. இக்காலத்தில் கவிதை, கட்டுரை, நாடகம், மேடைப் பேச்சுக்கள் போன்றவற்றில் ஈடுபாடு கொண்டவனாக ஒரு இலக்கியவாதியாக வாழ்ந்தது மட்டுமல்லாமல் சமூகத்தில் விழுமியங்களைப் பேணக்கூடிய ஒரு சமூகவாதியாகவும் வாழக்கூடிய சந்தர்ப்பத்தை இறைவன் எனக்குத் தந்துள்ளார்". என ஒரு ஆசிரியரின் உள்ளக்கிடக்கை கல்வியில் அரங்கு முறை நூலில் ஆசிரியர் ஜீ.ரீ. இக்பால் குறிப்பிடுகிறார். "மாணவர்கள் சிறுவர் அரங்கச் செயங்பாடுகளில் தாம் முன்வந்து செயற்பாடுகளில் கலந்து கொள்வார்களாயின் அதுவே ஒரு ஆசிரியரின் செயற்பாடுகளுக்குக் கிடைத்த வெற்றியாகும்" என திருமதி றினோஷா மீரான் முகீதீன் என்ற ஆசிரியை கருத்து. ஆசிரியர் செல்வி சாந்திமாலா தி/ நிலாவெளி றோ.க.த. பாடசாலை இவரின் கருத்து கற்பிக்கும் போது பிள்ளைகளின் மனநிலையை அறிந்து மகிழ்ச்சிகரமான கற்றல் செயற்பாட்டில் சுதந்திரமாக ஈடுபடும் போது பிள்ளைகளின் பிரச்சினை பற்றியும், குடும்பச் சூழல் பற்றியும் அடிக்கடி கலந்துரையாடி மாணவர்கள் மனதில் நம்பிக்கையையும், ஆர்வத்தையும் ஏற்படுத்துவேன். அத்தோடு இதர ஆசிரியர்களுடனும் அயல் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்களுடன் கலந்துரையாடி அரங்கூடாக செயற்படும் போது சகல மாணவர்களும் ஆடிப்பாடி மகிழ்ச்சியாகக் காணப்படுவார்கள்.

இங்கு மேற்படி மூன்று ஆசிரியர்களும் அரங்கச் செயற்பாடுகள் மூலம் பாடசாலைக் கல்வியில் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் தாமே மாணவர்களுக்கு இசைந்தவாறு அவரவர் கற்றல் ஆளுமைகளை இனங்கண்டு அரங்கச் செயற்பாடுகளை கதைகளாக வடிவமைத்து பாடசாலைகளில் அவற்றை அரங்கேற்றி வெற்றிகண்ட அனுபவத்தைப் பகிர்ந்துள்ளார்கள். "கல்வியில் அரங்கு இடம் கொடுத்தல்" என்ற நூலில் இவற்றைப் பகிர்ந்துள்ளார்கள். இந்த நூல் பாடசாலை ஆசிரியர்களின் செயல்முறை கற்றல் கற்பித்தலுக்கு ஒரு வழிகாட்டி கைநூலாகவும் பயன்படுத்த முடியும்.

**இணைப்பாடவிதான செயற்பாடு**

இணைப்பாடவிதான (Co-curricular activity) செயற்பாடுகள் சகல பாடசாலைகளிலும் முன்னெடுத்து வரப்படுகிறது. பாடசாலை கலைத்திட்டத்திற்கு அப்பால் பாடத்திட்டங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைமுறைப்படுத்தப்படும் போது மேலதிகமாக மாணவர்களினது அறிவு, திறன், மனப்பாங்கு அப்பால் பயிற்சியையும் வழங்கி தலைமைத்துவம் பொறுப்பு வகிக்கும் பண்பு, உடல் வலிமை, உளத்திறன், ஜனநாயகப் பண்பு, விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு, சகிப்புத்தன்மை, ஆன்மீக உணர்வு, பிறரை மதித்தல், மரியாதை, ஒழுக்க விழுமியங்கள், நேரம் தவறாமை, பணிவு போன்ற பல்வேறு ஆளுமைகளைச் சார்ந்தெடுப்பதற்காக பாடசாலைகளில் பல பிரத்தியேகச் செயற்பாடுகளில் மாணவர் ஈடுபடுத்தப்படுகின்றனர். உதாரணமாக விளையாட்டுப்போட்டி, சமய மன்றங்கள், சாரணியம், சிரேஷ்ட மாணவர் கழகம்,சுக வாழ்வுக் கழகம், இந்து மாணவர் மன்றம், கிறிஸ்தவ மாணவர் மன்றம் உயர்தர மாணவத் தலைவர் கழகம் இவ்வாறு பல மன்றங்கள், கழகங்கள் அமைக்கப்பட்டு மேற்படி ஆளுமைகள் வளர்த்தெடுக்கப்படுகின்றன. இந்தக் கழகங்கள், மன்றங்கள் மூலம் அவ்வப் பிரதேசத்தின் கலைகள், பண்பாடுகள், கலாசாரங்களை வளர்த்தெடுப்பதில் பங்கெடுத்துவருகின்றன. உதாரணமாக 92 மாணவர்களுடனும் பெருமெடுப்பில் இல்ல விளையாட்டுப் போட்டியை நடத்திய பாடசாலைகளும் உண்டு. இவ் செயற்பாடுகளை வெற்றிகரமாகச் செயற்படுத்திச் செல்வதில் அந்தப் பாடசாலைக் கழகத்தின் முயற்சியும், அர்ப்பணிப்பும், ஆதரவுமே பிரதான பங்கு வகிக்கிறது என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. உளநெருக்கீடுகளைத் தவிர்ப்பதற்கான ஆற்றுகையாகவும் அமையும்.

பாடசாலைகள் பொதுவாக தமது பாடசாலைக் கலாசாரத்தை மிகவும் வலுவாகப் பின்பற்றி வருகிறது. இந்த நிலைமை மாணவர்களுக்கு சாதகமாகவும் பாதகமாகவும் அமைய வாய்ப்புண்டு. நகரப் பாடசாலை, கிராமப் பாடசாலைகள், வளம் மிக்க பாடசாலை, வளம் குறைந்த பாடசாலை, சமூக மயமாக்கப்பட்ட பாடசாலை, சமூக மயமாக்கப்படாத பாடசாலை. இத்தகைய நிலைமை மாணவர்களின் கற்றலில் செல்வாக்குச் செலுத்துவது தவிர்க்க முடியாததாகும். பாடசாலைக்கும் பாடசாலைச் சமூகத்திற்கும் நெருங்கிய தொடர்புள்ள பாடசாலைகளில் மாணவர்களின் அழகியல் கலை ஆர்வத்திற்கு உறுதுணையாக இருந்து மாணவர்களின் செயல்திறனில் ஊக்குவிப்பு வழங்கி சிறந்த முறையில் துலங்கலுக்கு வழி சமைக்கும் என்பதில் சந்தேகமில்லை.

கிராமங்களில் உள்ள கலைக்கூடங்கள், நாட்டிய மன்றங்கள், இசைக்கூடங்கள், கலா மன்றங்கள், சபாக்கள் சிறப்பாக இயங்கி வரும் போது அக்கிராமங்களில் அமைந்துள்ள பாடசாலைகள் இம் மன்றங்களின் உதவியையும், ஊட்டத்தைம் பெறுவதற்கு பின் நிற்கக்கூடாது. ஏனெனில் அக்கிராம மாணவர்களின் கற்றலில் இவை பெரிதும் செல்வாக்குச் செலுத்தும். இதனைப் பயன்படுத்தும் மாணவர்களுக்குப் பொருத்தமான கலைகளைக் கற்பித்து அல்லது வழிகாட்டி ஊக்குவிப்பதில் பாடசாலை நிர்வாகத்தின் பங்கு மிகவும அவசியமானது. கற்றலில் பின்னடைவான மாணவர்கள் இனங்காணப்பட்டு அவர்களின் ஆற்றலுக்கும், திறமைக்கும் விருப்புக்கும் ஏற்ப மாணவர்களை வளர்த்தெடுப்பது பாடசாலையின் பிரதான பங்களிப்பாகும். இவ்வாறான பங்களிப்பை பாடசாலைகள் செய்யும் போது பாடசாலை பல்துறையிலும் மிளிர வாய்ப்புண்டு. இவ்வாறான நிலைமை ஏற்படும் போது எமது சமூகத்தில் அருகி அழிந்துவரும் பாரம்பரிய கலைகளை அழியவிடாது வளர்த்தெடுக்க முடியும். அதற்கு பாடசாலையில் மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள், பெற்றோர்கள், சமூகம் ஒன்றிணைந்து அர்ப்பணிப்புடன் செயற்படுவது இன்றைய அவசியமும் காலத்தின் தேவையுமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உசாத்துணை நூல்கள்


1. சிறந்த கற்றலுக்கான பாடசாலை கலாநிதி. ப. கா. பக்கீர்ஜ.ஃபர் - குமரன் பதிப்பகம் 2009
2. கல்வியில் மனவியல் - பேராசிரியர். எஸ்.சந்தானம் - சாந்தா பப்ளிஷர்ஸ், சென்னை, மு. பதிப்பு - 1993
3. நுண்நிலை கற்பித்தல் ஓர் அறிமுகம் - பேராசிரியர் வி. கணபதி, சாந்தா பப்ளிஷர்ஸ், சென்னை, மு. பதிப்பு - 2001, நவம்பர்
4. கற்றல் கற்பித்தல் செயன்முறையில் கல்வி உளவியல் - கலாநிதி உலகநாதர் நவரட்ணம், குமரன் புத்தக இல்லம், பதிப்பு - 2007
5. பாலர் கல்வியும் நவீன செல் நெறிகளும் - பா. தனபாலன், உப பீடாதிபதி தேசிய கல்வியியற் கல்லூரி, குமரன் புத்தக இல்லம், கொழும்பு - சென்னை, 2009
6. ஆபத்தின் விளிம்பிலுள்ள கற்போர் - பேராசிரியர் சபா ஜெயராசா, குமரன் புத்தக இல்லம், 2008
7. பரிகாரக் கற்பித்தலுக்கான அரங்கச் செயற்பாடு - முத்து இராதாகிருஸ்ணன், அரங்க அச்சகம், திருகோணமலை - 2008
8. கல்வியல் அரங்கு "இடங்கொடுத்தல்" - வெளியீடு சுதந்திரம் செயற்பாடு - அரங்க செயற்பாட்டுக்குழு - 2001 செம்ரம்பர் 18, பழம் றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம்
9. பரிகாரக் கற்றலுக்கான அரங்கச் செயற்பாடு - முத்து இராதாகிருஸ்ணன், மார்கழி 2008, அஸ்ரா அச்சகம், திருகோணமலை, பக்கம் 17, 19, 23


### லிங்கனின் பதில்

அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த பொழுது ஆபிரகாம் லிங்கன் தனது சப்பாத்துக்களைப் 'பொலிஸ்' பண்ணிக்கொண்டிருந்தார். அந்நேரம் அங்கு வந்த நண்பர் என்ன இது உங்கள் சப்பாத்துக்களை நீங்களே 'பொலிஸ்' பண்ணுகிறீர்கள் என்று கேட்டார் வியப்புடன். உடனே லிங்கன் என் சப்பாத்துக்களைப் 'பொலிஸ்' பண்ணுகிறேன் நீங்கள் யாருடைய சப்பாத்துக்களைப் 'பொலிஸ்' பண்ணுகிறீர்கள் என்றாரே.

### ஔவையார் பதில்

ஔவையார் ஒரு அரச சபையில் பாடிவிட்டு நடந்து வீட்டுக்கு போய்க்கொண்டிருந்தார். மிகவும் தூரம் களைத்துப் போனதால் வழியில் உள்ள சிவன் கோயில் மண்டபத்தில் சிறிது களைப்பாற கால் நீட்டி படுத்து விட்டார். அந்நேரம் கோயிலுக்கு வந்த பூசாரி கிழவி சிவனுக்குக் கால் நீட்டிக் கொண்டு படுக்கலாமா? அபச்சாரம் அபச்சாரம் என்று எழுப்பவும் ஔவையார் உடனே சிவன் ( கடவுள்) இல்லாத திசையைக் காட்டு பார்ப்பம் என்று சொல்லப் பூசாரி திகைத்து என்ன சொல்வது என்று அறியாது நின்றார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிந்து முயல்வோம் வெற்றிக்காக!




**செல்வி கி. கிறிஸ்ரின் டிஷானி**
27, மத்திய கிழக்கு வீதி,
குருநகர் யாழ்ப்பாணம்.


ஆறாய் அறிவுபெற்ற
அற்புத மானிடனே
தேரேறிதேசம் ஆள
பார் நோக்கி வந்தாயே!

விந்தை மிகு உலகுமிங்கு
விரிந்தன்றோ கிடக்கிறதே
நன்று உன் திறமைகாட்டி
நானிலம் சிறப்பாயே!

பாரபட்சம் காட்டலிங்கு
பழக்கப்பட்டதன்றோ
ஓரம் நீ ஒதுங்கி நிற்பின்
நேரம் மிஞ்சாதே இங்கு!

திறனுக்கு உரம் போட்டு
திரை விலக்கி விரைந்து வா
ஒதுக்கிய கரங்கள் முன்னே
செதுக்கியநின் திறனைக் காட்டு

தேசமது கடந்து வந்து
வேஷம் பலபோட்டுச் செல்வர்
கோஷங்களில் மூழ்கி உந்தன்
கொள்கைகளைதொலைக்காதே!

"ஐஸ்" உம் "அபின்" உமாய் போதை
அழகாய் உன்னைநாடும்
அடிமை ஆகச் சொல்லி
ஆயிரம் கதைகள் சொல்லும்!

கூழும் வரகும் ஒன்று
கூடி குடித்த உன்னை
குடுவும் கஞ்சாவும் வந்து
குழிக்குள் தள்ளலாமோ?

குடும்பம் தழைக்க வந்த
குலவிளக்கு நீயும் அன்றோ
நிலையறிந்து தான் நடந்தால்
வளம் பெறுமே வாழ்வுமிங்கு!

அந்நியம் அடக்கியாள
அரைகுறை ஆடை தேடி
ஆடம்பர வாழ்க்கைக்குள்ளே
அடிமையாய் போகாதே நீயும்

தனித்துவம் தளர்ந்துபோயின் – நம்
தரம் இங்கு வீழக்கூடும்
பண்பாடு பாரில் ஓங்க
பண்போடு உழைக்க வாராய்!

வேகமதில் காதல் செய்து
வீதியிலே விதி முடிக்கும்
வீறு கொண்ட இளைஞனே – உன்
விழலை வீண் ஆகலாமோ?

நாடும் வீடும் நல்லாய் மாற
நாளை நீயும் வேண்டுமன்றோ
வீதி விதியில் விளக்கம் கண்டால்
விடியல் உன் பக்கம் அன்றோ

நானும் நீயும் மட்டும்
நன்றாய் வாழல் போதும்– இவ்
நச்சு எண்ணம் எங்கள்
எச்சம் அழிக்கக்கூடும்

உச்சம் உன் புகழும் ஏற
இச்சை நீ கொண்டாலிங்கு
சுற்றமும் சுகத்தை நாட
பற்றோடு உழைக்க வாராய்!

இன்னலும் இடைஞ்சலுமிங்கு
மின்னலாய் மறைந்து போகும்
எண்ணிய இலக்கு நாட
திண்ணமாய் உழைப்போம் வா!

வரமது வாழ்க்கைக்குள்ளே
வசந்தங்கள் நிறையவுண்டு
வலிகளுள் வாழ்வு தேட
வலிந்துழைப்போம் வாராயோ?




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழாய் வாழ்வோம், எல்லாம் உனக்காக



திரு.க.திருவம்பலம்
12/27, மத்தியூஸ் வீதி,
யாழ்ப்பாணம்

## தமிழாய் வாழ்வோம்

செந்தமிழன் வாழ்வு செழித்தோங்க
வேண்டுமெனில்
பங்கமின்றி நாம் இங்கு
பக்குவத் தமிழாய் வாழ்வோம்
தரணியில் நாம் எல்லாம்
தலை நிமிர்ந்து வாழ்வதற்கு
அடிகளார் போற்றிய அன்புத்
தமிழாய் வாழ்வோம்
அன்னியன் வந்தெம்மை அடிமை
கொள்ளாத படி
சந்தமும் நாம் இங்கு சத்தியத்
தமிழாய் வாழ்வோம்
சுந்தரத் தமிழைத் தந்த சுப்பிரமணியம்
புகழ்பாடிச்
சுதந்திரத் தமிழாய் வாழ்வோம்
புற நானூற்றுப் புகழ் பூத்த புண்ணியத்
தமிழ்த்தாய்
அழியாத அவர் புகழ் பாடுவதற்குத் தன்மானத்
தமிழாய் வாழ்வோம்
ஔவையும் அண்ணாவும், அருங்குறள் வள்ளுவனும்
போற்றிப் புகழ்ந்த எங்கள்
புண்ணியத் தமிழ் பாடித் தமிழாய் வாழ்வோம்
வருங்காலச் சந்ததியின் வளமான வாழ்வுக்கு உரமூட்டித்
தமிழாய் வாழ்வோம்
ஐம்பெரும் காப்பியங்கள்
அழியாது காப்பதற்குச்
செந்தமிழர் நாம் எல்லாம்
சீர்மிகு தமிழாய் வாழ்வோம்.

## எல்லாம் உனக்காக

எங்கட வாழ்க்கை முறை இழிவானது உன்னால
படிச்சது போதும் அடுப்படியைப் பார் என்றாய்
அப்பனைக் குடிக்க வச்சு அழகு பார்த்து நீதான் அம்மா

குடி குடியைக் கெடுக்கும் என்று
குடிகார அப்பனுக்கு நீ ஒருகாலும் சொன்னதில்லை
இப்ப என்னெண்டால் மூத்தவனும் குடிகாரன்
இளையவனும் குடிகாறன்
குடும்பமே குடிகாறக் குடும்பம்

எப்பிடி அம்மா எங்கட குடும்பம் உய்யும்
தொலைக்காட்சிப் பெட்டியோடை
தொலைத்தாய் உன் வாழ்க்கை எல்லாம்
நீ மாத்திரமா தொலைத்தாய்
என்னையும் அல்லவா நீ தொலைத்தாய்

ஏனடி பிள்ளை அழுகின்றாய்
பக்கத்து வீட்டு பரன் மாமா கேட்டார்
குடிகாறக் குடும்பத்தில் குதூகலம் ஏது மாமா
வாழ்க்கையே வெறுத்தப் போச்சு மாமா
வானொலிப் பெட்டியில் பாடலைக் கேள் பிள்ளை
நல்லதொரு குடும்பம்
பல்கலைக்கழகம்
அம்மா என்றால் அன்பு
அப்பா என்றால் அறிவு
சிந்தியுங்கோ சிந்தியுங்கோவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேச மக்களின் சமய பண்பாட்டு அம்சங்களோடு இணைந்த பணச்சடங்கு (அற்ஹோம்) முறைமை



**திருமதி சகிதா பிரதீசன்**
பட்டதாரிப் பயிலுனர்
பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்

யாழ்ப்பாண பிரதேசத்தில் கிராமிய ரீதியான வறுமையை தணித்த பொருளாதார முறைமைகளில் அற்ஹோம் (Athome) எனப்படும் பொருளாதார முறைமைக்கு பெரும் பங்கு உண்டு. கிறிஸ்தவ மக்களின் வாழ்வில் பொருளாதார மறுமலர்ச்சியை ஏற்படுத்திய பொருளாதார முறைமைகளில் பணச்சடங்கு முறைமைக்கு முக்கிய பங்கு காணப்படுகின்றது. மேற்குலகில் இருந்து புதிய பெயர்களில் கவர்ச்சிகரமான முறையில் பல கோட்பாடுகள் தோற்றம் பெற்றாலும் எமது வாழ்வியல் தேவைகளை நிறைவு செய்யும், கோட்பாடுகள் எமது அடிப்படைத் தேவைகளின் தளத்திலிருந்தே தோற்றம் பெற்றன. அற்ஹோம் எனப்படும் பொருளாதார முறைமையானது பகிர்தல் எனும் தத்துவத்தை அடியொற்றியதாகவே உருவாக்கப்பட்டது. அதாவது பலரிடம் உள்ள சிறியளவான பணமானது ஒருவரிடம் சேர்ந்து பெருந்தொகையாகி உதவுகின்றது. சைவசமய மக்களைப் பொறுத்தவரையில் ஒரு பகுதியினர் தமது வறுமையின் நிலையில் இருந்து விடுபட்டுக் கொள்வதற்கு பணச்சடங்கு என அழைக்கப்பட்ட பணவரவு பொருளாதார முறைமையை அறிமுகம் செய்தனர். இதே வழக்கிலேயே கிறிஸ்தவ மக்களின் இம்முறையும் தொழிற்படுவதோடு கிறிஸ்தவ மக்களின் வாழ்வியலுடன் இணைந்த வகையிலும் இம்முறைமையானது காணப்படுகின்றது.

யாழ்ப்பாண பிரதேசத்தைப் பொறுத்தவரையில் கடற்கரையோரக் கிராமங்களில் அற்ஹோம் முறைமையானது பணச்சடங்கு என்ற பெயரில் அழைக்கப்பட்டது. பிற்பட்ட காலங்களிலேயே இது அற்ஹோம் எனப் பெயர் பெற்றதாகக் கூறப்படுகின்றது. கிராமிய ரீதியான பணப் பொருளாதார முறைமையில், செல்வாக்கு வகித்த காலத்திலே கரையோர சமூகங்களில் ஒரு மாதிரியான தன்மையிலும், கரையோரமல்லாத சமூகங்களில் வேறோரு வகையான ரீதியிலும், இம் முறைமையானது காணப்பட்டது. யாழ்ப்பாண கரையோரப் பிரதேசத்தில் கடற்தொழிலுடன் இணைந்த வகையில் மக்களின் வாழ்கையானது பிண்ணிப் பிணைந்ததாக காணப்படுகின்றது. ஆரம்பகாலங்களிலே் கடற்கரையோர பிரதேசங்களிலே அற்ஹோம் எனும் பணச்சடங்கு நிகழ்வானது மாலை 6 மணி முதல் இரவு 10மணி வரை படு சுறுசுறுப்பாகவிருக்கும்.

பெரும்பாலும் இரவில் கடல்தொழிலுக்குச் செல்வோர் அதிகாலையில் தான் கரைக்குத் திரும்புவர். மீன்களை விற்பனை செய்து தமது உடல்களைப்பையெல்லாம் போக்கிய பின்னர் மாலை நேரத்திலேயே ஓய்வாக இருக்க சந்தர்ப்பம் காணப்படுகின்றது. இக் காலப்பகுதியிலேயே தான் இச்சடங்கு முறைமையானது பெரும்பாலும் மேற்கொள்ளப்படுகின்றது. ஆரம்ப காலங்களிலே மதிய உணவு கொடுக்கப்பட்டே இந்நிகழ்வானது ஆரம்பிக்கப்பட்டது. பின்னாளில் மாலை நேரத்தில் சிற்றுண்டி வகைகளோடு மேற்கொள்ளப்பட்டாலும் செலவு அதிகமாகப் போன காரணத்தினால் பிற்பட்ட காலத்தில் குளிர்பானம் மட்டும் என்ற வகையில் சுருங்கிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படுகின்றது. இந் நிகழ்வால் கிடைக்கக்கூடிய பணத்தின் வரவை அதிகரிப்பதற்காகவே செலவுச் சுருக்கங்கள் கொண்டுவரப்பட்டன. அற்ஹோம் அழைப்பிதழில் கொண்டாட்டம் ஆனது 03 நாட்கள் வரை நடைபெறும் என்ற அச்சிடப்பட்டிருந்தால் அவ்வாறான 03 நாட்களும் தமது பணக் கொடுப்பனவினைக் மேற்கொள்ளக்கூடியதாக அமைந்திருந்தது. சில சந்தர்ப்பங்களில் 01 நாட்கள் மட்டும் நடைபெறும் தன்மையும் உண்டு. பணம் வாங்குவதற்கு கொப்பி ஒன்று எழுதப் பயன்படுத்தப்படும் இதில் குறிப்பிட்ட நபரின் பெயர், முகவரி என்பவற்றுடன் கொடுக்கப்படும் தொகையை புதியது, பழையது என்ற வகையில் பதிந்து வைப்பார்கள். இதில் பழைய தொகையினை செலுத்தும் பணத்திற்கு 10வீத வட்டி போட்டுச் செலுத்துகின்ற முறைமையும் காணப்படுகின்றது.

இதே போல புதிதாக வழங்கப்படுகின்ற பணத்தினை பழைய தொகையைச் சமப்படுத்தும் விதமாகவோ அல்லது அதிகமாகவோ வழங்கப்படும். கரையோரக் கிராமங்களில் தேவாலயத்திருவிழா காலங்களிலும், கிறிஸ்மஸ் வரும் டிசெம்பர் மாத காலங்களிலும் அற்ஹோம் எனப்படும் முறைமை நடைபெறுவதில்லை. உள் கிராமங்களில் பந்தல் போட்டு இம்முறைமை கொண்டாடப்படும். கரையோரப் பிரதேசங்களைப் பொறுத்த வரையில் வீடுகளானவை மிகச் சிறிய நிலப்பரப்பில் அமைந்து காணப்படுவதனால் ஒரு பகுதியை தெரிவு செய்தோ அல்லது வீதிகளின் குறுக்கே பந்தல் போடப்பட்டோ நடைபெறுகின்றது. கடற் தொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்கள் ஆனவை அற்ஹோம் முறைமைக்கான திகதிகளை வழங்கும் முறைமையானது பலகரையோரக் கிராமங்களில் உள்ளதனை மரபாகக் காணமுடிகின்றது. குருநகர், நாவாந்துறை போன்ற பகுதிகளில் இன்றும் இதனை அவதானிக்க முடிகின்றது. இம்முறைமையில் வைத்துப் பணத்தைப் பெற்ற குடும்பமானது பெற்ற பணத்தில் கணிசமான பகுதியை மீளளித்த பின்னர் தான் மீளவும் வைக்க முடியும் என்ற நிலைமையானது உள்ளமை குறிப்பிடத்தக்கது. மக்கள் வீடுகளிலே நடைபெறும் சடங்குகளினை அற்ஹோம் போல வைத்து பணம் வாங்குகின்ற முறைமையானது அப்போதும் இப்போதும் இருப்பதனை காணமுடிகின்றது.

மீனவ தொழில் மேற்கொள்ளும் குடும்பங்களிலே வீட்டில் நடைபெறும் கொண்டாட்டங்களை அற்ஹோம் போல நடத்துவதாயின் கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்துக்கு அறிவித்தல் கொடுப்பது அவசியமானதாகும். இக்கிராம அமைப்பினைப் பொறுத்த வரையில் ஏழை கடற்தொழிலாளி ஒருவர் சொந்தமாக மீன்பிடி சார்ந்த உபகரணங்களை கொள்வனவு செய்யும் முறைமையின் வாயிலாகவே பணத்தைப் பெற்றுக் கொள்ள முடியும். இதே போலவே காணி வாங்குதல், வீடு கட்டுதல், வாகனம் வாங்குதல் ,பெண் பிள்ளைகளுக்கு திருமணம் செய்தல், வெளிநாடுகளுக்கு செல்லுதல், சிறு கைத்தொழில்களை உருவாக்குதல் போன்றவற்றிற்கு இம் முறைமையானது பெரிதும் துணை புரிகின்றது. எனினும் இன்றைய பொருளாதார அமைப்பு முறைமையினை நோக்கின் அற்கோம் முறைமையானது வலுவிழந்து வருவதனை அவதானிக்க முடிகின்றது. யாழ்ப்பாண பிரதேசத்தினைப் பொறுத்து பெரும்பாலும் கடற்கரையோர பிரதேசங்களிலே இன்று பெரும்பாலும் இம்முறைமையானது கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.

இன்றைய கால கட்டத்தில் மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்வடைந்து செல்வதன் காரணமாக வறுமையை காரணம காட்டி பணத்தினை பெறுகின்ற தன்மையினை இழிவாக எண்ணும் சமூக அமைப்பு உருவாகி விட்டமையானது இம்முறைமை வழக்கொழிந்து விட்டதற்கு ஒர் காரணமாகும். மேலும் இன்றைய வங்கி அமைப்பானது அனைத்து பிரதேசங்களிலும் வியாபித் துள்ளமையானது தேவைக்கேற்ற வகையில் கடன்களை பெறுவதனை இலகுவாக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டமையினாலும் அற்ஹோமின் தேவை குறைந்து விட்டது. மேலும் இன்றைய இளைஞர்கள் பலர், இம்முறைமை மூலம் பணம் வாங்குவது தம்மை ஏழைகளாக சமூகத்தில் காட்டும் என கூறிப் பெற்றோரை தடுக்கின்ற நிலைமைகளும் காணப்படுகின்றது. எனவே மக்களின் நாளாந்த வாழ்வியலுடன் இணைந்த வகையிலும் பொருளாதார ரீதியான நலன்களை உயர்த்திய வகையிலும் முக்கியமான பங்கினை இம் முறைமை வகிக்கின்றது என்று கூறுதல் மிகையாகாது. கிராமிய வறுமையை தணிப்பதில் முக்கிய பங்கினை வகித்ததொன்றாகவும் இது காணப்படுகின்றது.

அற்ஹோம் கொண்டாட்டத்தில் சில சந்தர்ப்பத்தில் சிலரது பணமானது கிடைக்காமல் போகலாம். ஏற்கனவே அற்ஹோம் வைத்த ஒருவர் தனது கடன் முற்றாக அல்லது தீர்க்கப்பட்டதாகக் கருதினால் மீண்டும் ஒரு அற்ஹோமிற்கு அழைப்பு விடுவார்கள். இப்பணச்சடங்கினைப் பொறுத்த வரையில் பணக் கொடுப்பனவுகள் ஆரம்பமானதும் மிகவும் நெருக்கமானவர்கள் நிதியைக் கொடுப்பார்கள். அதில் இருப்பவரில் ஒருவரிடம் தமது பெயரைச் சொல்லி பணத்தைக் கொடுக்க அவர் அப்பெயரையும் பணத்தொகையையும் உரத்துச் சொல்வார். இது அப்பணச்சடங்கில் பங்கு கொள்வோர் அனைவருக்கும் திருப்தி தருவதாக அமையும். கடன் கொடுத்தவர் அற்ஹோம் வைக்கும் போது கடன் பெற்றவர் இரட்டிப்பாக அல்லது அதற்கு மேலாகவும் கொடுப்பர். மேலதிகமாக பெறப்பட்ட பணமானது இவர் கொடுக்க வேண்டிய பணத்துடன் சிறிய தொகையை சேர்த்துக் கொடுத்தால் அது "மட்டம் கட்டுதல்" எனச் சொல்லப்படும். அதாவது குறித்த நபர் தனது கடனை முடித்துக் கொள்கிறார் என்பது அதன் பொருளாகும். குருநகர் பிரதேச மக்களைப் பொறுத்த வரையில் அவர்களது சமய ரீதியான சடங்குகளிலே அற்ஹோம் எனும் பணச்சடங்கு முறைமையானது முக்கியத்துவம் வாய்ந்ததாக காணப்படுகின்றது.

உசாத்துணைகள்


தபேந்திரன்.வே "கிராமிய வறுமையை தணித்த அற்ஹோம் முறைமை", உதயன் பத்தரிகை.(13.07.2013)

குறிப்பேடு இலங்கை மத்திய வங்கி ,1999.


### என்றும் ஒரே பேச்சு

முல்லா உமக்கு இப்பொழுது என்ன வயது என்று கேட்டார் நண்பர் ஒருவர். நாற்பது என்றார் முல்லா. என்ன 5 வருடங்களுக்கு முன் உம்மைக் கேட்டபோது நாற்பது வயது என்று தான் சொன்னீர். இப்போதும் அதை வயதைத்தான் சொல்கிறீரே என்று கேட்டார் நண்பர். என்னிடம் நேற்று ஒரு பேச்சு நாளைக்கொரு பேச்சுக்கிடையாது எப்போதும் ஒரே பேச்சுத்தான் என்று பெருமையுடன் சொன்னார் முல்லா.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயணிப்போம் இன்றே நாகரிக பண்பாட்டுடனே



**திரு. வ. துசியந்தன்**
7/3, புது வீதி, கொய்யாத்தோட்டம்
யாழ்ப்பாணம்.

*நவீன உலகமே!*
*நாகரிக மாற்றமே!*
நாகரிக மாற்றமே மாற்றியதே எம்மை
பேராசை போர்வையிலே அடைபட்டோம் பணத்தாலே
ஆடம்பர வாசத்திலே நிலைமாறி தவித்திடவே
மனிதத்தை கூட மணமாக சுவாசித்தோம்
மணமாக வெளியிட்டோம்

களை கட்டி ஏர்பூட்டி உழவு செய்தவனே
உணவுக்கு தவிக்கின்ற நிலையானதடா
அடர்ந்த காடுகளெல்லாம் அனாதை ஆகிடவே
உயர்ந்த கட்டடங்கள் உருவாகி வருகிறதே

பிஞ்சுகளைப் போற்றிய காலமும் மாறி
காமத்தின் பசிக்கு இரையாக்கும் காலமடா
வயதெல்லை வாராத வஞ்சகன் அவனோ?
வார்த்தை தள்ளாடும் விசத்தை பருக்குகிறானே
ஐயோ கொடுமை.....!

பண்பாடு, பண்பாடு தமிழன் பண்பாடு
என்றெல்லாம் கூறிய காலமெல்லாம் - இன்றோ
நாகரிக வெள்ளத்தால் அடித்துப் போன
அவலத்தை யார் உணர்வார்? இங்கே

தரணியில் தடம் பதித்த தமிழனின் விளையாட்டை
தாரைவார்த்து கொடுத்து விட்டான் நாகரிக மோகத்தால்
விழாக்களின் போதெல்லாம் வீரத்தை வெளிக்காட்டியவன்
பண்பாட்டை மறந்திங்கே கிரிக்கட்டுள் நுழைகின்றான்
பண்டிகை காலத்திலே பலகாரங்கள் பரிமாறி
உறவுகள் பிணைப்பினிலே உல்லாசம் கண்டிருந்தோம்
அன்பிற்கு அடைக்கலமாய் ஆசைகளை கொண்ட

விதையெல்லாம் விருட்சமாகும் பந்தத்தை வளர்த்திருந்தோம்
காலத்தின் சுழற்சி மாற்றத்தில் நிற்க
மாறாத பண்பாட்டை நிலை கொள்ள செய்ய
நாகரிக உலகத்தில் நம் தடம் பதிக்க
பயணிப்போம் இன்றே நாகரிக பண்பாட்டுடனே
புது மாற்றம் காணும் - உன் எண்ணத்துடனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணக் கோட்டையின் அமைவிடச் சிறப்பும், வரலாற்றுத் தொன்மையும்



**திரு.கி.இளங்குமரன்**
பட்டதாரிப் பயிலுநர்
பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்

ஐரோப்பியர்களால் இலங்கையில் அமைக்கப்பட்ட கோட்டைகள் அவர்களது பாதுகாப்பு, நிர்வாக நோக்கம் கருதி அமைக்கப்பட்டதோடு அவை அனைத்தும் கடல் பகுதிக்கும், தரைப்பகுதிக்கும் இடைப்பட்ட பரப்பிலேயே அமைக்கப்பட்டது. அந்த வகையில் யாழ்ப்பாணக் கோட்டை வடமாகாணத்தின் தலைநகராக விளங்கும் யாழ்ப்பாண மாவட்டத்தின், யாழ்ப்பாணப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட கோட்டை கிராம சேவையாளர் பிரிவில் அமைந்துள்ளது. இது யாழ்ப்பாணம் - கண்டி வீதியில் காங்கேசன்துறை வீதியைச்சந்திக்கும் மையத்தில் இருந்து 300m தூரத்தில் கடற்கரை வீதிக்கும் பண்ணை சந்திக்கு இடையில் அமைந்துள்ளது.

ஆரம்பத்தில் போர்த்துக்கேயர் ஆட்சி யாழ்ப்பாணத்தில் நிலவிய காலப்பகுதியில் நல்லூர் பகுதியில் தமிழருக்கு மத்தியில் தங்கி இருப்பது பாதுகாப்பற்றது என்பதை கருத்தில் கொண்டு யாழ்ப்பாணத்தில் கோட்டை அமைக்க வேண்டிய தேவை கருதி அதனை பழைய முஸ்லீம் பண்டகசாலைகள் அமைந்த யாழ்ப்பாணக் கடல் நீர் ஏரியினை எல்லையாகக் கொண்டும், கொழும்புத்துறை, அலுப்பாந்தித்துறை, அராலித்துறை, ஊர்காவற்துறை போன்ற துறை முகங்களிற்கு அருகில் அமைந்துள்ளது. மேலும் சாட்டி, ஆனைக்கோட்டை, பூநகரி போன்ற மையங்களிற்கு அண்மையிலும் அமைந்துள்ளது.

புவியியல் அடிப்படையில் இதன் அமைவிடத்தை நோக்கும் போது வட அகலாங்கு 90 - 55' , 90 -45' இடையிலும், கிழக்கு நெட்டாங்கு 790 - 55' , 500 - 10' இடையிலும் அமைந்துள்ளதோடு 27.190C வெப்பநிலையையும் வருடாந்த மழைவீழ்ச்சியாக 1025m2 பெறுவதோடு உலர்வலயத்தில் அமைந்து காணப்படுகிறது. இது கடல் மட்டத்திலிருந்து 2.66m3 அமைந்துள்ளது.

யாழ்ப்பாணக் கோட்டை ஆரம்பத்தில் போர்த்துக்கேயர்களால் அமைக்கப்பட்ட போது இப் பிரதேசத்தின் புவியியல், சூழல் பின்னணி தமக்கு சாதகமான வகையில் அமைந்திருந்ததா என்று ஆராயப்பட்டே அமைக்கப்பட்டது. அந்த வகையில் கடல் வழி வர்த்தகத்தை மேற் கொள் வதற்கான உறுதியான தன்மை காணப்பட்டன. குறிப்பாக ஊர்காவற்றுறை, பண்ணைத்துறை, அராலித்துறை, கொழும்புத்துறை, அலுப்பாந்தித்துறை போன்ற துறைமுகங்களுடன் நேரடி கடல் வணிகத்தை மேற்கொள்வதற்கான சிறந்த கடல் சூழல் பின்னணி காணப்பட்டது. பிரதே சங்களுடன் தொடர்புபடத்தக்க வகையில் சமதரையான நிலப்பகுதியாக அமைந்தமை, அத்துடன் நகரத்தை நேரடியாக கண்காணிக்கக்கூடிய வகையில் அமைந்திருந்தமை, ஆரம்பகால வர்த்தகமையமாகக் காணப்பட்டமை, முஸ்லீம்களின் பண்டகசாலை அமைக்கப்பட்டிருந்தமை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்நாட்டில் எதிர்ப்புக்கள் ஏற்படின் கோவாவில் இருந்து துணைப்படையை பெற்றுக்கொள்ளும் வகையிலும், யாழ்ப்பாணக் கடல்நீர் ஏரியின் விளிம்பில் கடல் மார்க்கமாக வரும் எவரும் நகரத்துக்கு பிரவேசிக்கும் மையவாயில் பாதுகாப்புக்கு ஏற்றதாக காணப்பட்டதோடு, அகழிக்கு நீரை வழங்கக்கூடிய கடல் காணப்பட்டமை போன்ற பௌதீக புவியியல் அம்சங்கள் சிறப்பாகக் காணப்பட்டமையால் இப்பகுதியை கோட்டை அமைக்கத் தெரிவு செய்தனர் எனலாம்.

யாழ்ப்பாணக் கோட்டை அமைந்த பிரதேசமானது இப்பிரதேசத்தில் கோட்டை அமைய முன்னரே வரலாற்று தொன்மை மிக்க இடமாக விளங்கியுள்ளது. இதனை அப்பகுதியில் மேற் கொள்ளப்பட்ட ஆய்வுகள் உறுதிப்படுத்துகின்றன. அந்த வகையில் கோட்டைப் பரப்பிற்குள் மூன்று வெவ்வேறு பகுதிகளில் மாதிரிக்குழி அகழ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும் புனரமைப்புப் பகுதிகளின் போதும் 16ஆம் நூற்றாண்டுக்கு முந்திய பெருமளவான தொல்பொருள் சான்றுகளான நாணயங்கள், மட்பாண்டங்கள், சுடுமண், சிற்பங்கள், போன்றவை இப்பிரதேசம் இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முன்னரே செல்வாக்கு மிக்க பிரதேசமாக விளங்கி உள்ளது. இவ்வாறு இப்பிரதேசம் முக்கியத்துவம் பெறுவதற்கு அதன் அமைவிடமே காரணமாகும். அந்த வகையில் வடஇலங்கையின் கடல், நிலமார்க்கங்கள் சந்திக்கும் மையத்தில் அமைக்கப்பட்டுள்ளதோடு அயல் தீவுகளுடனும், இந்து சமுத்திர வர்த்தகத் தொடர்புடனும் தொடர்பு கொள்ளக்கூடிய மையத்தில் அமைந்துள்ளது.

கோட்டையின் மிக நீண்ட தொன்மையான, தொடர்ச்சியான வரலாற்றுப் பாரம்பரியம் உண்டு. இவ்வாறான பின்புலம் தான் இப்பகுதியில் போர்த்துக்கேயரே கோட்டை கட்டுவதற்கு காரணம் எனலாம். இக்கோட்டைப் பகுதிக்கு அருகில் தான் பெருங்கற்கால மையங்களான கிழக்கே அரியாலை, பூம்புகார், தென்கிழக்கே மண்ணித்தலை, கல்முனை, தென்மேற்கே சாட்டி, மேற்கே ஆனைக்கோட்டை, போன்ற மையங்களுக்கு இடையில் இப்பகுதி அமைந்துள்ளமையால் இப்பிரதேசத்திலும் பெருங்கற்கால மக்கள் வாழ்ந்திருக்கலாம் என குறிப்பிட முடியும். மேலும் இதனை உறுதிப்படுத்தும் வகையில் கோட்டையில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வின் போது பெருங்கற்காலத்தை அடைளாளப்படுத்தும் கறுப்பு, சிவப்பு மட்பாண்டங்கள் கிடைத்தமை மேலும் இதனை உறுதிப்படுத்த உதவியது. இதன் காலப்பரப்பாக கி.மு 2ம் நூற்றாண்டிலிருந்து நிலவியதாகக் குறிப்பிடப்படுகிறது. இதன் தொடர்ச்சியான குடியிருப்புகள் இப்பகுதியில் அமைந்திருந்ததனை இப்பகுதியில் கிடைக்கப்பெற்ற சுடுமண் தெய்வ உருவங்கள் குறித்து நிற்கின்றன. இப்பகுதியில் வரலாறு ஆனது பெருங்கற் காலத்திலிருந்து ஆரம்பிக்கின்றது.

இலங்கையின் நிலையமும், இங்கு இயற்கையாகக் கிடைத்த வணிகப் பொருட்களும் பண்டு தொட்டு அயல் நாடுகளுடன் வணிகத் தொடர்புகளை ஏற்படுத்தக் காரணமாகியது. அந்த வகையில் கோட்டைப் பிரதேசமானது மேற்கே இந்திய, உரோம, அரேபிய நாடுகளுடனும் கிழக்கே தென்கிழக்காசிய, கிழக்காசிய நாடுகளுடனும் நடைபெற்ற கடல் சார் வாணிபத்தில் முக்கிய பரிவர்த்தனை மையங்களில் ஒன்றாக விளங்கியது. இதனை கோட்டைப் பகுதியில் கிடைத்த தொல்லியற் சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன. ஆரம்பகாலத்தில் தென்னிந்திய வணிகர்கள், இலங்கை போன்ற நாடுகளிலிருந்து ஏலம், கறுவா, மிளகு போன்ற வாசனைப் பொருட்களையும் முத்து, ரத்தினம், யானை, யானைத்தந்தம் முதலான பொருட்களைப் பெற்று தென் இந்திய துறைமுகம் ஊடாக ரோமிற்கும் ஏனைய நாடுகளுக்கும் அனுப்பி வைத்தனர். இதே போன்று குதிரை, மட்பாண்டங்கள், உணவுப்பொருட்கள், மதுவகைகள் எனபன தென்இந்திய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறைமுகங்களின் ஊடாக இலங்கைக்கு கொண்டு வரப்பட்டன. பிற்காலங்களில் இம்முறை நீக்கப்பட்டு உரோம, அரேபிய வர்த்தகர்களே நேரடியாக வர்த்தகத்தை மேற்கொள்ள முடிந்தது. இவ்வாறான தொடர்புகள் யாழ்ப்பாண கோட்டைப் பிராந்தியத்திலும் ஏற்பட்டிருத்தது.

இம்முறை நீக்கப்பட்டு உரோம, அரேபிய வர்த்தகர்களே நேரடியாக வர்த்தகத்தை மேற்கொள்ள முடிந்தது. இவ்வாறான தொடர்புகள் யாழ்ப்பாண கோட்டைப் பிராந்தியத்திலும் ஏற்பட்டிருத்தது.

கோட்டைப் பிரதேசத்துடன் உரோம தொடர்புகள் ஏற்பட்டிருந்ததை நாணயங்கள் மட்பாண்டங்கள் கண்ணாடிப் பொருட்கள் என்பன உறுதிப்படுத்துகின்றன. இங்கு கிடைத்த சான்றுகள் ஊடாக ரோம தொடர்பானது கி.பி 1ம் நூற்றாண்டிலிருந்து ஏற்பட்டிருந்தது எனலாம். இதனை உறுதிப்படுத்தும் வகையில் கொட்றிங்ரன் யாழ்ப்பாணக் கோட்டைப் பகுதியில் உரோம பொன் நாணயங்களைக் கண்டுபிடித்ததாக தனது நூலில் குறிப்பிட்டுள்ளார். மேலும் கோட்டைப்பகுதியில் மேற்கொண்ட அகழ்வின் போது ரௌலட், அசிட்டைன், ஆம்ரோசாடிகள் என்பன கண்டுபிடிக்கப்பட்டன. இவை உரோம தொடர்பை உறுதிப்படுத்தும் முக்கிய சான்றாகும்.

உரோமரின் தொடர்பு கி.பி 5ம் நூற்றாண்டில் இருந்து படிப்படியாக வீழ்ச்சியடையவே மேற்காசியாவில் எழுச்சி பெற்ற அரோபியரின் செல்வாக்கு இப்பிராந்தியத்தில் ஏற்பட்டிருந்தது. இதனை இப்பகுதியில் கிடைத்த தொல்பொருள் சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன. அந்த வகையில் அரேபிய நாணயங்கள், நிறந்தீட்டப்பட்ட மதுச்சாடிகளின் உடைந்த பாகங்கள் என்பன கோட்டை அமைந்துள்ள பகுதிக்கும் அரேபியாவிற்கும் இடையிலான வர்த்தகத்தின் முக்கிய கேந்திர நிலையமாக செயற்பட்டிருந்தது.

சீனாவிற்கும் இலங்கைக்கும் இடையில் ஏற்பட்ட தொடர்புகள் பற்றி மாந்தை, பூநகரி போன்ற இடங்களில் கிடைக்கப்பெற்ற சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன. இவ்வாறான வணிகத்தொடர்பு கோட்டைப் பிரதேசத்துடனும் ஏற்பட்டிருந்ததனை இங்கு கிடைக்கப் பெற்ற சீன மட்பாண்டங்கள், கண்ணாடிப்பொருட்கள், நாணயங்கள் என்பன இப்பகுதியில் கிடைத்துள்ளமையின் ஊடாக உறுதிப்படுத்திக் கொள்ளமுடியும். இதன் காலம் கி.பி 10ம் நூற்றாண்டிற்கும் கி.பி 13ம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலம் ஆகும்.

யாழ்ப்பாணக் கோட்டை அமைந்த பிரதேசத்திற்கும் தென் இந்தியாவிற்கும் இடையே பண்பாட்டு வர்த்தக அரசியல் ரீதியான தொடர்புகள் ஏற்பட்டிருந்தன. இதனை இப்பகுதியில் கிடைத்த சேர, சோழ, பாண்டிய, அரசு கால மட்பாண்டங்கள் உறுதிப்படுத்துகின்றன. அதிலும் குறிப்பாக சோழரின் தொடர்பு இப்பகுதியில் மிகையாகக் காணப்பட்டிருந்தது. இப்பகுதியில் சோழர் காலத்தில் வர்த்தக ரீதியாக மட்டுமல்லாது குடியிருப்பு மையமாகவும் விளங்கியிருந்தது. அத்துடன் கோட்டைப் பகுதியில் சோழ நாணயங்கள் கிடைத்தமையும் குறிப்பிடத்தக்கது. இத் தொடர்புகள் கி.பி.993ல் இருந்து கி.பி 1070 வரை ஏற்பட்டிருந்தது. பொலநறுவை காலத்தில் ஊர்காவற்றுறை துறைமுகம் ஊடாக வர்த்தகத்தை அக்கால சிங்களமன்னர் மேற் கொண்டிருந்தனர். இதனை நயினாதீவு கல்வெட்டு உறுதிப்படுத்தப்படுகிறது. இவ்வாறான ஒரு பின்னணியில் கோட்டைப் பிரதேசத்துடன் இவ்வாறான தொடர்புகள் இருந்ததனை பொலநறுவை கால நாணயங்கள் இப்பகுதியில் கிடைத்திருப்பின் அதன் ஊடாக இத்தொடர்புகளை அறியமுடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணக் கோட்டைப் பிரதேசமான யாழ்ப்பாண அரசு காலத்தில் செல்வாக்கு மிக்க பகுதியாக காணப்பட்டது. அந்த வகையில் யாழ்ப்பாண மன்னர் கால நாணயமான சேது நாணயங்கள் அதிகளவில் கண்டு பிடிக்கப்பட்டது. அத்துடன் சுண்ணக்கல்லால் ஆன ஆலயங்களின் எச்சங்கள் இப்பகுதிக்குரியவை. ஆகவே சோழர் காலத்திற்கு உரியவையாகும். நல்லூர் தலைநகராக விளங்கிய போது அதன் முக்கிய கேந்திர மையமாக கோட்டைப் பகுதி விளங்கி இருந்தது. அந்த வகையில் இப்பகுதியில் போர்த்துக்கேயர் கோட்டை அமைக்க முன்னரே இப்பகுதியில் தமிழ் மன்னர் காலத்தில் காவலரண்கள், கோட்டைகள் அமைந் திருந்ததாக ராஜவலிய எனும் சிங்கள நூல் குறிப்பிடுகின்றது. போர்த்துக்கேயர் யாழ்ப்பாண அரச படைகளுடன் போரிட்ட இடங்களில் இக்கோட்டைப் பிரதேசம் அதாவது பண்ணைப் பிரதேசம் குறிப்பிடப்படுகிறது. இவ் ஆதாரங்களை நோக்கும் போது போர்த்துக்கேயர் இப்பகுதியில் கோட்டை அமைக்க முன்னரே இப்பகுதியில் களி, மண், மரம் என்பவற்றிலான கோட்டை யாழ்ப்பாண அரசர்களால் அமைக்கப்பட்டதோடு இவை போர்த்துக்கேயருக்கு இடையிலான போரில் அழிந்து போனதாகும். பிற்காலத்தில் போர்த்துக்கேயர் இதனை திருத்தி கற்கோட்டையாக அமைத்தனர் என குறிப்பிடப்படுகிறது.

ஆசியாவின் முக்கிய கோட்டையாகவும் தமிழர் பிரதேசத்தில் அமைக்கப்பட்ட கோட்டையாகவும் விளங்குவது யாழ்ப்பாணக் கோட்டையாகும். இப்பகுதியில் கோட்டை அமைவு பெறுவதற்கு இப்பகுதியில் வரலாற்று முக்கியத்துவம், சூழல் பின்னணி, புவியியல் பின்னணி என்பன செல்வாக்குச் செலுத்தி உள்ளது. அந்த வகையில் இதுவரை காலமும் கோட்டையானது ஐரோப்பியர் ஆட்சியிலேயே தோற்றம் பெற்றதாகக் குறிப்பிடப்பட்ட போதும் மீள்புனர்நிர்மாணப் பணிகளின் போது இடம் பெறும் அகழ்வாய்வுகள், மேலாய்வுகள் என்பன இப்பிராந்தியத்தின் வரலாற்றினை வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திற்கு கொண்டு சென்றுள்ளது. அந்த வகையில் பெருங்கற்காலத்திலிருந்து ஓர் ஆதிக்குடியிருப்பு மையமாகவும், தென்னாசிய, தென்கிழக்காசிய நாடுகளுடன் நெருங்கிய வணிக உறவுகளைக் கொண்ட மையமாகவும் இப்பிரதேசம் விளங்கியுள்ளது. இதனை இப்பகுதியில் கிடைத்து வரும் தொல்பொருட் சான்றுகள் வெளிப்படுத்துகின்றன. அத்துடன் போர்த்துக்கோயரால் இப்பகுதியில் கோட்டை கட்டுவதற்கு முன்பே இப்பிரதேசத்தில் யாழ்ப்பாண இராசதானி காலத்தில் கல் மண்ணால் ஆக்கப்பட்ட கோட்டை இருந்ததாக நம்பப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

உசாத்துணை நூல்கள்

• புஸ்பரத்தினம் . ப, 2013, " நல்லூர் இராசதானியும் யாழ்ப்பாணக் கோட்டையும்" மீள் வாசிப்பு, கொழும்பு தமிழ்ச்சங்க வெளியீடு.

• இராசநாயகம் . செ, 1999, "யாழ்ப்பாண சரித்திரம்", ஏசியன் எடியுகேசன்ஸ் சேவிஸ், முதல் பதிப்பு, யாழ்ப்பாணம்.

• பத்மநாதன் . சி, 1992, "ஆரியச்சக்கரவர்த்திகள் காலம்" யாழ்ப்பாண இராச்சியம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு, முதற் பதிப்பு, திருநெல்வேலி.

• Nelson . W. A . 1984, The Dutch Fort of Srilanka, The Military Monuments of Ceylon, Bdinburgh : Canongate Publishing Ltd.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் திருநாடே!!



திரு. சிறீ சிறீஸ்கந்தராசா
419, கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம்




எங்கள் திருநாடே!!ஈழவளநாடே!!
பொங்கு தமிழ்கண்டு புகழ்பெற்ற
பெருநிலமே!

அன்னை உந்தன் விலங்கொடிக்க
தன்னைத் தந்த மறவர் வாழ்க!
தரணி போற்றும்தானைத் தலைவன்
தளபதிகள் நீவிர் வாழ்க!

முல்லை நிலமே! மூத்த குடியே!
உன்னைப் பிரிந்ததனால்
உயிரை நாமிழந்தோம்!

மண்ணில் புதைத்து விட்டோம்!
மறத்தமிழர் குலம் உன்னை!!
கண்ணீர் வெள்ளத்தில் கடலே மூழ்கியது!
செந்நீர் வெள்ளத்தில் சிவந்தது தமிழீழம்!!

தலைநகரே! திருமலையே!
தாவி வரும் கடலலையே!
தமிழ் மண்ணை முத்தமிட
தவமென்ன நீ செய்தாய்?

செந்தமிழே யாழ்நிலமே!
சிறப்பான தமிழ் மண்ணே!
சந்ததிகள் பல போற்றும்
சங்கிலியன் திருநாடே!

வீரம்விளைகின்ற
விலை போகாப் பெருநிலமே!
வன்னி வயல் பரப்பே!
வளம்கொழிக்கும் தாயகமே!!
முத்து விளைநிலமே!
மன்னார் கடல் அலையே!
மூழ்கிக் குளித்து வரும்
முத்தமிழே நீ வாழி!

கட்டவிழ்ந்த போதும் எமைக்
காத்து நின்ற தமிழ் மண்ணே!
மொட்டவிழ்ந்த தாமரையே!
மட்டு நகர் நீ அழகே!


தங்கத்தமிழ் தாயகமே!
தரணி புகழ் பாடிடுமே!!
சங்கெடுத்து நீ ஒலித்தால்
சங்கத்தமிழ் முழங்கிடுமே!!

**********************************



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்பாட்டு வளர்ச்சியில் கலைகளின் வகிபாகம்



**புயல் பெ. ஸ்ரீகந்தநேசன்** (M.Phil)
யாழ்ப்பாணம்

வடக்கு மாகாணத்தில் உள்ளடங்கும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் வாழும் மக்கள் மத்தியில் தனித்துவமான பண் பாடுகளும் கலைகளும் உண்டு. மனித தேவைகள் நாளுக்கு நாள் அதிகரிக்க அதிகரிக்க அவனது பண்பாட்டிலும் மாற்றங்கள் ஏற்படுவது இயல்பு. பாரம்பரிய வடக்கு மாகாண தமிழர் பண்பாட்டு வளர்ச்சியில் பண்பாட்டைச் சிதைய விடாமல் பாரம்பரிய கலைகளும் நவீன கலைகளும் எவ்வாறான வகிபாகம் செலுத்துகின்றன என இவ் ஆய்வுக் கட்டுரை சுருக்கமாக அலசும்.

பண்பாடு என்பது குறிப்பிட்ட நாடு, இடம், பிரதேசம், மாவட்டம், மாகாணம் முதலியவற்றைச் சேர்ந்த மக்களின் பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், மதம், மொழி, கலைகள், சிந்தனை வெளிப்பாடு, வாழ்க்கையுடன் தொடர்பு கொண்டிருக்கும் பொருள், பொழுது போக்குகள், விளையாட்டு முதலியவற்றின் முழு வடிவத்தையும் குறிக்கும். சுருங்கக் கூறின் பிறரிடத்தில் அல்லது பலர் முன்னிலையில் ஒருவர் நடந்து கொள்ள வேண்டிய முறையே பண்பாடாகும்.

வடக்கு மாகாண வாழ் மக்களின் பண்பாட்டின் வளர்ச்சியில் ஆரியச் சக்கரவர்த்திகள் காலம் தொடக்கம் இற்றை வரை சிறப்பிடம் வகுத்து வருவது கூத்து ஆகும். யாழ்ப்பாணத் தமிழ் மன்னர் காலத்தில் சகவீரன் என்பவரால் இயற்றப்பட்ட கண்ணகி வழக்குரை பொது மக்கள் சார்பு இலக்கியத்தில் சிறப்பிடம் பெற்றிருந்தது. இன்று இந்த கூத்து வடிவம் யாழ்ப்பாணப் பிரதேசத்தில் கோவலனார் கதையென்றும், முல்லைத் தீவுப் பிரதேசத்தில் சிலம்பு கூறல் என்றும் பெயர் பெற்று சில விழாக்களில் பாடப்பட்டு வருவதைக் காணலாம்.

அறம், நீதி, ஊழ்வினை ஆட்சி, பெண் சுதந்திரம் முதலிய வடக்கு மாகாண பண்பாட்டு அம்சங்களில் இன்று சில மாறுதல்கள் ஏற்பட்டாலும் அவ் அம்சங்களைத் தமிழ் மக்கள் மத்தியில் கோவலனார் கதை, சிலம்பு கூறல் என கூத்து வடிவங்களாக ஆடப்பட்டும் பாடப்பட்டும் பேணப்படுவதையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அத்துறை சார்ந்த ஆய்வுகளும் ஆவணப்படுத்தல்களும் இடம் பெறுவதைக் காணலாம்.

வடக்கு மாகாணத்தின் வன்னிப் பிராந்தியத்தில் ஆரம்பகாலத்தில் அநேகமான கலைகள் சமயச் சடங்குகளாகவே இருந்துள்ளன. பின்னர் இந்தச் சடங்குகளில் சில அவர்கள் செய்யும் தொழில்களோடு தொடர்புபடுத்தப்பட்டு தொழிற்சாலைகளாக மாற்றம் பெற்றன. வன்னிப் பிராந்தியக் கலை வடிவங்களை :

சமயச் சடங்குகள் - காவடி ஆட்டம், அம்மன் ஆட்டம், சிலம்பு கூறல் படிப்பு, புராணப்படிப்பு, வேதாள ஆட்டம், பிள்ளையார் கதை படிப்பு, சூரன்போர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில் ரீதியான கலைகள் - நாற்று நடும் பாடல்கள், பள்ளுப் பாடல்கள், காவலப்பாட்டு, அருவி வெட்டும் பாடல்கள், பரத்தை வெட்டும் பாடல்கள்.

பொழுதுபோக்கிற்கான கலை வடிவங்கள் - கோலாட்டம், ஊஞ்சல், மருடி, வேதாள ஆட்டம்.

என மூன்று வகைப்படுத்தி நோக்கலாம்.

வந்தோரை வரவேற்கும் பண்பாடு, பகிர்ந்துண்ணல், முதியோரை மதித்தல், குருவை மதித்தல், கடின உழைப்பு, வித்தை கற்றல் முதலிய பண்பாட்டு கூறுகளின் வளர்ச்சியில் வன்னிப் பிராந்தியத்தில் ஆரம்ப காலத்தில் இருந்து சிறப்பான வகிபாகம் வகுத்து அதை பரம்பரையாகக் கடத்தி வருவதைக் காணலாம்.

வடக்கு மாகாண மக்களின் பண்பாட்டு வளர்ச்சியில் ஆரம்பகாலம், யாழ்ப்பாணத் தமிழ் மன்னர் காலம், போர்த்துக்கீசர் - ஒல்லாந்தர் காலம் முதலிய காலங்களில் பண்பாட்டு வளர்ச்சியில் பாரம்பரிய கலை வடிவங்கள் வகிபாகம் பெறுவதையும், பத்தொன்பதாம் நூற்றாண்டிலும், இருபதாம் நூற்றாண்டிலும், இருபத்தொராம் நூற்றாண்டிலும் பண்பாட்டு வளர்ச்சியில் நவீன கலை வடிவங்கள் வகிபாகம் பெறுவதையும் காணலாம்.

வடக்கு மாகாணத்தில் தோற்றம் பெற்ற சோதிட வைத்திய நூல்கள், வரலாற்று நூல்கள், தல புராணங்கள், பள்ளு நூல்கள், அம்மானை நூல்கள், புராண நூல்கள், காவிய நூல்கள் முதலிய பாரம்பரிய இலக்கிய வடிவங்களின் மூலம் அதாவது கலை வடிவங்களின் மூலம் தமிழர் பண்பாட்டு கலைகள் சிறப்பான வகிபாகத்தைப் பெற்றுள்ளது. ஏனெனில், நவீன மருத்துவம், சோதிடம், வானவியல் முதலிய பண்பாட்டு வளர்ச்சிக்கு மேற்குறிப்பிட்ட கலை வடிவங்களே அத்திபாரங்கள் ஆகும்.

"பண்பு உடையார் பட்டுண்டு உலகம் அது இன்றேல் மண்புக்கு மாய்வது மன்" என்ற பொய்யாமொழிப் புலவரின் வாக்குக்கேற்ப செயற்பட்டது வடக்கு மாகாண மக்களின் பண்பாடு. இதனை செகராசசேகரமாலை என்னும் நூல் உறுதிப்படுத்துகின்றது. பண்பாட்டு நிலையிற் சொகராசசேகரமாலை என்னும் நூலின் பதிவுகள் இன்றைய பண்பாட்டுக்குத் தேவையான நடை முறைகளைப் பற்றிய விளக்கத்தைத் தரும் மூல நூலாகவுள்ளது. இந்நூலுக்கு 1943ஆம் ஆண்டில் உரை வகுத்த இ.சி. இரகுநாதையர் முகவுரையில் சோதிடத்தின் மூவகைகளை விளக்கியுள்ளார்.

பாரம்பரிய கலைகளான :- செய்யுள், இலக்கியம், இசை, நடனம், ஜோதிடம், ஓவியம், சிற்பம், வாத்தியம், கூத்து, கைவினை, ஆயுர்வேதம், கிராமிய விளையாட்டுக்கள் முதலிய பல்வேறு கலை வடிவங்களினூடாக வடக்கு மாகாண மக்களின் பண்பாடுகள் வெளிப்படுத்தப் படுவதுடன் அந்த பண்பாட்டு வளர்ச்சியில் பாரம்பரிய கலைகள் அன்று தொடங்கி இன்று வரை பொதுவானதும் சிறப்பானதுமான வகிபாகத்தை வகிக்கின்றது என்பது நிதர்சனம் சான்றாக கோவலன் கூத்திற்கான மேடையமைப்பு "வட்டக்களரி" என அழைக்கப்படும். ஒன்பது தொடக்கம் 18 அல்லது அதற்கு மேற்பட்ட தடிகளைக் குழிதோண்டி வட்டவடிவமாக நடுவார்கள். இது வடக்கு மாகாணத்தில் ஆரம்பகாலத்தில் பயன் கலையும் சிறப்பாக வளர்ச்சி பெற்றிருந் தமையைக் காட்டும்.

இவ்வுலகில் உள்ள கலைகளைக் கவின் கலையென்றும், பயன் கலையென்றும் முழுமையாக வகுக்கலாம். கண்ணையும், செவியையும் கவர்ந்து அவற்றின் வாயிலாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனத்திற்கு மகிழ்வு ஊட்டும் கலைகள் கவின் கலைகள் ஆகும். மக்கள் வாழ்க்கைக்கு பயன்படும் பலதிறப்பட்ட பொருட்களை ஆக்கிக் கொள்வதற்குச் சாதனமாகிய கலைகள் பயன் கலைகள் ஆகும். கவின் கலையும், பயன் கலையும் வடக்கு மாகாண மக்களின் பண்பாட்டின் வளர்ச்சியில் சிறப்பான வகிபாகம் செலுத்தி வருகின்றன என்பது வெளிப்படையான உண்மையாகும்.

நவீன கலை வடிவங்களான :- சிறுகதை, கவிதை, நாவல், நாடகம், விளம்பரம், துண்டுப் பிரசுரம், திரைப்படம், ஒளியமைப்பு, கடிதம், இதழியல், மெஜிக், அறிவியல், பாடல், கட்டுரை, நாடகம், ஆய்வு, விமர்சனம், பட்டிமன்றம், கமரா, இயக்குநர், இசை அமைப்பு, விபரணம் முதலிய இன்னொரன்ன கலை வடிவங்கள் வடக்கு மாகாண மக்களின் பண்பாட்டு வளர்ச்சியில் வகிபாகம் செலுத்தியதைக் காணலாம். வடக்கு மாகாணத்தில் யாழ் பிராந்தியத்தில் பத்தொன்பதாம் நூற்றாண்டிலேயே நவீன கலை வடிவங்கள் தோற்றம் பெற்றன. வன்னிப் பிராந்தியத்தில் இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னரே நவீன கலைவடிவங்கள் தோற்றம் பெற்றன.

யாழ்ப்பாணப் பிராந்தியத்தில் பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்தே நவீன இலக்கியங்களான நாடகம், நாவல், கவிதை முதலான தோற்றம் பெற்று தமிழர் பண்பாட்டை வளப்படுத்தின. 1950 களில் யாழ் பிராந்தியத்துடன் வன்னிப் பிராந்தியமும் நவீன இலக்கியங்கள் உருவாக்கத்தில் இணைந்து கொண்டது.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் புதிதாக வந்த பண்பாடுகளான :- ஜனநாயகப்பட்ட கல்வி முறை, கிராமியப் பண்பாடுகளின் பதிவுகள், புராணத்தில் பொது மக்கள் பிரச்சினைகள் கையாளப்பட்டமை, தூது என்னும் இலக்கிய வடிவத்தில் பெண்களின் சுதந்திரம் பாடப்பட்டமை முதலியன யாழ்ப்பாணப் பிராந்தியத்தில் முக்கியத்துவம் பெற்றன.

இப் பண்பாட்டின் வளர்ச்சியில் இக்காலத்தில் தோற்றம் பெற்ற கலைகள் அடையாளப் படுத்துவதிலும், ஆவணப்படுத்துவதிலும் இன்றைய தலைமுறைக்கு அப்பண்பாடுகளை கையளிப்பதிலும் முக்கியமான வகிபாகம் வகிக்கின்றன.

வன்னிப் பிராந்தியத்தில் இலங்கை சுதந்திரத்தின் பின் தோற்றம் பெற்ற நவீன இலக்கியங்கள் தமிழர் பண்பாட்டை அடையாளப்படுத்திக் காட்டுகின்றன. சான்றாக மாங்குளத்தைச் சேர்ந்த சிறுகதை எழுத்தாளரான புயல் அவர்கள் வன்னிப் பிராந்தியத்தின் பசுமையான பண்பாடுகளான :- உணவுப் பழக்கவழக்கங்கள், கிராமிய மண்வாசனை, வேட்டையாடுதல், ஆகம சாரா வழிபாடுகள், தமிழரின் பாரம்பரிய இசைக்கருவிகள், மந்தை வளர்ப்பு, வயலில் பாடல், பாரம்பரிய விளையாட்டுக்கள், கொண்டாட்டங்கள், ஆற்றில் மீன் பிடித்தல், தைப்பொங்கல், பட்டிப்பொங்கல் முதலிய அம்சங்களை தனது செழிப்பைத் தேடும் பறவைகள், காகங்களும், மைனாக்களும் முதலிய சிறுகதைத் தொகுதிகளில் பதிவு செய்து அவற்றை அடுத்த தலைமுறைக்கு கடத்தியுள்ளார். இம்மக்களின் பண்பாட்டு வளர்ச்சியில் சிறுகதை என்னும் கலை வடிவம் சிறப்பான வகிபாகத்தைச் செலுத்துகின்றது.

இன்றைய நிலையில் சில நவீன கலைகள் தமிழர் பண்பாட்டை - குறிப்பாக - வடக்கு மாகாண தமிழ் மக்களின் பண்பாட்டை சிதைக்கும் வகையில் செயற்படுகின்றன. அவற்றில் நாம் நல்லவற்றைக் கண்டு கொண்டு தீயவற்றைத் தவிர்த்தால் அவையும் எமது பண்பாட்டின் வளர்ச்சிக்குத் துணை புரியும் என்பது வெளிப்படை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று வடக்கு மாகாண மக்களின் பண்பாட்டைச் சிதைக்கும் வகையில் தமிழ்ப் பத்திரிகைகள் செயற்படுகின்றன. வியாபார நோக்கிலும், சமூக அக்கறை இல்லாமல் செய்திகளை வெளியிடல், இனவாதத்தையும் மதவாதத்தையும் தூண்டல் செய்திகளை மயக்கமாக வெளியிடல், தலைப்பில் ஒரு விடயம் உள்ளடக்கத்தில் இன்னொரு விடயம் இடம் பெறல், அரசியல் இலாபம் தேடல், பத்திரிகை தர்மத்தை மீறல் முதலிய இன்னொரன்ன தவறுகளைச் செய்து எமது சமூகத்தின் பண்பாட்டை பிழையாக வழி நடத்துகின்றன. தமிழப் பத்திரிகைகள் - சான்றாக 12.03.2019 ஆம் ஆண்டு உதயன் பத்திரிகையில் இலங்கைய ஆசிரியர் சேவை சங்கம் அனுப்பிய செய்திக்கு கல்வித் துறையினர் கண்டனப் போராட்டம் என தலைப்பிட்டு உள்ளடக்கத்தில் கண்டனப் போராட்டம், கவனயீர்ப்பு போராட்டம், சுகவீன விடுமுறை எடுப்பது அதிபர், ஆசிரியர்களின் உரிமை என மயக்க நிலையில் செய்தியைப் பிரசுரித்து கல்விப்பண்பாட்டைச் சீர்குலைத்தமை பத்திரிகை தர்மம் இன்மையைக் காட்டுகின்றது. இருந்தும் சில நல்ல விடயங்களையும் அப் பத்திரிகை வெளியிடுகின்றது என்பது இவ்விடத்தில் குறிப்பிடத்தக்கது.

பண்பாடும் கலைகளும் பரஸ்பரம் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்ட போதிலும் இவற்றைத் தொகுத்து நோக்கும் போது வடக்கு மாகாணத்தின் பண்பாட்டு வளர்ச்சியில் பாரம்பரிய கலைகள் முழுமையாக பண்பாட்டை அடையாளப்படுத்தி வளர்ச்சி அடைய வைக்கும் வகிபாகத்திலும் நவீன கலைகள் சில முரண்பாடான வேலைகளை செய்தாலும் பண்பாட்டு வளர்ச்சியில் சிறப்பான வகிபாகம் வகிக்கின்றது.

## உசாத்துணைகள்


1. அகராதி,(2010), க்ரியாவின் தற்காலத்தமிழ் அகராதி, இரண்டாம் பதிப்பு, பக் - 791.
2. துரை மனோகரன் (1997), இலங்கையில் தமிழ் இலக்கிய வளர்ச்சி, கலைவாணி புத்த நிலையம், பக் - 23.
3. செல்லத்துரை அருணா, (2000), வன்னிப் பிராந்தியக் கூத்துக்கள், கொழும்பு - ஆசிரியர் பக் - 21 - 45.
4. மனோன்மணி சண்முகதாஸ் (2011), யாழ்ப்பாணத்துப் பண்பாட்டுப் பதிவுகள், வடக்கு மாகாண ஆய்வரங்கு, பக் - 07.
5. மேலது, (2000), வன்னிப் பிராந்தியக் கூத்துக்கள், மேலது, பக் - 55.
6. அருணாசலம். க, (2004/2005), ஈழத்துச் சிறுகதைகள், இளங்கதிர், தமிழ்ச்சங்கம், பேராதனைப் பல்கலைக்கழகம், பேராதனை. பக் - 60
7. ரஞ்சிதா. சி, (17.08.2018), தாயகத்தில்/ ன் செழிப்பைத் தேடும் பறவைகள், புதன் பொய்கை, உதயன் பத்திரிகை. பக் - 17 - 18.
8. ஸ்ரீகந்தநேசன். பெ,(12.03.2019), கல்வித்துறையினர் கண்டனப் போராட்டம் செய்தி, உதயன் பத்திரிகை. பக்- 14.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்பாட்டைக் காத்திட இனித்திடும் பயணங்கள்



**தாயுமானவன் நிஷா**
யாழ். கே.கே.ரி இளைஞர் கழகம்

பரந்து விரிந்த பூமியிது
எல்லோரையும் வாழ அழைக்கின்றது.
அன்பை விதைக்கவும்
அனைத்தையும் ஆளவும்
அனைத்திற்கும் அதிகாரம் உண்டிங்கு

தொலைக்காட்சியும் தொலைபேசியும்
தொலைத்தொடர்பு சாதனங்களும்
விஞ்ஞான வளர்ச்சியும்
வினோதமான வாழ்வியலும்
நவீனத்தின் பரிசில்களாகின்றனவே

நம் சமூகப் பழக்க வழக்கங்களுடன்
ஒன்றிணைந்த வாழ்வியல் பண்புகள்
பண்பாடுகளாக கடத்துகிறது
காலம் இங்கு எம் தாயாம்
தமிழ் பண்பாட்டின் முதன்மையல்லோ

மாற்றங்களை தன்னுள் ஏற்றுத்
தன் சுயம் தனைக் காத்து
தான் வாழ்ந்து
பிறரையும் வாழ வைக்கும்
பண்பாடுடையது என் தமிழ்

போதை தரும் போதை தான்
வாள்வெட்டு தரும் போதை தான்
வீதிச் சண்டை தரும் போதை தான்
ஒழுக்கம் மீறிய சுதந்திரம் தரும்
போதை தான்
மனிதம் அழிக்கும் கொடும் விசம்.

மரபின் தன்மை காத்து
நவீனத்தின் புதுமை ஏற்று
பிற உயிர் வாழ கரம் கொடுக்கும்
பண்பாடு ஏற்றிட வேண்டுமம்மா
வாழ்தலில் இதுவே வளமாகுமே

இயற்கை மீதினில்
அதிசய பிறப்பின் மீதினில்
நேசம் கொள்ள சொல்லும் பண்பாடு
நவீனத்தை ஏற்பதால்
நலிந்திடாது யதார்த்தம் உணருவீர்

புதுமைகள் ஏற்று
பழமைகள் காத்து
வீரம் பொருந்திய எம் மண் வாசம்
பண்பாட்டுடன் காத்து வாழுவீர் வளமுடன்
பயணங்கள் இனித்திடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளர்ந்து வரும் உலகில் பண்பாட்டை பேணுவோம்



**சைவப்புலவர் சு.தேவமனோகரன்**
ஓய்வு பெற்ற திட்டமிடல் பணிப்பாளர்

எம் முன்னோர்கள் வாழ்ந்த வாழ்க்கை முறை, பழக்கவழக்கங்கள், நடைமுறைகள், உணவுப் பழக்கவழக்கங்கள், கல்விமுறை, கலைகள், வணக்க வழிபாட்டு முறைகள், மொழிப்பயன்பாடு, தொழில் முறைகள், போக்குவரத்து முறை உட்பட மனிதன் பிறந்து வாழ்ந்து வந்த சமூக வளர்ச்சிகளை முன்னோர் எமக்குக் கையளித்துள்ளார்கள். காலத்தின் தேவைக் கேற்பவும் உலக வளர்ச்சிகளின் தாக்கங்களுக்கேற்பவும் நாம் அவற்றில் பலவற்றை மாற்றங்க ளோடு கடைப்பிடிக்கிறோம். முன்னோர்கள் வாழ்ந்து காட்டிய முறைமையைப் பண்பாடு என்று கூறுகின்றோம்.

பண்பாடு என்பது மிக நீண்டகாலமாக மக்களால் பின்பற்றப்படுகிறது. எமது பண்பாடும் மிகவும் பழமையானதும் தனித்துவமுடையதுமாகும். காலத்தின் கண்ணாடி இலக்கியம் என்பர் இலக்கிய ஆதாரங்கள் எமது பண்பாடு எவ்வாறு வளர்ந்து வந்தது என்பதனை எடுத்துக் காட்டுகின்றன. இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பு தோற்றம் பெற்ற இலக்கியங்கள் மக்கள் வாழ்க்கை, பாரம்பரியங்கள், பண்பாடு என்பவற்றை எடுத்துக் காட்டுகின்றன. எம் பெற்றோர்கள் , முன்னோர்கள் எமக்களித்த சொத்து எமது பண்பாடு, பாரம்பரியங்களாகும். அவற்றைப் பாதுகாத்து நாமும் பின்பற்றுவதுடன் எமது எதிர்கால சந்ததியினருக்கு கையளிக்க வேண்டியது எமது முக்கிய கடமையாகும்.

எம் முன்னோர்கள் வாழ்க்கை முறை அவர்கள் நல்ல முறையில் வாழ வழிவகுத்து இயற்கையோடு இணைந்த செயற்பாடுகளாக அவை அமைந்திருந்தன. சுறுசுறுப்பாக இயங்கினார்கள் பெருமளவானோர் விவசாயத்தையே முக்கிய தொழிலாகக் கொண்டி ருந்தார்கள். தமக்குத் தேவையானவற்றைத் தாமே உற்பத்தி செய்தார்கள். உடலுழைப்புக்கு முக்கியத்துவம் கொடுத்தார்கள். குழுமுறைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. வயல் வேலைகள், நிலத்தைப் பண்படுத்துவது முதல் நீர் இறைத்தல், விவசாயம் செய்தல், அறுவடை செய்தல், தனித்துச் செய்ய முடியாத வகையிலமைந்தால் குழுவாகச் செயற்பட வேண்டிய தேவை இருந்தது. நீர் இறைத்தலில் தரைக்கீழ் நிரைக்கிணறுகளில் இருந்து இறைத்தார்கள். துலா இறைப்பு மூலமும், சூத்திரங்கள் மூலமும் இறைப்பதற்கு சேர்ந்து செய்ய வேண்டியதனால் பலர் சேர்ந்து தமது வேலைகளை ஒழுங்கு முறையில் செய்தார்கள். கால மாற்றத்தினால் நீர் இறைக்கும் இயந்திரம், மின்சாரம் மூலம் இறைக்கும் இயந்திரங்களின் பாவணை வேலைகளை இலகுபடுத்தியுள்ளது. இந்த நிலையில் கால மாற்றத்திற்கேற்ப செயல் முறைகளும் மாறி வருகின்றன. ஆனால் விவசாயம் செய்தலை அடிப்படையாகக் கொண்டு செயற்படுவது பண் பாட்டம்சங்களில் முக்கியமானதாகும். உழவுத் தொழிலை விடாமல் எம்மவர்கள் செய்வது எமது பண்பாட்டைப் பேணுவதற்கும், தேவையை நிறைவேற்றுவதற்கும் வழி வகுக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வள்ளுவர் குறள்

*" சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்*
*உழந்தும் உழவே தலை"*

உலக மக்கள் வாழ்க்கைக்கு உணவு முக்கியம். அதற்கு உழவுத் தொழில் முக்கியம். உழவுத்தொழிலை காலத் தேவைக்கேற்ற வகையில் எம்மக்கள் செய்வது உணவுத் தேவை நிறைவு பெறுவதுடன் பண்பாட்டம்சங்களும் வளர்க்கப்படுகின்றன. தைப்பொங்கல் கொண்டாடுவதும் சூரியனுக்கு நன்றி செலுத்தும் பண்பாட்டு விழாவாக அமைந்துள்ளது. பெருமளவிலான விவசாய வேலைகள் நவீன விஞ்ஞான வளர்ச்சி காரணமாக நவீனத் துவம் இயந்திரமாக்கல் முறைக்கு மாற்றப்பட்டாலும் விவசாயப் பண்பாடு பேணப்படுகிறது.

உலகமயமாதல் காரணமாக உணவுமுறைகளில் சில மாற்றங்கள் ஏற்பட்டாலும் எமது பிரதான உணவாக நெல்லரிசியிலிருந்து பெறப்படும் உணவுகள் அமைகின்றன. உடல் வளர்ச்சிக்கும் நோயற்ற வாழ்க்கைக்கும் அடிப்படையாக அமைகிறது. இதன் முக்கியத்துவத்தை தொடர்ந்தும் மேற்கொண்டு எமது இளம் தலைமுறையினருக்கு இதனைப் புரிய வைத்து எமது பாரம்பரியங்களின் பயனால் அமையும் நன்மைகளை விளங்கிக் கொள்வார்களானால் எமது பண்பாடு தொடர்ந்தும் பேணப்படும்.

கல்வி கற்பதில் அனைவருக்கும் கல்வி முறையில் அதன் மகத்துவத்தை உணர்ந்து கல்வி கற்பதுடன் பல சாதனைகளையும் எம்மக்கள் காட்டியுள்ளனர். தற்போதைய நிலைமைகளால் சில இடர்பாடுகள் காணப்பட்டாலும் கல்வித்துறையில் எம்மக்கள் பல சாதனைகளைச் செய்துள்ளார்கள். எமது பண்பாட்டு வளர்ச்சியில் இது முக்கியமானதாகும். கல்வி, கலை, கலாசாரத் துறைகளில் சாதனைகள் செய்வதற்கு கல்விக்கூடங்கள், பல்கலைக்கழகம், சங்கீதசபை மற்றும் பல திணைக்களங்கள் துணை செய்கின்றன. இசை நடனத்துறை வளர்ச்சியும் கல்வி கற்கும் காாலத்திலேயே ஊக்கிவிக்கப்படுகின்றன. பல்வேறு துறைகளிலும் சாதனை நிலைநாட்டி எமது பண்பாட்டை வளர்ப்பதற்கு சமகால கல்வி நடவடிக்கைகள் ஊன்றுகோலாக விளங்குகின்றன. தவில், நாதஸ்வரம், இசை, நடனம், கூத்து, காவடி, கரகாட்டம் போன்ற பல்வேறு அம்சங்கள் ஆலயங்களை நிலைக்களனாகக் கொண்டு வளர்க்கப்படுகின்றன. இப்பண்பாட்டு அம்சங்களும் நாம் தொடர்ந்து பயணிக்க வேண்டியவை.

மொழிப்பயன்பாட்டைப் பார்க்கும் போது யாழ்ப்பாணத்துப் பேச்சு வழக்கிற்கும் இலக்கியங்களில் கையாளப்படும் மொழி வழக்கிற்குமிடையே பெரும் வேறுபாடு இல்லை என்றே கூறலாம். படித்தவர்கள், படிக்காதவர்கள் என்ற பேதமின்றி அனைவரும் பேசும் மொழி ஒரே தன்மையுடையதாக அமைந்துள்ளது. மொழி வளர்ச்சி அந்த மொழியைப் பேசுகின்ற மக்களுடைய பண்பாட்டு வளர்ச்சியில் செல்வாக்குச் செலுத்துவதனைக் காணலாம். மக்கள் வாழ்க்கை முறை கலை கலாசாரம், பண்பாடு என்பவை மொழியினாலே கையாளப்படுகின்றன. வளம் மிக்க மொழியிலிருந்து வளமான பண்பாடு வளர்க்கப்படுகிறது.

விருந்தோம்பல், பெரியோரைப் பேணல், நல்ல பண்புகளைப் பின்பற்றுதல், ஆத்மீக சிந்தனை, வணக்க வழிபாட்டு முறைகள் யாழ்ப்பாணப் பண்பாட்டு வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைகின்றன.

*" பண்புடையார்ப் பட்டுண்டு லகம் அதுவின்றேல்*
*மண்புக்கு மாய்வது மன்"*

எனும் குறள் பண்புடைமையின் சிறப்பை எடுத்துக் காட்டுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது பண்பாடானது இயற்கையுடன் இணைந்ததாக விளங்குவது சிறப்பம்சமாகும். மட்பாண்டங்களில் சமையல் செய்வது, வாழையிலையில் உண்பது போன்றவை இடைப்பட்ட காலங்களில் மாறினாலும் மீண்டும் இவை தற்போது மக்களால் கைக்கொள்ளப்படுவது எமது பண்பாட்டின் அம்சங்கள் பயனுடையவை, நன்மை தருபவை அவற்றை நாம் பேணிப்பாதுகாத்து எதிர்காலத்தினருக்கு கையளிக்க வேண்டும்.

பாடசாலைகள், ஆலயங்கள் அன்று தொடக்கம் இன்று வரை பண்பாட்டுக் கருவூலங்களாகத் திகழ்கின்றன. கட்டிடம், சிற்பம், ஓவியம், இசை, நடனம், நாடகம் என்பன மேற்படி பாடசாலைகளையும், ஆலயங்களையும் அடிப்படையாகக் கொண்டு வளர்ந்துள்ளன. இவை பௌதீக ரீதியிலும், கலாசார ரீதியிலும் பெருமாற்றங்களின்றிக் காணப்படுகின்றன. இதனைக் கொண்டு நாம் எமது பண்பாடு பெருமளவில் மாறாமல் காலத் தேவைகளுக்கேற்ப வளர்ந்து வருகின்றதென்பதனை அறியலாம்.

எமது பண்பாட்டில் நவீன விஞ்ஞான வளர்ச்சியினால் சில பொருட்கள் பாவனையில் இல்லாமல் போயிருக்கின்றன. உரல், உலக்கை, திரிகை, உறி, பரண், கோர்க்காலி போன்றவை தற்போது வேறுவிதமான பொருட்கள் மாற்றல் பொருட்களாக வந்தமையால் அவை எமது இளம் தலைமுறையினருக்கு தெரியாமல் போகலாம். அவற்றில் சில இன்றும் சில வீடுகளில் இருக்கின்றன. பல பொருட்கள் அரும் பொருட்காட்சியகங்களில் பேணிப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. அவற்றின் மூலம் தற்போது அருகிவரும் சில பொருட்களை நாம் காணமுடிகிறது. அரும் காட்சியங்களும் எமது பண்பாட்டை எடுத்துக் காட்டுவனவாகவே அமைந்துள்ளன. பண்பாட்டைப் பேணிப்பாதுகாத்துப் பயணிப்பதற்கு எமது பண்பாட்டம்சங்களுடன் அரும் பொருட்காட்சியகங்களிலுள்ள பொருட்களும் முக்கியமானவையாக அமைகின்றன.

பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகுதல் என்று கூறுவார்கள். ஏனைய பண்பாடுகள் மதிக்கப்பட வேண்டும். அதேபோன்று எமது பண்பாடும் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும். அதனூடாக நாம் பயணித்து எதிர்காலத்தினரும் அவற்றைப் பின்பற்றக் கூடியதாக வழிப்படுத்த வேண்டும்.

நவீன விஞ்ஞான தொழில்நுட்பத் தொடர்பாடல் கணினி யுகத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இவை சமூக, கலாசார செயற்பாடுகளில் பல மாற்றங்களை ஏற்படுத் துவனவாக அமைகின்றன. எனினும் எமது பண்பாட்டம்சங்களை மேற்படி நவீன வளர்ச்சிகளுக்கு ஈடுகொடுக்கக் கூடிய வகையில் எமது பண்பாட்டை வளர்த்துச் செல்லல் முக்கியமானதாகும்.

பழையன கழிதல் புதியன புகுதல் இயல்பானதெனினும் எமது பண்பாடு பாரம் பரியங்களின் அடிப்படைத் தன்மைகள் மாற்றமடையாத வகையில் கால மாற்றங்களுக்கேற்ப மெருகூட்டி எமது பண்பாட்டைப் பேணிப்பாதுகாத்து நாம் பயணிப்பதன் மூலம் எமது எதிர் காலத்தவர்கள் இதனை முன்னெடுத்துச் செல்ல வேண்டும். அதற்கான நடைமுறைகளை நாம் அமைத்துக் கொடுக்க வேண்டும்.

யாழ்ப்பாணக் கலாசாரம் கந்த புராண கலாசாரம் என்று நாம் பெருமைப்படுகிறோம். உலகமயமாக்கல் சில மாற்றங்களை ஏற்படுத்தினாலும் நாம் உறுதியாக இருந்து எமது பண்பாட்டைப் பேணிபாதுகாக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உசாத்துணை

1. கார்த்திகேசு சிவத்தம்பி, யாழ்ப்பாணம் சமூகம், பண்பாடு, கருத்து நிலை - குமரன் புத்தக இல்லம், கொழும்பு - சென்னை 2000.

2. என். சிவலிங்கம் பேராசிரியர் யாழ்ப்பாணப் பண்பாடு மறந்தவையும் மறைந்தவையும், குமரன் புத்தக இல்லம், கொழும்பு - சென்னை 2014.

3. அனித்தா யோகராசா யாழ்ப்பாணப் பண்பாடு அன்றும் இன்றும் - குமரன் புத்தக இல்லம், கொழும்பு - சென்னை 2014.

### காந்தியடிகளின் பதில்

ஒரு சமயம் காந்தியடிகள் கப்பலில் பிரயாணம் செய்து கொண்டிருந்தார். அப்பொழுது நடந்த நிகழ்ச்சி. பிரிட்டிஸ் அரசாங்கத்தை எதிர்த்துப் போராடி வரும் காந்தியை நையாண்டி செய்து அதிருப்தி கொண்ட ஆங்கிலேயன் ஒருவன், காந்தியை நையாண்டி செய்து சில கவிதைகளை எழுதிக்கொண்டு போய் அவரிடம் கொடுத்து விட்டுப்போனான். அதைப்படித்த காந்தியடிகள் அதிலுள்ள குண்டூசிகளை எடுத்துக் கொண்டு காகிதங்களை கிழித்து தூர வீசி எறிந்து விட்டார். மறுநாள் அந்த ஆங்கிலேயன் அவரிடம் வந்து என் கவிதைகள் எப்படி இருந்தன என்று கேட்டான். காந்தியடிகள் அவனிடம் குண்டூசியைக் காட்டி சாரத்தை எடுத்துக் கொண்டு சக்கையை எறிந்து விட்டேன் என்றார். ஆங்கிலேயன் வெட்கி தலை குனிந்தான்.

கிரேக்க அறிஞர் அரிஸ்டோட்டிலிடம் ஒருவர் வந்து உங்கள் நண்பர் ஒருவர் உங்களைப்பற்றி என்று தொடங்க உடனே அவர் நீங்க சொல்ல வருவது உண்மையான செய்தியா? உண்மையல்ல, பின் அவர் ஏதோ சொல்ல வர அவசியம் தேவையான செய்தியா? இல்லை, அப்படியென்றால் நல்ல செய்தியா? இல்லை. அப்படியாயின் நாமிருவரும் ஏன் நேரத்தை வீணடிக்க வேண்டும் என்று சொல்ல வந்தவர் வெட்கித் தலை குனிந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்றும் இன்றும்



**திரு. செ. திருச்செல்வநாதன்**
ஆசிரியர் பணி ஓய்வு
24/9 காட்டுக்கந்தோர் ஒழுங்கை
சுண்டுக்குளி யாழ்ப்பாணம்

பட்டியில்
பிறந்தபால்
பாலாச்சு
பிள்ளைக்கு
அன்று

---

உயிர்ப் பானையில்
உறைபோட்டு
உறியில் வைத்த பால்
உறங்கி தயிராச்சு
அன்று

---

இன் உடல் குளிர
இல்லமெல்லாம்
இலவசமாய்
இயற்கை மோர்
அன்று

---

பருப்புக்கும் தோசைக்கும்
பாகமாய் பசு நெய்
பார்த்தால் வாயூறும்
பசியெடுக்க மருந்தாகும்
அன்று

---

புல்லும் இலை தளையும்
புசித்து அசைபோட்டு
பால் சுரந்தன
பரிவுடன்
அன்று

---

கன்றீன்று
காலம் கனிந்து
காளை சேர்ந்து
கருவுற்றன பசுக்கள்
அன்று

---

விந்து வங்கி
விருந்தாச்சு
விலங்குக்குத் தானா?
விலக்கல்ல
விந்தை மாந்தரும்

புட்டியில்
பிறந்த பால்
பகையாச்சு
பிள்ளைக்கு
இன்று

---

உயிர் கொல்லி பிளாஸ்ரிக்கில்
உறை போடாமலே
உயிர்நுட்பு கனிந்த பால்
உறங்கித் தயிராச்சு
இன்று

---

கடைவாய் குளிர
கடையெல்லாம்
காசுக்காய்
கோல மென்பானம்
இன்று

---

பீசாவிற்கும் பிறஷருக்கும்
பாகமாய் பட்டர் சீஸ்
பார்த்தால் பரவசமாகும்
பசியெடுக்க கோன்ரஷம்
இன்று

---

தயாரிப்புக்களின்
தாபரிப்பில்
தானியங்கிப் பால் வார்க்கின்றனர்
தவிப்புடன்
இன்று

---

கன்றீனாமல்
காலங்கனியாமல்
காளை சேராமல்
கருவுருகின்றன பசுக்கள்
இன்று

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்பாடு மறவாதே........



**திருமதி. யூட் அல்போன்சஸ் மேவிஸ் ஜீன்சியா**
அபிவிருத்தி உத்தியோகத்தர்
பிரதேச செயலகம்,
யாழ்ப்பாணம்.

மதுவில் மனம் களித்திருக்க
மானம் காற்றில் பறந்திருக்க
மாந்தருன்னை வெறுத்தொதுக்க
மரணவாசல் திறந்திருக்க
மனைவியை விதவையாக்க
பிள்ளையை அநாதையாக்க
நல்லவை மறந்து போக
நாய்களுடன் தூங்க வைக்கும்
மாறுபட்ட கலாசாரம் நமக்கு
வேண்டாம் நண்பா....

உயர் கல்வி பாழாய்ப்போக
உள்ளங்கள் உடைந்து போக
உறவுகளும் பிரிந்து போக
உண்மை நிலை உணர் தோழா.....

உண்ணாமல் உறங்காமல்
ஊரூராய் திரிய வைக்கும்
உன்னையே நீ வெறுக்க
உள்ளமது நொந்து போகும்
நாடு கடந்த கலாசாரம்
நமக்கு வேண்டாம் நண்பா....

வசந்த நிலை மாறி உந்தன்
வாழ்வு பறிபோக வைக்கும்
வந்த சுகம் விலையாகி
வாசலோடு போக வைக்கும்
உடல் சிதைந்து நரம்புருவி
உயிரதனை பறித்து நிற்கும்
அரைக்காலில் முழுப் தெரிய
ஆடையினை அவிழ வைக்கும் அசிங்கமான
அடுத்தவர் நாகரிகம் வேண்டாம் நண்பா.......
தீயோர் சேர்க்கை சேரவைக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இகழ்வோர் குழுவில் இணைய வைக்கும்
கொடுத்த வாக்கை மறக்க வைக்கும்
கேடியாக திரிய வைக்கும்
அச்சம், மடம், நாணம் விட்டு
பெண்ணின் மேன்மை களைய வைக்கும்
நெருங்கி வரும் சொந்தமெல்லாம்
நெருஞ்சி முள்போல் உணர வைக்கும்
மேலைத்தேய கலாசார
மதுப்பழக்கம் வேண்டாம் நண்பா.......

உழைப்பையும் மதிப்பையும்
ஊரினில் சீர்குலைக்கும்
ஊதியத்தைச் சுரண்டி உன்னை
தெருப்பிச்சை எடுக்க வைக்கும்
மாந்தர்கள் மத்தியிலே
மடையனாய் நிற்க வைக்கும்
மறத்தமிழ் மேன்மை நீங்கி
மாவீரம் கெட்டு நிற்கும்
போதைக் கலாசாரம்
நமக்கு தேவையா நண்பா...?

மழலை மனம்மாறி இங்கு
மந்திமனம் தொங்கி நிற்கும்
மனம் மாறா உனைப் பார்த்து
மலந்தின்னி காக்கை சிரிக்கும்
அறம் தானம் மறந்து போகும்
அன்பதும் சிதைந்து போகும்
தீயதை தொடர வைக்கும்
தீமையில் விழவைக்கும்
மாறுபட்ட கலாசாரம்
மனதில்புக இடம் கொடாதே......

தொன்மையின் செம்மை சிறக்க
தொடர்ந்தெம் பண்பாடு ஜொலிக்க
திறந்த மனம் பரந்திருக்க
திக்கெட்டும் தமிழ் மணக்க
பாசத்தில் பண்பது கலக்க
பாரதெம் வீரம் கதைக்க
தமிழனாய் நீ பிறக்க
தரணியில் வரம் கிடைக்க
பாதையது மாறிடாமல்
பண்பாட்டோடு பயணித்திடு.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளர்ச்சிப் பாதையில் பண்பாடு

**திரு. சுதாகரன் நிலக்சன்**
90, சிவன் வடக்கு வீதி
யாழ்ப்பாணம்

எமது நாட்டில் நகரமயமாக்கல் காரணமாக பண்டைய காலத்தில் பின்பற்றப்பட்டு வந்த பண்பாடு கலாசாரங்கள் அழிவடைந்து வருகின்றது. இவ்வாறு அழிவடைவதால் தொடர்ந்து வரும் காலங்களில் பண்பாடு என்பதற்கே இடமல்லாது போய்விடும். ஆகவே நாட்டின் ஒவ்வொரு பிரஜையும் இவ் நவீன உலகில் பண்பாட்டுடன் பயணிக்க இயலுமானவரை முயற்சி செய்ய வேண்டும். எம் நாட்டில் அண்மைக் காலமாக ஆலய திருவிழா, பண்டிகைகள் போன்ற பண்பாடு ரீதியான நிகழ்வுகளில் ஈடுபடும் அளவு மிகக்குன்றி வருகின்றது. இளைஞர் சமுதாயமானமானது ஆலயங்களிற்கு சென்று வழிபடுவது தற்போது கேள்விக் குறியாகியுள்ளது. இவ்வாறான செயற்பாடுகளின் மூலமும் கூட பண்பாடு அழிவடைந்து வருகின்றது. இன்றைய கால கட்டத்தில் தமிழ்ப் பண்பாடு அழிவடைந்து போவதால் காலப்போக்கில் பண்பாடு என்ற பெயரிற்கே இடமில்லாது போய்விடும்.

இலங்கை நாட்டில் முதன் முதலில் இருந்தவர்கள் தமிழர்கள் ஆனால் காலப்போக்கில் சிங்களவர்கள் வந்து ஆட்சியை மேற்கொண்டு சிங்கள நாடாகவே எமது நாடு மாறி விட்டது. ஆனாலும் தற்போதும் கூட அவ் சிங்கள மக்கள் அவர்களின் பண்பாட்டை கடைப்பிடித்து வருகிறார்கள் ஆனால் தமிழ் மக்கள் பண்பாட்டுடன் பயணிப்பதற்கே வெட்கப்படுகின்றார்கள். இதனாலும் கூட தமிழ் பண்பாடு என்ற வளர்ச்சியடையாது குன்றி வருகின்றது. ஆதிக் குடிகள் பண்பாடு என்ற விடயத்தை அறிமுகம் செய்ததிலிருந்து கடைப்பிடிக்கப்பட்டு வந்த பண்பாடுகள் ஏன் இந்த நவீன உலகில் கடைப்பிடிக்க முடியவில்லை. இதனால் எதிர்கால சந்ததியினர் பண்பாடு என்ற விடயத்தையே மறந்து விடுவார்கள்.

நவீன உலகில் அறிவியல் சார்ந்த பல்வேறு கண்டுபிடிப்புக்கள் கண்டுபிடிக்கப்பட்டு அறிவியல் வளர்ச்சியடைந்தாலும் கூட பண்பாடு எனும் விடயம் தற்போது தாழ்ந்தபடியே உள்ளது. இவ் பண்பாட்டை வளர்ப்பதன் மூலம் தமிழனாகிய ஒவ்வொருவரும் சமய, கலாசார, பண்பாட்டுடன் நவீன உலகில் வாழ முடியும். பண்பாடு என்றவுடன் எம் முன் தோன்றுவது பண்டிகைளே ஆகும். இப்பண்டிகைகளில் நாம் எம் பண்பாட்டை வெளிக்காட்ட வேண்டும். ஆனால் இக்கால இளைஞர்கள் பண்டிகைகள் என்றாலே சமூக வலைத்தளங்களில் முகந்தெரியாத நபர்களிற்கும் கூட வாழ்த்துக்கள் சொல்லி விட்டு பண்டிகையைக் கொண்டாடாது ஊர் சுற்ற சென்றுவிடுவார்கள். இந்தசெயற்பாட்டால் எதிர்காலத்தில் சமூக வலைத்தளங்களில் வாழ்த்துக்கள் கூறுவதுதான் பண்பாடாக மாறும் இவ்விளைஞர்கள் நவீன உலகில் கையடக்க தொலைபேசிகளில் பதிவேற்றுவதற்குப் பதிலாக ஆலயங்களிற்க்குச் சென்று வழிபட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவினருடன் சேர்ந்து பலகாரங்கள் உண்டு வெடி, பட்டாசுகளை வெடித்து கொண்டாடுவதுடன் மூலம் மகிழ்ச்சிகரமாகவும் எதிர்காலத்தில் பண்பாடு என்ற விடயமாக இருக்கவும் காரணமாய் அமைவர். இதன் மூலம் நவீன உலகிலும் பண்பாட்டை எம்மால் வளர்க்க முடியும்

மாணவப்பருவத்திலே துடிதுடிப்போடு வேலை செய்யவேண்டிய மாணவர்கள் சிறுவயதிலே கையடக்கத் தொலைபேசிகளில் விளையாடுதல், சமூக வலைத்தளங்களில் ஈடுபடுதல் போன்ற காரணங்களனால் சோம்பேறித்தனமானவர்களாக மாறிவிடுவதோடு சிறுவயதிலேயே சில பழக்கவழக்கங்களிற்கு ஆளாகின்றனர். இதன் மூலம் பண்பாடு அழிவது மட்டுமல்லாமல் சிறுவயதிலே மாணவர்களும் தீயவர்களாகின்றனர். பெற்றோர்கள் இவ் கையடக்கத் தொலை பேசிகளை அதிகவிலைக்கு வாங்கிக் கொடுப்பதன் மூலம் இவ்வாறு ஏற்படுகின்றது எனவும் குறிப்பிடலாம். இதற்குப் பதிலாக பெற்றோர்கள் பண்பாடு சார்ந்த விடயங்களை மாணவர்களிற்கு போதிப்பதன் மூலம் எதிர்காலத்தில் கூட இளைஞர்களாகி ஆலயங்களிற்கு பல தொண்டுகளை அவர்களால் மேற்கொள்ள முடியும்.

தமிழ் வளர்த்த பெரியார்களில் சிலரான ஆறுமுகநாவலர், பாரதியார், விவேகானந்தர், விபுலானந்தர், திருவள்ளுவர் போன்றோர்கள் பெரிதும் பண்பாடு சார்ந்த விடயங்களிலே அதிக ஈடுபாட்டைக் காட்டியுள்ளனர். இதனாலேயே இக்காலத்திலும் இவர்களின் பெயர் பேசப்பட்டு வருகின்றது. இவர்களின் வரலாற்றைக் கற்கும் மாணவர்கள் ஏன் இவர்களை முன்னுதாரானமாக வைத்து அவர்களைப் போல் ஆக வேண்டும் என எதிர்பார்க்கின்றார்கள். இவ்வாறு சினிமாத்துறையில் அதிக ஈடுபாட்டைக் காட்டும் இளைஞர் சமுதாயம் பண்பாட்டுத்துறையில் ஈடுபாட்டைக் காட்டுவதில்லை. பண்பாட்டை வளர்ப்பது இதைப் பின்பற்றுவது. இளைஞர்களின் கடமையாக இருந்தாலும் கூட அவர்கள் அதை மேற்கொள்வதேயில்லை. இவ்வாறு பண்பாடு அழிவதற்கு கையடக்கத் தொலைபேசிகளை அதிகம் உபயோகித்தல், சினிமாப்படங்களை பார்த்து அடிமையாதல், தீயபழக்கவழக்கங்களில் அதிக ஈடுபாடு காட்டல் போன்ற காரணங்களே அடிப்படையாக அமைகின்றது. இவைகளைத் தவிர்த்து பண்பாடு சார்ந்த விடயங்களை மேற்கொள்வதிலும் ஈடுபாட்டை காட்டுவதன் மூலம் வலைத்தளங்கள் சினிமாப்படங்கள் பார்த்தல், தீயபழக்கவழக்கங்கள் போன்றவற்றில் ஈடுபடுவதைக் குறித்து பண்பாட்டை வளர்ப்பதற்கு பெரிதும் பங்காற்ற வேண்டும்.

மக்கள் மனதில் மாற்றம் வர வேண்டும். பண்பாடு முக்கியமானது என்ற விழிப்புணர்வு அனைத்து மக்களிடையேயும் காணப்பட வேண்டும். இளைஞர்கள் ஆலய திருவிழாக்கள், பண்டிகைகள் போன்ற நிகழ்வுகளையும் பண்பாட்டுடன் கொண்டாட வேண்டும் இலங்கை நாட்டில் தமிழர் பண்பாடு காலம் காலமாக வாழ்வதற்கு நாம் முயற்சி செய்ய வேண்டும். பாடசாலைகள், கல்லூரிகளிலும் பண்பாடு ரீதியான விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு இளைஞர்கள் உருவாகியிருக்கும் சங்கங்கள், கழகங்கள் போன்றவற்றாலும் கூட பண்பாடு தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும். இவ்வாறான செயற்பாடுகளை மேற் கொள்வதன் மூலம் பண்பாட்டை வளர்த்து நவீன உலகில் பண்பாட்டுடன் பயணிப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலம்பெயர் நண்பனுக்கு ஈழத்திலிருந்து வரையும் மடல்



**திரு. சிவபாலன் அஜெந்தன்.**
அபிவிருத்தி உத்தியோகத்தர்
பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்

நாம் தவழ்ந்த மண்ணும், நாம் வாழ்ந்த வீடும், சிட்டுக் குருவிகளாய் சிறகடித்த வயல் வெளிகளும், குளக்கரையும், கூடி விளையாடிய வாகை மரத்தடியும் நலமே. நீயும் உன் தனிமைகளும் பெருமூச்சின் வழியே விடும் ஏக்கங்களின் நிலைஅறியஆவலுடன்!

அன்பின் நண்பா! கிட்டிக்கிடங்கும், நொண்டியடித்த நிலமும், ஊஞ்சல் ஆடிய ஆலம் விழுதும், கூடிக் கூட்டாஞ்சோறுண்ட மரநிழலும் பார்க்கும் போதெல்லாம் உன் ஞாபகங்கள் தூசு தட்டப்பட்டு எழுந்து வந்து தென்றலை ஆழமாய்ச் சுவாசிக்க வைப்பதை தவிர்க்க முடியவில்லை. வேலைகளின் சுமைகளுக்குள் உன்னைத் தொலைத்து விட்டு ஓய்வே இல்லாமல் உழைக்கும் உனக்கு எம்மையும் எம் தேசத்தையும் நினைத்துப் பார்க்க நேரம் இருக்குமோ தெரியவில்லை.

பிரிய சிநேகிதா! கிடைத்த வேலையும், கிடைக்கும் ஊதியமும், புழுதி மண் வாசமும், வேப்பமரக் காற்றும், உழைப்பின் களைப்பில் தன்னிலை மறந்த ஓலைப்பாய் உறக்கமும், உறவுகளும் போதுமென்று நான் இங்கே. தங்கைக்கு வரதட்சணை தம்பிக்கு படிப்பு, அம்மாவுக்கு நல்ல வீடு, கொஞ்சம் வசதி, நகை நட்டு, காணி பூமி மற்றவர் மத்தியில் கௌரவம் இதற்கெல்லாம் இளமைகளைத் தொலைத்து விட்டு பணம் தேடி நாடிழந்து, நட்பிழந்து, உறவிழந்து, உறக்கமிழந்து, தாய்த்தேசத்தின் நேசமிழந்து, அயல் தேசம் நாடி ஓடி பனி மரக்காட்டிடையே உன் சந்தோசங்களையும் இளமையையும் தொலைத்து விட்டு பணத்திற்காய் நீ படும் பாடு கொஞ்சமேனும் செவி வழியே கேட்டு நான் அறிவேன்.

இருந்தும் ஆருயிர் ஆப்தா! உன்னிடம் சில அன்புக் கோரிக்கைகளை முன்வைக்க முனைகிறேன். வாழ்வதற்குப் பணம் தேவை தான் ஆனால் பணமே வாழ்க்கை கிடையாது. எதுவும் மிதமிஞ்சினால் நஞ்சாகும். பணம் கூட நம்மை அழிக்கும், உறவுகளுக்கு அளவோடு பணமனுப்பு, அவர்கள் சொந்தக்காசில் வாழ்வதற்கு வழிகாட்டு, வெளிநாட்டு மோகத்தை ஏற்படுத்தி ஆசை மூட்டி அவர்களின் வாழ்வை அழித்து விடாதே. உன் துன்பம் புரியவை, உழைப்பின் மகிமை உணர்த்து, தேவைக்கு மட்டும் பணம் அனுப்பு ஆசைக்கெல்லாம் அனுப்பி வைக்காதே. இல்லையேல் ஓர் நாள் குற்றவாளிக் கூண்டில் உன் சகோதரனோ சகோதரியோ நிற்பதைக் காணும் துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்படுவாய். நம் மண் பண்பாடிழந்து மனிதநேயம் குலைந்து சீர்கெட்டுப் போவதை கண்கொண்டு காண்பாய். நண்பனே புரிந்துகொள், பொறுப்போடு நடந்து கொள்.

உப்பில்லா சோறுபோல் உழைப்பில்லா வாழ்வு, ஆடம்பர மோகம், அளவற்ற பணம் இவை அனைத்தும் எம் இளையோரை மட்டுமா கெடுத்தது? இல்லையே உழைத்து உழைத்து ஊருக்கே உணவிட்ட மூதாதைகளின் வாழ்வாதாரமாகி எம் தேசத்தின் வேராய் ஊன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊறிப்போன விவசாயத்தையும் அழித்து விட்டதே தோழா! மாசாமாசம் மறக்காது மகன் அனுப்பும் பணத்தின் வரத்தால் நில முழுதுவிதை வீசி வியர்வை சிந்திவிளை வித்த அப்பாக்கள் எல்லாம் விளைநிலங்களை வீடாக்கி வசதியாய் ஏசியில் தூங்கிப் போனார்கள். ஆடு, மாடு, கோழி வளர்த்து குடும்பத்து செலாவணியை நிமிர்த்தி நிர்வகித்த அம்மாக்களோ தொலைக்காட்சிப் பெட்டிக்குள் தொலைந்தே போனார்கள். தாத்தாக்களும் ஆச்சிகளும் மட்டும் அவ்வப்போது பழங்கதை சொல்லி புது உலகை நினைவூட்டி ஆச்சரியப் படவைக்கிறார்கள். உன்வீட்டுப்பணம் உன் கூட்டை மட்டுமா பாதிக்கிறது? பக்கத்து வீட்டினையும் பழுதாக்குவதை கவனித்தாயா! அப்போதெல்லாம் நம்வீட்டு முருங்கைக்காய் அயல் வீட்டில் குழம்பானது. அயல் வீட்டு கத்தரிக்காய் நம்வீட்டில் கூட்டானது. உழைத்தோம், உற்பத்தி செய்தோம் உண்டு மீதமெல்லம் அயல் வீடுகளுக்கு பகிர்ந்தளித்து கூடி வாழ்ந்து உயர்த்தி உயர்ந்த சமூகம், பணம் கடன் பகட்டு என்று சுயமிழந்து சுயநலமாய் மாறி அன்பைக் கூட வியாபாரமாக்கி அலையும் அவல நிலைக்கு ஆட்பட்டு கிடக்கிறதே தோழா!

ஓலைக்கீற்றும் தென்றல் காற்றுமாய் ஒற்றையறை மண் வீடுகளில் ஒன்றாய் ஒட்டி உரசி பல உயிர்கள் கூடி சேர்ந்து வாழ்ந்திருந்த போது குடியிருந்த சந்தோசமும், பாசமும், நேசமும். ஓடும், சீற்றும், தகதகக்கும் மாபிள் தரைகளும் அடுக்கு மாடிகளுமாய் மாறிவிட்ட கல்லுக் காட்டிடையே காணாமல் போய்விட்டதே! ஆடம்பரம் நோக்கி ஓடிஓடி எம் அடிப்படையை இழந்து நிர்கதியாகிடும் நிலை தூரத்தில் இல்லை. தோழா!கொஞ்சம் நிதானம் கொள் உன் உழைப்பு உன் குடும்பத்தை, உன் ஊரை,நம் நாட்டை வளப்படுத்த வேண்டுமே தவிர சேதப்படுத்திவிடக் கூடாது. சுத்தமான உன் வீடு அசுத்தமான ஊருக்குள் இருந்தால் சுத்த மற்றேபோகும். சிந்தித்து செயலாற்று.

மித்திரா! நம்தேசத்தில் பெற்றோரில்லா குழந்தைகளும், துணையில்லா ஜீவன்களும், ஆதரவில்லா குடும்பங்களும், அங்கமிழந்தும் வாழத்துடிக்கும் இளையோரும் நிறையவே இருக்கின்றார்கள். இவர்களிற்கு கைகொடு, உயர்த்திவிடு, வாழ்வே இருண்டு கிடக்கும் இந்த உறவுகளுக்கு வெளிச்சம் கொடு, திக்கற்று திணறும் நம் இரத்த உறவுகளுக்கு வழிகாட்டியாய் இரு. அதை விடுத்து கல்லுக்கு மாடம் கட்டி விதவிதமாய் அலங்கரித்து பணத்தை அள்ளி யிறைத்து திருவிழாக்களும், தினவிழாக்களும் கொண்டாடும் ஆலயங்களிற்கு தயவு செய்து பணத்தை அள்ளியிறைக்காதே. "கோவில்கள் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்று மூதாதையர்கள் சொன்னார்களே தவிர குடியிருக்கும் இடமெங்கும் கோவில் கட்டென்று சொல்லவில்லையே! ஊருக்கொரு கோவில் போதும் மித்திரா, தெருவுக்கு ஒரு கோவில் வேண்டாம். போகிறபோக்கில் வீட்டுக்கொரு கோவில் முளைத்தாலும் ஆச்சரியப்படு வதற்கில்லை. எதுவுமே அதிகமாக இருந்தால் அவமரியாதைப்படுத்தப்படும். ஆலயங்கள் ஆனாலும் இன்னிலைக்கு ஆட்படும். ஆலயங்களுக்கு பணத்தைக் கொட்டி உன் கௌரவத்தையும், செல்வாக்கையும் நிலை நிறுத்த நினைப்பதை நிறுத்து. ஆலயங்கள் இருக்கும் இடங்களில் தொழிற்சாலைகளை நிறுவப்பட்டிருந்தால் எம் நாடுகையேந்தி நிற்கும் நிலை ஏற்பட்டிருக்குமா? எதற்கெதற்கோ எல்லாம் வெளிநாட்டில் சங்கம் அமைத்து கூட்டுச்சேரும் நீங்கள் ஒன்றாய் இணைந்து புதியதொழில் நுட்பங்களை பயன்படுத்தும் உற்பத்திசாலைகளை திறந்து நம் தேச இளையோர்க்கு வேலை வாய்ப்புக்களை வழங்கி தன்னிறைவான சமூகத்தை கட்டியெழுப்பி அவர்கள் வாழ்வில் ஒளியேற்றி உங்கள் தேசப்பற்றைக் காட்டிட முடியாதா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதியாக தோழா, பெண்கள் ஒரு நாட்டின் இதேசத்தின் வளர்ச்சியில் மிக முக்கியமானவர்கள். பெண்களை வளப்படுத்தினால் அந்த சமூகமே வளப்படும். எமது மக்கள் தமது பணத்தில் இலவசமாய் கல்வி கொடுத்து, பல்கலைக்கழகத்தில் கல்வியும் கொடுத்து, பணத்தையும் கொடுத்து கொஞ்சம் கொஞ்சமாய் அறிவை வளப்படுத்தி நற்பிரஜைகளாக்கி நாட்டிற்காய் நமக்காய் சேவை செய்ய உருவாக்கும் ஒவ்வொரு பட்டதாரிகளையும், அறிவாளி களையும் திருமண பந்தத்திற்காய் அன்னிய தேசத்திற்கு அழைத்து அவர்கள் திறமைகளையும், வளங்களையும் நான்கு சுவர்களுக்குள் தனிமையில் அடைக்காதீர்கள். தோழனே துணை தேடுவது தவறில்லை இருந்தும் படித்த பெண்களையும் சேவையாற்றி வரும் பெண்களையும் இன்னொரு நாட்டிற்கு எடுத்துச் செல்வது எமது நாட்டுவளங்களை சுறண்டுவதற்கு ஈடாகும். நாம் விதையூன்றி தண்ணீர் ஊற்றி பராமரித்து வளர்த்து கனிதரும் நேரத்தில் மரத்தை வேறு தேசம் கொண்டு செல்வது எமது சமூகத்திற்கு செய்யும் துரோகம் ஆகாதா? நண்பனே உணர்ந்து கொள் வெளிநாட்டில் நீ இருந்தாலும் உன் வேர் நம் தேசமே. நம் தேசத்தின் மீதும் எம் எதிர்கால சந்ததிகளை நல் வழிப்படுத்துவதிலும் உனக்கும் பொறுப்புண்டு உணர்ந்து நடப்பாய் என நம்புகிறேன்.

என் நேசனே! பணத்துக்காய் அயல் தேசம் போனாலும் வாழ்வதற்காய் நம் தேசம் வா சேர்ந்தே நம் தேசம் நேசிப்போம். கைகள் கோர்த்து இணைந்து நம் தேசம் வளப்படுத்துவோம். மீண்டும் வா ஒன்றாய் கிட்டியடிப்போம், கூழ் காய்ச்சி மூக்கு சிந்தசிந்த பனை மரத்தடியில் கூழ் குடிப்போம், வயல் வெளிகளை காலால் அளப்போம், குளக்கரைகளில் கதை பேசியபடி மீன் பிடிப்போம், கடல் அலையோடு விளையாடுவோம், நுரைகள் சேர்த்து ஓவியம் வரைவோம், இரவுகளின் இனிமைகளை நிலாச்சோறோடு அம்மாவின் அன்பையும் அரவணைப்பையும் அனுபவிப்போம், ஏதோ ஒரு காலத்தில், ஏதோ ஒரு காரணத்தால் தொலைந்து போன நம் வாழ்வை மீட்டெடுப்போம் வா என் தோழா ஏக்கங்களோடு மீண்டும் இணைவதற்காய், உன்னோடு சேர்ந்து நம் தேசக்காற்றை ஆழமாய் சுவாசிப்பதற்காய் காத்திருக்கிறேன்.

நன்றி

ஏக்கங்களோடு,
ஈழத்திலிருந்து

### சர்ச்சிலும் இந்திய ஜனாதிபதியும்

ஒருமுறை சர்ச்சிலும் இந்திய ஜனாதிபதி ராதாகிருஷ்ணனும் விருந்துண்ணச் சென்றார்கள். ராதா கிருஷ்ணன் கையைச் சுத்தமாகக் கழுவி வந்து சாப்பிட உட்காந்தார். சர்ச்சில் கரண்டி முள்ளுக்கரண்டி முதலிய கருவிகளை உபயோகித்துச் சாப்பிட ஆரம்பித்தார். ராதா கிருஷ்ணன் கையால் சாப்பிடுவதைப் பார்த்த சர்ச்சில் என்ன ஸ்பூனை யூஸ் பண்ணுங்க அதுதான் சுகாதாரமானது என்றார். உடனே ராதா கிருஷ்ணன் இல்லை கைதான் ரொம்ப சுகாதாரமானது ஏனென்றால் வேறு எவரும் கையை உபயோகப்படுத்த முடியாது என்றார். இதைக் கேட்ட சர்ச்சில் ஆச்சரியடைந்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படிமம் என்றால் என்ன?



**திரு. சிறி சிறீஸ்கந்தராசா**
419, கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

**உருவகம் – உவமை – படிமம்**

படிமம் என்றால் என்ன என்பதை அறியாமலேயே நாமும் கவிதை எழுதி கொண்டிருக்கிறோம். நம்மையும் அறியாமல் நம் கவிதையில் சிலநேரங்களில் படிமங்கள் படிந்துவிடுகின்றன என்பது என்னவோ உண்மை தான். படிமவடிவில் எழுதப்படும் கவிதைகள் எல்லோருக்கும் புரிய வாய்ப்பில்லை. அப்படி புரிந்து கொண்டாலும் அது அவர்களின் புரிதல் என்னவோ அதுதான் கவிதையிலும் சொல்லப்படும் விடயமாக கருதுகிறார்கள்.

ஒன்றைப் போல் ஒன்று இல்லாத இரண்டு பொருட்களை ஒப்பிடப் பல சமயங்களில் உருவகமும் உவமையும் பயன்படுத்தப்படுகின்றன. உவமையில் போல, போன்று, மாதிரி என்றவாறு ஏதேனும் ஒரு சொல்லினால் (உவமை உருபு) ஒப்புமை உணர்த்தப்படுகிறது. உருவகத்தில் ஒப்புமை உட்குறிப்பாக உள்ளது அல்லது உட்பொதிந்துள்ளது.

உருவகச் சொல் நேர்ச் சொல்லுக்குப் பதிலாகப் பதிலீடு (substitution) செய்யப்படுகிறது. கவிதையில் நாம் உருவகங்களைத் தான் மிகுதியாகப் பயன்படுத்துகிறோமே ஒழிய உவமைகளை அபூர்வமாகத்தான் பயன்படுத்துகிறோம். உருவகம் என்பது ஒரு சொல்லுக்கு பதிலாக இன்னொரு சொல்லைப் பாவிக்கின்ற பதிலீடுதான்.

உருவகத்தைப் பண்புத்தொகையின் இன்னொரு வடிவமாகப் பார்த்தார்கள். "சுதந்திரம்" என்பதற்கு பதிலாக "விடியல்" என்கிறோம். மகிழ்ச்சியை "பூபாளம்" என்கின்றோம். "எழுச்சி" என்பதற்கு பதிலாக "அக்கினி" என்கிறோம். கவிஞனின் மொழி சாதாரண மொழியை விட அதிகம் உணர்வு சார்ந்ததாக இருக்க வேண்டும். அதில் படிமத் தன்மை காணப்பட வேண்டும் என்பதில் எந்தவித ஐயமும் இல்லை.

வண்ணமயமான அனுபவங்களை எழுப்புவதில் படிமத்தன்மை சிறப்பாகப் பயன்படுகிறது. உணர்ச்சிகளை வெளிப்படுத்தவும், சிந்தனைகளைக் குறிப்பாக உணர்த்தவும், உணர்வுகளை மனத்தில் மீளாக்கம் செய்யவும் பயன்படுவதால் கவிஞனுக்கு ஒரு விலை மதிப்பற்ற மூலவளம் இதுதான்.

கவிஞர்கள் அருவமான, படிமத்தைக் கொள்ளமுடியாத வார்த்தைகளை விரும்புவதில்லை. மாறாக, உருவத்தன்மை கொண்ட, பருமையான, படிமத்தை ஏற்கக்கூடிய வார்த்தைகளையே மிகவும் விரும்புகிறார்கள். பலவேறு துறைகளில் படிமம் என்ற சொல்லுக்குப் பல அர்த்தங்கள் உண்டு. சொல்லோவியம் என்று படிமத்தைச் சொல்லலாம்.மனக்காட்சி என்ற அர்த்தத்தில் சாதாரணமான மக்களும் பயன்படுத்துகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழில் படிமம் பற்றிய சிந்தனை பழங்காலத்திலிருந்தே இருந்து வந்துள்ளது. தொல்காப்பியம் "பல்புகழ் நிறுத்த படிமையோனே" என்று குறிப்பிடுகின்றது. ஏறத்தாழ எழுபதுகளிலிருந்து படிமம் என்ற சொல் மிகுதியாகத் தமிழில் வழங்கிவருகின்றது. தொடக்கத்தில் உருக்காட்சி என்ற சொல்லையும் பயன்படுத்தியுள்ளனர். இச்சொல், படிமத்தின் இயல்பைத் தெளிவுபடுத்துவதாக உள்ளது.கவிஞர் சொற்களால் வருணிக்கின்ற ஒரு காட்சி வாசகர் உள்ளத்தில் தெளிவான காட்சியாக உருப்பெறுவது படிமம் ஆகும். புதுக்கவிதை புகுந்த பிறகு கற்பனை என்ற சொல்லின் போதாமை கருதிப் போலும், படிமம் என்ற சொல்லை சுவீகரித்துக்கொண்டனர். எனவே படிமம் என்பது (கவிதையில்) கற்பனையின் விளைவான காட்சிப்படுத்தும் ஒரு சொற்கோவையையும், அச் சொற்கோவை உருவாக்கும் மனச்சித்திரத்தையும் ஒருங்கே குறிக்கின்றது.

சங்க இலக்கியத்தில் அருமையான படிமங்கள் பலப்பல காணக்கிடக்கின்றன. இன்றைய படிமம், சங்க இலக்கியத்தில் உவமை, உருவகம், உவமப்போலி போன்ற பலவற்றைத் தன் கூறுகளாகக் கொண்டு இயங்கி வந்திருக்கிறது. படிமம் என்பது கவிதையின் அடிப்படை இயல்பு. எனவே எக்காலக் கவிதையிலும் படிமம் உண்டு. இன்றுதான் படிமம் தோன்றி விட்டது என்று நாம் கருதுவது தவறாகும். "படிமங்கள் தன்னுணர்வற்ற நிலையில் மனத்தில் சேகரிக்கப்பட்டு வகைப்படுத்தப்பட்ட அனுபவங்கள்" என்று ஒரு வரையறை சொல்கின்றது. அறிவாலும் உணர்ச்சியாலும் ஆன ஒரு மன பாவனையை ஒரு நொடிப் பொழுதில் தெரியக் காட்டுவதுதான் படிமம். இக்காலத்தில் உருவகத்தையே படிமம் என்று தவறாகப் புரிந்து கொண்டவர்கள் இருக்கிறார்கள்.

இரண்டு அருவப் பொருள்களுக்கிடையிலான ஒப்புமை, படிமத்தை உருவாக்க இயலாது. எனவே எல்லா உருவகங்களையும் ஒப்புமைகளையும் படிமம் எனல் கூடாது. ஐ.ஏ. ரிச்சட்ஸ் தமது நூலான "The Philosophy of Rhetoric" என்பதில் ஓர் ஒப்புமைப்படிமத்தில் மூன்று உறுப்புகள் உள்ளன என்று குறிப்பிடுகிறார். அவை களம் அல்லது பொதுத் தன்மை (Ground) ஊர்தி (Vehicle), கருத்து (Tenor) என்பன ஆகும். ஊர்தி என்பதை உவமானம் என்றும் கருத்து என்பதை உவமேயம் என்றும் ஏறத்தாழக் கூறலாம்.

அதாவது சிந்தனையில் தோன்றிய கருத்து, சொல்லின் மூலமாகக் காட்சிப்பொருளையோ, கருத்துப் பொருளையோ குறித்த படிமமாக வெளிப்படுகிறது. இவ்வாறு படிமம் உருவாகும் போது கவிதையில் வெற்றுச் சொற்கள் அமைவதில்லை. இலக்கிய வெளிப்பாட்டு முறைகளில் சிறந்த தாகவும், படைப்போருக்கும் படிப்போருக்கும் இடையில் நெருக்கமான மனத்தொடர்பை ஏற்படுத்துவதாகவும் படிமம் அமைகிறது. படிமம் என்பது அடிப்படையில் சொல்லவந்ததைக் காட்சிப்படுத்திக் கூறுவது தான்.

கண்ணால் காணமுடியாத அருவப்பொருள்களையும் கருத்துகளையும் உணர்வுகளையும் காட்சிப்படுத்தவல்லது படிமம் எனலாம். அவ்வாறு காட்சிப்படுத்துவதற்காகக் கவிஞன் சொற்றொடர்களையும், உவமைகளையும், உருவகங்களையும், வேறுபலவித அணிகளையும் பயன்படுத்துகின்றான்.

இவ்வகையில் படிமம் என்பது இலக்கியக் கருவிகளின் கூட்டுக் கலப்பாக இருப்பதால் இதனை உவமை உருவகம் போன்ற அணிவகையாக வரையறுப்பது இயலாது. உதாரணமாக விடியல் பூபாளம் என்று கூறிவிட்டாலோ அக்னி வீணை என்று சொல்லி விட்டாலோ படிமம் வந்துவிடாது. இவை உருவகங்கள் தான். ஆனால் "வானம் காயம் பட்டுக்கிடந்த காலைப் பொழுது" என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறும்போது, விடியற்கால வானம் மட்டுமன்றி, காயம்பட்டுக்கிடக்கும் ஆண் அல்லது பெண் ஒருவரின் வடிவமாகவும் அந்த வானம் காட்சி தருகின்றது. இது படிமமாகின்றது.

படிமங்கள் புதிதாக உருவாவதற்கு ஒப்பீட்டில் புதுமை, தெளிவு, பொருத்தம், பொருட்தன்மை (Thinginess) வெளிப்பாடு, கூற வந்தவற்றை வெளிப்படையாகச் சொற் பெருக்கத்தால் விளக்கி விடாதிருத்தல், குறித்த தன்மையை வெளியிடல், அறிவார்த்தத் தன்மை, சுருக்கம், உணர்ச்சி ஆகிய தன்மைகள் பயன்படுகின்றன.

படிமம் கவிதைக்கு அழகூட்டும் அலங்காரப் பொருளன்று. ஒரு படைப்பின் உள்ளடக்கம், உருவம், ஆத்மா என்னும் அளவிற்குப் படிமங்கள் செயல்படுவதுண்டு. படிமங்களை மிகச் செறிவாகப் பயன்படுத்தும் நிலையில் அவை இருண்மைப் பண்பு உடையனவாக மாறிவிடும் அபாயம் உருவாகின்றது. பல சமயங்களில் தமிழில் எழுதப்படும் கவிதைகள் இருண்மை கொள்ளாவிட்டாலும், முயன்று பொருள்காண வேண்டிய அளவில் உள்ளன. எனினும் கூற வந்ததை மிகச் சிறப்பாக வெளிப்படுத்துவதில் படிமம் உறுதியான பங்குவகிக்கின்றது.

படிமம் என்பது இங்கு உத்தி அல்ல. காட்சி அனுபவம். அனுபவ சத்தியம். படிமம் என்பது சம்பிரதாயமாக ஓவிய, சிற்ப வழி அனுபவம் ஆகும்.

1961ம் வருட "எழுத்து" 36வது இதழில் வெளி வந்த பிரமிள் எழுதிய கவிதை "விடிவு"

பூமித் தோலில்
அழகுத் தேமல்.

பரிதி புணர்ந்து
படரும் விந்து.

கதிர்கள் கமழ்ந்து
விரியும் பூ.

இருளின் சிறகைத்
தின்னும் கிருமி.

வெளிச்சச் சிறகில்
மிதக்கும் குருவி.

இங்கு ஒரே காட்சி ஐந்துவித தோற்றங்களில் ஒன்றையழித்து மற்றொன்றாகத் தோன்றி மறைகிறது. இதுவே தமிழில் வெளிவந்த முதன் முதல் படிமக் கவிதையாகும். சொற்களால் நெஞ்சத் திரையில் வரையும் ஓவியம்தான் படிமம் என்பது. வெறும் வருணனை கூடப் படிமம்தான். ஆனாலும் உவமை, உருவகம், தொன்மம் அடங்கிய சொற்களால் உருவாக்கப்படும் சொல் ஓவியம் சிறந்த படிமமாகும். பல சொற்கள் மரபில் இருந்து எடுக்கப்பட்டு மறு அர்த்தம் அளிக்கப்பட்டன. பலசொற்கள் புதியதாக உருவாக்கப்பட்டன.

தொன்மம் என்றால் ஆலவா என்ற சொல்லுக்கான கலைச்சொல் ஆகும். விழுமியம் என்றால் values. படிமம் என்றால் image. மொழி நேரடியாகச் சுட்டுவதன் மூலம் பொருள் அளிக்கின்றது. பல சமயம் அந்த முறை போதாமலாகும் போது இன்னும் குறியீட்டுத்தன்மை தேவையாகின்றது. தமிழில் இவற்றை நாம் ஒட்டுமொத்தமாக அணிகள் என்கிறோம். அனைத்தையும் ஒன்றாகச் சுட்டும் ஒரு கருத்து தான் படிமம் என்பதாகும். உவமை உருவகம் எல்லாமே ஒட்டு மொத்தமாக கவித்துவப் படிமங்களே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதை ஒவ்வொரு காலத்திலும் ஒவ்வொரு மாதிரி. ஒவ்வொரு விதமாக வளர்ச்சிப் பெற்றோ அன்றி மாற்றம் அடைந்தோ வந்துள்ளது. மரபு என்னும் பெயரில் கட்டுப்பட்டிருந்தது. இலக்கணத்துக்குட்பட்டிருந்தது பாரதியின் வருகைக்குப் பிறகே கவிதையில் மாற்றம் ஏற்பட்டது. மரபிலிருந்து விடுதலைப் பெற்றது. புதுக்கவிதையின் போக்கிலும் மாற்றம் ஏற்பட்டது.படிமம், குறியீடு என ஓர் அலங்காரத்தை ஏற்படுத்திக் கொண்டு அவைகளுக்குள் சிக்கிக் கொண்டது. சிறப்பும் பெற்றது. குறியீட்டின் ஒரு வடிவமே படிமம் என்றாலும் படிமத்துக்கு என்று ஒரு தனித்தன்மை உண்டு.

படிமம் கவிதையை ஒரு படி உயர்த்தியது என்று திடமாகக் கூறலாம். படிமம் என்பது புதுக் கவிதைக்கு உரியது எனினும் மரபிலுள்ள உருவகமே புதுக்கவிதையில் பெயர் மாறித் தொடர்கிறது. "உவமை உருவகங்களின் பரிணாம வளர்ச்சியே படிமம்" என பேராசான் கைலாசபதி கூறியுள்ளமை கவனிப்பிற்குரியது.

மெய், உரு என்பவை படிமப் பண்புகள் என தொல்காப்பியமும் கூறுகின்றது. எஸ்ரா பவுண்டு, அமிலோவல், லாரன்ஸ், வில்லியம் கார்லோஸ் வில்லியம்ஸ் போன்ற மேலைநாட்டுக் கவிஞர்கள் படிம உத்தியைக் கையாண்டு படிமக் கவிதைகளை எழுதி வளர்த்து வந்தனர்.

படிமத்துக்கு பல விளக்கங்கள் உண்டு. "சொற்களால் வரையப்படும் ஓவியம்" என சி,டே, லூயில் கூறுவார். கவிதையைச் செம்மைப்படுத்துவதும் செறிவுபடுத்துவதும் சிறப்புப் படுத்துவதும் படிமமேயாகும். கவிதையைக் காட்சியாகத் தோன்றச் செய்வது படிமம் எனப்படும். மனத்திற்கும் அறிவிற்கும் கவிப் பொருளை உணர்த்துவதும் படிமமே. படிமம் புதுக்கவிதைக்கு வெறும் அலங்காரமல்ல. அதன் ஜீவநாடி சத்து ஏற்றும் சாதனம் என்று விளக்கியுள்ளார் சி.சு. செல்லப்பா.

மொழியைக் கவிதையாக்கும் ஓர் அருமையான கருவியே படிமம் என்றும் குறிப்பிடலாம். மிக முக்கியமாக படைப்பாளனின் அனுபவத்தை வெளிப்படுத்தும் ஆற்றல் பெற்றதே படிமம். குறிப்பாக "தீப்பந்து போன்ற சூரியன்" என்னும் உவமத்தை "தீப்பந்துச் சூரியன்" என்று சுருக்கி எழுதினால் அது படிமம் ஆகின்றது. படிமத்திற்கு சுருக்கமே தேவை. "போன்ற" சொற்கள் தேவையற்றது.

ககனப் பறவை
நீட்டும் அலகு,
கதிரோன் நிலத்தில்
எறியும் பார்வை,
கடலுள் வழியும்
அமிர்தத் தாரை,
கடவுள் ஊன்றும்
செங்கோல்.

என "மின்னல்" என்ற தலைப்பில் மின்னலைப் பிரமிள் வருணித்ததை எடுத்துக்காட்டாகக் கூறலாம். தலைப்பை வைத்தே ஒவ்வொரு வரியையும் படிமமாக்கிக் காட்டியுள்ளார். விடுகதைத் தன்மையும் ஒவ்வொரு படிமத்திலும் காண முடிகின்றது. படிமம் எனப் பொதுவாக சொல்லப்பட்டாலும் அதிலும் பல வகை உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவை அழகியல், கொள்கை முழக்கம், அங்கதம், நிகழ்ச்சி, முரண் பொருள், புதுமையியல், தொன்மவியல், மிகை நவிற்சி, தத்துவம், இளிவரல் என வகைப்படுத்துகிறார் கவிஞர் மித்ரா. சமயம், தொன்மம், மூலம், அடிக்கருத்து, இயற்கை, தன்னியல்பு என்கிறார் கவிஞர் சிற்பி. ஆயினும் மனப்படிமம், அணிப்படிமம், குறியீட்டுப்படிமம் என மூன்று பிரிவுகளிலே அனைத்தும் அடங்கியுள்ளன.

கவிதையை ஓர் இயக்கமாகக் கொண்டு சென்றவர்கள் வானம்பாடியர். மக்களுக்காகப் பாடியவர்கள். அவர்களில் ஒருவர் கவிஞர் மீரா. அவர் படிமத்தைக் கையாண்டு எழுதிய கவிதை

"முப்பது நாட்களாய்
அலுவலகத்தில் அடைகாத்திருந்து
ஒரு நாள்
ஊதியக் குஞ்சைப் பொரித்துப்
பார்க்கும் நேரம் பார்த்து
கணக்காய்
கொத்திப் போக பறந்து வரும்
கடன்காரப் பருந்து".

இதில் ஊதியக் குஞ்சு, கடன்காரப் பருந்து படிமங்களாக உள்ளன.

ஓர் அரசு ஊழியரின் நிலையைப் படிமம் மூலம் விவரித்துள்ளார். சமூக அக்கறையுடன் எழுதப்பட்டுள்ளது.

வானம்பாடி இயக்கத்தின் மற்றொரு கவிஞர் சிற்பி. வானம் காயப்பட்டுக் கிடந்த விடியற் பொழுது உவமை உருவகத்துடன் படிமம் இக்கவிதையில் முன்னிற்கிறது. காயப்பட்டுக் கிடந்த என்னும் வரியே படிமமாக காட்சியைக் கண்முன் நிறுத்துகிறது.

அவையெல்லாம்
பஞ்சு அணைக் கட்டுகள்
அஞ்சாத
அமிலநதியின்
அலைப்படைகள்

என்னும் கவிஞர் தமிழன் பனின் கவிதையில் படிமங்கள் உருப்பெற்றுள்ளதைக் காண முடிகிறது. வானம் பாடிக் கவிஞர்களிலேயே படிமங்களைப் பெருமளவு பயன்படுத்தியவர் என்னும் விமர்சனமும் உண்டு. "படிமத்துக்காகப் படிமம்" என்று குற்றஞ்சாட்டுமளவுக்குப் படிமவெறி அல்லது பிடிப்பு நமது கவிஞரை ஆட்கொண்டுள்ளது என திரு.க.கைலாசபதி குறிப்பிட்டுக் காட்டியுள்ளார்.

இருள் இலைகள், ஒளிச்சாம்பல், காலக்குளம், நெருப்பு விநாடி, பாதரசப்புன்னகை, பரிதிப்புன்னகை, மூளைச்சிலந்தி. சூரியதீபம், அக்கினி புஷ்பம், ஆவேச அக்கினி, நெஞ்சக் குளம், வார்த்தைத் தவளை, வெளிச்சப்பூ என்பவை படிமத்துக்கு எடுத்துக்காட்டுகள்.

புதுக்கவிதையை வளர்த்தெடுத்ததில் படிமத்திற்கு ஒரு முக்கிய பங்குண்டு. படிமம் கவிதையை அழகுப்படுத்தியது. அலங்காரப்படுத்தியது. வாசகனுக்குள் காட்சியை ஏற்படுத்தியது. கவிஞர் களும் படிமத்தைக் கவிதையில் போட்டி போட்டு அமைத்து வாசகனுக்குள் ஒரு கிளர்ச்சியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுத்தினர். ஒவ்வொன்றுக்கும் ஓர் அளவு கோல் உண்டு. ஓர் எல்லை உண்டு. படிமம் கவிதையில் கவிஞர்களால் கையாளப்படும் ஓர் உத்தியேயாகும். படிமங்கள் கவிதையாகி விடாது. அளவை மிஞ்சக் கூடாது. அலங்காரப்படுத்த வேண்டிய படிமம் கவிதையைக் காயப்படுத்தி விடக் கூடாது. மரபிலிருந்து விடுதலைப் பெற்ற கவிதை புதுக்கவிதை என்னும் பெயரில் படிமச் சிறையில் சிக்கிவிடக் கூடாது.

உவமை, உருவகம், உள்ளுறை உவமம், குறியீடு என்னும் வரிசையிலே படிமம் கவிதைளில் காண முடிகிறது. வாசிப்பின் ஒரு பரிமாணம் என படிமத்தை உணர்ந்து வாசிக்க வேண்டும். படிமக்கவிதை மனத்தில் நிகழ்த்திக் காட்டும்.படிமம் என்னும் எல்லையைத் தமிழ்க் கவிதை எட்டியுள்ளது என்பது மெய். எல்லையைத் தாண்டாமல் இருப்பதே தமிழ்க் கவிதைக்கும் சிறப்பு.

உள்மன வாழ்வை, பல உட்பரிமாணங்களுடன் ஆழமான தளத்தில் தீண்டுபவை கவிதைகள். கவிதைப் படிமம் என்பது (poetic image) பொருள், எண்ணம், கருத்து, உணர்வு என்பவைகளைப் புலன்வழிக் காட்சிகளாகவோ, நுண்காட்சிகளாகவோ, புலனுக்கு அப்பாற்பட்ட அனுபவங் களாகவோ மாற்றி வழங்குவது.

இரண்டு பொருள்களை அடுத்தடுத்து நிறுத்தி ஒப்புமை காட்டுவன உவமையும் உருவகமும் ஆகும். ஆனால் ஒன்று மற்றொன்றினுள் தடந்தெரியாது கலந்து மறைந்ததன் பின், ஒன்றன் செழிப்பு இன்னொன்றின் வடிவத்திற்குள் தொனித்துத் தோன்றுவது படிமம் ஆகும்.

யோசனைக்கும் தீவிர சிந்தனைக்கும் அறிவுக்கும் இட்டுச் செல்லாமல் அனுபவத்தின் நுழைவாசலில் சுருக்கமாக இயங்குகிறது.அடுத்த நிமிஷத்தில் அந்த இயக்கம் மறைந்து படிமமே அனுபவமாகிறது. இன்றைய கவிதையில் உவமை - உருவகச் சார்பில்லாமல் வரும் படிமங்களே அதிகம். பழங்கவிதையிலும் இவை உண்டு.

"கானம் காரெனக் கூறினும்
காடு இது கார்காலம் என்று பொய் சொல்கிறது.."

என்கிறாள் குறுந்தொகைத் தலைவி.

மொத்தத்தில் இன்றைய படிமங்கள் அருப நிலைகளை நோக்கியவை. மௌனத்தைத் தொட முயல்பவை. இந்தவிதமான நுண்மையைக் உவமை உருவகம் கொண்டு சாதிக்க முடியாது. அவை செல்வாக்கு இழந்ததற்கு இது ஒரு காரணம், அவை தவறாகப் பயன்படுத்தப்பட்டது. அலங்கரிக்க, சாமர்த்தியம் காட்ட, விளக்கம் சொல்ல எனக் கவிதைக்குப் புறம்பான நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப் பட்டது.

படிமம், குறியீடு, தொன்மம் போன்ற வகையில் அமைந்த உத்திமுறைக் கவிதைகள். எளிதில் புரிந்துகொள்ள முடியாதனவும் பல்வேறு சிந்தனைகளை உண்டாக்குவனவும் ஆகிய இருண்மைக் கவிதைகள்.என வகைப்படுத்திக் காணலாம்.

படிமம் என்பது உவமத்தின் இன்னொரு வடிவமாகும். சொல்லப்படும் பொருளை காட்சி வடிவில், உருவெளித் தோற்றம் என்ற நிலைக்குக்கொண்டு வருவதாகும். தங்கத் தீவுகள் போன்ற மேகம் என்றோ தங்கத்தீவு மேகம் என்றோ சொல்லாமல், பாரதியார் (பாஞ்சாலி சபதம்) "தங்கத்தீவுகள்" என்று கூறுகிறார். நீலப் பொய்கைகள், கரிய பெரும்பூதம், செழும்பொன் காய்ச்சி விட்ட ஓடைகள் என்று மேங்களை வருணித்துச் செல்கிறார். இவை உருவகங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறியீடு என்பது ஒரு சொல்லோ தொடரோ தனது பொருள் தளத்தைத் தாண்டிய ஒரு பொருண்மையை அல்லது கருத்து நிலையைக் குறித்து வருவதாகும். அக்கினி அல்லது தீ என்ற சொல், தீ எனும் தோற்றத்தை உணர்த்தாமல், அத்தன்மை கொண்ட இன்னொரு பொருண் மையை உணர்த்துகிறது. வன்முறை, பேருணர்வு, புரட்சி என்பவற்றுள் ஒன்றைத் தருமானால், அது குறியீடாகிறது.

**புலப்பாட்டுத் திறன்கள்**

மொழியைப் பயன்படுத்துகிற விதம், இலக்கியத்தின் புலப்பாட்டுத் திறனை உணர்த்தும். கவிதையில், சொற்களை உடைத்துப் போட்டு அதன் மூலம் புதிய பொருளை உருவாக்கும் முயற்சி நடைபெறுகிறது. இரவு என்பது ஒரு நேரத்தைக் குறிப்பது. இது தொட்டு உணர்தல் போன்ற புலன்களுக்கு அகப்படாதது. அதாவது நுண்மையானது. இதை நுண்பொருள் என்பார்கள்.

பருப் பொருளின் தன்மையாகிய உடைதல் நுண்பொருளாகிய இரவுக்கு இருப்பது போன்று ந.பிச்சமூர்த்தி என்ற கவிஞர் கவிதைபடைக்கிறார். "விழுந்துடைந்த இரவு" என்று பாடுகிறார். இது ஒரு நடைத்திறன். விழுந்துடைந்த கண்ணாடி என்றால் இயல்பானது. விழுந்துடைந்த இரவு அதிலிருந்து வேறுபட்டுஒரு புதிய தளத்தைக் கட்டமைக்கின்றது.

கவிதை என்பது அறிவு சார்ந்தது இல்லை. உணர்வு சார்ந்தது. உரைநடையை விட தமிழ்க் கவிதைக்கான மரபு நீண்ட நெடியது. கவிதை இரண்டு வகையாகச் செயல்படுகிறது. வெளிப்படையாகவும், நேரடியாகவும் செயல்படுவது ஒரு வகை. இன்னொன்று இருண்மை வகை. இருண்மை அறிவுத் தளத்தில் வாசகனை செயல்பட வைக்கிறது.

கவிதைகள் மரபுக் கவிதை, புதுக்கவிதை, ஹைக்கூ, நவீனக் கவிதை என்று வடிவங்கள் மாறுகின்றன. நாம் கவிதையை செய்ய முடியாது. அது ஒன்றும் கணக்கல்ல. கவிதை என்பது அறிவு சார்ந்தது இல்லை. உணர்வு சார்ந்தது. எழுதுவது தான் கவிதை. காலத்தோடு கவிதையும் மாறிக் கொண்டே இருக்கும். மாறிக்கொண்டே இருந்தால் தான் கவிதை.

பொதுவாக கவிதை எழுதுகின்றவனே விமர்சனமும் செய்கின்ற சூழ்நிலை இருக்கிறது. சந்தையில் என் சரக்கு நல்லது. எதிரியின் பொருள் நல்லது இல்லை என்று சொல்ல வேண்டியிருக்கிறது. ஒரு அழகான குளிரூட்டப்பட்ட அறையில் ஊதுபத்தி வாசனையில் கவிதை வராது. கவிதை எழுதுவது என்பது பயிற்சி. அது கடவுள் கொடுத்த வரம் இல்லை. தொடர்ச்சியான பயிற்சியின் மூலமே கவிதை எழுதமுடியும். எந்த கட்டளைக்கும், எந்த நிபந்தனைக்கும், எந்த இசைக்கும் கவிதை வளையாது.

மானிட அனுபவங்களின் வெளிப்பாடே கவிதை. நீலவானம், வெண்மேகங்கள், பூக்கள், அவற்றின் வாசம், காலைநேரத்தில் பறவைகளின் பாடல். நறுமணத்தின் பரவல். தூய காற்று உடலின் மீது மோதும் பரவசம். பசுமை. அழகிய வயல்கள், தோப்புகள், தோட்டங்கள் எல்லாம் கண்முன் வருகின்றன.

எனவே கவிஞனின் மொழி சாதாரண மொழியை விட
அதிகமும் உணர்வு சார்ந்ததாக இருக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவீன உலகில் பண்பாட்டுடன் பயணிப்போம்



**செல்வி. ஜெ. ஜென்சியா**

நாவாந்துறை, யாழ்ப்பாணம்

இன்றைய உலகில் மனிதன் பறவை போல பறக்க கற்றுக் கொண்டுள்ளான். ஆனால் நிலத்திலே மனிதன் மனிதனாக வாழக் கற்றுக் கொள்ளவில்லை. இவ்வாறு கூறியவர் டாக்டர் ராதா கிருஸ்ணன் அவர்கள் ஒரு விருந்து விழாவில் உரையாற்றும் போது அவர் கூறிய இக் கருத்தானது இன்று எந்தளவிற்கு உண்மை என்பதை ஒவ்வொருவரும் சிந்திக்கத் தலைப்பட்டிருக்கின்றோம். " மாற்றம் ஒன்றே மாறாதது" என்பது மறக்க முடியாத உண்மை தான். ஆனால் அந்த மாற்றத்தின் பிடியில் மனிதப் பண்புகள், பண்பாடுகள் சிக்கி மறைந்து போனது தான் வேதனைக்குரிய விடயம். வேதனை மட்டுமல்ல வெட்கத்திற்குரிய விடயமும் கூட. முதலில் மனிதப் பண்பாடு என்றால் என்னவென்று நோக்குவது சாலச் சிறந்தது என்று எண்ணுகின்றேன். மனிதன் வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கு வகுக்கப்பட்ட வரையறைகளும் அவற்றைப் பின்பற்றி ஒழுகி, மனிதன் மகிழ்ச்சியாக வாழ வழிகுப்பதே மனிதப் பண்பாடுகள். உண்மை, நேர்மை, அர்ப்பணிப்பு, அன்பு, அஹிம்சை, உதவி செய்தல், விட்டுக் கொடுத்தல் என மானிடப் பண்புகளை பட்டியல் இட்டுக் கொண்டே செல்லலாம்.

இவை அனைத்தும் மனிதனை ஏனையவற்றிலிருந்து வேறுபடுத்தி அவனை அடையாளப்படுத்துகின்றது. அதனால்தான் அவற்றை மானிடப் பண்பாடுகளாக சுட்டிக் காட்டுகின்றோம். "எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல் பிறிதொன்றும் அறியேன் பராபரமே" என்று பராபரக் கண்ணி எனும் நூல் சுட்டிக்காட்டுகின்றது. "எவ்வுயிரும் என்னுயிர் போல் எண்ணி இரங்க நின் தெய்வ அருட்கருணை செய்வாய் பராபரமே" என்ற தாயுமானவரின் வேண்டுகோள்கூட இன்று மாறிவரும் உலகில் மறைந்து போன மனிதப் பண்பாடாக உள்ளது. இன்று எத்தனை ஆயிரம் உயிர்கள், உடைமைகள் பறிக்கப்பட்டு ஊனமுற்றவர்களாகவும், அநாதைகளாகவும், அகதிகளாகவும் அலைகின்றனர். தலையெடுக்கும் தீவிரவாத கும்பல்களால் உயிர்கள் வதைக்கப்பட இலங்கை, சிரியா, ஈரான் போன்ற நாடுகளில் இன்னொரு புறமாக உயிர்கள் காவு கொள்ளப்பட்டு நீதிகளை மரணிக்கச் செய்கிறார்கள். இருபத்தொராம் நூற்றாண்டின் இதயமற்ற இராட்சதர்கள் எல்லா உயிர்களையும் தங்கள் உயிர் என இவர்கள் எண்ணியிருந்தால் இது நடந்திருக்கமாட்டாது. இப்போதெல்லாம் கண்களை மூடினால் கனவுகள் வருவதில்லை. காணொலிகளில் கண்ட கன்னியர்களுக்கு நடந்த கதைகள் கண்ணீராக வருகின்றன. இவ்வாறு இருக்கின்றது இன்றைய சமூகம். மாறி வரும் நவீன உலகில் இழந்து வருவது பண்பாடு மட்டுமல்ல மனிதனும் தான் என்பது இங்கு நிச்சயமாகின்றது. "மக்கள் சேவையே மகேசன் சேவை" என்று கூறிக் கொண்டு மக்களை மடிய வைக்கும் கூட்டங்கள் இப்பாரினில் ஏராளம் தாராளம். "அன்று என் கடன் பணி செய்து கிடப்பதே" என்று நாவுக்கரசர் கூறினார். ஆனால் இன்றோ கடமையைக் கூடச் செய்யாமல் காசுக்காக அலையும் கூட்டமே உள்ளது. அதிலும் இலஞ்சம், ஊழல், மோசடி என எத்தனை பிரச்சினைகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனையோ கண்டுபிடிப்புக்கள், களியாட்டங்கள் என இன்று மனிதன் தன்னை மகிழ்வித்துக் கொண்டிருந்தாலும் உண்மையான மகிழ்ச்சிகள் உறங்கிக் கொண்டேதான் இருக்ககின்றன. மனிதன் தன் பாதுகாப்பிற்காக மனித உரிமைகள், மாதர் சங்கங்கள் என எத்தனையோ அமைப்புக்களை உருவாக்குகின்றான். ஆனால் தினந்தோறும் உலகின் எங்கோ ஒரு மூலையில் இவற்றை எல்லாம் மீறி அநீதிகளும் அக்கிரமங்களும் அரங்கேறத்தான் செய்கின்றன. மாறிவரும் உலகில் பண்பாடுகள் இழந்து வருகின்றன என்பதற்கு தக்க சான்று மாதர்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகள். அதாவது சௌதிஅரேபியா போன்ற நாடுகளில் பெண்களுக்கு வழங்கப்படும் ஒவ்வொரு தண்டனையும் இவற்றை சான்றுபடுத்தி நிற்கின்றன. வாகனம், நீண்டதூரம் பெண்கள் ஓடக்கூடாது என்ற அந்த நாட்டுச் சட்டத்தையும் மீறி ஒரு பெண் சென்றதற்காக அவருக்கு கல்லடி வழங்கப்பட்டதாக அண்மையில் வெளியான செய்தி மனித உரிமை அமைப்பில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கூட்டுக் குடும்பம், விருந்தோம்பல் என்ற பற்பல பண்புகளால் பண்படுத்தப்பட்டதே தமிழர் பண்பாடு. மாறி மாறி வரும் இந்த சூழ்நிலையில் இந்தப் பண்பாடு உள்ளதா என்றால் அது கேள்விக்குறிதான். ஏனெனில் பண்பாடுகள் இன்று பாழ்படுத்தப்பட்டு விட்டன. வீட்டுக்கு வரும் விருந்தினருக்கு விருந்தோம்பல் செய்யாவிட்டாலும் கூட வரவேற்று ஒரு புன்னகை உதிர்க்க முடியாத இயந்திர மனிதர்களாக மாறிவிட்டனர் அவர்கள். இவ்வாறு பண்பாடுகள் காலப் போக்கில் இழந்து போகின்றன. "தானாக தன்னை மாற்றினால் தாரகை கூட வசமாகும்" என்ற அர்த்தமுள்ள கவிவரிகளுக்கு இணங்கவும் நாமும் மாற்றத்தை வரவேற்றக காத்திருப்போம். "எப்பொருள் யார் யார் வாய் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அரிது" என்ற வள்ளுவர் வார்த்தை போல் சரி எது, பிழை எது என இனம் கண்டு நல்லதைச் செய்து நலமாக வாழ்வோம். மாற்றத்திற்கு ஈடுகொடுக்கும் வகையில் நாம் மாறிவிடாமல் பண்பாட்டை வளர்த்தெடுப்போம். நவீன உலகில் பண்பாட்டுடன் பயணித்து பண்பாக வாழுவோம்.

*" எண்ணிய முடிதல் வேண்டும்*
*நல்லதே எண்ணல் வேண்டும்*
*திண்ணிய நெஞ்சம் வேண்டும்*
*தெளிந்த நல்லறிவு வேண்டும்"*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தமிழர் பாரம்பரிய கடல்சார் விளையாட்டுக்களை மீட்டெடுத்தல்"



திரு. I.L. அன்சிலின் பெகின்
இல.09 புதுமை மாதா கோவில் மேற்கு வீதி.
யாழ்ப்பாணம்

(கடலோர கிராமங்களில் நீச்சல் போட்டிகளை நடாத்துதல் தெடர்பான முன்மொழிவு)

**1.அறிமுகம்**

அங்கறி பேட் (Angry Biard), டெம்பிள் றன் (Temble Run), டெல்டா போஸ் (Delta force) என்று உடல் இளைக்காமல், களைக்காமல், வெளியில் செல்லாமலே, சகபாடிக்கள் எவரும் இல்லாமலே குழந்தைகள் இன்று கணனி முன்னிருந்து ஓயாது விளையாடுகின்றனர். இன்றைய தகவல் தொழில்நுட்ப யுகத்தில் கணனி விளையாட்டுக்களில் குழந்தைகள் தொடக்கம் இளவயதினர் வரை மூழ்கிப் போய் உள்ளனர். இவ்வேளை, நாம் நமது பாரம்பரிய விளையாட்டுக்கள் பற்றி கதைப்பது ஒரு பிற்போக்குத்தனமாக பார்க்கப்படலாம். ஆனால், மனிதன் உடல் ஆரோக்கியமாக இருக்க தினமும் அரை மணி நேரம் உடற்பயிற்சி செய்ய வேண்டும் என்பது இன்று எல்லா மருத்துவர்களும் வழங்கும் ஆலோசனையாக உள்ளது.

அதுமட்டுமல்லாது, தமிழர் பாரம்பரியம், தொன்மை என்ற வகையில் எமது பாரம்பரிய விளையாட்டுக்களின் மரபுரிமைகளை நாம் தக்கவைத்துக் கொள்வதும், எமது அடையாளமாக அவற்றை கட்டமைத்துக் கொள்வதற்கும் இவைபற்றிய மீள்வாசிப்பு அவசியமாகின்றது. இந்தியாவில் அண்மையில் நடைபெற்ற "ஜல்லிக்கட்டு" போட்டிகள் மீதான தடைகளும், அவற்றிற்கு எதிரான போராட்டங்களும் தமிழரின் தென்மை அடையாளங்களை சட்டரீதியாக இல்லாதொழிக்கும் யுக்தி சிந்தனை பின்னணியில் உள்ளதையும். தமிழர் மீண்டும் தமது தென்மைகளை மீட்டெடுக்க ஒன்றிணைந்ததையும் பார்த்தறிந்தோம்.

ஒரு இனத்தின் பண்பாடு என்பது பூமிபரப்பின் மேல் பூமிபரப்பின் கீழ் உள்ள தொட்டுணரக்கூடிய பொருட்களில் மட்டுமல்லாது. தொட்டுணர முடியாத அவர்களின் நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள், விழுமியங்கள், எழுதப்படாத சட்டங்கள், உறவுமுறைகள், தொழில் முறை பயில்வுகள், இசை, விளையாட்டு போன்ற இன்னோரன்ன விடயங்கள் ஊடாக கட்டமைக் கப்படுகின்றது.

ஜல்லிக்கட்டு, சாவல்கட்டு, கிடாய் சண்டை என்பன எப்படி வீரியமான இனவிருத்திக்கு ஏற்ற விலங்கை அடையாளப்படுத்த உதவுகின்றது. அதுபோல் இளந்தாரி கல் தூக்குதல் என்பது இந்தியா போன்ற நாடுகளில் உள்ளது. நெய்தல் நில மக்களின் தொழிலோடு இணைந்த நீச்சல், வள்ளம் தாங்கல், சுழியோடுதல் போன்ற கடல்சார் விளையாட்டுக்கள் சிறந்த விளையாட்டு வீரர்களை மட்டுமல்லாது அவர்களது தொழில் ரீதியாக உடல் உள ஆரோக்கியமான புதிய நபர்களின் வரவுகளையும் அடையாளப்படுத்துகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடாக்கடலில் உள்ள சிறுத்தீவு என்னும் இடத்தில் இருந்து குருநகர் ஜெட்டி வரை நீந்தி வருதல், குடாக் கடலில் உள்ள வெளிச்சக் கூண்டில் இருந்து குருநகர் ஜெட்டி வரை வள்ளம் தாங்கி வருதல், குருநகர் ஜெட்டியின் அருகேயுள்ள கடலின் அடி ஆழத்திற்கு சென்று குறிப்பிட்ட கல்லை எடுத்து வருதல். இத்தகைய போட்டிகள் அண்மைக்காலம் வரை இப்பிரதேசங்களில் சனசமூக நிலையங்கள், கிராம அபிவிருத்தி சபைகள், மற்றும் கழகங்களால் நடாத்தப்பட்டு வந்துள்ளது. இவை இளைஞர்களின் உடல் ஆரோக்கியத்தையும், உள விருத்தியையும் அதிகரிக்கின்றது.

## 2.இலங்கையின் அறிவு சார் சொத்து சட்டம்

இலங்கையின் தேசிய அறிவுசார் சொத்து அலுவலகம் 1982 ஜனவரி 1இல் திறக்கப்பட்டது. 1979 ஆம் 52 இலக்க அறிவுசார் சொத்து சட்டத்தின் கீழ் 2003 ஆம் ஆண்டு 36ம் இலக்க இலங்கையின் அறிவுசார் சொத்து சட்டத்தின் சாரமானது பின்வருமாறு

"நாட்டுப்புறவியலின் வெளிப்பாடு" என்பது குழு அல்லது தனிநபர்களின் குழு சார்ந்த மற்றும் பாரம்பரிய அடிப்படையிலான உருவாக்கம். இது சமூகத்தின் எதிர்பார்ப்பை பிரதிபலிக்கிறது. அதன் கலாசார மற்றும் சமூக அடையாளத்தின் போதுமான வெளிப்பாடு அதன் தரநிலைகள் மற்றும் பெறுமானங்கள் வாய்மொழியாக, போலசெய்தல் அல்லது பிற வழிகளில் பரவுகின்றன."

அவற்றுள் உள்ளடங்குவனவாக நாட்டுப்புறக் அல்லது கிராமிய கதைகள், கவிதைகள் மற்றும் புதிர்கள். நாட்டுப்புற பாடல்கள், இசை, இசை கருவிகள். நாட்டுப்புற நடனங்கள், நாடகங்கள். நாட்டுப்புற விளையாட்டுக்கள் அல்லது வேறுவிதமாக நிகழ்த்துவது. இன்னும் பல நாட்டுப்புற கலைகளின் தயாரிப்புகள், ஓவியங்கள், சிற்பங்கள், மரம் மற்றும் உலோக வேலைப்பாடுகள், கைவினைப்பொருட்கள், உள்நாட்டு ஆடைத்தயாரிப்புக்கள் போன்ற இலக்கிய அல்லது கலைப்படைப்புகள் நாட்டுப்புற கலைகளின் வெளிப்பாடுகள் அது சார்ந்த இனக்குழுவின் அறிவு சார் சொத்தாக அடையாளப்படுத்தவும், பாதுகாத்து பராமரிக்கவும் இச்சட்டம் வகைசெய்கின்றது.

## 3.வரலாறு

அறுபதினாயிரம் விந்தனுக்களை நீந்திக் கடந்து கருமுட்டையின் சுவரைத் தாண்டி உள்ளே சென்ற சாதனை நீச்சல் வீரனின் பிரதிகள் தான் ஒவ்வொரு உயிரினமும். மனிதனின் வாழ்க்கை நீரிலே தொடங்கி நீரிலே கலக்கிறது. இவ்வுலகின் முக்கால் பங்கு நீர் நிறைந்தது மனிதனின் உடலும் அப்படித் தான். மனிதன் தனக்குரிய உள்ளுணர்வால் (Instinct) நீந்தும் அறிவினை பெற்றிருக்கலாம்.

மூலமுதற்காலத்தின் தோற்றம் பற்றி ஆராய்ந்தவர்களில் ஹல்டேன் என்பவர், சேதன மூலக்கூறுகளின் கரைசலான ஆதிக்கூழைக் கொண்டிருந்த முன்னைய கால சமுத்திரங் களிலிருந்து உயிரிகள் உருவாகி இருக்கலாம் என்றார். தனி கலத்தாலான முதல் இயூகரி யோற்றாவுக்குரிய அங்கிகளின் உயிர்ச்சுவடுகள் 1.8 பில்லியன் வருடங்களுக்கு முற்பட்டவை எனக் கணிப்பிடப்பட்டுள்ளன. தனிக்கல அங்கிகள் பின் பலகல அங்கிகளாக கூர்ப்படைந்தன.

சில மிருகங்கள் நீரில் நீந்துவதைப் பார்த்து போலச்செய்தல் மூலம் மனிதன் நீந்த பழகியிருக்கலாம். நாய், எருமை, யானை, குதிரை போன்ற மிருகங்கள் ஆற்றைக் கடக்கும் போது எவ்விதம் முன்னங்கால்களால் எம்பிக்குதித்து பின்னங்கால்களால் நீரைத் தள்ளுகின்றதோ அது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போல் மனிதன் நீந்த பழகியிருக்கலாம். இதனை நாய் நீச்சல் (Dog paddle) என்று ஆய்வாளர்கள் பெயரிட்டுள்ளனர்.

இலாமாக்கின் உயிரியல் ஆய்வுகள் இரண்டு தத்துவங்களை உருவாக்கின. ஒன்று பாவிப்பும் பாவிப்பின்மையும், பயன்படுத்தப்படும் உடற்பகுதிகள் பருமனிலும் வலிமையிலும் அதிகரிக்கும் பயன்படுத்தப்படாமல் இருந்தால் அவை வலிமை குறைந்து விடும். மற்றையது பெற்ற இயல்புகளின் தலைமுறை உரிமை, சூழலின் தேவைக்குகேற்ப அங்கிகள் தம்மை இசை வாக்கப்படுத்திக் கொள்கின்றன. இவ்வாறான இசைவாக்கங்கள் அவ்வங்கியின் எச்சங்களான தொடர்ச்சிகளுக்கு கடத்தப்படுகின்றன.

மீன் குஞ்சுக்கு நீந்த சொல்லியா தரவேண்டும்? என்பது எல்லா உயிர்க்கும் பொருந்தும். ஹல்டேனின் சிந்தனைகளின் அடிப்படையில் மனிதனின் உள்ளுணர்வில் நீரில் நீந்தும் அறிவு உள்ளது. இலாமாக்கின் சிந்தனைகளின் அடிப்படையில் உயிர்வாழும் தேவைக்காக நீச்சலை தொடர்ந்து செய்கின்ற இனக்குழுக்களின் உடல் வலிமை, மன வலிமை, இயற்கை சீற்றத்தை எதிர் கொள்ளும் திறன் என்பன அவர்களின் எச்சங்களான பரம்பரையினருக்கு மரபணுக்கள் மூலம் கடத்தப்படுகின்றது. எல்லா மனிதர்க்குள்ளேயும் பழக்கி எடுக்கப்படாத ஒரு நீச்சல் வீரன் ஒழிந்து உள்ளான்.

"நீச்சல் தெரியாதவன் கல்லாத மூடனைப் போன்றவன்" என்கிறார் அறிஞர் பிளேட்டோ. கிரேக்கர்களும், உரோமையரும் கட்டாயமாக போர் பயிற்சியை இளமை காலத்தில் பெற்று சிலகாலம் போர் வீரனாக கடமையாற்றி இருக்க வேண்டும். போர் வீரனானவன் நிச்சயம் நீச்சல் தெரிந்திருக்க வேண்டும் என்பது அவர்களது சட்டம்.

மொகஞ்சதாரோ, ஹரப்பா அகழ்வாய்வுகள் மற்றும் சிந்து சமவெளி நாகரிகக் குறிப்புக்களில் திராவிடர்கள் நீச்சலில் மிகுந்த ஆர்வமுள்ளவர்களாக இருந்ததாகவும். மத்திய கிழக்கு நாடுகளில் கிடைக்கப்பெற்ற பழங்கால குகை ஓவியங்கள், வர்ணச்சித்திரம் மனிதன் நீந்துவது போல் காணப்படுகின்றன என்கின்றனர் ஆய்வாளர்கள்.

### 3.1.இலக்கியங்களில்

ஆறு, குளம், குட்டை, கடல் கண்டதும் ஜீவராசிகள் எப்படி தம்மை மறந்து துள்ளிக் குதித்தோடும் மான்களாக மாறிவிடுகின்றன. எல்லா ஜீவராசிக்கும் நீர் அவசியம் எனவே அவைகள் நீர்நிலைகளை அண்டியே வாழ்ந்தன. மனித நதிக்கரை நாகரீகத்தின் தோற்றம் இப்படித்தான் ஆரம்பிக்கின்றது.

கலம் செலுத்தி கடல் அடக்கி ஆண்ட தமிழரின் வாழ்வியலில் மலர்கள் நிலைந்த தடாகமும், வெண்மணல் குன்றுகள் நிறைந்த கடற்கரையும் பிரிக்க முடியாதவை. அங்கு நீச்சல் விளையாட்டுக்கள் நிகழ்ந்தன என்பதற்கு சங்கப்பாடல்கள் தோறும் சான்றுகள் உள்ளன.

புறநானூற்றில் தொடித்தலை விழுத்தண்டினார் என்ற புலவர் தொலைந்து போன இளமைக்கால நினைவுகளை பாடுகையில் நீர் நிறைந்த குளத்தில் பெண்களோடு கைகோர்த்துக் கொண்டும், தழுவிக்கொண்டும், ஒருவர் மீது ஒருவர் தொங்கி கொண்டும் நீர்விளையாட்டில் ஈடுபடுவதும். பெண்கள் கவனத்தை ஈர்க்க மரத்தில் ஏறி குளத்தில் திடும் என சத்தத்துடன் பாய்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிமணலை எடுத்து வந்த அந்த கள்ளம், கபடமில்லா இளமைக்காலம் பற்றி பாடும் "இனிநினைந்து இரக்கம் ஆகின்று..." என்னும் பாடலில் (புறநானூறு 243) சங்கத் தமிழரின் நீர் விளையாட்டைப் பற்றி அறிய முடிகிறது.

காவிரியில் ஆடிப் பெருக்கு கொண்டாட்டங்களின் நீர்விளையாட்டுக்கள், அட்டனத்தி என்னும் ஆண்கள் ஆடும் நீர் நடனங்கள் பற்றிய அகநானூற்றுப் பாடல் ... "படு கடல் புக்க பாடல் சால் சிறப்பின்"... என்பதில் ஆடிப்பெருக்கு கொண்டாட்டத்தில் நடனமாடிய ஆண் அலையில் அடித்துச் செல்லப்பட்டு மீண்ட ஒரு காதல் கதையில் நீர்விளையாட்டுக்களை அறிய முடிகிறது.

### 3.2. வரலாற்று நாயகர்கள்

உரோம் சாம்ராட்சியத்தின் பேரரசனாகத் திகழ்ந்த ஜீலியஸ் சீசர் சிறந்த நீச்சல் வீரர் என் கின்றனர் வரலாற்றாசிரியர்கள். ஈராக் அதிபராக இருந்த சதாம் குசைன் அந்நாட்டில் வருடாந்தம் நடைபெறும் நீச்சல் போட்டியை குறிப்பிட்ட பகுதியை முதலில் தான் நீந்திக் கடந்து போட்டியை ஆரம்பித்து வைப்பாராம். இன்றைய ரஷ்ய அதிபர் விளாடிமீர் புடின் கூட சிறந்த நீச்சல் வீரர். ஒரு முறை மாவீரன் நெப்போலியன் எலினா தீவிலிருந்து நீந்தி பிரான்ஸ் நாட்டிற்கு வந்தபோது அவரை கண்டு வியந்த அனைவரும் உங்களால் எப்படி கடலில் நீந்த முடிந்தது என்று கேட்டபோது நான் எங்கே நீந்தினேன் என்னுடைய இலட்சியமல்லவா என்னை இங்கே கொண்டு வந்து சேர்த்தது என்றார்.

லால் பகதூர் சாஸ்திரி, இந்திய குடியரசின் இரண்டாவது பிரதமர், அவர் மிகவும் ஏழைக் குடும்பத்தில் பிறந்தவர். அவர் பாடசாலை செல்ல வேண்டுமானால் கங்கை ஆற்றைக் படகில் கடந்து செல்ல வேண்டும். ஆனால், அதற்கு அவரிடம் பணம் இல்லை. அதனால் அவர் தனது புத்தக பையை படகில் வரும் சகமாணவர்களிடம் கொடுத்துவிட்டு. கங்கையின் வேகத்தையும் எதிர்த்து வீரமுடன் தினமும் நீந்திக் கடந்து பாடசாலை செல்வாராம். பின்னாளில் நாட்டின் பிரதமராகி மாபெரும் தலைவராக இருந்த போது இந்நிகழ்வும் அதிகம் பேசப்பட்டது.

### 3.3. கடற்படையில்

உரேமானியர் கடற்படை வல்லமையால் அன்று உலகம் என்று சொல்லப்பட்ட ஐரோப்பா, ஆபிரிக்க கண்டங்களை பிரிக்கும் கரிபியன் கடலில் தமது ஆதிக்கத்தை நிலைநாட்டி பல நாடுகளை ஆண்டனர். ஆங்கிலேர் தமது வல்லமை பொருந்திய கடற்படையால் உலகின் பல தேசங்களை கைப்பெற்றி சூரியன் மறையா சாம்றாஜ்ஜியத்தை உருவாக்கினர். இச்சாம்றாஜ்ஜியங்களுக்கு முன்னமே கடாரம் வென்று தென்கிழக்காசிய நாடுகளில் ஆதிக்கம் செலுத்தி பரந்த சோழ போரரசை தனது கடற்படையின் மகிமையால் உருவாக்கினர் சோழர்கள். சோழப் போர் வீரர்கள் நீச்சல் வீரர்களாக அதாவது ஈர் ஊடக தாக்குதல் பிரிவாக பயிற்றுவிக்கப்பட்டிருந்தார்கள்.

தென் இந்தியாவின் பல பகுதிகளிலும் இருந்தும் பற்பல காலங்களில் யாழ்ப்பாணத்தின் மீது மேற்கொண்ட படையெடுப்புக்களோடு இங்கு வந்து குடியேறிய படைவீரர்கள் தமது பொழுது போக்கிற்காக நீச்சல் போட்டிகள் நடத்தியிருக்க வேண்டும் என்பதால் தான் அண்மைக்காலம் வரை இப்பிராந்தியங்களில் அதன் தொடர்ச்சி காணப்படுகின்றது. குறிப்பாக ஆழம் குறைவான யாழ்ப்பாண குடாக்கடலை அண்டிய சிறுத்தீவில் இருந்து குருநகர் வரை நீச்சல் போட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம்பெற்று வந்தது. ஆனால், நாட்டின் போர்சூழலும், கடல்வலய பாதுகாப்பு சட்டமும் மக்கள் கடல் அருகே போவதையே தடுத்தன. தற்போது அப்போட்டிகளை மீள்உருவாக்கம் செய்யப்பட வேண்டிய தேவை உள்ளது.

**4. சர்வதேச நீச்சல் வீரர்கள்**

ஆங்கிலக் கால்வாயை நீந்திக் கடப்பது என்பதே நீச்சல் வீரர்களின் உச்ச சாதனையாக அன்றைய காலத்தில் கருதப்பட்டது.

- 1875ஆம் ஆண்டு ஆங்கிலக் கால்வாயை முதன் முறையாக நீந்திக் கடந்தவர் 'மத்தேயூ வெப்' என்பவர்.
- பெண்களில் 'ஜெர்டுரூட் எட்சிலி' என்ற அமெரிக்கப் பெண்மணி முதன் முறையாக அதனை நீந்தி வென்ற பெருமைக்குரியவர்.
- 'புளோரன்ஸ் சாட்விக்' என்ற அமெரிக்கப் பெண் நீந்திச் சென்று கடந்து மீண்டும் திரும்பி வந்து சேர்கிற புதிய சாதனையை ஏற்படுத்தியவர்.
- 'மைக்பர்டர்' என்ற அமெரிக்கர் விபத்தில் கால்கள் இயங்க முடியாத நிலையிலும் 8வருடங்களாக இடைவிடாத நீச்சல் பயிற்சி எடுத்து 1968ஆம் ஆண்டில் மெக்சிகோவில் நடைபெற்ற ஒலிம்பிக்கில் 400 மீற்றர் நீச்சல் போட்டியில் பதக்கம் வென்றார். அந்த ஆண்டே உலக கோப்பை தனிநபர் பரிசையும் பெற்றார்.
- 1954 ஆம் ஆண்டில் வல்வையம்பதி கடல் தொடங்கி கோடிக்கரையை அடைந்து முதன் முதலில் பாக்குநீரிணையை நீந்திக்கடந்த நீச்சல் வீரர் மு.நவரத்தினசாமி ஆவார்.
- 1966 கொல்கத்தாவை சேர்ந்த மிகிர்சென் என்பவர் பாக்குநீரிணையை தலைமன்னாரில் இருந்து தனுஷ்கோடி வரையிலும் நீந்திக் கடந்தார்.
- 1975 இல் மன்னாரில் இருந்து தனுஷ்கோடிக்கு நீந்தி அங்கிருந்து மீண்டும் மன்னாருக்கு 51 மணி நேரத்தில் நீந்திச் சாதனை படைத்த வீரர் வி.செல்வகுமார் ஆனந்தன். இவரது சாதனையை முன்னிட்டு வீரகேசரி ஆசிரியராக இருந்த எஸ்.டி.சிவநாயகம் வழங்கிய பட்டமே ஆழிக்குமரன் என்பதாகும்.
- 1994 ஆண்டு இந்திய நீச்சல் வீரர் குற்றாலீசுவரன் தனது 12 வயதில் பாக்கு நீரிணையை நீந்திக் கடந்தார். அதே ஆண்டு ஆங்கிலக் கால்வாயைக்கடந்து நீச்சல் வீரர் மிகிர் சென் என்பவருடைய 5 கால்வாய்களைக் கடந்த சாதனையை முறியடித்து இவர் 6வது கால்வாயை நீந்தி கடந்திருந்தார்.
- 2018 ஆண்டு 20 வயதான சென்னையைச் சேர்ந்த கல்லூரி மாணவர் ராஜ ஈஸ்வர பிரபு தலைமன்னார் முதல் தனுஷ்கோடி வரையிலான பாக்கு நீரிணை கடலை 12 மணி நேரத்தில் நீந்தி கடந்து சாதனை புரிந்தார்.
- கை, கால்களினைக் கட்டி நவரத்தினம் பாலச்சந்திரன் 21.07.1963 அன்று 1500 அடி அகலமுள்ள ஊர்காவற்துறை துறைமுகத்திற்கும் காரைநகர் துறைமுகத்திற்கும் இடையிலுள்ள கடல் நீரோட்டத்தை குறுக்கறுத்து நீந்திக்கடந்து சாதனை படைத்துள்ளார். இவர் மு.நவரத்தினசாமியின் மகன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 5. சர்வதேச நீச்சல் போட்டிகள்

எல்லா நாடுகளிலும் உள்ளூரிலும் நடாத்தப்பட்ட நீச்சல் போட்டிகள் பல விதிகளுடன் ஒழுங்கமைக்கப்பட்ட போட்டியாக இங்கிலாந்தில் பெருமளவு நடாத்தப்பட்டு சர்வதேச ஒலிம்பிக் போட்டிகளில் இன்று இடம்பொற்றுள்ளது. இப்போட்டிகளில் பங்கு பெற்றும் நீச்சல் வீரர்கள். பின்வரும் நீச்சல் வகைகளை பின்பற்ற வேண்டும்.

### 5.1. நீச்சல் வகைகள்

- தடையில்லா நீச்சல் (Free Style)
- மல்லாந்து நீந்துதல் (Back Stroke)
- மார்பு நீச்சல் (Breast Stroke)
- பட்டாம்பூச்சி நீச்சல் (Butterfly Stroke)

### 6. உள்ளூர் நீச்சல் போட்டிகளை நடத்துதல்

எந்த செலவும் இல்லாது இயற்கையான ஆறுகள், குளங்கள், ஆழம் குறைந்த கடல் நீரேரிகளில் உள்ளூரில் நடத்தக்கூடியது தான உள்ளூர் நீச்சல் போட்டிகளை மீட்டெடுப்பதில் உள்ள சவால்களையும், வாய்ப்புக்களையும் சுவட்டு ஆய்வு மூலம் ஆராய்வோம்.

### 6.1. பலம்

- யாழ்ப்பாண குடாநாடு முக்கால் பகுதி கடலால் சுழப்பட்டதால் அதிக மக்கள் நீச்சலில் ஆர்வம் உள்ளவர்களாக இருத்தல்.
- அதிக இளைஞர்கள் போட்டியாளர்களாக பங்கு கொள்வார்கள்.
- விளையாட்டுக் கழகங்கள் நிச்சயமாக பங்களிப்பு செய்வார்கள்.
- உடல் ஆரோக்கியம் தொடர்பான விழிப்பணர்வு மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.

### 6.2.பலவீனம்

- தற்போதைய நாட்டின் நிச்சயமற்ற சூழ்நிலைகள் போட்டிகளை கட்டுப்படுத்தும் அல்லது பாதிக்கும்.
- அரச அனுமதியைப் பெறுவது கடினமாகலாம்.

6.3.வாய்ப்புக்கள்

- யாழ்ப்பாண குடாநாடு கடலால் சுழப்பட்டதும், ஆழம்குறைந்த பிரதேசம் என்பதால் போட்டிகள் நடாத்த இலகுவாக இருக்கும்.
- அழிந்து போகும் நிலைமையில் நீச்சல் போட்டிகள் உள்ளதால் அதனை மீட்டெடுக்க கலாசாரம், பாண்பாடு சார்ந்த அரச திணைக்களங்கள் உதவக்கூடும்.
- மாகாண விளையாட்டு திணைக்களங்கள் நிதிப் பங்களிப்பு வழங்கக்கூடும்.
- கடல் தொழில் சங்கங்கள் ஒத்துழைப்பும் அனுசரனை வழங்கக்கூடும்.
- பொலிஸ் பிரிவில் பயிற்சி பெற்ற நீச்சல் வீரர்கள் உள்ளனர் அவர்கள் பயிற்சிகள் தரக் காத்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 6.4.சவால்கள்

- இளைஞர்கள் இன்று போதை பாவனையால் உடல் பலயீனம் உள்ளவர்களாக உள்ளதால் போட்டியில் பங்கேற்க உடற்தகுதி அற்றவர்களாக காணப்படுதல்.
- காற்று அதிகம் உள்ள, கடல் கொந்தளிப்பாக இருக்கும் காலங்களில் போட்டிகளை நடாத்த முடியாது.
- தொலைக்காட்சி சிகழ்ச்சிகளில் மக்கள் மூழ்கிவிடுவதால் மக்கள் பங்களிப்பு குறைவாக இருக்க வாய்ப்புள்ளது.
- இளைஞர்கள் கணனி விளையாட்டுக்களில் அதிகம் ஈடுபடுவதால் வெளி உலக சவால்களை அறியமுடியாதவர்களாக உள்ளனர்.

மேலும் நீச்சல் உடற்பயிற்சியின் நன்மைகள் தொடர்பாக இளைஞர்களுக்கு விழிப்புணர் வூட்டுதல், கழகங்களை ஒன்றிணைத்து போட்டிகளை ஏற்பாடு செய்தல், சனசமுக நிலையங்களை ஒழுங்கமைப்பாளர்களாக இணைத்துக் கொள்ளல், வர்த்தக நிலையங்களிடம் நிதி அனுசரனையைக் கோருதல், அரச நிறுவனங்களின் அனுமதியினைப் பெற்று கடல்சார் விளையாட்டு போட்டிகளை நடாத்துவதன் ஊடாக மறைந்துவிட்ட தெட்டுணரமுடியாத நமது பண்பாட்டு மரபுரிமையான உள்ளூர் நீச்சல் விளையாட்டு போட்டிகளை மீட்டெடுக்க முடியும் என்பது திண்ணம்.

உசாத்துணை:

1. தொ.பரமசிவன்,'பண்பாட்டு அசைவுகள்', காலச்சவடு பதிப்பகம்,சென்னை, 2004.
2. ஜீசஸ் ராஜ்குமார்.N.C, 'நீங்களும் நீச்சல் வீரர் ஆகலாம்', எஸ்.எஸ்.பப்ளிகேஷன், சென்னை, 2004.

இணைய உசாத்துணை:

3. https://klubnayaliga.ru/ta/plavanie-v-basseine-polza-plavanie-polza-i-vozdeistvie - na/

**பிரிட்டிஷ் பிரதமரும் பெண் எம்பியும்**

ஒருமுறை லண்டன் பாராளுமன்றத்தில் உறுப்பினர் ஆன ஒரு பெண்மணி பிரதம மந்திரி சர்ச்சிலைப் பாரத்து இப்படிக் கத்தினாள். நான் மட்டும் உமது மனைவியாக இருந்தால் என் கையாலே உமக்கு விஷம் கொடுப்பேன் என்றாள். இதைக் கேட்ட சர்ச்சில் அமைதியுடன் பின்வருமாறு பதில் சொன்னார். அம்மணி உங்களைப் போன்ற அகங்காரம் அடங்காப்பிடாரி மனைவி கிடைத்தால் அந்த விஷத்தை மகிழ்ச்சியோடு குடிப்பேன் என்றார்.

(இதன் பொருள் – உன்னோடு வாழ்வதை விட அந்த விஷமே மேல் என்பது பொருள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவீன காலத்தில் பண்பாட்டுடன் பயணிப்போம் !



**திருமதி பூமகள் றேமகாந்**
அபிவிருத்தி உத்தியோகத்தர்,
பிரதேச செயலகம், யாழ்க்காணம்.

கல் தோன்றி மண் தோன்றாக்
காலப் பழங்குடி நாம்
நல்லோரும் வல்லோரும்
வாழ்ந்த பெருங்குடி நாம்
பல்லோரும் வாழ்வதற்கு
பாதை வகுத்து வைத்து
அல்லும் பகலுமென
அறத்தோடு வாழ்ந்தவர் நாம்
பண்பாட்டுச் சிகரத்தைப்
படைத்து மகிழ்ந்தோம்
அன்பாக அனைவரோடும்
அளவளாவி மகிழ்ந்திருந்தோம்
இன்னமுதாய் எவரிடத்திலும்
இனிய மொழி பகர்ந்திருந்தோம்
வந்தோரை வரவேற்க
வாசலுக்கே சென்றிருந்தோம்
இன்றைக்கு என்னாய்ச்சு?
விஞ்ஞானம் வளர்ந்தாச்சு
வில்லங்கம் விளைஞ்சாச்சு
வீட்டிற்கு வந்திருக்கும்
விருந்தினரைக் காக்கவைத்து
பாட்டுக்குப் பாட்டு
படம் போட்டு பார்த்திருப்போம்
என்ன நடந்தது காண்?
பூகோள மாற்றத்தைப்
பிழையாகப் புரிந்து கொண்டோம்
பூகோள மாற்றங்கள் புதிதல்ல எங்களுக்கு
பழையன கழிந்திடலும்
புதியன புகுந்திடலும் வழுவல்ல
புரிந்து கொள்வோம் நாம்
பண்பாட்டுப் பழக்கங்கள்
மண்பட்டுப் போகாமல்
கண்ணும் கருத்துமென
காப்பாற்ற நாமெழுவோம்
புத்தாக்கம் பூவுலகில்
பூத்துப் பரவட்டும்
எத்தாக்கம் வந்தாலும்
எதிர்த்தெம் எழில் காப்போம்
பத்தோடு பதினொன்றாய்
சத்தோடு சமராடி
சீராக்கி அதை மீட்போம்
எங்கள் பண்பாட்டை
எமதினிய நல்வாழ்வை
தங்கத் தமிழினத்தின்
தரமிகுந்த திருவாழ்வை
மங்காப் புகழோடு
மண்ணிருக்கும் வரை காப்போம்
மாறும் காலத்தை
மாற்றமுறும் கோலத்தை
சீரும் சிறப்போடும்
சிந்தையிலே நாம் கொண்டு
வளரும் உலகோரும்
உவந்தேத்தும் வழிகண்டு
யாரும் இகழாமல்
யாண்டும் அதைக் காப்போம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவீனத்துடன் பண்பாட்டு அடையாளங்களை பதிவாக்குவோம்



**கலாபூசணம் செ. யோசேப்பாலா**
10/2, மத்தியூஸ் வீதி,
யாழ்ப்பாணம்

எமது இனம், மொழி, நாடு, சமூகம் என்பதெல்லாம் அதன் பண்பாட்டு விழுமியங்களை அடையாளமாக கொண்டதாக வெளிப்படுத்தப்படும். அதனைக் கலை, இலக்கிய, கலாசார, வடிவங்களாகவும் உணவு, உடை உரையாடல், மொழி வழியாகவும் பண்பாட்டு விழுமியங்களை பாரம்பரியமாக கொண்டவர்களாகவும் நவீன காலத்துக்கு ஏற்ற இசைவாக்கத்துடன் நமது தனித்துவங்களை சிதையாது வெளிப்படுத்தும் அடையாளங்களை காப்பவர்களாகவும் வாழ்ந்து வரும் பண்பாட்டின் சிறப்புகளே அவ்வினத்தின் அடையாளமாகும்.

"ஒரு நாட்டு மக்கள் இலக்கியம் அவர்கள் தேசிய உணர்வில் இருந்து தோன்ற வேண்டும் அந்த சுயமரியாதை உணர்வு இல்லையேல், தேசிய உணர்வு தோன்றாது, சுதந்திரம் இல்லையேல் சுயமரியாதை உணர்வும் தோன்றாது" என்ற பேராசான் ஹோரியர் பீச்சர் டோவ் என்ற அறிஞரின் கூற்று எமது அடையாளங்களுக்கு வலுச் சேர்க்கிறது.

சுதந்திரத்தை சுவைக்க யாருக்குத்தான் ஆசை இல்லை. அந்த சுதந்திரம் எமது பண்பாட்டு விழுமியங்களை சிதைப்பதாக அமைந்து விட்டால் அவை ஓர் இனத்தின் அடையாளத்தையே அழித்து விடும். எமது முன்னோரின் முன்மாதிரியான செயல்கள் எம்மை வழிப்படுத்தி எமக்கு என ஓர் அடையாளத்தை தந்தவையே இவை நவீன காலப்போக்கில் உலக மயமாக்கலால் பல்வேறு மாற்றங்களை எதிர் கொண்ட போதும் அதற்கு முகம் கொடுத்து நவீனத்தை எமது வாழ்வியலிலும், இலக்கிய கலாசார பண்பாட்டுடனும் இசைவாக்கம் கொண்ட போதும் எமது இனத்தின் அடையாளங்களை காத்து அடுத்த தலைமுறையினருக்கு கொடுக்கவேண்டிய பாரிய பொறுப்புக்களை எமது சமூகத்தில் உள்ள சகல மட்டத்தினருக்கும் உண்டு. இதனை வழிப்படுத்த தவறி விட்டால் பண்பாட்டு சிதைவுகள் எமது இனத்தின் அடையாளங்களையே மழுங்கடித்து இல்லாமல் ஆக்கிவிடும்.

பல்வேறு வடிவங்களால் எமது பண்பாட்டு வேர்கள் சிதைக்கபடுவதை, திட்டமிட்டு அழிக்கப் படுவதை கண்டும் காணாதவராக இருப்பதாலும் அச்சிதைவுகளுக்கு உடந்தையாவதை உணரத் தவறுவதும் எமது பெலவீனமே. நவீன உலகில் எமது பண்பாட்டைக் காத்து முன் எடுப்பதில் முன்னோர் காலத்தில் முன்னெடுக்கப்பட்ட சமயங்களும் சமூக அமைப்புக்களுக்கும் இன்று முக்கிய பங்கு வகிக்க வேண்டியது காலத்தின் தேவைகளாகும்.

முன்னையோர் நற்கருத்துக்கள், வரலாறுகள் இன்றும் உரை முடிக்கின்றது. அதில் அதிக பங்கேற்றவை கலைகளும் இலக்கிய பதிவுகளுமே பல சரித்திரங்களை இன்றும் சிறுவர்கள் முதல் பெரியோர்கள் வரை அறிந்துகொள்ள காரணமானது. இதனை அன்றைய சமய தலங்களில் கலை வடிவங்களாக இலகுவில் புரிதலை ஏற்படுத்தியதுடன் பொது மன்றங்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைப்புக்கள் பண்பாட்டு விழுமியங்களை பகிர்வது கூட பண்பாட்டு வேர்களை இன்றைய கால சந்தர்ப்பங்களை எமது பண்பாட்டு அடையாளங்களை வெளிப்படுத்தி பதிவாக்கும் கலைகளும் சமய, பொது அமைப்புக்களும் தமதுபணிகளை பரவலாக்க, முன் எடுப்பதில் தான் எமது இனத்தின் பண்பாட்டு கலாசாரங்கள் செயல்முறையால் காக்க உதவும். இப்பணிகளை நவீனகால உத்திகளுடன் எமது சடங்குகள் சம்பிரதாயங்களால் மேற்கொள்ளும் எந்த விடயங்களாலும் அர்த்தங்கள் புரிந்து அடையாளங்களை பதிவாக்கி எதிர்கால தலை முறைகளுக்கு கையளிப்பதில் முன் நிற்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும் இதுவே எமது இனத்திற்கு நாம் செய்யும் அரிய பங்களிப்பாகும் மறவாது காக்க உதவி வருவது பாராட்டுக்குரியதே. இவை போதுமானதா என்றால் மிகவும் தொய்வு நிலைகளாகவே இருக்கின்றது. பொது அமைப்புக்கள் நவீன உலகில் கவர்ச்சிகரமாகவும், புகழ்ச்சி தேடியும் இன்று என்ன செய்தீர்கள்? என்றால் பழமை காலத்தை சான்றைச் சொல்லி தப்பிக்க முனைவதை விட இன்றைய காலத்தில் நவீன உலகில் பண்பாட்டுடன் பயணிக்கும் சமூகத்தை கட்டியெழுப்புவதில் முன்னின்று உழைப்பதே மிக முக்கியமான தேவையாகும்.

பாராட்டு நிகழ்ச்சி நிரல்களுக்காக செய்து முடிக்கும் செயற்பாடுகளை ஆண்டு விழாக்களாகவும் கௌரவிப்புக்களாகவும் மட்டுமே நிறைவேற்றுவதில் திருப்தி கொள்ளாது, எதிர்கால சந்ததிகளான சிறுவர்கள் மன்றங்களில் பண்பாட்டு விழுமியங்களை அர்த்தமுடன் விளக்கும் விதத்தில் பங்கேற்று பகிர வழிகளை தேட வேண்டும் அவர்களை ஊக்கப்படுத்தும் திட்டமிடல் இன்றைய காலத்தின் அவசியமும் தேவைகளுமாகும். எந்த வயதிலாவது பாராட்ட கௌரவப்படுத்த எல்லோருக்கும் ஆவல் ஆசைகள் அதிகமாக இருக்கலாம் அவர்கள் தங்கள் திறன்களையும், ஆற்றல்களையும் அடுத்த தலைமுறைக்கு கொடுப்போர் இன்று செயல்பட்டால் அவர்களை ஊக்கப்படுத்துவதும் பாராட்டுவதும், அதற்கான சந்தர்ப்ப சூழலை உருவாக்கி கொடுப்பதிலுமே செயற்பாடு மிக்க பாரம்பரிய கலைப்படைப்புக்கள் நவீன காலத்துக்கு பயன்தரும் பதிவாகும். இவர்களை பாராட்டி கௌரவிக்கும் போது மேலும் பலர் முன்வருவதிலும் பாரம்பரியங்களை கற்றுக் கொள்வதிலும் புதிய பரம்பரையை நவீன காலத்தில் தோற்றம் பெற சந்தர்ப்பங்கள் உருவாகி உருவாக்கப்படும். மனிதர்கள் ஒன்றாய் கூடி இணைத்து மகிழ்விக்கும் சக்தி கலைகளுக்கு உண்டு அக்கலைகள் ஊடாக நவீன காலத்திலும் எமது பண்பாட்டு வேர்களை ஊடுருவி புதிய தலைமுறைக்கு நவீன காலத்திற்கு ஏற்ற சிந்தனை தெளிவுகளை வெளிப்படுத்தி தூண்டுவோரை ஊக்கப்படுத்த பாராட்டுக்கள் கௌரவிப்புக்களுக்கு அர்த்தமூட்டுவதே புதிய தலைமுறை உருவாக்கத்தில் பங்கேற்ற பயன்களை அனுபவிக்க முடியும்.

பொய்முகங்கள் சில பாராட்டுக்கும் கௌரவிப்பிற்கும் அலைவதும் தம்மைத்தாமே வெளிப்படுத்த முனைவதும் உண்மை கலைஞர்களின் கௌரவத்திற்கு இழுக்காகி திறமையால் பண்பாட்டு பாரம்பரிய சிறப்புக்களை வெளிப்படுத்துவதும் கலைகளும் கலைஞர்களும் ஒதுக்கப்படுவதும் ஒதுங்கி வாழ்வதும் நவீன காலத்தில் பண்பாட்டு விழுமியங்கள் வளர்ச்சி அடைவதற்கு தடைகளாகவே காணப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒளியினால் வரையும் ஒளிப்படக்கலை



**திரு. ஜோ. ஜெஸ்ரின்**
28/1 ஆனந்தன் வடலி வீதி,
கொழும்புத்துறை யாழ்ப்பாணம்.

ஒவ்வொரு கலைகளிற்கும் ஏதோவொன்று கருவியாக இருக்கிறது. எழுத்தாளர்கள் சொற்களை கருவியாக்குகின்றனர். அதேபோல ஒவ்வொரு கலைஞர்களும் தமது வெளிப்பாட்டுக் கருவியாக தனித்துவமான அழகியலை காட்சி விதானிப்பை வேறுசில வடிவங்களையும் கருவியாக்கிக் கொண்டு செயற்படுகின்றனர். அதேபோல் நாடகமும் மிக அற்புதமான கலைவடிவம். அது நிகழ்த்தும் கணத்தில் பிரமிப்பூட்டவல்லது அதே போலவே ஒளிப்படக் கலையை எடுத்துக் கொண்டால் அது பார்க்கப்படும் ஒவ்வொரு கணத்திலும் ஏதோ ஒன்றைச் சொல்கின்றது. இந்த உலகத்தை முழுமையாகவும் மிகவும் மெய்சிலிர்க்க வைப்பதாகவும், அர்த்தமுள்ளதாகவும் எமது தேடல்களை கண்டு பிடித்து கருத்தாளத்துடன் காட்சிப்படுத்தும் வகையில் காண்பியக் கலைகளில் ஒளிப்படக் கலை சிறந்ததொரு கருவியாகும்.

ஓவியக்கூறுகளும், கொள்ளைகளும் ஒளிப்படக் கலையோடு ஒன்றிப்போவதாக காணப் படுகின்றது. குறிப்பாக கோடு - வர்ணம் - ஒளித்தகவு, வடிவமும் உருவமும் வெளி, இழையமைவு, சமநிலை, ஒருமை, வெற்றியல்பு, லயம், முதன்மைப்பங்கு, அசைவு போன்றவை ஒத்துப்போகும் பண்புகளாகும் இதில் கருவி மற்றும் வடிவம் வேறுபட்டாலும் இரண்டுமே சிறந்த காண்பியக் கலைகள் தான் எந்தவொரு கலைப்படைப்பையும் உருவாக்குவதற்கு மட்டுமல்ல மற்றவர் உள்வாங்கிக் கொள்வதற்கும் குறைந்தளவானவர்களே முன் வருகின்ற காரணத்தினால் இவற்றை பெருமளவில் முன்னெடுக்க வளர்த்தெடுக்க ஆர்வலர்கள் முன் வர வேண்டும் ஒரு ஓவியன் தனது தூரிகைகளைக் கொண்டு எவ்வாறு வரைகின்றானோ அவ்வாறு "கமறா" எனும் கருவியைக் கொண்டு ஒளிப்படக் கலைஞன் அந்தப் பணியை மேற்கொள்கின்றான். அழகிய கதைப்படங்களை செதுக்குதல் / கண்டு பிடித்தல் என்பது கற்பனைக்கும் நிஜத்திற்குமான கலைத்துவம் சார்ந்த ஒரு வகையான மாயா ஜாலத்திற்கும் உட்பட்டுள்ளது.

ஒளிப்படக்கலையில் உள்ளதை உள்ளவாறே பதிவு செய்யப்படுகின்றது. சில பல சந்தர்ப்பங்களில் உள்ளது உள்ளவாறே இருந்தாலும் அதற்கான பார்வைக் கோணங்களில் அது வேறொன்றானதாகவும் பல்பொருள் கூறும் படைப்பாகவும் காணப்படும். சமூகத்தின் அன்றாட செயற்பாடுகள கலையாக பதிவுசெய்யப்படுகின்ற போது வாழ்க்கையின் அழகிய தருணங்கள் ஆவணப்படுத்தப்படுகின்றது. புகைப்படவியல் என்பது தற்காலத்தில் ஒளியினால் வரையப் படுகின்ற ஒளிப்படக்கலையாக காணப்படுகின்றது. இதில் வெளித்தோற்றம், காட்சி, நோக்கு, சேர்மானம், நிறம், ஒளியினுடையதரம், நோக்கும் திசை என்பன இன்றியமையாத காரணிகளாகும் புகைப்படம் / ஒளிப்படம் என்பது எமது மனதில் எழும் எண்ணங்களைக் கொண்டு ஒரு கருவியால் பதிவு செய்யப்படும் ஒரு ஓவியமாகும் ஒளிப்படத்தை எடுப்பதற்கு இதுதான் தகுந்த முறை என்பது ஒரு வரையறுக்கப்பட்ட முறையல்ல ஒரு கலைஞன் தான் எடுக்க விரும்பும் விதத்தில் ஒளிப்படங்களை எடுக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரிய ஒளியிலிருந்து தெறிக்கின்ற கதிர்கள் வெவ்வேறான அளவில் மின்காந்த கதிர்களாக ஒளிப்படக் கருவியின் உதவியுடன் பெறப்படுகின்றது. சில நேரங்களில் எமது வெற்றுக் கண்களால் பார்க்கவோ அவதானிக்கவோ முடியாதவற்றைக் கூட ஒளிப்படக்கருவி மூலமாக துல்லியமாக பதிவு செய்ய முடிகின்றது சூரிய ஒளியிலுள்ள மூலவர்ணமான ஏழுவர்ணங்கள் பெறப்படுகின்றது. இந்த நிறங்களின் துணையின்றி ஒரு சிறந்த புகைப்படத்தை துல்லியமாக எடுப்பது என்பது பெரும் சவாலாகும். விசேடமாக வெள்ளை நிறத்தினை இயற்கையாகவே எம்மால் எந்த திசையிலும் பார்க்க முடியும் எந்தவொரு பொருளாக இருந்தாலும் அவை ஒளியின் துணை கொண்டே தெளிவாக பிரதிபலிக்கின்றது ஒளிப்படவியலில் ஒளியில் செல்வாக்கு மிகவும் இன்றியமையாதாக இருப்பதால் தான் ஒளிப்படக் கலை என்று அழைக்கின்றோம். ஒரு நல்ல ஒளிப்படக் கலைஞன் வேண்டும் என்றால் அதிக விலை உள்ள "கமறா" இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை. தலை சிறந்த படங்களை ஒரு சிறிய கமறாவால் எடுக்க முடியும். ஒளிப்பட மொழி என்பது இலகுவில் யாரும் கற்றுக் கொள்ள முடியும். இலகுவில் கற்க முடியாவிட்டால் நல்ல கதைப்படங்களை எடுக்க முடியாது போகலாம் எந்தவொரு தொழிலுக்கும் படிப்பறிவு 10 வீதம் மட்டுமே பயன்படும் 90 வீதம் அனுபவ அறிவே காப்பாற்றும். ஒரு ஒளிப்படக் கலைஞன் நல்ல கற்பனை திறத்துடனும், கலைத்தாகத்துடனும், புதுமையான சிந்தனைகளுடனும் ஒரு படத்தைப் பார்த்தவுடன் அதிலுள்ள நுணுக்கங்களை புரிந்து கொள்ளக் கூடியவராக இருக்க வேண்டும்.

படப்பிடிப்பிற்கு சுவையான விடயம் தெரிவு செய்யவேண்டும் நாம் காணும் சகலதும் எடுக்கப் போகும் படத்திற்கு உகந்தது அல்ல சட்டகத்தை (Frame) மதிக்கவும் தெரிவு செய்யும் கலையாகவும் காணப்படுகின்றது. அடுத்து தெரிவை ஒரு முகப்படுத்தி தேவை யற்றதை (Frame)ல் இருந்து அகற்ற வேண்டும் தெரிவு செய்ததை ஒழுங்குபடுத்த வேண்டும் அலங்காரப்படுத்தும் மூலக்கூறுகளை பயன் படுத்துவதுடன் வெளிச்சத்தை கவனிக்க வேண்டும். விடயத்திற்கு நெருங்க வேண்டும். (Wtde and close) கவனத்தெரிவை பயன்படுத்துக. (Selective focus Defth of field) ஐ கட்டுப்படுத்துக. Aperture மூலம் புகைப்படத்தை அதிக உயிரோட்ட முள்ளதாக (Shurter Sped Frame)ல் உங்களது பிரதானமான விடயத்தை வைத்தல் (Rule of thirds) ஞாபகம் வைத்துக் கொள்க விடயத்தை (Subject) சரியான நடுவில் வைப்பது அநேக சந்தர்ப்பங்களில் சிறந்த புகைப்படத்தை உருவாக்காது ஞாபகம் வைத்து கொள்க நேர்கோடுகள் கண்களுக்கு பிரியமானதாக இருக்காது சில நேரங்களில் விடயத்தின் ஒரு பகுதியை மறைத்து முழுமையான தோற்றமளிக்கச் செய்தல் (Mysttery) மேற்குறிப்பிட்ட விடயத்தை கவனித்து அவதானத்துடன் படம் பிடித்தால் அதிசயக்கத்தக்க ஒளிப்படக் கலைஞர்களாக நீங்கள் உருவாகலாம்.

நல்ல புகைப்படக் கலைஞராவதற்கு மூன்று வழிகள் உண்டு

ஒன்று - புகைப்படம் பிடிப்பது
இரண்டு - புகைப்படம் பிடிப்பது
மூன்று - புகைப்படம் பிடிப்பது தான்

"செந்தமிழும் நாப்பழக்கம்" என்ற கூற்றுக்கிணங்க பயிற்சியும் தொடர் முயற்சியுமே உயர்ச்சிக்கு வழிவகுக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவீன வாழ்வியல் ஊடாக எம் பண்பாட்டை பாதுகாப்போம்

**திரு. சிங்கராஜர் வசீகரன்**
விதானையார் வீதி
சுண்டிக்குளி

நாம் மறந்ததும் நம்மை விட்டு மறைந்த பண்பாடும் இன்று மலரும் நினைவுகளாய் எமது மனதை மயிலிறகாய் வருடிச் செல்கின்றன. உதிர்ந்த உறவும், வாடும் மனமும், மறைந்த காடும், மாசுபட்ட காற்றும், வறண்டு போன நிலமும், தண்ணீரில்லா நீர்நிலையும், மடுவாக மாறிப்போன மலையும் இன்று வடுவாகக் காட்சியளிக்கின்றன. "நல்ல தோர் வீணை செய்தே அதை நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ"? என மகாகவி பாரதியார் வருந்துவது போல் இறைவன் கொடுத்த அற்புதமான வாழ்வும் எம்மிடம் மிளிர்ந்த உயர்ந்த பண்பாடும் எம்மை விட்டுத் தொலைந்து போனவைகளாகவே எண்ணத் தோன்றுகின்றது. அன்று கிராமங்கள் அதிகம் இருந்ததால் உறவினர்கள் ஒன்று கூடி இன்பத்திலும், துன்பத்திலும் தோள் கொடுத்து வழிகாட்டுதல் வழிநடத்துதல், பகிர்தல் எனும் பண்பாட்டு விழுமியங்களுடன் ஓர் கூட்டுக் குடும்பமாய் வாழ்ந்தனர். அன்று சிறார்கள் இயற்கையோடு இயைந்த விளையாட்டுக்களையே விளையாடினார். தோட்டத்தில் பட்டாம் பூச்சிக்குப் பின்னால் ஓடியதும், காற்றில் பட்டம் விட்டு ஆடியதும், இயற்கை காற்று நிறைந்த மாசற்ற மைதானத்தில் விளையாடியும் உடலுக்கு வலிமை சேர்த்த எமது பண்பாட்டை நினைக்கும் போது இன்றும் கூட அது மகிழ்விக்கின்றது.

குளங்களிலும், ஆறுகளிலும் கூடி நீராடியும் புத்தகசாலைகளுக்குச் சென்று அரிய புத்தகங்களைத் தேடி வாசித்தும் வானொலிப் பெட்டிக்கு முன்னால் ஒன்று கூடி அன்றைய செய்திகளைக் கேட்டு கருத்துக்களைப் பரிமாறியும், திருவிழாக்காலங்களில் சொந்தங்கள் அனைவரும் ஒன்று கூடி ஊரையே மகிழ்வடையச் செய்ததும் சிறந்த எம் பண்பாட்டு விழுமியங்கள் அல்லவா? கூட்டுக் குடும்பங்களில் பாசத்துடன் பரிவையும் நேசத்துடன் உறவையும், உணவுடன் உணர்வையும், வார்த்தைகளுடன் வாழ்க்கையின் நல்லறத்தையும், எமது கலாசாரப் பண்பாட்டையும் குழந்தைகளுக்கு எடுத்துக்கூறி அவர்களை நெறிப்படுத்தினர். அன்பே தவம் வாழ்வே வரம் என்பது மாறி எமது வாழ்க்கை இன்று சில தேவையற்ற தேடல்களையும், எண்ணங்களையும் நோக்கிப் பயணிக்கின்றது. வேலியில்லாத பயிரும், காவலில்லாத வாழ்க்கையும் பயனற்றதாய்ப் போய்விடும். பொருளாதார முன்னேற்றத்திற்காகப் பெற்றோர் பணியின் பின்னே ஓடிக் கொண்டிருப்பதால் குழந்தைகளின் தேடல்களை அறிந்து மனம் விட்டுப் பேசி தீர்வுகாண முடியாமலும், எதையும் எடுத்துக்கூற கேட்கப் பொறுமை யின்மையினாலும், எமது பண்பாட்டை அவர்களுக்கு ஊட்ட மறந்ததாலும் உறவு நிலைகள் பலவீனப்பட்டு வாழ்வில் விரிசல் நிலைகள் தோன்றின.

ஐரோப்பியரின் வருகையை அடுத்து எமது பண்பாடும், கலாசாரமும் படிப்படியாக மாறத் தொடங்கியது. 20 ஆம் நூற்றாண்டில் அந்த மாற்றம் மேலும் வலுப்பெற்று விஞ்ஞான உலகுடன் இணைந்து மனிதன் வாழ முற்பட்டதால் அன்றிலிருந்தே எமது பண்பாடுகள் மெல்ல மெல்லத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேயத்தொடங்கின. எந்நிலையில் எம்மவர்கள் உயர்ந்தாலும் பெற்றோரைப் பேணிக்காத்தல், முதியோரைப் வணங்கி அவர்களை மரியாதையுடன் நடத்துதல், இன்ப துன்பத்தில் அனைவரும் இணைந்து பயணித்தல், நாகரிகமான உடையணிந்து பொது நிகழ்வுகளில் பங்கேற்றல், எளிமையான சுவையான இயற்கை உணவைச் சமைத்து எல்லோருடனும், உண்டு மகிழல், வீட்டில் உள்ளவர்களுடனும், அயலில் உள்ளவர்களுடனும் மனம் விட்டுப் பேசுதல் போன்ற எமக்கே உரித்தான பண்பாட்டு விழுமியங்களை விட்டு நாம் பயணிக்கக் கூடாது. எம்வாழ்க்கை முறைக்கு எமது பண்பாடு முக்கியமானது என்பதை இன்றைய இளையோருக்கு எடுத்துக்கூற வேண்டியது. வளர்ந்த அனைவரினதும் கடமையாக உள்ளது. ஒரு நாட்டின் வளமான எதிர்காலமும் சிறந்த பண்பாடுகளும் அந்நாட்டின் முன்னேற்றமும் இளையோரின் கையில் இருப்பதால் தான் நூறு இளையோரை என்னிடம் தாருங்கள், இந்தியாவை மாற்றிக் காட்டுவேன் என சபதமிட்டார் சுவாமி விவேகானந்தர்.

அறிவுரைகளையும் தேசப்பற்று, மனித நேயம், தன்னார்வத் தொண்டின் மகத்துவம், தனி மனித ஒழுக்கம் போன்ற தனிவிழுமியங்களை இளையோர் தாங்கிச் செல்லும்போதே நவீன உலகில் அவர்களால் பண்பாட்டுடன் பயணிக்கக் கூடியதாயிக்கும். தன்னைப்போல் பிறரையும் நேசித்து, ஆபத்தில் உதவி அநியாயத்தைத் தட்டிக் கேட்டு அனைவரிடமும் அன்பைச்செலுத்தி சுயநலம் துறந்து பொது நலத்தோடு வாழும் போது அதுவே சமூகத்தில் எங்களை அடையாளப்படுத்தி எமது பண்பாட்டையும் வாழவைக்கும். முக்கியமாக எமது விலைமதிப்பற்ற சொத்துக்களாக பெற்றோரை பேணிக் காக்கின்ற பண்பாட்டுக்குச் சொந்தக்காரர் நாம் என்பதால் அவர்களிடம் அன்பு செலுத்தி அக்கறை காட்டி நேசித்து அவர்களுடன் நேரத்தை செலவழிக்கும் பொழுது சொர்க்கம் நமக்கு கிடைப்பதுடன் நமது பண்பாடும் செழிப்புறும் என்பதை நாம் உணர்ந்து செயற்பட வேண்டும்.

பகிர்ந்து வாழ்தல் எமது பண்பாட்டின் தனித்துமான பண்பாகும். இந்த உலகம் யாரால் இயங்கிக் கொண்டிருக்கின்றது? அதிகாரம் கொண்டவர்களாலா? பணம் படைத்தவர்களாலா? இல்லை. கிடைத்தற்கரிய அமிழ்தம் கிடைத்தாலும் தான் மட்டும் உண்ணாமல் மற்றவர்களுக்கும் பகிர்ந்து கொடுத்து உண்பவர்களால் தான் இந்த உலகம் வாழ்கின்றது. தான் மட்டும் உண்ட மனிதன் மற்றவர்களுக்கும் கொடுக்கலாம் என எண்ணிய போது தான் இந்தப் பூமியில் மனிதம் தோன்றியது. இதனால் தான் பகிர்ந்து வாழும் எம் பண்பாட்டை நாம் மீளவும் கட்டியெழுப்பிடக் கை கோர்த்துப் பயணிக்க வேண்டியவர்களாய் இருக்கின்றோம். எனவே நவீனத்தின் தாக்கத்தால் நலிவுற்றுப் போயுள்ள எமது பண்பாட்டை கட்டிக்காக்க வேண்டிய தார்மீக பொறுப்பு இன்றைய சந்ததியினருக்கு உண்டு என்பதை மறவாமல் பண்பாட்டு விளக்கைக் கையிலெடுத்து எமது எதிர்காலத்தை ஒளிமயமாக்குவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்க்கால அனுபவங்கள்



**கலாபூஷணம் கு. இராயப்பு**
(கலையார்வன்)
165, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.

தானுண்டு தன் பணியுண்டு என்றிருந்த மக்கள் எதிர்கொண்ட போரின் விளைவினால் பயணப் பாதைகளில், நீரூர்தி - வானூர்திப் பயணங்களில், யுக்திகளில், தொழில்களில் நிறையவே அனுபவங்களை பெற்றுள்ளனர். அந்த அநுபவங்கள், அவற்றால் ஏற்பட்ட பின்னடைவுகள் பலரது உள்ளங்களில் அழியாது வாழ்வதைப்போல மறந்தவைகளாகவும் உள்ளன. அவ்வாறு மறந்தவர்களுக்கு நினைவூட்டலாகவும், பிந்திய சந்ததியினருக்கு தெரியப்படுத்தலாகவும் இது அமைகிறது.

### பயணப் பாதைகள்

யாழ்ப்பாண குடாநாடு 'கண்டிவீதி' எனும் 'ஏ9' வீதியூடாக ஆனையிறவு கடல்நீரேரியை ஊடறுத்துப் போடப்பட்டுள்ள பாதைமூலம் தென்பகுதிக்கான தரைத்தொடர்பு நேரடியாக இணைக்கப்பட்டிருந்தது. சமகாலத்தில், கேரதீவிலிருந்து கடல்நீரேரியைக் கடந்து சங்குப்பிட்டி ஊடாக பூநகரி சென்று நாட்டின் இதரபாகங்களுக்கு செல்லக்கூடியதாகவும் இருந்தது.

போர்க்காலப் பயணப் பாதைகளை எடுத்துக்கொண்டால்; 15.06.1990இல் வடபகுதியில் ஆரம்பித்த யுத்தம் காரணமாக ஆனையிறவு பாதை தடைப்பட்ட பின்னர், யாழ். குடா நாட்டிலிருந்து வெளியேறுவதற்கு தரைவழி போக்குவரத்து, கடல்வழி போக்குவரத்து அல்லது இரண்டும் இணைந்த போக்குவரத்துக்கள், 'நீரூர்தி' (கப்பல்) போக்குவரத்து, 'வானூர்தி' போக்குவரத்து போன்றவை இடம்பெற்றன. களநிலைக்கேற்ப வெவ்வேறு பாதைகளைப் பயன்படுத்தி பயணங்களை மேற்கொண்டனர். அவற்றால் பலரும் அடைந்த சிரமங்கள், துன்பங்கள், இழப்புகள் கணக்கிலடங்காதவை. இப்பயணங்கள் சிலவற்றில் கட்டுரையாளரும் பயணித்துள்ளார்.

### அ. கடல், தரைவழிப் பயணப்பாதை

#### 01. அராலிப் பாதை

இலங்கை இராணுவம் 1984ஆம் ஆண்டு மண்டைதீவைக் கைப்பற்றியதும் பண்ணைத் தாம்போதி ஊடாக நடைபெற்ற போக்குவரத்து தடைப்பட்டது. அதற்கு மாற்றீடாக, யாழ் / அராலியிலிருந்து தாங்கு வள்ளங்களில் பண்ணைக் கடல்நீரேரியைக் கடந்து, தீவகத்தின் வடக்குப் பக்கமுள்ள சரவனை /அராலித்துறை வரை போக்குவரத்து நடைபெற்றது. இதனால் அராலித்துறையிலிருந்து தீவகத்தின் ஏனைய இடங்களுக்குச் செல்லக்கூடியதாகவும், தீவகத்திலிருந்து யாழ்ப்பாணம் வரக்கூடியதாகவும் இருந்ததால் துண்டிக்கப்பட்டிருந்த தீவகத்து மக்களுக்கு இப்பாதை பயனுள்ளதாகவே இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22.10.1987 அன்று இப்பாதையால் இரண்டு வள்ளங்களில் பயணித்த குருநகர் மக்களை இலக்கு வைத்து உலங்கு வானூர்தியில் வந்த படையினர் நடத்திய தாக்குதலில் இரண்டு மாதக் குழந்தை உட்பட 15 பேர் கொல்லப்பட்டனர். ஒரு சிறுவன் ஒற்றைக் காலை இழந்ததுடன் அறுவர் படுகாயமடைந்தனர்.

**02. பள்ளிக்குடா பாதை**

அமைதிப்படையாக இலங்கையில் காலடி வைத்த இந்திய இராணுவம் தமிழீழ விடுதலைப் புலிகளோடு போரிடத் தொடங்கி, யாழ்ப்பாணத்தைக் கையகப்படுத்த முனைந்து கொண்டிருந்த வேளையில் பல திசைகளாலும் சீறிவந்த எறிகணைத் தாக்குதலுக்கு அஞ்சி, குருநகர் - குருநகரை அண்டிய பகுதிகளில் வாழ்ந்த மக்கள் 11.10.1987 இல் இடம்பெயர்ந்து செல்லலாயினர். அவர்களில் அறுபதுக்கும் மேற்பட்ட குருநகர் குடும்பங்கள் சிறிய, பெரிய படகுகள் மூலம் 'பள்ளிக்குடா'வுக்குச் சென்றிருந்தனர். இடம்பெயர்ந்தவர்கள் தமது அத்தியாவசிய தேவைகளை முன்னிட்டு யாழ்ப்பாணக் கடல் நீரேரியில் பள்ளிக்குடாவிலிருந்து குருநகர் வரை படகுப் போக்குவரத்தை மேற்கொண்டனர்.

15.10.1987 அன்று பள்ளிக்குடாவிலிருந்து நோயாளிகளை ஏற்றிக்கொண்டு பயணித்த இயந்திரப்படகை இலக்குவைத்து, முகத்துவாரக் கடற் பகுதியில், உலங்குவானூர்தியில் வந்த படையினர் நடத்திய தாக்குதலில் மூன்று பெண்கள் உட்பட 06 பேர் கொல்லப்பட்டனர். 02 பேர் படுகாயமடைந்தனர். மூன்றரைத் தொன் இயந்திரப்படகு மூழ்கடிக்கப்பட்டது.

**03. கேரதீவுப் பாதை**

இப்பாதை ஊடாக சங்குப்பிட்டிவரை இயந்திரப் படகில் மக்கள் ஏற்றிச்செல்லப்பட, 'பாதை' (Ferry) இல் வாகனங்கள் ஏற்றிச்செல்லப்பட்டன. 15.06.1990இல் ஆனையிறவுப் பாதை போக்குவரத்துக்குத் தடைப்பட்டதும், கேரதீவு ஊடான போக்குவரத்து மேலும் விரிவாக்கம் பெறலாயிற்று. கேரதீவிலிருந்து சங்குப்பிட்டிக்கு பயன்படுத்தப்பட்ட இயந்திரப்படகுடன் மேலதிகமாக வள்ளங்கள், கண்ணாடி நாரிழைப் படகுகள் மூலமும் பயணங்கள் இடம்பெற்றன, பூநகரியில் இராணுவ முகாம் இருந்தமையால் சங்குப்பிட்டியிலிருந்து அங்கு செல்லாமல் குறுக்கு வீதிகளால் பயணித்து வன்னி பெருநிலப்பரப்பை அடைந்தனர்.

பயணிகள் போக்குவரத்து மட்டுமன்றி நடுத்தர வாகனங்கள் மற்றும் பொதிகளை ஏற்றி இறக்கும் பிரதான பாதையாகவும் இருந்தது. ஏற்கெனவே பயன்படுத்தப்பட்ட 'பாதை' (Ferry) யுடன் ஒரே அளவான பலகையால் செய்யப்பட்ட ஆறு வள்ளங்களை அருகருகாக வைத்து, அவை விலகிடாத வகையில் சட்டங்களால் மேற்பக்கத்தையும் கீழ்ப்பக்கத்தையும் இணைத்து, மேற்பக்கத்தில் பலகைகளைப் பரவி, வரிந்து கட்டி பாரமானவற்றை ஏற்றிவரும் 'பாஜ்' (Barge) ம் பயன் படுத்தப்பட்டது. இக்கலங்களின் மூலமே யாழ் குடாநாட்டுக்குத் தேவையானவை பொதிகள் எடுத்து வரப்பட்டன.

1991 ஐப்பசியில் 'வலம்புரி' இராணுவ நடவடிக்கையின் மூலம் யாழ்ப்பாணத்தின் தீவகப் பிரதேசங்கள் முழுவதும் கைப்பற்றப்பட்டதுடன் பூநகரி 4ஆம் கட்டையிலிருந்த இராணுவத்தினர் சங்குப்பிட்டித்துறையில் நிலைகொண்டதால் கேரதீப்பாதை போக்குவரத்துக்குப் பயன்படுத்த முடியாமற்போயிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 04. கொம்படிப் பாதை

கேரதீவு இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்டதும், 1991 கார்த்திகை மாதம் முதல் இயக்கச்சி பிரதேசத்துக்கு உட்பட்ட 'கொம்படி' முதல் முரசுமோட்டை வடக்குப் பக்க கடற்கரை வரையான குறுகிய தூரக் கடற்பகுதி வன்னிக்கான போக்குவரத்துப் பாதையாக மாறியது. ஆழ்கடலுடன் பரவைக்கடல் சந்திக்கும் இடமாக கொம்படி கடற்கரை இருப்பதால் அந்தப் பகுதி ஒரு சாண்வரை புதையக்கூடிய சேற்றைக் கொண்டிருந்தது. அதில் புதைந்தெழுந்து நடந்து செல்பவர்களும், சிறிய வள்ளங்கள், கண்ணாடி நாரிழைப்படகுகளில் ஆட்களை ஏற்றி இழுத்துச் செல்பவர் களுமுண்டு. யாழ் குடாநாட்டுக்கான ஒரேயொரு நுழைவுப் பாதையாக இது இருந்ததால் பொதிகள், பாரமான பொருட்களை ஏற்றிவர சிறியரக 'பாஜ்' பயன்படுத்தப்பட்டது. இப் 'பாஜ்' ஆனது தேவையான நீளத்திற்கேற்ப வரிசையாகவும், தேவையான அகலத்திற்கேற்ப அருகருகாகவும் வெற்று பரல்களை இணைத்து, சட்டங்களை வைத்து ஒன்றிணைத்து கட்டி பலகைகளைப் பரவி வரிந்து கட்டப்பட்டதாகவும் இருந்தது. இதனில் ஆட்களும் ஏற்றிச் செல்லப்பட்டனர்.

இந்தப்பாதையை பயன்படுத்துபவர்கள் முரசுமோட்டை கடற்கரையிலிருந்து நடந்தோ, வாடகை ஈருருளிகள், உழவு இயந்திரங்கள் மூலமோ பரந்தன் - புதுக்குடியிருப்பு வீதிவரை செல்வதற்கு அதிக தூரத்தைக் கடக்கவேண்டி இருந்ததாலும், இடையிடையே கடல் நீரோட்ட அதிகரிப்பு மற்றும் சேற்றுப்பகுதி என்பதாலும் இப்பாதையைத் தவிர்த்து 'ஊரியான்' சென்று அங்கிருந்து முரசுமோட்டை நோக்கிய பயணத்தையும் மேற்கொண்டனர். மாரி காலத்தில் இடுப்பளவு நீர் நிற்கக் காணப்படும் இந்தப் பகுதி, கோடைக்காலத்தில் வெண்மையான மற்றும் இறுக்கமான வெற்றுத் தரையாக இருக்கும். நடையிலும் ஈருருளிகளிலும் பயணிகள் செல்வதுண்டு. இப்பாதையால் முரசுமோட்டைக்குச் செல்ல வேண்டிய தூரம் குறைவானது மட்டுமல்ல நடந்து செல்வதற்கு சிரமமற்ற தரவையாகவும் இருந்தது.

திறந்த வெளியாக இருப்பதால் ஆனையிறவு முகாமில் இருக்கும் இராணுவத்தினரால் கண்காணிக்க முடியும். ஏற்கெனவே எறிகணைத் தாக்குதல்கள் சில நிகழ்ந்துள்ளன. இதனால் பயணிப்பவர்களிடையே பயம் ஏற்படவும் செய்யும். இருப்பினும், கடவுளரை நினைத்து மனதைத் திடமாக்கிக்கொண்டு, தென்மேற்குத் திசை நோக்கித் தரவையை ஊடறுத்து, மிரள, மிரளப் பார்த்தவாறு வேகமாக நடப்பர்.

முரசுமோட்டைக் கடற்கரையை அடைந்ததும் அங்கிருந்து குறுக்காக நடந்து பரந்தன் - முல்லைத்தீவு வீதியில் முரசுமோட்டை பாலத்துக்கு அருகாமை வந்தடைவர். இப்பாதை செம்மையற்றதாக, குன்றும் குழியுமானது என்பதால் சிரமப்பட்டே நடக்கவேண்டும். வாடகை ஈருருளிகள், உழவு இயந்திரங்கள் மூலமும் பரந்தன் - புதுக்குடியிருப்பு வீதியை வந்தடைவர்.
வைகாசி 1993இல் 'பலவேகய' இராணுவ நடவடிக்கையால் வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு படைத்தளங்கள் ஆனையிறவுடன் இணைக்கப்பட்டதுடன் கொம்படி, ஊரியான் பாதையும் முடங்கியது.

### 05. கிளாலிப் பாதை

கொம்படி, ஊரியான் பாதைகள் முடங்கியதும் அதற்கு மாற்றீடாக பெரும் முயற்சியெடுத்து 1993 மார்கழி மாதம் உருவாக்கப்பட்டது நல்லூர் /ஆலங்கேணி பாதை. பயணிகளுக்கென அடிப்படை வசதிகளுடன் ஒரு இடம் ஒதுக்கப்பட்டிருந்தது. உணவுப்பொருட்கள், ஈருருளி, உந்துருளிகளை ஏற்றும் வேறுபட்ட துறைகளும் இருந்தன. இப்பொருட்கள் வெற்று பரல்கள் இணைத்துச் செய்யப்பட்ட 'பாஜ்'களில் ஏற்றிச் செல்லப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15 கடல் மைல் தூரமானதும் இரவு நேரப் பயணத்தை மட்டுமே மேற்கொள்ளுகின்ற பாதையாகவும் கிளாலி இருந்தது. இந்தப் பயணப் பாதையின் வரலாற்றில் பயணிகள் எதிர்கொண்ட இன்னல்கள், இழப்புக்கள், துயரங்களை பயணிப்பவர்கள் அறியாதவர்களல்லர். கிழக்கே ஆனையிறவு, தென்மேற்கே நாகதேவன்துறை முகாம்களிலிருந்து எதிரும் புதிருமான தாக்குதல்கள் மற்றும் கடல்வழித் தாக்குதல்களும் நடத்தப்பட்டுள்ளன. இதனால் பலர் காயங்களுக்கும், உயிரிழப்புகளுக்கும் உள்ளாகியுள்ளனர். இருப்பினும் மக்கள் வேறுவழியின்றி செல்ல வேண்டியவர்களாக இருந்தனர்.

அக்காலத்தில் எரிபொருளுக்கு நிலவிய கடுமையான கட்டுப்பாடு காரணமாக, ஆரம்பத்தில் ஒரு வள்ளத்தின் வெளியிணை இயந்திரம் இயக்கப்பட்டு ஓரிரு வள்ளங்கள் கயிறு மூலம் தொடுவையாக இணைக்கப்பட்டு ஒன்றன்பின் ஒன்றாகச் சென்றன. பின்னர் மாற்றம் இருந்தது.
கிளாலி படகுசேவை நடைபெறும் நாட்கள் பற்றி வடபகுதி மற்றும் தென்பகுதி பத்திரிகைகளில் அறிவிக்கப்படும். அந்நாளில் அழிவடைந்த நிலையிலிருந்த யாழ்ப்பாண தொடருந்து நிலையத்திற்கு பின்புறமுள்ள ஸ்ரான்லி வீதியில் படகு புறப்படும் நாளில் பயண ஆயத்தங்களுடன் பயணிகள் கூடுவார்கள். அதுதான் அன்றைய கிளாலிக்கான பேருந்து நிலையம். அங்கிருந்து மதியமளவில் புறப்பட்டு பிற்பகல் 4.00 மணியளவில் கிளாலியை வந்தடையும். சிலர் சுயமாக முச்சக்கரவண்டிகளில் செல்வதுமுண்டு.

வருகைதரும் பயணிகள் ஐந்து மணி முதல் தமிழீழ விடுதலைப் புலிகளின் படகுத்துறையில் பற்றுச் சீட்டு பெற்றுக்கொண்டு கடற்கரை ஓரம் வரிசையாக அமர்ந்திருப்பார்கள். இருளானதும் வரிசை முறைப்படி முழங்காலளவு தண்ணீரில் நடந்து வள்ளங்கள், படகுகளில் ஏறிக்கொள்ள, அறிவித்தல் கிடைத்ததும், காற்றின் - கடலின் தாக்கத்தையும், இராணுவ அச்சுறுத்தல் பயத்தையும் சுமந்துகொண்டு பூநகரி / நல்லூரை நோக்கிப் படகுகள், வள்ளங்கள் புறப்படும்.

பூநகரி / நல்லூர் நெருங்கியதை, எத்தகைய காற்றுக்கும், மழைக்கும் அணையாது எரியும் 'லோமியா' அடையாளம் காட்டும். அதனை அடைந்ததும் சேறு, சகதியை ஊடறுத்துச் செல்வதற்காக வெட்டப்பட்டிருந்த நீளமான வாய்க்காலில் படகோட்டிகள் இறங்கி புதைந்தெழுந்து நல்லூர் /ஆலங்கேணி கடற்கரை வரை வள்ளம், படகுகளை இழுத்தவாறு செல்வர். அங்கிருந்து வன்னி பெருநிலப் பரப்பில் விரும்பும் இடத்துக்குச் செல்ல முடியும். வவுனியாவுக்குச் செல்பவர்கள் விடுதலைப் புலிகளின் நிலப்பரப்பு ஆளுகையின் இறுதி இடமான 'பன்றிக்கெய்த குளம்' சென்று அங்கிருந்து இராணுவ நடைமுறைகளைப் பின்பற்றி செல்லமுடியும். இப்பாதை 1996 வைகாசி மாதம் நிறுத்தப்பட்டது.

**06. மன்னார் கடல்ப் பாதை**

யாழ். நகரையும், தென்மராட்சியையும் 1996இல் இராணுவம் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்ததால் வன்னி பெருநிலப்பரப்பு, மன்னார் பகுதிகளில் தஞ்சம் புகுந்திருந்த மக்கள், யாழ். குடாநாட்டுக்குள் பிரவேசிக்க முடியாதிருந்தனர்.

அதனால், மன்னார்க் கடலில் பள்ளிக்குடா முதல் நாச்சிக்குடா வரையிலான கடலோரக் கிராமங்களிலிருந்து அல்லது அக்கிராமங்களினூடாக பகுதி பகுதியாக மக்கள் வெளியிணை இயந்திரம் பூட்டிய வள்ளம், கண்ணாடி நாரிழைப் படகை கூலிக்கமர்த்தி பயணிப்பர். பயணிகளை ஏற்றிக்கொண்டு முன்னிரவு புறப்படும்போது பயத்தையும் சுமந்தவர்களாகவே பயணிகள் இருப்பர். எங்கேனும் ஒளி தெரிவதைக் கண்டால் அவர்களுக்கு நடுக்கம் தொடங்கிவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணற்திட்டிகளும், பனை மரங்களும் நிறைந்த பகுதியால் படகை கரையோரமாக ஓட்டிச்செல்வதால் அதனை இராணுவம் இனங்காணுவது கடினம் என்பதால் படகோட்டி அவ்வாறே சாமர்த்தியமாக ஓட்டிவந்து விடியும் முன்னர் குருநகர் இறங்குதுறையிலிருந்து ஒரு கி.மீ. தூரமுள்ளதும், கடலினுள்ளே மேடாகக் குவிந்துள்ளதுமான 'கடவிரால்பிட்டி'யில் இறக்கி விடுவார்.

'கடவிரால்பிட்டி'; கடலின் நடுவே உயர்ந்து திட்டையாக இருக்கும் கடலடித் தரையாகும். மத்தியில் 40 - 50 அடிகள் வரையான அகலத்தையும், தெற்கிலிருந்து வடக்கு நோக்கி 100 அடிகளுக்கு மேற்பட்ட நீளத்தையும் உடையது. இறுக்கமான வெண்மணல் தரையினாலான அத்திட்டு, இடையிடையே துண்டாடப்பட்டும் காணப்படும். அதனைச் சுற்றிய கடற்பகுதி ஆழமாக இருந்தாலும், கோடைகால வெள்ளமானால் திட்டியில் இடுப்பளவு நீரையும், வடுவானால் முழங்காலுக்குக் கீழ்ப்பட்ட நீரையும் கொண்டிருக்கும். மாரிகாலத்தில் அதிகமாக இருக்கும்.

கடவிரால்பிட்டியில் இறக்கப்படும் மக்கள் விடியும் வரை மழையிலும், குளிரிலும், பனியிலும், கடல் நீரிலுமே நிற்பர். விடிந்ததும் அப்பிட்டியில் ஆட்கள் நிற்பதை தொலைநோக்கி மூலம் அடையாளங்காணும் குருநகர் இறங்குதுறையில் முகாமிட்டுள்ள இராணுவத்தினர், படகுகளை அனுப்பி ஏற்றிவந்து குருநகர் சீநோர் வலைத் தொழிற்சாலையிலுள்ள இடைத்தங்கல் முகாமில் ஒப்படைப்பர். இராணுவம் தவிர்ந்த வேறு தொழிலாளர் எவரேனும் ஏற்றிவந்தால், அவர்களுக்குரிய தொழிலாளர் அனுமதி அட்டை பறிக்கப்படும்.

இந்தப் புதிய பாதையால் 14.04.1997 அன்று முதலாவதாக வந்த குடும்பத்தினர் புனித யாகப்பர் ஆலய பெண்கள் பாடசாலையில் தங்கவைக்கப்பட்டனர். இப்பாதை சிரமான, ஆபத்து நிறைந்த பாதையாக இருப்பினும் மக்களின் தேவையை முன்னிட்டு பல மாதங்களாக நடைபெற்றது.

**07. மண்ணித்தலைப் பாதை**

2009 வைகாசி மாதம் வடபகுதியை அரசபடைகள் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்ததும் ஏ9 பாதையூடான போக்குவரத்துக்கள் இறுக்கமான நடைமுறை மற்றும் அரச படையினரின் பாதுகாப்புடன் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் நடைபெற்றது. 2010 ஆம் ஆண்டின் முற்பகுதியில் பூநகரி - சங்குப்பிட்டியை இணைக்கும் 'மகாதேவா தாம்போதி' கட்டுமானப்பணி நடைபெற்ற வேளையில் வன்னியில் பணியாற்றிய அரச அலுவலகர்களின் இலகு பயணத்திற்காக யாழ்ப்பாணம் 'மணியந்தோட்ட' கடற்கரையிலிருந்து பூநகரி 'மண்ணித்தலை' வரை படகு சேவை நடத்தப்பட்டது.

திங்கள் முதல் வெள்ளி வரை தினமும் காலை 6.30 மணிக்கு 'மணியந்தோட்ட'த்திலிருந்து பயணிகளுடன் புறப்படும் மூன்றரைத்தொன் இயந்திரப்படகு, மண்ணித்தலை புனித அந்தோனியார் ஆலயத்திற்கு அண்மையில் தரிக்கும். அங்கிருந்து பூநகரி வாடியடி வரை செல்வதற்கென தயார்நிலையில் நிற்கும் பேருந்தில் பயணத்தைத் தொடருவர். மீண்டும் சாயந்தரம் பூநகரியிலிருந்து மண்ணித்தலை வரை பேருந்திலும், அங்கிருந்து மணியம்தோட்டம் வரை படகிலும் பயணத்தைத் தொடர்வர்.

**ஆ. நீரூர்தி பயணங்கள்**

1977ஆம் ஆண்டு தென்னிலங்கையில் நடைபெற்ற இனவன்முறைகளிலிருந்து பாதுகாப்புத்தேடி ஏற்பாடு செய்யப்பட்ட முகாம்களில் புகுந்தவர்கள், கொழும்புத் துறைமுகத்திலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காங்கேசன்துறைக்கு ஏற்றி வரப்பட்டார்கள். இதுவே தமிழ் மக்களின் முதலாவது நீரூர்தி பயணமாகும். இதே போன்றதொரு இன வன்முறை 1983ஆம் ஆண்டு நடைபெற்ற போதும் கொழும்பு முகாம்களிலிருந்து காங்கேசன்துறைக்கு கப்பலில் ஏற்றி வரப்பட்டார்கள்.

15.06.1990இல் ஆனையிறவு ஊடாக போக்குவரத்து தடைப்பட்டதும் மாற்றுப் பாதைகளால் மக்கள் பயணத்தை மேற்கொண்டனர். இரண்டு மாதத்தால் நோயாளிகள், அரச அதிகாரிகள், பல்கலைக்கழக மாணவர்களின் நலன்கருதி சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஏற்பாட்டில், அவர்களது வழித்துணையுடன் 'ஐரிஸ்மோனா' என்ற கப்பல் பருத்தித்துறை துறைமுகத்திலிருந்து திருகோணமலைவரை சேவையிலீடுபட்டது.

1992ஆம் ஆண்டு முதல் யாழ்ப்பாணத்தில் இயங்கிய E.P.D.P. அமைப்பின் கட்டுப்பாட்டில் காங்கேசன்துறையிலிருந்து ஊர்காவற்றுறை வரை மற்றும் காங்கேசன் துறையிலிருந்து திருகோணமலை வரை 'நியூகோ என்டியூரன்ஸ்' என்னும் சிறியரக பயணிகள் நீரூர்தி சேவை நடைபெற்றது.

1996 ஆனி மாதம் முதல் யாழ்ப்பாணத்துக்கான நீரூர்தி போக்குவரத்து காங்கேசன் துறையிலிருந்து திருகோணமலை வரை ஆரம்பிக்கப்பட்டது. இதில் பயணிப்பதாயின் இராணுவ முகாம்களில் 'பாதுகாப்பு அனுமதி' (Clearance) பெறப்படவேண்டும். இதனைப் பெறுவதற்கு பிரதேச செயலகத்தின் குடும்ப அட்டை, விசேட அடையாள அட்டை அல்லது தேசிய அடையாள அட்டை, பயணத்துக்கான முக்கிய காரணம் என்பன கட்டாயமானதாகும்.

இப்பயணத்துக்கு சரக்கு நீரூர்திகள் பயன்படுத்தப்பட்டன. கொழும்பிலிருந்து யாழ்ப் பாணத்துக்குப் பொருட்களை ஏற்றிவரும் 'லங்கா முடித', 'சஜிந்தா', 'அட்லான்ரிக் றீபர்' எனப் பெயர்களைக்கொண்ட சரக்கு நீரூர்திகள், காங்கேசன்துறை மற்றும் பருத்தித்துறையில் சரக்குகளை இறக்கிவிட்டு திரும்பிச் செல்லும்போது திருகோணமலை வரை பயணிகளை ஏற்றிச் செல்லும். இந்நீரூர்திப் பயணங்கள் மக்களுக்கு மிகவும் துன்பத்தைக் கொடுத்த பயணங்களாகவே இருந்தன.

நீரூர்திகளுக்குப் பாதுகாப்பு வழங்கவென கடற்படை நீரூர்தி மற்றும் டோரா படகுகள் செல்வது வழமை. நடுக்கடலில் கடற்படையினருக்கும் கடற்புலிகளுக்குமிடையே சமர் மூண்டால் பயணிகள் பரதவிப்பார்கள். வெடிச்சத்தங்கள் நெருங்கிவரக் கேட்டால் கூக்குரலிடுவார்கள். இத்தகைய கடற்சமர் காரணமாக பயணம் புறப்பட்ட நீரூர்தி கரை திரும்பிட, பயணிகள் ஏமாற்றத்துடன் வீடு திரும்பிய சம்பவங்களும் உண்டு.

வாடை மற்றும் சோளகக் காற்று மூர்க்கமாக வீசுகின்ற நாட்களில், நீரூர்தி ஆட்டம் காண, பயணிகள் வாந்தியெடுக்கத் தொடங்கிடுவர். வாந்தி வராமலிருப்பதற்கான குளிகைகள் கடைகளில் வாங்கி அருந்தியபோதும் அதையும் மீறிய மிகுதியான வாந்தியால் நினைவிழந்த பயணிகளும் உள்ளனர்.

பல இடர்களைத் தாங்கி திருகோணமலை வரை நீரூர்தியில் பயணித்து, திருகோண மலையிலிருந்து பேருந்து அல்லது தொடருந்துகளில் செல்லவேண்டிய இடங்களுக்குச் செல்வர். பெரும்பாலானோரின் பயணம் கொழும்பாகவே இருக்கும்.

1998ஆம் ஆண்டு மன்னாரிலிருந்து காங்கேசன்துறை வரையான நீரூர்தி சேவை நடத்தப்பட்டது. 1999ஆம் ஆண்டு நீரூர்தி ஒன்று வெறுமனே நின்ற நிலையில் எரிக்கப்பட்டபோது அப்போக்குவரத்தும் முடிவுக்கு வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2000 ஆண்டளவில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் வழித்துணையுடன் 'சிற்றி ஒவ் றிங்கோ' என்னும் பயணிகள் நீரூர்தி சேவையில் ஈடுபட்டதும் பயணிகளின் துன்பங்கள் பெரிதும் குறைந்தன. உட்தளம் முழுவதும் இருக்கைகள், நோயாளருக்கென பிரத்தியேக இடம், சிற்றுண்டிசாலை, மலசலகூடங்கள் எனப்பல வசதிகளைக் கொண்டது 'சிற்றி ஒவ் றிங்கோ'.

சித்திரை 2002இல் இலங்கை அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கைச்சாத்தான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம் 14.04.2002இல் தரைப்பாதை திறக்கப்பட நீரூர்தியில் பயணிப்போர் தொகை வெகுவாகக் குறைந்ததால் நீரூர்தி சேவை நிறுத்தப்பட்டது. கட்டுரையாளர் கொழும்பு செல்வதற்காக 12.04.2002இல் 'சிற்றி ஒவ் றிங்கோ'வில் பயணித்து அதே நீரூர்தியில் 25.04.2002இல் திரும்பியுள்ளார். இதுவே 'சிற்றி ஒவ் றிங்கோ'வின் இறுதி சேவையாகும்.

### இ. வானூர்தி பயணங்கள்

1996 வைகாசி மாதம் முதல் யாழ் குடாநாடு முழுமையாக இலங்கை அரசபடைகளின் கட்டுப்பாட்டின் கீழ் வந்ததும் தரைவழிப் போக்குவரத்துகள் துண்டிக்கப்பட்டன. இதனால் நீரூர்தி மற்றும் வானூர்தி சேவையை நாடவேண்டிய நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டனர்.

1996 ஆனி மாதம் முதல் 'ஹெலி ரூர்ஸ்' இராணுவ நிறுவனத்துக்குச் சொந்தமான 'அவ்ரோ' ரக பயணிகள் வானூர்தியில் பயணிகளுக்கான சேவை யாழ். பலாலி வானூர்தி நிலையத்திலிருந்து கொழும்பு இரத்மலானை வானூர்தி நிலையம் வரை இராணுவத்தினரால் நடத்தப்பட்டது. தொடர்ச்சியாக இல்லாமல் தேவையின் அடிப்படையிலே நடைபெற்றது. இது சாதாரண மக்களுக்கான சேவையாக இருக்கவில்லை. நிறுவன பிரதிநிதிகள், அரச அலுவலகர்கள், நோயாளர்களுக்கான சேவையாகவே இருந்தது. ஒருவழிப் பயணத்துக்கான கட்டணம் ஆயிரம் ரூபாவாகும். இதில் பயணிப்பவர் 'பாதுகாப்பு அனுமதி' (Clearance) பெறப்படவேண்டும். அனுமதி விரைவாகக் கிடைக்கும் என்று சொல்வதற்கில்லை.

1996 ஆவணி மாதம் முதல் 'லயன் எயார்' எனும் தனியார் சேவை நிறுவனம், யாழ். பலாலி வானூர்தி நிலையத்திலிருந்து கொழும்பு இரத்மலானை வானூர்தி நிலையம் வரை பயணிகள் சேவையில் ஈடுபட்டது. அச்சேவையில் சிலரது தலையீடுகளும், செல்வாக்கும் மேலோங்கி யிருந்ததால் சாதாரண பயணிகள் பிரயாணச் சிட்டையை இலகுவில் பெற்றுக் கொள்ள முடியாதநிலை நிலவியது.

1996 மார்கழி மாதம் 'மொனரா எயார்' எனும் தனியார் நிறுவனமும் சேவையை ஆரம்பித்தது. யாழ். குடாநாட்டிலிருந்து கொழும்பு இரத்மலானை வரை செல்வோருக்கு ஒருவழிப் பயணச்சீட்டு மட்டுமே வழங்கப்பட்டது. கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வருவதற்கான பயணச்சீட்டை பெற்றுக்கொள்வதில் பல சிரமங்கள், நாட்கள் விரயத்தையும் பயணிகள் எதிர்கொண்டனர். 1997ஆம் ஆண்டு இருவழிப் பயணச்சீட்டு வழங்குதல் நடைமுறைக்கு வந்தது.

13.05.1997இல் தொடங்கிய 'ஜெயசிக்குறு' அரச இராணுவ நடவடிக்கையாலும், 24.06.1997 இல் தொடங்கிய 'செய் அல்லது செத்துமடி' விடுதலைப் புலிகளின் இராணுவ நடவடிக்கையாலும் தனியார் வானூர்திகளின் சேவை நிறுத்தப்பட்டது. அதற்கு மாற்றீடாக 'ஹெலி ரூர்ஸ்' இராணுவ நிறுவனத்து வானூர்தியும் சேவையிலீடுபட்டது. இவ்வானூர்தியில் கட்டுரையாளர் 1997 ஆடி மாதம் முதல் வாரத்தில் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் சென்று வந்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஹெலி ரூர்ஸ்' வானூர்தி எவ்வித அடிப்படை வசதியுமற்ற வானூர்தி சேவையாக இருந்தது. இராணுவத்தினரின் பயன்பாட்டுக்கெனத் தயாரிக்கப்பட்ட இந்த வானூர்தி ஒடுக்கமானதும், கூடிய நீளத்தைக் கொண்டதுமாக உள்ளது. பின்பகுதியில் தரையை நோக்கி பதிந்தவாறு இரும்புக் கதவு திறக்கப்படும். பொருட்களை ஏற்றுவதற்கும், பயணிகள் ஏறுவதற்கும் இதுவே பாதை. கண்ணாடிச் சாரளங்கள் எதுவும் இல்லை. உட்புறம் மத்தியில் பயணிகளின் பொதிகள் குவிக்கப்பட்டு பச்சை நிறத்திலான வலையால் மூடப்படும். அதற்கு மேலே போடப்பட்டுள்ள மின்குமிழ் ஒன்றிலிருந்து மட்டும் மங்கலான ஒளி இருக்கும்.

பயணிகள் வானூர்தியில் இருப்பது போன்று இருக்கைகள் இல்லை. இரு பக்க ஓரங்களிலும் மடிக்கப்பட்டிருக்கும் பலகையை நிமிர்த்தினால் அதுதான் இருக்கை. இருக்கைக்கு நேரே உயரமாக, நீளமாக 'கேபிள்' கட்டப்பட்டுள்ளது. அதுதான் பயணிகளின் கைபிடி. இயந்திரம் இயங்கத் தொடங்கியதும் செவிப்பறை உடைந்திடும் அளவுக்கு இரைச்சல்.

1998ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் 'மொனரா எயார்' மற்றும் 'எக்போ' பயணிகள் வானூர்தி சேவைகள் ஆரம்பிக்கப்பட்டதும் 'ஹெலி ரூர்ஸ்' சேவை நிறுத்தப்பட்டது. 1998 புரட்டாதி 29 அன்று யாழ். பலாலி வானூர்தி நிலையத்திலிருந்து கொழும்பு நோக்கி பயணிகளுடன் சென்ற 'லயன் எயார் 602' வானூர்தி மன்னார்க் கடற்பரப்பில், பள்ளிக்குடாவுக்கும் இரணைதீவுக்கும் இடையில் கடலினுள் வீழ்ந்தது. இவ்விபத்தில் 48 பயணிகள், 04 வெளிநாட்டுப் பணியாளர்கள், 03 உள்ளூர் பணியாளர்கள் பலியாகினர். அவ்வேளை சேவையிலீடுபட்ட 'மொனரா எயார்' வானூர்தி சேவையுடன் விபத்தில் சிக்குண்ட 'லயன் எயார்' வானூர்தி சேவைக்கு மாற்றிடாக 'ஹெலி ரூர்ஸ்' வானூர்தி சேவையும் ஆரம்பிக்கப்பட்டது. ஏனைய சேவைகள் அனுமதிக்கப்படவில்லை.

'ஹெலி ரூர்ஸ்' வானூர்தி சேவைக்குச் சொந்தமான இராணுவ வானூர்தி ஒன்று அனுராதபுரம் 'வில்பத்து' காட்டுப்பகுதியில் வீழ்த்தப்பட்டதால் அச்சேவை நிறுத்தப்பட்டது. சில மாதங்களின் பின்னர் 'லயன் எயார்' வானூர்தி மீண்டும் சேவையை ஆரம்பித்தது. 2002ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் 'ஏரோ லங்கா' என்னும் தனியார் நிறுவனமும் வானூர்தி சேவையில் இணைந்துகொண்டது.

14.04.2002இல் 'ஏ9' பாதை பொதுமக்கள் பாவனைக்குத் திறந்துவிடப்பட்டு, அப்பாதையைப் பயன்படுத்தத் தொடங்க, வானூர்தியில் பயணிப்போர் தொகை குறைவடைந்த காரணத்தால் வானூர்தி சேவைகளும் வெகுவாகக் குறைவடைந்தன.

2006 ஆவணி 11 முதல் விடுதலைப் புலிகளுக்கும், அரச படைகளுக்குமிடையே யுத்தம் ஆரம்பமானது. அதுமுதல் 2009 வைகாசி மாதம் யுத்தம் முடிவுக்கு வரும்வரை 'ஏ9' பாதை தடைப்பட, மக்கள் வானூர்தி சேவையையே நாடவேண்டியிருந்தது. அந்நேரத்தில் 'லயன் எயார்', 'ஏரோ லங்கா', 'எக்ஸ்போ எயார்' போன்ற வானூர்தி சேவைகள் 2010ஆம் ஆண்டுவரை நடைபெற்றன.

**யுக்திகள்**

வடக்கு மக்கள் பல்வகை இடர்களை எதிர்கொள்ள முனைந்த வாழ்க்கைப் போராட்டத்தில் புதிய யுத்திகள் பலவும் தோற்றம் பெற்றன. இறுக்கமான பொருளாதாரத் தடைகளினால் ஏற்படக்கூடிய வெற்றிடத்தை பட்டறிவின் மூலமாக இனங்கண்டு, களநிலைக்கேற்ப மாற்றுவழிகாண எடுத்துக்கொண்ட முயற்சியின் வெளிப்பாடாக தேவைகள் பலவும் நிவர்த்திசெய்யப்பட்டன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'தேவைகள்தான் கண்டுபிடிப்புகளின் தாய்' என்னும் ஆங்கிலப் பழமொழி இங்கு செயல்வடிவம் பெறலாயிற்று.

**1. மாற்றீடான எரிபொருட்கள்**

'பெற்றோல்', 'டீசல்', 'ஒயில்' போன்ற எரிபொருட்களுக்கு விதிக்கப்பட்டிருந்த அதியுச்சத் தடை, வாகனங்களின் பயன்படுத்தலை முடக்கவே செய்தது. இதனால், இவற்றுக்கு மாற்றீடான புதிய கண்டு பிடிப்புகளை அறிமுகம்செய்து மக்களது வாழ்வை மேம்படுத்தவேண்டிய தேவை பல மட்டத்தாலும் உணரப்பட்டு, முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

பெற்றோலுக்கு மாற்றீடாக மண்ணெண்ணெய்யும், ஒயிலுக்கு மாற்றீடாக இலுப்பை எண்ணெய்யும், டீசலுக்கு மாற்றீடாக மண்ணெண்ணையுடன் இலுப்பை எண்ணெய்யைக் கலந்தும் பயன்படுத்தி வாகனத்தை ஓட்டினர். இந்த எரிபொருள்களுக்கு இசைவாக வாகன இயந்திரத்தின் 'ஹாபறேற்றறில்' மாற்றத்தைச் செய்தனர்.

மண்ணெண்ணெய்யில் இயந்திரத்தை இயக்க, ஆரம்பிப்பதில் ஏற்படும் தடங்கலைப் போக்க 'ஹாபறேற்றறில்' மெல்லிய 'ரியூப்' ஒன்றைப் பொருத்தி அதனூடாக இரண்டு துளி 'பெற்றோல்', 'டினர்' அல்லது 'ஓடிக்கொலன்' விட்டு ரியூப்பை வாயால் ஊதி (மணக்க செய்து), பின்னர் இயக்க விசையை அழுத்தி இலகுவாக இயங்கச் செய்து வாகனங்களைச் செலுத்திய தமிழர்களின் சாதுரியம் வாகன உற்பத்தி நிறுவனங்களையே வியக்க வைத்தது.

**2. சிக்கன விளக்கு**

மண்ணெண்ணெய்யில் வாகனங்கள் இயங்கத் தொடங்கியதும் அதன் தேவை மேலும் அதிகரித்தது. ஏற்கெனவே விற்பனை செய்யப்பட்ட பலமடங்கு விலையிலும் அதிக விலைக்கு மண்ணெண்ணெய் விற்பனை செய்யப்பட, வீடுகளில் விளக்கேற்றுவதற்குக்கூட இயலாத நிலையில் பெரும்பாலானோர் இருந்தனர். இதனை நிவர்த்தி செய்யும் வகையில் உருவாக்கப்பட்டது 'சிக்கன விளக்கு'. மக்கள் இதனை 'ஹொப்பேக்கடுவ விளக்கு' என்று அழைத்தனர்.

இவ்விளக்கை செய்துகொள்வது பலருக்கும் இலகுவாக இருந்தது. 'சைக்கிள் ரியூப்'இல் காற்று உள்வாங்க மற்றும் வெளியேற்றப் பொருத்தப்பட்டிருக்கும் இரும்புக் குழாய் துண்டை ('வால் ரியூப்' பொருத்தும் பகுதி) திரி புகுத்தும் பொருளாகக்கொண்டு, அதனைக் கம்பியில் இணைத்து திரிதாங்கி செய்துகொண்டனர். வெற்று 'ஜாம்' போத்தலின் உள்ளே, கீழிருந்து இரண்டு அங்குலம் உயரம் வரை 'வால் ரீயுப் கட்டை'யை இறக்கி போத்தலில் வாய்ப் பகுதியில் கம்பியின் இரு முனைகளையும் மடித்து விட்டனர்.

போத்தலின் உள்ளே 'வால் ரீயுப்' கட்டையின் மேற்பக்கம் மட்டமாக இருக்கும் வகையில் 'சீமேந்துப் பைக்கற் பேப்பரை' திரியாக உருட்டி (சீலைத் துணியும் பொருந்தும்) அதனுள் செலுத்தியும், திரியின் மறுபக்கம் போத்தலின் உள்ளே இருக்கின்ற எண்ணெய்யில் நனையக்கூடிய வகையில் விட்டும் கொண்டனர்.

போத்தலில் ஒன்று அல்லது ஒன்றரை இஞ்சி வரையில் மண்ணெண்ணெய் அல்லது தேங்காய் எண்ணெய்யை விட்டுக் கொழுத்திக் கொள்ளலாம். ஒரு தடவை விட்ட எண்ணெயில் நான்கு இரவுகளுக்கு மேலாகப் பயன்படுத்திக் கொள்ளமுடியும். பல நாட்களுக்கு திரியை மாற்றவேண்டிய தேவையில்லை. தொடர்ந்தும் எண்ணையய்யை விட்டுப் பாவிக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதாரணமாக தேங்காய் எண்ணெய்யை விட மண்ணெண்ணெய் அதிக வெளிச்சத்தைத் தருமென்பது பயன்படுத்தியவர்களின் கணிப்பு.

### 3. சிக்கன அடுப்பு

விறகுகளுக்கு நிலவிய தட்டுப்பாடு காரணமாக, எஞ்சியுள்ள மரங்களையும் வெட்டியெடுத்து ஈருருளியில் கட்டி எடுத்துவந்து விற்பனை செய்யும் வியாபாரிகளாலும் விறகுத் தேவையை ஈடுசெய்ய முடியவில்லை. விறகுகளின் தேவையைக் குறைத்து விரைந்து சமையலைச் செய்திட உருவாக்கப்பட்டதே 'சிக்கன அடுப்பு'. இரண்டு பாத்திரங்களை ஒரே நேரத்தில் வைத்துச் சமையல் செய்யக்கூடியதாக இருந்ததால் 'இரட்டைச் சூட்டடுப்பு' என்றும் அழைத்தனர்.

ஒன்றரை சாண் உயரத்தை, ஒரு சாண் விட்டத்தைக் கொண்டதும் உரலின் மேற்பகுதி போன்றதுமான பெரிய 'செங்களிமண்' உருளையும், மேலே பாத்திரம் வைக்கக்கூடிய வகையில் குழிவிழுந்த அமைப்பில் மூடப்பட்ட சற்று சிறிய உருளையும் என இரண்டு உருளைகள் அருகருகாக 'செங்களிமண்' தளத்தில் பொருத்தப்பட்டிருக்கும். பெரிய உருளையில் நெருப்புக் கொள்ளி வைப்பதற்கேற்ற சிறிய துவாரம் இருக்கும்.

ஒரு போத்தல் கொள்ளளவிலான வெற்றுப் போத்தலை பெரிய உருளையின் மத்தியில் வைத்து, அதைச் சுற்றி 'உமி'யைப் (மரத்தூளும் போடலாம்) போட்டு இடித்து இறுக்கிய பின்னர் போத்தலை எடுத்து விட்டால், நடுவில் போத்தலின் சுற்றளவிலான வட்டம் வெற்றிடமாக இருக்கும் வகையில் உமி அல்லது மரத்தூள் இறுகிவிடும்.

நெருப்பு மூட்டிய தணலுடனான விறகை பெரிய உருளையின் அடிப் பகுதியில் உள்ள துவாரத்தில் செருகிவிட்டால், அந்த நெருப்பால் உமி எரியத் தொடங்கிவிடும். சமையல் செய்து முடிந்த பின்னரும், உமி முற்றாகச் சாம்பலாகும் வரை எரிந்துகொண்டேயிருக்கும். அந்நேரம் வேறு தேவைகளுக்கும் அடுப்பை பயன்படுத்தலாம்.

சிறிய உருளையின் உள்பகுதி வெற்றிடமாக இருக்கும். இரண்டு உருளைகளையும் அரை அங். விட்டமுள்ள செப்புக் குழாய் ஒன்று இணைக்கிறது. பெரிய உருளையில் நெருப்பு எரியும்போது உண்டாகும் அனல் குழாய் மூலம் வெளியேறி சிறிய உருளையின் வெற்றிடத்தை நிரப்ப, அதன் மேற்தட்டு சூடேற ஆரம்பிக்கும். தட்டின் மேலாக பிறிதொரு பாத்திரத்தை வைத்து இரண்டு அடுப்பிலும் ஒரே நேரத்தில் சமையல் செய்து கொள்ளலாம்.

### 4. மின்சாரம்

'லக்ஸ்சபானா' மின் அலையிலிருந்து வழங்கப்பட்டுவந்த மற்றும் பாரிய மின்பிறப்பாக்கிகளால் வழங்கப்பட்ட மின்சாரம் தடைப்பட்டதால் மக்கள் இருளில் வாழும் நிலையிலும், சில தேவைகளை நிறைவுசெய்ய முடியாத நிலையிலும் இருந்தனர். இதனால், வீடுகள் - தேநீரகங்களில் வானொலியை இயக்குதல், சமநேரத்தில் அவ்விடங்களில் குறைந்தளவிலான ஒளியை ஏற்றுதல் போன்ற சிறிய தேவைகளை நிறைவுசெய்துகொள்ள ஈருருளி 'டைனமோ'வை பயன்படுத்தினர்.

அவ்வாறு 'டைனமோ'வைப் பயன்படுத்துவதற்கு சில நடைமுறைகள் இருந்தன.

1. ஈருருளியை கவிழ்த்துவைத்து 'டை னமோ' விளிம்பு உருளையை ரயரில் படும்வகையில் விட்டு, கைகளால் 'பெடலை'ச் சுற்றி இயக்குதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. ஈருருளியின் பின் 'றிம்'மையும், அதனோடு சேர்ந்த மையப்பகுதியான 'பெடல்' பகுதியையும் மட்டும் எடுத்து, பாதமொன்றில் பொருத்தி, 'டைனமோ' விளிம்பு உருளையின் உட்பக்க விளிம்பில் படும்வகையில் விட்டு, கைகளால் 'பெடலை'ச் சுற்றி இயக்குதல்.

3. இரண்டில் குறித்த அமைப்பில் பொருத்தி, அதற்கு முன்னால் இருந்து இரண்டு கால்களாலும் பெடலை சுற்றும் வகையில் இருக்கை ஒன்றை நிலத்தில் பொருத்தி அதிலிருந்து இரண்டு கால்களாலும் மிதித்துச் சுற்றி இயக்குதல்.

இவை தவிர வசதி படைத்தவர்கள், வியாபாரிகள் தமது அத்தியாவசியத் தேவையின் நிமித்தம் 'லான்ட்மாஸ்டரின்' இயந்திரத்தை மின்பிறப்பாக்கியாக்கிப் பயன்படுத்தினர்.

பெரும்பாலான மக்கள் ஈருருளி 'டைனமோ'விலிருந்து பெறப்படும் மின்சாரத்தை பயன்படுத்தி 'வெறித்தாஸ்', 'புலிகளின் குரல்', 'பி.பி.சி.தமிழ்', 'ஐ.பி.சி', 'ஆகாசவாணி', 'இலங்கை வானொலி' போன்ற வானொலி சேவைகளின் செய்திகளை கேட்கப் பயன்படுத்தினர்.

**5. 'சொப்பிங் பாக்' பாத்திரம்**

11.08.2006 இல் தொடங்கி நீண்டுகொண்டிருந்த யுத்தத்தில் வன்னி பெருநிலப்பரப்பிலிருந்த மக்கள், இராணுவம் முன்னேறிவரவர தங்களது உயிர், உடலுறுப்புகளைத் தானம் செய்தவண்ணம் பல இடங்களிலும் தங்கி, மாறிமாறி இடம்பெயர்ந்து 'வெள்ளாம் முள்ளிவாய்க்கால்' வரை முன்னேறிச் சென்றனர்.

பொருட்களை எல்லாம் கைவிட்டு வந்த மக்களிடம் களைப்பை, பசியைப் போக்கிட தேநீர் வைப்பதற்குக்கூட பாத்திரம் இல்லாமையால் உடுப்பு வைத்திருந்த துவாரங்கள் இல்லாத 'சொப்பிங் பாக்'இனை பயன்படுத்தினர்.

சுள்ளிகள் - தடிகளைக்கொண்டு நெருப்பை மூட்டித் தணல்களாக்கி, 'சொப்பிங் பாக்'கினுள் நீரைவிட்டு, அதற்குள் தேயிலையைக் கலந்து வாய்ப் பகுதியை மூடிக்கட்டி, நெருப்புத் தணல்களின் மேல் வைத்ததும் சிறிது நேரத்தால் நீர் கொதித்து தேநீராக மாறிவிடும். அதனை சிறிய குவளையில் ஊற்றிக் குடித்தனர். வெள்ளாம் முள்ளிவாய்க்காலை வந்தடையும் முன்னரும் தங்கியிருந்த இடங்களில் இவ்வாறு செய்தனர். தேநீர் மாத்திரமன்றி 'சொப்பிங் பாக்'கினுள் அரிசியுடன் சீனியையோ உப்பையோ கலந்து, தண்ணீர் சேர்த்து நெருப்பில் வைத்து கஞ்சிபோலாக்கியும் குடித்தனர்.

**6. சுத்திகரிப்பு**

நீராடும் போது உடலைச் சுத்தம் செய்வதற்கு சவர்க்காரம் மற்றும் 'சம்போ'வுக்கு இருந்த தட்டுப்பாட்டால் அவற்றுக்குப் பதிலாக 'சவர்க்காரக்காய் மரம்' என அழைக்கப்பட்ட மரத்தின் விதைகளை நீரில் ஊறப்போட்டு பிசைந்து பயன்படுத்தினர். உடைகளைச் சுத்தம் செய்வதற்கு சவர்க்காரம் மற்றும் சலவைப் பவுடருக்குப் பதிலாக பனம்பழத்தைப் பிழிந்து அதில் பெறப்படும் கழியைப் பயன்படுத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொழில்கள்

நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழலால் கோலோச்சிய பொருளாதாரத் தடை வடபகுதி மக்களை பலவகையிலும் துன்பத்துக்குள்ளாக்கின. தொழில் மூலவளங்கள் முற்றாக அழிக்கப்பட்டு அன்றேல் முடக்கப்பட்டவர்கள், மீன்பிடித் தொழில், விவசாயம், தனியார் துறைகளில் செய்தவர்களில் பெரும்பாலானோர் தொழிலின்றி முடங்கிவிட்டனர். இந்நிலையால் தமது ஜீவனோபாயத்திற்காக முன்னர் செய்திராத தொழில்களைச் செய்யவேண்டிய கட்டாயத்துக் குள்ளாயினர். சில தொழில்கள் உயிராபத்து உள்ள தொழில்களாகவும் இருந்தன.

### 1. பதுங்குகுழி வெட்டுதல்

போராட்டம் முனைப்புப் பெற பதுங்குகுழியின் தேவையும் அதிகரித்தது. விமானக்குண்டு தாக்குதல், எறிகணைத் தாக்குதல்களிலிருந்து தம்மை பாதுகாத்துக்கொள்ள வீடுகள், பொது இடங்கள் தோறும் பதுங்குகுழிகளை வெட்டினர். இம்முக்கியத்துவம் வாய்ந்த பதுங்குகுழியை வெட்டுவதற்கு உடல் வலுவில்லாதோர் மற்றும் உதவியில்லாதோர் கூலிக்கு ஆட்களை அமர்த்தி அதனைச் செய்வித்தனர். இதனால் பலருக்கு வேலை வாய்ப்புக் கிடைத்தது.

பதுங்குகுழியின் மேற்பக்க மறைப்புக்குத் தேவையான தென்னை, பனை மரக்குற்றிகளை வெட்டிவந்த விற்பனை செய்யும் தொழிலையும் சிலர் செய்தனர்.

### 2. பொருட்களை ஏற்றி இறக்குதல்

யாழ்ப்பாணத்துக்கான தரைப்பாதை துண்டிக்கப்பட்டதால் தேவையான பொருட்கள் நீரூர் திகளில் எடுத்துவரப்பட்டு காங்கேசன்துறை, பருத்தித்துறை துறைமுகங்களில் இறக்கப்பட்டன. அவ்வாறு நீரூர்திகளிலிருந்து இறக்கப்படும் பொருட்களை 'பாஜ்'இல் (டீயசபந) அடுக்குதல், 'பாஜ்'ஜிலிருந்து காவிச்சென்று களஞ்சியத்தில் அடுக்குதல், களஞ்சியத்திலிருந்து பாரவூர்திகளில் ஏற்றுதல் போன்ற வேலைகளைச் செய்தனர். அத்தொழிலில் அநுபவ மின்மையால் சிரமங்களையும், உடல் உபாதைகளையும் எதிர்கொண்டனர்.

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்குரிய பொருட்களை களஞ்சியத்திலிருந்து பாரவூர்திகளில் ஏற்றி சங்கக் கிளைகளில் இறக்கும் தொழிலையும், கேரதீவு, கொம்படி, கிளாலி போன்ற படகுத்துறைகளிலிருந்து 'பாஜ்'இல் பொதிகளை ஏற்றி, இறக்கும் தொழிலையும் செய்தனர்.

### 3. மண்ணெண்ணெய் வியாபாரம்

யாழ்ப்பாணத்தில் மண்ணெண்ணெய் தேவை அதிகரிக்க அதற்கு பெரும் தட்டுப்பாடு நிலவியது. அதனால்,ஈருருளியில் மண்ணெண்ணெய் பெறக்கூடிய இடங்களுக்குச் சென்று, பல சிரமங்களுக்கு மத்தியில் எடுத்துவந்து கடைகளுக்கும், வாடிக்கையாளர் வீடுகளுக்கும் கொடுப்பதுடன் வீதியில் வைத்தும் விற்பனை செய்து வருவாயைப் பெற்றனர். விற்பனைக்குத் தேவையான மண்ணெண்ணெய் எந்நாளும் கிடைக்கும் என்பது நிச்சயமற்றது.

### 4. விறகு விற்பனை

போராட்ட காலத்தில் மண்ணெண்ணெய்க்கு இருந்த தட்டுப்பாட்டால் விறகுதான் சமையல் தேவையை நிறைவு செய்தது. 'இது புதிதல்ல, நம் முன்னோர் இதனையே செய்தனர்' என்கின்றனர் சிலர். உண்மைதான், அப்போது தேவைக்கு மேலதிகமாக விறகுகள் இருந்தன. போர்க்கால சூழல் அவ்வாறல்லவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈருருளி உதிரிப்பாகங்கள் உச்ச விலையாகவும், தட்டுப்பாடாகவும் இருந்த காரணத்தால் ஒரு ரயருக்கு' உள்ளே முனைக் கம்பி நீக்கிய வேறொரு 'ரயரை'த் திணித்து சிரமப்பட்டுச் செலுத்தினர். இதனை செலுத்துவதில் உள்ள உடல் உபாதையைச் செலுத்துபவர்களால்த்தான் உணர முடியும்.

கூட்டாகவும், தனியாகவும் ஈருருளியில் கோடரியுடன் விறகுக்கேற்ற மரங்களைத் தேடியலைந்து, கண்டதும் அதனைத் தயங்கித் தயங்கி வெட்டி, ஏற்ற அளவில் துண்டுகளாக்கி, 'கரியலில்' நிமிர்த்தி கட்டப்பட்ட நான்கு தடிகளுக்குள் ஏற்றி ஓடக்கூடிய அளவுவரை ஏற்றி, பெரும் சுமையுடன் காவிவந்து வீடு, வீடாக விற்பனை செய்வர்.
ஒரு தடவையில் பத்து தூக்கு வரை எடுத்துவருவர். அதனால் போதிய வருவாய் கிடைப்பினும் மழை, வெயில், கடுங்காற்று, விறகின் பாரம் போன்ற எதிர்ப்புகளை முறியடிக்க எடுக்கும் முயற்சியால் இரத்தம் வியர்வையாகவே வெளியேறும். மாடாய் உழைத்து ஓடாய்த் தேய்ந்திடுவர்.

**5. மேசன் வேலை**

அலுவலகங்கள், தனியார் நிறுவனங்கள், விற்பனை நிலையங்களில் வேலை செய்தவர்கள் தமக்கு ஏற்புடைய தொழில்கள் கிடைக்காமையால், பல இடங்களும் அலைந்து கட்டுமானப் பணியை மேற்கொள்ளும் நிறுவனங்களில் மேசன் வேலையில் கூலியாக வேலைசெய்தனர். முன்னர் எப்போதும் செய்திராத அந்தத் தொழிலில் இணைந்துகொள்ள போட்டி நிலவியதால் வேலையில் இணைந்தவர்கள் தங்களை வருத்தியே வேலைசெய்து வருவாயைப் பெறவேண்டியவர்களாக இருந்தனர்.

**6. ஈருருளி சேவை**

போர்க்கால பயணப் பாதைகளால் படகுகளில் வந்திறங்கும் பயணிகள் செல்லக்கூடிய குறித்த இடம் பெரும்பாலும் 2 - 3 கி.மீ. தூரம் வரை இருக்கும். பெரும்பாலானோருக்கு இத்தூரத்தை பொதிகளுடன் நடந்து கடப்பது சிரமமாக இருக்கும். அவ்வாறானவர்களை, அவர்களது பொதிகளை ஈருருளியில் கூலிக்கு ஏற்றி, இறக்கும் தொழிலையும் மேற்கொண்டனர்.
விடுதலைப் புலிகள் மற்றும் அரச படைகளின் எல்லைகளுக்கு இடையிலான யுத்த சூனிய பிரதேசத்திலும் ஈருருளி சேவை இருந்தது. அந்தப் பகுதியை நடந்து கடப்பதிலுள்ள பயம் காரணமாக பொதுவாக ஈருருளிகளைப் பலரும் நாடுவர்.

**7. உந்துருளி சேவை**

'எம்டி 90' உந்துருளியானது முச்சக்கரவண்டிக்கு நிகராக ஆட்களை, பொதிகளை ஏற்றக்கூடிய ஒன்றாக இருந்தது. அதனால், யாழ்ப்பாணத்தில் படகு போக்குவரத்து நிகழ்ந்த இடங்களான கேரதீவு, ஊரியான், கொம்படி, கிளாலி போன்ற இடங்களுக்கு உந்துருளியில் ஆட்களை, பொருட்களை ஏற்றி, இறக்கும் தொழிலையைச் செய்தனர். ஒவ்வொரு தடவையும் இரண்டு, மூன்று பயணிகளையும் பொதிகளையும் ஏற்றிச் செல்வதுடன் திரும்பும்போதும் அதே அளவில் ஏற்றி வருவர். இதனால் போதிய வருவாய் கிடைத்தது.

**8. வவுனியா வர்த்தகம்**

யாழ்ப்பாணத்தில் தட்டுப்பாடான பொருட்களை வவுனியாவில் கொள்வனவு செய்துவந்து யாழ்ப்பாணத்தில் விற்பனை செய்யும் வியாபாரமும் நடைபெற்றது. சிரமமான, ஆபத்து நிறைந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயணம் என்று அறிந்திருந்தும் தமது தேவையை ஓரளவேனும் நிறைவு செய்யவும், வருவாயைத் தேடிக்கொள்ளவும் வேறு வழியின்றி இத்தெரிவை மேற்கொண்டனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து அதிகாலை புறப்படும் பேருந்தில் 'கொம்படி' சென்று, அக் கடற்பகுதியைக் கடந்து முரசுமோட்டை கடற்கரையிலிருந்து பரந்தன் - புதுக்குடியிருப்பு வீதி வரை சென்று, அங்கிருந்து ஓமந்தை வரை பேருந்தில் பயணித்து விடுதலைப் புலிகளின் பணி மனைக்குச் சென்று, அங்கு பெயர் விபரங்களைப் பதிவு செய்து வவுனியா சென்று வருவதற்கான இரு வார அனுமதிச் சிட்டையைப் பெற்றுக்கொள்வர்.

விடுதலைப் புலிகளின் பணிமனையிருந்து ரு.பே.மு.வின் கண்காணிப்பிலுள்ள யுத்த சூனியப் பிரதேசத்தை கடக்கும்வரை நடந்து செல்ல வேண்டும். பின்னர் நடந்தோ அல்லது ஈருருளியில் ஏற்றிச் செல்பவர்கள் மூலமாகவோ 'சாந்தசோலை'யை வந்தடைவர். அது வியாபாரம் செழிப்பாக நடைபெறும் இடமாகும். கொட்டகைகளாக பல கடைகள் உள்ளன. நடைபாதை வியாபாரமும், தரகர்களின் 'கூறல்' வியாபாரமும் நடைபெறும்.

அங்கிருந்து செல்கையில் 'நொச்சி மோட்டை' நீரோடி வாய்கால் குறுக்கிடும். அதில் இறங்கி வாய்க்காலைக் கடந்து நொச்சிமோட்டை இராணுவ சூனியப் பிரதேசத்தில் இராணுவத்தினரின் கண்காணிப்புகளுக்கு மத்தியில் வரிசையாக நடந்து செல்லவேண்டும். அந்தப் பிரதேசம் பயணிகளுக்கு மரணப்பொறி என்பதையும் அங்கே பலர் உயிரிழந்துள்ளதையும் பயணிகள் அறிந்திருப்பதால் பயம் உண்டாகவே செய்யும்.

சூனியப் பிரதேசத்தைக் கடந்து, இராணுவச் 'சோதனைப் புள்ளி'யில் உடல் - பொருள் சோதனைகள், 'தலையாட்டி'யின் கண்காணிப்பு முடிந்து வெளியேறியதும் வவுனியாவுக்குள் நுழைவதற்கும், அங்கு இரண்டு நாட்கள் தங்கியிருப்பதற்குமான இராணுவ அனுமதிச்சிட்டையை இராணுவ பணிமனையில பெற்றுக்கொள்வர்.

வவுனியாவுக்குள் நுழைந்ததும் முதலில் செல்வது ஈருருளி விற்பனை நிலையத்திற்கே. அங்கு ஈருருளியுடன் 'டைனமோ', 'லைற்' மற்றும் 'கரியல்' போன்றவற்றைக் கொள்வனவு செய்துகொள்வர். ஈருருளி திருத்தும் கடையில் அதனைக் கழற்றிப் பூட்டுவதற்கென ஒப்படைத்துவிட்டு, பொருட்களை கொள்வனவு செய்யத் தொடங்குவர். இவர்களுக்கு எவ்வித சிரமமுமில்லாமல் அனுமதிக்கக்கூடிய, விற்பனை செய்யக்கூடிய பொருட்களை, எடுத்துச் செல்லக்கூடிய அளவுகளை வியாபாரிகளே தெரியப்படுத்தி உதவிசெய்வர்.

கொள்வனவு செய்த பொருட்களுடன் அன்றைய இரவை இந்து மன்ற விடுதியில் கழித்து, விடிந்ததும் கழற்றிப் பூட்டிய ஈருருளியை எடுத்துவந்து பெட்டி ஒன்றில் அடுக்கக்கூடிய பொருட்களை அடுக்கி கரியலில் கட்டிக் கொள்வர். மீண்டும் வாங்கத் தவறிய பொருட்களுடன் மேலும் சில பொருட்களை கொள்வனவு செய்து சணல் நூலால் பின்னப்பட்ட 'சந்திரிக்கா பை'கள் இரண்டில் நிரப்பி 'கான்ரிலின்' இருபக்கமும் கொழுவிக் கொள்வர்.

மண்ணெண்ணெய், தேங்காய் எண்ணெய் உருளைக்கிழங்கு, சவர்க்கார வகைகள், சம்போ, பனடோல், சிறியரக வானொலிப் பெட்டி, வானொலிப் பெட்டியைக் காரணம் காட்டி பற்றரிகள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனிப்பு - பிஸ்கட் வகைகள், உடைகள் போன்ற இன்னோரன்ன பொருட்கள் பொதிகளில் அடங்கியிருக்கும்.

காலை பத்து மணியளவில் இராணுவத் தடைமுகாமில் சோதனை முடிந்ததும் வெளியேற அனுமதிக்கப்படுவர். அங்கிருந்து சூனியப் பிரதேசத்தைக் கடந்த பின்னர் நொச்சிமோட்டை வாய்க்காலில் பொருட்களை இறக்குவதற்கென கயிறுகளுடன் நிற்பவர்களுக்கு கூலியாக பொதி ஒன்றுக்கு பத்து ரூபாய் கொடுத்து இறக்கியும், மறுபக்கத்தால் அவ்வாறே கூலி கொடுத்து ஏற்றியும் சாந்தசோலையை வந்தடைவர்.

அங்கே பொருட்களை மொத்தமாகக் கொள்வனவு செய்யும் வியாபாரிகள், தரகர்களுடன் பேரம்பேசி அவற்றை விற்பனை செய்துவிட்டு கிடைத்த இலாபத்துடன் திரும்பவும் மறுநாள் முன்னைய முறைப்படி வவுனியாவுக்குள் நுழைந்து, விற்பனைக்குரியவற்றுடன் தமக்குத் தேவையான பொருட்களையும் கொள்வனவு செய்துகொண்டு வவுனியாவைவிட்டு வெளியேறி முன்னைய முறைப்படி நடந்து விடுதலைப் புலிகளின் 'சுங்கச் சாவடி'யில் சோதனை முடித்து, வந்த பாதையால் யாழ்ப்பாணம் திரும்பிவிடுவர்.

**9. மரக்கறி வியாபாரம்**

யுத்தம் காரணமான இடப்பெயர்வுகள், தோட்டங்கள் செய்யமுடியாத நிலையால் மரக்கறிகளுக்குத் தட்டுப்பாடு நிலவியது. இந்தத் தேவையை நிறைவுசெய்யத் தினமும் வவுனியா சென்று மரக்கறிகளை கொள்வனவு செய்துவந்து விற்பனை செய்துவந்தனர். பெரும்பாலும் வறிய பெண்களே இந்த வியாபாரத்தைச் செய்ததால் விடுதலைப் புலிகளால் ஒரு வாரம் அல்லது ஒரு மாதத்துக்கான பயண அனுமதிச் சிட்டை வழங்கப்பட்டது. இராணுவ அனுமதிச்சிட்டையை தினமும் இராணுவ பணிமனையில் பெற்று வவுனியா சென்று விற்பனை செய்யக்கூடிய மரக்கறி வகைகளை கொள்வனவு செய்து திரும்புவர்.

**முடிவாக...**

மேற்குறித்த வெளிப்படுத்தல்களில் போர்க்கால சூழலில் மக்கள் மேற்கொண்ட பயணங்கள், கையாண்ட யுக்திகள், அன்றாடத் தொழில்கள் போன்றவை உள்ளடக்கப்பட்டுள்ளன. இவை, குறித்தகால மக்களின் இடர்கால வாழ்வியலோடு இரண்டறக் கலந்ததாக, பொருளாதாரத்தின் அச்சாணி ஆட்டங்கண்டதாகவே உள்ளன.

இவை மட்டும் தானென்றோ, முழுமையானதுதானென்றோ சொல்வதற்கில்லை. நீண்டு, பரந்து விரிந்த போர்மேகம் கொட்டிய மழையில் மக்கள் முழுமையாக நனைந்ததால் காவு கொள்ளப்பட்ட உயிர்கள், உடலுறுப்பு இழப்புகள், எதிர்கொண்ட சிரமங்கள், பண்பாட்டுச் சிதைவுகள் போன்றவை மறக்கமுடியாத வடுக்களாக நிலைத்துள்ளன. அவற்றில் ஒரு துளி மட்டும் தான் இவை. குறித்த இலக்குக்குள் முடிந்தவரை தேடிப் பெற்றவைகள் இங்கு வெளிக் கொண்டு வரப்பட்டுள்ளன. பெறமுடியாமற்போனவையும் இருக்கலாம், புதைந்தவைகளும் இருக்கலாம். இதற்கு முழுமையான தேடல் அவசியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்



**திருமதி சகாயராஜா டலின்**
திருநகர், யாழ்ப்பாணம்

மலரின் மகள் தமிழினிக்கு வயது பதின்மூன்று. இன்று அவளுடைய வீடு கலகலப்பாக இருக்கிறது. மலர் களி கிண்டுவதில் பரபரப்பாகிக் கொண்டிருக்கிறாள். தமிழ் பாரம்பரியங்களில் இவ்வாறான சடங்கு, சம்பிரதாயங்களில் சில நன்மைகள் நடப்பதுமுண்டு.

மலரின் குடும்ப நலனில் மிக அக்கறையுடைய ராணியும் அவளின் வீட்டிற்கு வந்திருந்தாள். குசினிக்குள் வேலையாக இருக்கும் மலரைப் பார்த்து,

"எடி... என்னடி மகளும் பெரிய பிள்ளையாகிற்று.. இனியென்டாலும் உங்களுக்கு ஒரு துணை வேணாமா..? உனக்கு என்ன வயசா போய்ட்டு..! ஊரில இருக்கிறதுகள் தேவையில்லாமல் கதைக்குதுகள்.." என்று தன் மனதில் இருப்பதை கொட்டித் தீர்க்கிறாள்.

அடுப்பில் களி கிண்டிக்கொண்டிருக்கும் மலர் ராணியைத் திரும்பிப் பார்க்கிறாள். மலருடைய கண்ணிலிருந்து கண்ணீர் அருவியாய் பொலபொலவென வழிந்தோடுவதைக் காண்கிறாள். ராணி அதிர்ச்சியடைந்து, அவளினருகே சென்று,

"மலர் நான் ஏதும் பிழையாச் சொல்லியிருந்தால் என்னை மன்னிச்சிடு.. உன்ர நன்மைக்கும் பாதுகாப்புக்கும் தானே சொன்னேன்.. உனக்கு விருப்பமில்லாட்டி என்ன செய்யிறது? ஏதோ விதியமைத்த வாழ்க்கையென்று வாழவேண்டியதுதான்"

மலருடைய கண்ணில் கண்ணீரோ நின்றபாடில்லை. ஆனாலும் அவள் புன்னகைத்து.

"இல்லையக்கா.. நீங்க சொன்னதுக்காக அழேல. நீங்க வருவதற்கு முதலே அழுதுகொண்டுதான் இருக்கிறேன். மகள் பெரியபிள்ளையாகிட்டாள். நான் மகள நினைச்சுத்தான் கவலைப்படுறேன். அவள நல்லா படிப்பிக்கணும். ஒழுக்கமான பிள்ளையா வளக்கனும், இந்த உலகத்தில அவள எப்பிடித்தான் பாதுகாப்பாக வளர்க்கப் போறேனோ தெரியேல.. அத நினைக்க என் ஈரல் குலையே நடுங்குது.."

"ஓமடி ஓம்.. அதுக்குத்தான்.. உங்களுக்கு ஒரு பாதுகாப்புக்காவது.. நீ வேற கலியாணம் செய்யலாம் தானே.."

இருவரிடையும் சிறு மௌனம். அந்த மௌனம் சம்மதத்தின் அறிகுறியல்ல. அந்த மௌனத்திற்குள் விடையில்லாப் புதிர் புதைந்து கிடக்கின்றது.

"அம்மா.. அம்மா..." வீட்டுக்குள்ளிருந்து தாயை அழைக்கும், மகளின் சத்தம் அவர்களிருவரின் மௌனத்தையும் கலைக்கிறது.

"சரி.. சரி... உன்ர மகள் கூப்பிடுது.. நானும் போறேன். வீட்டில பொம்புளப் பிள்ளைகள் தனியா இருக்கு.. எப்ப என்ன நடக்குமென்டே தெரியேல.. நேற்றும் அங்கால சின்னப் பிள்ளையொன்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலங்கோலமாக்கிற்றாங்கள்.. இப்ப அந்தக் குறூப்புக்கும், இந்தக் குறூப்புக்கும் சண்டை... வாளெல்லாம் கொண்டுவந்து வெட்டுறாங்கள்.. நாட்டில என்ன நடக்குதென்டே தெரியேல.. நான் போயிட்டு பிறகு வாறேன்."

மலர், ராணிக்கு களியையும், வாழைப்பழத்தையும் பேப்பரில் சிறிதாய் பொதி கட்டிக் கொடுக்கிறாள். ராணி சிறு தொகைப் பணத்தை மலரின் மகளின் கைக்குள் வைத்துவிட்டு, வீடு செல்கிறாள்.

மகளிருக்கும் அறைக்குள் செல்கிறாள் மலர். கண்ணீர் காய்ந்து உப்பு படிந்த கன்னத்தின் அடையாளத்தை கண்ட அவளுடைய மகள்,
"அம்மா... அம்மா.... ஏன் அழுதீங்க...? ஏனம்மா....?"
"இல்லையம்மா.. அப்பாவ நினைச்சேன்.."

தாயின் கண்களைத் துடைத்தவாறே,

"அழாதேயம்மா.. அழாதேயம்மா..." தாயின் மடியில் தமிழினி உறங்குகிறாள்.

மலர் மகளின் தலையை மெல்ல வருடி முத்தமிடுகிறாள். அந்த அறையிலிருக்கும் தனது குடும்பப் போட்டோவைப் பார்க்கிறார். அதில் அவளுடைய கணவனும், அவளும்...!
மலருக்கு பழைய நினைவலை ஊஞ்சலாடுகிறது.

இராணுவத்திற்கும், விடுதலைப்புலிகளுக்கும் அகோர யுத்தம் நடந்து கொண்டிருந்த சூழலில் நல்லிணக்கம், சமாதானம் என்ற தத்துவத்தின் அடிப்படையில் ஆயுதங்கள் ஆங்காங்கே மெல்ல, மெல்ல சண்டையிட்டது. ஆனாலும் இவ்விரு பகுதியும் யாழ்ப்பாணத்தில் சமரசத்தோடு இருப்பதனால்.. எப்போது மீண்டும் யுத்தம் ஆரம்பிக்குமென்றே சொல்ல முடியவில்லை.

மனித பாதுகாப்புக் காரணங்களுக்காக பதினெட்டு வயது மலருக்கும், இருபத்திரண்டு வயதான றஞ்சித்துக்கும் அவசரம் அவசரமாக திருமணம் நடக்கிறது.

இருவருமே ஒருவருக்கொருவர் நல்ல துணையாக வாழ்ந்தார்கள். மூன்று வருடங்கள் எப்படிக் கடந்ததென்பதே அவர்களுக்குத் தெரியவில்லை.

அன்று, இருள் மெல்ல ஒளியைக் கௌவுகிறது. வீட்டு வாசலிலே வெகு நேரமாக கணவனை பார்த்து, பார்த்து விழி பூத்திருந்தாள் மலர்.

வெகு தொலைவில் கணவன் வருவதைக் கண்டுவிட்டாள். மகிழ்ச்சியால் அவளது உள்ளம் பூரித்தது. மிக அருகில் வந்தவனை, கண்டதும் வெட்கித்தவள் தலை குனிந்து உள்ளே செல்கிறாள். வீட்டிற்குள் நுழைகின்ற அவனுக்குத் தண்ணீர்ச் செம்பைக் கொடுக்கிறாள். அவனும் செம்பை வாங்கி தண்ணீரால் முகம், கை, காலை கழுவுகிறான்.

"இஞ்சேயப்பா... இஞ்சேயப்பா...." என்றவாறு தனது விரலில் உள்ள நகத்தைக் கடித்துக் கொண்டு மறுகையால் துடைப்பதற்கு துவாயைக் கொடுக்கிறாள். உள்ளே வந்தவன் துவாயைக் கையில் வாங்கியவாறு, வீட்டிற்குள் செல்கிறவன் மலரைப் பார்த்து,

"என்னப்பா.. என்ன புதுசா வெக்கம்... ஆ..." கணவனின் நையாண்டியை நன்கு அறிந்தவள்,

"இஞ்சேயப்பா...." கணவனின் அருகில் சென்று, கணவனுடைய வலது கையை மெல்ல பற்றிப்பிடித்து தன்னுடைய வயிற்றில் வைக்கிறாள்.

புரிந்து விட்டது அவனுக்கு. வார்த்தைகளால் வர்ணிக்க முடியாத மகிழ்ச்சியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணமாகி மூன்று வருடங்களாகியும் குழந்தைகள் இல்லை என்ற ஏக்கத்துடன், கும்பிட்ட தெய்வங்களும், வைத்த நேத்திகளும், வீண்போய்விடாதென்ற நம்பிக்கையில், ஊரின் பரிகாச சுடுசொற்களையும், எள்ளிநகையாடல்களையும், ஒதுக்குதல்களையும் கடந்து, "மலடன், மலடி" என்ற பட்டப் பெயருடன் வலம் வந்த அவர்களுக்கு கிடைத்த நான்கு கடவுள்களின் அனுக்கிரகமேயது.

வேண்டுமென்போருக்கு கோடி தவமிருந்தாலும் கிடைக்காதவொன்றாகவும், வேணாமென் போருக்கு அள்ளி, அள்ளி கொடுத்து கவனிப்பின்றி வீதிகளிலும், அனாதை இல்லங்களிலும், கலைக்கப்படும் கருவாயும், கடவுளின் கருணையின் ஓரவஞ்சனையானதுவே இந்த குழந்தைப் பாக்கியம்.!

"இஞ்சேயப்பா..."

மலரின் குரல் தொனியில் தன்னையே சுதாகரித்துக் கொண்டவன், ஒரே வார்த்தையில்,

"ரொம்ப சந்தோசமப்பா.." அவளுடைய வயிற்றில் இரு கையையும் வைத்து..

"என்ர செல்லக்குட்டி.. நீங்க எங்களுக்கு கிடைத்த பொக்கிசம்... நாங்க எங்கட பிள்ளைய நல்ல பிள்ளையாக, ஒழுக்கமுள்ள பிள்ளையாக வளர்ப்போம். நீங்க ஆம்பிளப் பிள்ளையோ? பொம்பிளப் பிள்ளையோ? நல்லா படிக்க வைப்போம்.. நீங்க பெரிய ஆளா வருவீங்க" என்றவாறு குதுகலிப்பின் உச்சிக்கே சென்றவனின் கண்களில் ஆனந்தக் கண்ணீர் சொரிகிறது.

கணவனை சமாளித்தவளாக..

"இஞ்சேயப்பா.. குழந்தப் பிள்ளைய போல அழுகுறீங்க.. எங்கட பிள்ளைய நாங்க நல்ல பிள்ளையாக வளர்ப்போம். நல்லா படிக்க வைப்போம்." என தன் வயிற்றிலிருக்கும் கணவனது கையின் மேல் தனது கையை வைத்து உறுதி மொழியளித்தவள், தன் கணவனைப் பார்த்து,

"இஞ்சேயப்பா இரவு எட்டுமணியாகுது.. சாப்பிடுங்க..."

"இல்லையப்பா.. மனசு நிறைஞ்சிருக்கு... நான் கும்பிட்ட தெய்வங்களுக்கு நன்றி சொல்லிட்டு வாறேன். எத்தின கோயில் ஏறி இறங்கினாங்களென்று தெரியும்தானே..?"

வரமளித்த தெய்வத்தின் கோவிலுக்கு சென்று நன்றி சொல்லிவிடவேணுமென்ற அவாவுடன், வீட்டிலிருந்து வெளியே சிறகடித்துப் பறக்கும் வண்ணாத்தியைப் போன்று வெளியே புறப்பட எத்தணிக்கும் தன் கணவனை தடுக்கவேண்டுமென அவளுடைய மனதில் திடீர் பயம் தோன்றியது. அவர்கள் வாழ்ந்துகொண்டிருக்கும் நாட்டுச் சூழ்நிலையப்படி..!

"சொல்லலாமா..? வேணாமா...?" என்று மலர் யோசிப்பதற்குள்.

அவளைப் பார்த்து "நான் போறேனப்பா.."

அந்த சொல் அபசகுனம் என்று உணர்ந்தவளாய், கணவனிடம்,

"இஞ்சேயப்பா.. போயிற்று வாறேனென்று சொல்லுங்க.." என்றவாறே,

கணவனின் உருவம் மெல்ல மெல்ல மறைகிறவரை வீதியையே எதிர் பார்த்திருக்கிறாள்.

"அப்பா.. அப்பா..." என வீரிட்டு பெரிதாக அழுத மகளின் குரலைக்கேட்டு நிலை குலைந்த மலர் தன் நினைவிலிருந்து மீளுகிறாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழும் தன் மகளை வழமைபோல சமாதானப்படுத்துவதற்காக,

"அப்பா வருவேரம்மா.. அப்பா வருவேரம்மா... அழாதீங்க..."

தாயின் ஆறுதல் வார்த்தையில் மீண்டும் நித்திரையாகிவிட்டாள்.

மலருடைய வீட்டு வாசலில் மீண்டும் ராணியின் குரல்,

"மலர்.. மலர்.."

"வாங்க அக்கா... வாங்க..." உள்ளே அழைக்கிறாள் மலர்.

ராணியோ.. தன்னால் இயன்றவரை.. எவ்வளவோ முயன்று பார்த்திருக்கிறாள். இருளான மலரின் வாழ்விற்கு சிறு ஒளியேற்றுவதற்கு, அதற்கு ஒரே வழி மலரின் மறுதிருமணம்தான்.

ஆனால் அவ் முயற்சிகள் அனைத்தும் விழலுக்கு இறைத்த நீர் போல் வீணாகியது. இருந்தாலும் ராணியோ மலரையும் விடுகின்றபாடாக இல்லை.

"சொல்லு மலர்.. உன்ர மனசில என்ன நினைச்சிருக்கிறாய்.." அவளின் கேள்வியை புரிந்து கொண்ட மலர்,

ராணியின் இரு கைகளை இறுக பற்றிப் பிடித்து..

"அக்கா.. எதுவா இருந்தாலும் வெளிப்படையா சொல்லுங்க.. தயவு செய்து ஏன் நீங்க இப்பிடி என்ன வற்புறுத்துறீங்க.. சொல்லுங்க அக்கா.."

ராணியின் குரல் மெல்ல தழுதழுக்கிறது "மலர்.. நான் சொல்லுறேனென்று தப்பா நினைக்காத.. காதில கேள்விப்பட்டதை சொல்லுறேன். உனக்கு குழந்தை பிறக்காத போது இந்த சமூகம் உன்னையும், உன்ர புருசனையும் மலடன், மலடியென்று குத்திக் காட்டித்தான் கதைக்கிறதுகள்.." இடையில் குறுக்கிட்ட மலர்,

"எனக்கு குழந்தை கிடைச்சு.. இப்ப பதின்மூன்று வருசமாச்சே.. இப்ப என்னக்கா.." ராணி சொல்ல வந்ததை மலர் புரிந்துகொண்டாலும், சிறுபிள்ளை போன்றுதான் விளக்கமில்லாதது போல ஏதாவது கேட்பாள்.

"மலர்.. உனக்கு வேற கலியாணம் செய்ய விருப்பமா..? விருப்பமில்லையா..?" ராணியின் கேள்விக்கு,

பகிடியாக மலரும்,

"பாப்போம்.. பாப்போம்.." இந்த பதிலைத்தான் அவள் சொல்லுவாளென எதிர்பார்த்த ராணி, இன்றாவது தன் மனதிலிருக்கும் பாரத்தை இறக்கிவைக்க, கோபத்தோடு..

"லூசுபோல கதைக்காத... லூசாடி நீ.. ஊருக்குள்ள உன்னப்பற்றி என்ன கதைக்குதுகள் தெரியுமா..? கேக்கவே காது கூசுதடி... இதுகளின்ர வாயை அடைக்கிறதென்டால் நீ வேற கலியாணம் செய்து தொலையடி.."

ஆவேசமடைந்த ராணியின் மனதிலுள்ளதை எப்படியாவது அறிந்துவிட வேண்டுமென மலர் போட்ட திட்டம் வெற்றியடைந்துவிட்டது. ஆழமான பெருமூச்சை விட்ட மலர்,

"தெரியுமக்கா.. நல்லாத் தெரியும்.. எங்கட சொந்தங்களே என்ர காதுபட கேவலமா பேசுதுகள்.. நான் ஒழுக்கம் கெட்டவள், ஆம்புளைகளோட இழிச்சு, இழிச்சு கதைக்கிறன், வேலைக்கு போய் பிள்ளைய நல்லா படிக்க வைக்கிறாள்.. இவ புருசனில்லாம இவ்வளவு காலமும் எப்பிடித் தனியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழுறா..? ஒருவேளை வேலத்தளத்தில... ஆரையாவது..? அப்பிடியிருக்குமோ..? இப்பிடியிருக்குமோ...? இந்த கதையெல்லாம் கேட்டு, என்ர பிள்ளையின்ர எதிர்காலத்தை நாசமாக்கிறவள் நானில்லையக்கா.. குழந்தை கிடைக்காமலிருக்கும்போது எனக்கு அவர்தான் ஆறுதலா இருந்தார். இப்ப பிள்ளையிருக்குத்தானேயக்கா... அக்கா அவரோட, என்னோட விருப்பம் எங்கட பிள்ளைய நல்லா படிப்பிச்சு, ஒழுக்கமான பிள்ளையாக பெரிய நிலைக்கு ஆளாக்கனுமென்பதுதான். அதுக்காகத்தான் இவ்வளவு போராட்டம். இந்த உலகமே என்ன சொன்னாலும் எனக்கு கவலையில்ல."

வீரியமான, கண்ணியமான, துணிச்சலான மலரின் வார்த்தைகள் ஒவ்வொன்றும் ராணியின் இருதயத்தை ஈட்டியால் குத்தித் துளைப்பது போலிருந்தது. ராணி மிக இளகிய குரலோடு, இரக்கமாக,

"இல்ல.. மலர் உனக்கு உதவிக்காகவும், மகளின்ர எதிர்காலத்திற்காவும்தானே நான் சொல்லுறேன்"

மலரைப்பற்றி அவளுடைய சொந்தங்களும், ஊரவர்களும் கண், காது, மூக்கு வைத்து கூறுவது அபட்டமான பொய்யென்று ராணிக்குத் தெரிந்திருந்தாலும், உலக நடப்பில் கணவனில்லாத பெண்ணிற்கு வருகின்ற சவாலை, எதிர்ப்பதற்கு துணிவுகொள்ளும் பெண்கள் சிலரே,

அதிலும் பாரதி படைத்த புதுமைப் பெண்ணாய் மாறவேண்டுமென சமூகத்தோடு சமூகமாய் வாயால் பலர் கொக்கரித்தாலும், மனதால் அவ்வாறான மாற்றத்தைக் காண்பதென்பது அரிதே. தன் மீதுள்ள ராணியின் அதீத கரிசனையை மலர் நன்கு உணர்வாள். இவ்வாறான கரிசனை யுடையோர், கருணையுமிக்கோர் எதிர்காலத்தில் அருகிவருகிறதென்பதும் யதார்த்தமானதே..!

"ராணியக்கா.. எனக்கு குழந்தை கிடைக்காமலிருக்கும் போது என்னை மலடியென ஒதுக்கிய சமூகம், பிறந்த குழந்தையின் பலன் தான், என் கஷ்டங்களுக்கு காரணமென கூறிய அதே சமூகம், இப்போ கணவனில்லையென்று என்னைய ஒதுக்குது.. அவ்வளவுதானே..! இங்க சமூகம்தான் மாறி, மாறி கதைக்குது.. நான் நானாகத்தான் இருக்கிறேன்."

மலர் எவ்வளவுதான் வைராக்கியமாக இருந்தாலும் ராணியும் அவளை விடுவதாக இல்லை.

"இல்லயடி மலர்.. நான் சொல்லவாறது உனக்குப் புரியுதில்லையே...! உனக்கு என்ன வயசா போச்சு? முப்பதைந்து வயசுதானே.. உன்ர முடிவச் சொல்லு... ஒராள் இருக்கு நான் கேட்டுப் பார்க்கிறேன்"

எப்படியாவது மலரின் சமூக அவப் பெயரை போக்குவதற்கு கல்யாணமே சிறந்ததென ராணியின் மனதில் தப்புக்கணக்கு போட்டிருப்பதை மலர் நன்கு அறிவாள். மலரும் இறுதியாக ஒரு முடிவு எடுத்துவிட்டாள்.

"அக்கா.. நான் வேற கலியாணம் செய்தால், என்ர வாழ்க்கை நல்லாயிருக்குமா..?" மலரின் இந்தக் கேள்வி ராணியை ஆச்சரியமும், அதிர்ச்சியுமடைய வைத்தது. அவள் மனம் மாறுவதற்குள் எப்படியாவது அவளின் சம்மதத்தைப் பெற்றிட வேண்டுமென்பதற்காக..
"மலர் இதிலென்ன சந்தேகம்..?

இப்படி தைரியமூட்டி, மலரின் கவனத்தை திருமணத்தின்பக்கம் திருப்புவதற்கான அவசியத்தை தெளிவாக்க முனைகிறாள் ராணி. ஆனாலும் மலரும் தொடர்ச்சியாய் கலியாண பேச்சையே கொடுக்கிறாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“சரியக்கா... நான் வேற கலியாணம் செய்து, இவரோடையும், பிள்ளைகளோடையும் சந்தோசமாக வாழுறேனென்டு வைப்போம்..” குறுக்கிட்ட ராணி,

“அப்பிடிச் சொல்லு.. நீ சந்தோசமாக இருப்பாயடி.. உன்ர நல்ல மனசுக்கு நீ நல்லா இருப்பா யடி..” மலரை இன்னுமின்னும் பேசத் தூண்ட வேணுமென்ற பேராவலுடன் ராணி குதுகலிக்கிறாள். இதை நன்குணர்ந்த மலர்,

“நான் வேற கலியாணம் செய்து, என்ர இவரோடையும், பிள்ளைகளோடையும் சந்தோசமாக வாழுறேனென்டு வைப்போம்.. திடீரென அவர் உயிரோட வந்திட்டால்... எங்கட நிலையென்ன..?” கணப் பொழுதில் உலகம் சுற்றுவது நின்றது போலிருந்தது. இக் கேள்வியை ராணி சற்றும் எதிர்பார்க்கவில்லை.

மறுதிருமணமென்பது தவறான ஒன்றல்ல. ஆனால் அவளது கணவன் உயிரோடு இருக்கிறாரா..? இல்லையா...? என்று பதின்மூன்று வருடங்களை கோவிலிலும், நேத்தியிலும் அன்றாடம் வேண்டுகிறவளான மலரின் இந்தக் கேள்விக்கான பதில் ராணியிடம் மட்டுமல்ல, எவரிடமும் பதில் கிடைக்காது.

மலரின் கணவன், ஓடிப்போகவில்லை. செத்துப்போகவில்லை. இந் நாட்டில் “காணாமல் ஆக்கப்பட்டான்”

அது யாரால்..? எவரால்..? எங்கே...? எப்போது...? இக் கேள்விகளுக்கான பதில்களாய்.. பதின்மூன்றாண்டுகளைக் கடந்தும், இன்றும் தோண்டியெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கும் வெற்று எலும்புக் கூடுகளும் பதிலாய் அமையவில்லை.
ஆனாலும் எவற்றிலும் அடையாளம் காணப்படாமலே.! இன்னும் தொடர்கிறது மனித புதைகுழி ஆய்வுகள்..!

“ஓ” வெனக் கதறி அழுத ராணி,
“மலர்” என அவளைக் கட்டியரவணைக்க..
“நான் மலர்தானக்கா.. நான் மலர்தான்”
தனக்கேயுரிய தற்துணிவோடும், கணவனின் மீள் வருகையின் எதிர்பார்ப்போடும் ராணியை ஆரத் தழுவுகிறாள்.

இனி “அவளிடம் திருமணப் பேச்சே எடுப்பதில்லை” யென, வீட்டைவிட்டு புறப்படுகிறாள் ராணி.
தன்னைப் போன்று இந்நாட்டில் “போரின் எச்சங்களாலும், மிச்சங்களாலும்” இன்னுமின்னும் எத்தனை பெண்கள் இப்படி கொடுமையான அவஸ்தையை அனுபவிக்கிறார்களோ..? என மனமுருகிறவாறே...

“புத்தர், சிவன், இயேசு, அல்லா” இந் நாற்கடவுள்களும் ஒன்றாய் அருள்பாலிக்கும் படங்களை வணங்கியவாறே, அவர் சீக்கரம் வந்திடவேண்டுமென, தன் வீட்டின் வாசலையே எதிர்பார்த்திருக்கிறாள், மலர்..!

(இச்சிறுகதை கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தால் நடாத்தப்பட்ட போட்டியில் பரிசு பெற்றது)

முற்றும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்து நூல்களை ஆதரித்தல்!

**அ. யேசுராசா**
குருநகர் மேற்கு, யாழ்ப்பாணம்

ஈழத்தமிழராகிய நாம் தனித்துவமானவர்கள். எமக்குத் தனித்துவமான நிலப்பரப்பும், பேச்சுமொழியும், வாழ்க்கை முறைகளும், பண்பாடும், தொடர்ச்சியான வரலாறும் இருக்கின்றன. காலந்தோறும் அரசியல் உட்பட பல்வகை நெருக்கடிகளையும் எதிர்கொண்டு வருகிறோம். எனினும்,எமது முழு மொத்த வாழ்வின் பல்வகைப் பரிமாணங்களும் எமது நூல்களில் தொடர்ந்து வெளிப்படுகின்றன.

சங்கப் புலவன் ஈழத்துப் பூதந்தேவனாரிலிருந்து இன்றுவரை, பல்லாயிரக் கணக்கான படைப்பாளிகள் பல்லாயிரம் படைப்புகளை இங்கு ஆக்கி அளித்திருக்கிறார்கள். பழந்தமிழ் நூல்களை ஏட்டுச் சுவடிகளிலிருந்து பதிப்பித்தல், அகராதிகளை ஆக்குதல், கலைக் களஞ் சியத்தை ஆக்குதல், தமிழ் இலக்கியப் புலவர் சரிதம் / தமிழர் வரலாற்றை எழுதுதல், அறிவியல் நூல்களைத் தமிழில் எழுதுதல், இதழியல் போன்றவற்றில் நம்முன்னோர் முன்னோடிகளாய்ச் செயற்பட்டுள்ளனர் இதன் காரணமாய், "பத்தொன்பதாம் நூற்றாண்டு என்பது ஈழத்தவர் நூற்றாண்டு" என்ற பெருமைப் பதிவும் உள்ளது! ஆயினும், தமிழ் இலக்கியம் – தமிழ் நூல்கள் என்றால் (இந்திய) தமிழக நூல்கள் மட்டுமே என்ற தவறான கருத்து, இன்று தமிழகத்தில் பலரிடம் இருக்கிறது இங்கும் எம்மவர் பலரிடமும் இக்கருத்து உள்ளது.

1.தமிழக நூல்களையே / எழுத்தாளரையே"வியந்து" ஆதரிக்கும் நிலையில்தான் நமது மக்கள் உள்ளனர். கல்வி சார்ந்த / சமயம் சார்ந்த நூல்கள் இதில் புறநடை. வாசிக்கும் பழக்கமுள்ள பெரும்பாலார், தமிழக எழுத்தாளரின் நூல்களையே நூலகங்களிலோ விலைக்கு வாங்கியோ வாசிக்கின்றனர். அவர்களில் பலரும் ஈழத்து நூல்களில் - இலக்கியம் மற்றும் ஏனைய துறைசார் பொது நூல்களில் - அக்கறை காட்டுவதில்லை. பொது நூலகங்களில் உள்ள (குறைந்த) எண்ணிக் கையிலான!) ஈழத்து நூல்களில் பலவும், யாராலும் வாசிக்கப்படாமல் ஆண்டுக்கணக்கில் (!) இருப்பதைக் கசப்புடன் அறிய முடிகிறது.

2.எமது நிலத்தில் ஆங்காங்கே பல புத்தக விற்பனை நிலையங்கள் இருக்கின்றன. அவற்றில் பலவும், ஈழத்து நூல்களை வாங்கி விற்பதில் ஆர்வம் காட்டுவதில்லை இங்கும் கல்வி சார்ந்த / சமயம் சார்ந்த நூல்கள் புறநடை. இலக்கியம் உட்பட ஏனைய வகை நூல்களை "வேண்டா வெறுப்பாக" வாங்கி, மூலையில் போட்டுவிடுவார்கள். தமிழக நூல்களைப் பணம்கொடுத்து வாங்கி - முன்வரிசை இடங்களில் விற்பனைக்கு வைக்கும் இப்புத்தக நிலையங்கள், ஈழத்து நூல்களை அவ்வாறு பணம் கொடுத்து வாங்குவதில்லை விற்ற பின்னரே பணம் தரமுடியும் என்பார்கள். மூலையில் போடப்படும் நூல்கள் தூசி படிந்து கிடக்கும்ஆறுமாதமோ ஒரு வருடமோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிந்தபின்னர் நூல்களைக் கொடுத்தவர் விசாரிக்கையில், விற்காத நூல்களையோ / விற்ற நூல் பிரதிகளுக்கான பணத்தையோ கொடுப்பதில் இழுத்தடிப்புச் செய்து,பல தடவைகள் அலைக் கழிப்பார்கள்!

3. இங்குள்ள பல பொது நூலகங்கள், சனசமூக நிலையங்களின் படிப்பகங்கள், பாடசாலை நூலகங்கள் ஈழத்தில் வெளியாகும் நூல்கள் பலவற்றை வாங்கி வைத்திருப்பதில்லை இங்கெல்லாம் தமிழக நூல்களுக்கே முன்னுரிமை கொடுக்கப்படுகிறது. சில இடங்களில் ஏதோ கொஞ்சம் ஈழத்து நூல்களைக் காணலாம்!

* *

எமது மக்களும், வாழ்க்கையும், பிரச்சினைகளும், எமது நிலக்காட்சிகளும், எமது பேச்சு மொழியும் சித்திரிக்கப்படுவது எமது நூல்களில் மட்டும்தான் தமிழக நூல்களில் இவற்றைக் காணமுடியாது. பதிப்பகங்கள் ஈழத்தில் வளர்ச்சி அடையவில்லை. இலக்கியத்தையோ வேறு துறைசார் பொது நூலையோ, குறிப்பிட்ட படைப்பாளியே தனது சொந்தப் பணத்தில் அல்லது நண்பர் சிலரின் உதவியுடன் வெளியிடும் நிலைமைதான், இங்கு உள்ளது. அச்சிட்ட நூல்களை விற்று, செலவளித்த பணத்தைப் பெறுவது என்பது மிகச்சிரமமானதாக இருக்கிறது் தொடர்ந்து நூல் வெளியீட்டு முயற்சியில் ஈடுபடுவதற்கு, படைப்பாளர் அக்கறையற்றுப் போகவும் இது காரணமாகிறது் இது எமது வளர்ச்சிக்குத் தீங்கானது. இந்நிலைமையை மாற்றுவதற்குரிய கூட்டுச் செயற்பாடுகள் அவசியமாயுள்ளன!அவ்வாறாயின், இத்தகைய தனித்துவங்கொண்ட எமது நூல்களின் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்துதல், நூல்களை உருவாக்குதல் / விற்பனை செய்தல் போன்றவற்றிலுள்ள பிரச்சினைகளைக் களைதல் பற்றி நாம் யோசிக்கலாம்.

அ) தமிழகத் திரைப்படங்கள், தொலைக்காட்சிகள், நூல்கள், இதழ்கள், சமய / இலக்கிய / பட்டிமன்றப் பேச்சாளர்கள்மீதான "மயக்கம்", நீண்டகாலமாக எமது மக்களிடம் தொடர்கிறது. அங்கிருந்து வரும் நல்லவற்றில் அக்கறை காட்டுவது தவறல்ல ஆனால், அங்கிருந்து வருவன எல்லாமுமே நல்லவையும் அல்ல! மறுதலையாக, இங்கு வருவனவற்றைப் பற்றி அக்கறை காட்டாமல் விடுவது சரியானதுமல்ல! "மேட் இன் இங்லன்ட்" என்றிருப்பது நல்லது் மற்றது "லோக்கல்" என்ற மனப்பாங்கு போன்றதே இது! விதேசிய - அடிமை மனப்பாங்கு நல்லதல்ல் எனவே முதலில், மக்களின் இந்த மனநிலையில் மாற்றத்தை உருவாக்கவேண்டும். பொதுமக்கள் வாசிக்கும் / பார்க்கும் ஊடகங்களில், எமது நூல்களை / எமது கலைகளை ஆதரிப்பதன் அவசியம் பற்றிய கருத்துகள், அவ்வப்போது வலியுறுத்தப்பட வேண்டும். 1956 ஆம் ஆண்டில், சிங்கள மக்களிடம் வலியுறுத்தப்பட்ட - அவர்களின் தனித்துவமான பண்பாடு, மொழி, இலக்கியம்,கலைகள் பற்றிய விழிப்புணர்வு போன்று இது அமைய வேண்டும்!

ஆ) நமது பாடசாலைகளில் இது தொடங்கப்படவேண்டும். எல்லா மாணவர்களிடம் பொது வாகவும், குறிப்பாக உயர்தர வகுப்பு மாணவரிடையேயும் எமது தனித்துவங்கள், நூல்கள் பற்றிய அறிமுகங்களும் அவற்றை வாசித்தல், ஆதரவளித்தல் பற்றியும் எடுத்துச் சொல் லப்படுதல் அவசியம்.கலாசார அலுவலர்கள் மாதம் ஒருதடவையாவது ஒவ்வொரு பெரிய பாடசாலைக்குச் சென்று, இவற்றைக் கவனப்படுத்தலாம் அப்பிரதேச எழுத்தாளர்களின் உதவியைப் பெற்று,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல்கள் பற்றிய அறிமுக உரைகளையும் அங்கு நிகழ்த்தச் செய்யலாம். இவ்வாறே சனசமூக நிலையங்களுடன் தொடர்புகொண்டு, அங்குள்ளவர்களிடமும் இக் கருத்துக்களை அவ்வப்போது பரப்பலாம்!

இ) பொது நூலகங்களிலும், பாடசாலைகளிலும், சனசமூகநிலையங்களின் படிப்பகங்களிலும் ஈழத்து நூல்கள் கட்டாயம் இடம்பெறவேண்டும். அவ்வப் போது தனியாக ஈழத்து நூல்களைக் காட்சிப்படுத்தி, அறிமுகப்படுத்தவும் வேண்டும். மாகாணப் பண்பாட்டுத் திணைக்களம், கல்வித்திணைக்களம் என்பன இணைந்து,இவற்றில் முன்முயற்சி எடுக்கவேண்டும்.

ஈ) மாகாணப் பண்பாட்டுத் திணைக்களம், ஐயாயிரம் ரூபா பெறுமதியான நூற்பிரதிகளைத் தற்போது, எழுத்தாளரிடமிருந்து கொள்வனவு செய்கிறது. இதனைப் பத்தாயிரம் ரூபாவாக அதிகரிப்பது, நூல்களை வெளியிடும் எழுத்தாளருக்கு மேலும் உதவியாக அமையும்!.

உ) பாடசாலைகள், சனசமூக நிலையங்கள், தனியார் அமைப்புகள் நடத்தும் போட்டிகளின்போது வழங்கும் பரிசுகளில், ஈழத்து நூல்களையும் சேர்த்துக் கொள்ளலாம் அதுபோலவே திருமண நாள் / பிறந்த நாள் அன்பளிப்பாக, ஈழத்து நூல்களின் பொதியை வழங்கலாம்!

ஊ) அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற 'யாழ். சர்வதேச வர்த்தகக் கண்காட்சியில், 'எங்கட புத்தகங்கள்' என்னும் ஈழத்து நூல்களின் விற்பனைக்கூடமும், பருத்தித்துறை நண்பர்கள் குழுவினரால் - குறிப்பாக குலசிங்கம் வசீகரன் என்பவரின் முன்முயசியால் அமைக்கப் பட்டிருந்தது. பெருந்திரளானோர் கூடிய அக்கண்காட்சியில், ஈழத்து நூல்கள் மக்களின் கவனத்தை ஈர்த்ததாகவும் - அதிக நூல்கள் விற்பனையானதாகவும் தெரிகிறது மகிழ்ச்சிதரும் தகவல் இது! மக்கள் இவ்வாறு பெரும் எண்ணிக்கையில் கூடும் இடங்களில் - திருவிழாக்கள் போன்றவற்றில் - இவ்வாறான விற்பனைக் கூடத்தைத் தொடர்வது பயனளிக்கும்!

எல்லாவற்றுக்கும் ஆதாரமாய் இருக்கவேண்டியது, "எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் எங்கள் கைகளில்" என்ற விழிப்புணர்வு! எழுத்தாளர், சமூகச் செயற்பாட்டாளர், பண்பாட்டுத் திணைக்களம், கலாசார அலுவலர், பல்கலைக்கழகத் தமிழ்த் துறையினர், ஊடங்களில் பணி யாற்றுவோர் எல்லோரும் கூட்டாக இணைந்து செயற்படவேண்டியது, காலத்தின் கட்டாய மாகியுள்ளது! தொடர்ந்த செயற்பாடுகள் உரிய பயனை அளிக்குமென, நம்பிக்கையுடன் செய லாற்றுவோம்!



சந்தோசம் வரும் போது
அதைப்பற்றி
சிந்தனை செய்யாதே:

அது போகின்ற போது
அதைப் பற்றி
சிந்தனை செய்

- அரிஸ்டாட்டில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்து திரைப்பட நடிகரும் நாடக நடிகருமான அரிதாஸ் அவர்களுடனான ஓர் நேர் காணல்



**சி. ருகுணாஸ்** B.A (Hons),
J/81கோட்டை,
யாழ்ப்பாணம்



**கலைஞர் பற்றியஅறிமுகம்**

ஈழ நாட்டின் வடபுலத்தில் யாழ்ப்பாண பிரதேச செயலகத்திற்குபட்ட J/81 கோட்டை கிராமஅலுவலர் பிரிவில் குமரன் செல்லாச்சி தம்பதிகளுக்கு மகனாக 1948.06.26ஆம் திகதி பிறந்தார். ஐயாத்துரை என்ற பெயர் கொண்ட இவர் அரிதாஸ் என திரைப்பட நாடக உலகில் அனைவராலும் அடையாளம் காணப் பட்டார். இவரது நாடக திரைப்பட பயணம் பற்றியதான ஓர் நேர்காணல் இதுவாகும்.

**கேள்வி :-** நாடகத் துறையுடனான தொடர்பு எப்படி ஏற்பட்டது?

**பதில் :-** நான்பதினெட்டு வயது முதல் நாடகத்தில் நடிக்க ஆரம்பித்தேன். 1965ஆம் ஆண்டு "விதி செய்த சதி" என்கின்ற நாடகம் மூலம் நாடகத்துறையில் உள் நுழைந்தேன். அந்த காலத்து கலைஞர்களில் ஒருவரான ஏ.வைரமுத்து என்பவர் நடித்த அரிச்சந்திர மயான காண்டம் நாடகம் பார்த்த முதல் என்னுள் நானும் நடிகனாக வேண்டும் என்ற அவா எழுந்தது. அதற்கு வழி சமைத்தது போலஎனது குரு யாழூர் துரை என்பவரின் நெறியாழ்கையில் உருவாக்கப்பட்ட விதி செய்த சதி நாடகத்தில் பாத்திரமேற்று நடித்தேன். இது பழைய யாழ் மாநகரசபை மண்டபத்திலே மேடையேற்றப்பட்டது.

**கேள்வி :- தாங்கள் இதுவரை எத்தனை நாடகங்களில் நடித்துள்வீர்கள்? மனதில் இருப்பவை எவை?**

**பதில்:-** நான் இது வரை 30ற்கும் மேற்பட்ட நாடகங்களில் பாத்திரமேற்று மேடை யேறியுள்ளேன். விதி செய்த சதி, புரியாதபுதிர், பிரளையம், கடமை, கலையும் கண்ணீரும், பூவும் பொட்டும், இதயம் இருள்கின்றது, தர்மம், தேரோட்டி மகன், வீரபாண்டிய கட்டப் பொம்மன், இதயராகம், பவளத்து கன்னி, குடிமகன், சாம்ராட் அசோகன், அனார்கலி, நீதிவேந்தன், தப்புத்தாளம், சாக்கிரடீஸ், குத்துவிளக்கு, நீயும் நானும், சிங்கப்பூர் சுப்பன், சாந்தி, பறிபோனசீதனம், இராமாயணம், அறுவடை, இனி ஒரு யுகம், அன்புத் தெய்வம், தண்டனை, உனக்காக நான், அன்பும் அருளும் என்பனவாகும். இவற்றிலே என் மனங்கவர்ந்த நாடகமாக சாம்ராட் அசோகா நாடகம் அமைந்துள்ளது. இதில் சாம்ராட் அசோகன் பாத்திரம் ஏற்று நடித்ததிலே நான் பேரானந்தம் அடைந்தேன்.

கேள்வி :- ஈழத்து திரைப்பட துறையில் தங்களுக்கான வாய்ப்பு எப்படி அமைந்தது?

**பதில்:-** ஆம், 1977ஆம் ஆண்டு கலைஞர் கலைச்செல்வன் அவர்களுடைய கதை திரைக்கதை வசனம் வெளிவந்த "நான் உங்கள் தோழன்" தான் எனது அறிமுக திரைப்படமாகும். இத் திரைப்படத்தில் ஏ.ஏகணேசன் அவர்கள் கதாநாயகனாகவும் நான் இரண்டாவது கதாநாயகனாக நடித்து அனைவரது பாராட்டையும் பெற்றிருந்தேன். நான் உங்கள் தோழன் திரப்படமானது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்திலே 50 நாட்களைத் தாண்டி வெற்றிகரமாக ஓடிய திரைப்படம் எனலாம். அந்த காலத்திலே தென்னிந்தியாவிலே புகழ்பெற்ற நடிகர்களான திரு. சிவாஜிகணேசன், திரு. எம். ஜி. இராமச் சந்திரன் அவர்களின் திரைப்படங்களே இவ்வாறு 50 நாட்களைத் தாண்டி வெற்றி பெற்றுள்ளது. எனது முதலாவது திரைப்படமே அத்தகையதொரு வெற்றியை பெற்றமை குறிப்பிடத்தக்கது. இலங்கையில் 7 திரையரங்குகளில் வெளியிடப்பட்டது. கொழும்பில் செல்வமஹால், யாழ்ப் பாணத்தில் ராணி திரையரங்குகளில் 50 நாட்களுக்குமேல் இப்படம் வெற்றிகரமாக ஓடியது.

**கேள்வி :-முதன் முதலில் கமெராமுன் நடித்த அனுபவம் எவ்வாறானது?**

**பதில் :-** ஆம் எல்லையில்லா ஆனந்தம். ஓர் திரைப்படநடிகர் ஆவதைப் போன்ற மகிழ்ச்சி எனது மனதில் காணப்பட்டது. அதுவும் வெற்றிப்படங்களை வழங்கிய இயக்குநர் சந்திரன் அவருடைய படத்தில் நடிப்பது என்றால் வேறென்ன வேண்டும்.

**கேள்வி:-தொடர்ந்து திரைப் பயணம் தொடர்பாக?**

**பதில்:-** ஆம் முதல் திரைப்படத்தை தொடர்ந்து தென்னிந்திய முன்னணி நடிகரான ஸ்ரீகாந் அவர்களுடன் இணைந்து "நெஞ்சுக்கு நீதி" என்ற திரைப்படத்தில் நடித்திருந்தேன். இது பெருந்தோட்டத்துறை பற்றி கதையை மையமாக கொண்டு உருவாக்கப்பட்டிருந்தது. அதன் பின்னர் 1978ஆம் ஆண்டு ஈழத்து நடிகரான திரு. ரகுநாதன் அவர்களுடன் இணைந்து "தெய்வம் தந்தவீடு" திரைப்படத்தில் நடித்திருந்தேன். இத்திரைப்படத்தில் கன்னிப் பெண்களைகாதல் லீலைகளால் கவர்ந்திழுக்கும் மைனர் இளைஞன் கதாபாத்திரத்தில் கலக்கியிருப்பதுடன் இப்படத்தில் ஓர் சண்டைக்காட்சியும் எனக்கு வழங்கப்பட்டிருந்தது.

**கேள்வி :- தாங்கள் பெற்றுக் கொண்ட விருதுகள் தொடர்பாக?**

**பதில் :-** ஆம் 1973ஆம் ஆண்டு முத்தமிழ் சனசமூக நிலைய விழாவில் நான் நடித்த"கலையும் கண்ணீரும்" நாடகத்தினைப் பார்த்த கலையரசர் திரு.சொர்ணலிங்கம் ஐயா அவர்களால் எனக்கு "கலைத்திலகம்" என்னும் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டேன். 2018ஆம் ஆண்டு யாழ்ப்பாண பிரதேச கலாசார அதிகார சபையினால் "கலைக்குரிசில்" விருதும் 2019ஆம் ஆண்டு யாழ்ப்பாண பிரதேச கலாசார பேரவையினால் "யாழ் ரத்தினா" விருதும் வழங்கி கௌரவிக்கப்பட்டேன்.

**கேள்வி :- ஈழத்தின் தற்போதைய நாடகத்துறையின் போக்கு தொடர்பில் உங்கள் கருத்து?**

**பதில் :-** தென்னிந்திய தொலைக்காட்சி நாடகங்கள் காரணமாக ஈழத்து நாடகத்துறை வீழ்ச்சியடைந்து செல்கின்றது. நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை, கலைஞர்களின் புலம்பெயர்வு, மக்களிடையே ஆர்வம் இன்மை காரணமாக இத்தகைய நிலை காணப் படுகின்றது. ஆரம்ப காலங்களில் கோவில் திருவிழாக்கள் சிவராத்திரி போன்ற விசேட நிகழ்வுகளின் போது நாடகங்கள் கூத்துக்கள் என்பன விடியவிடிய இடம்பெறும் இதனைக் காண்பதற்காக அயல் கிராமங்களில் இருந்தும் மக்கள் வருவார்கள். ஆனால் இந்நிலை இன்று அறவே இல்லாமல் போய்விட்டது.

**கேள்வி :- ஈழத்து தமிழ் சினிமா பற்றிய உங்கள் கருத்து?**

**பதில்:-** ஆம். தென்னிந்திய சினிமாவின் வளர்ச்சி ஈழத்து சினிமாவினை ஆட்டம் காண வைத்துள்ளது. சிறந்த பல கதைகள் ஈழத்தில் இருக்கின்ற போதும் தயாரிப்பாளர்கள் இல்லாத தன்மையினால் அவை ஏட்டில் மட்டுமே காணப்படுகின்றது. அத்துடன் ஈழத்து சினிமா பாணியை மாற்றி மக்கள் ரசிக்கும் படியிலான திரைப்படங்களை உருவாக்க இயக்குநர்கள் முன் வர வேண்டும். புலம் பெயர்ந்து வாழும் தனவந்தர்கள் இதற்கான பொறுப்புக்களை பெற்றுக் கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவீனத்திலும் நலிவுறாத பண்பாட்டோடு பயணிப்பீர் பார்போற்ற



செல்வி. தங்கராசா தமயந்தி
215/3 இராசாவின் தோட்டம்,
யாழ்ப்பாணம்.

நவீனம் நானிலத்தில் ஊடுருவி
நல்ல நல்ல வீணைகளாம் நீங்கள்
நலம் கெட புழுதியில் விழுதல் காண
இந்த நெஞ்சு பொறுக்குதில்லையே.

கருவறையில் அற்புதமாய் உதித்த அருமருந்து நீங்கள்
கணினியிலும் தொல்லை பேசியிலும்
கண்மூடித்தனமாய் காலத்தை கரைத்தே நீயும்
கல்வியோடு கலாசாரத்தை வெறுப்தேன்?

ஹெரோயின், கஞ்சா, அபின் மடியில்
சொர்க்கத்தை தேடியே, போதையில் பேதையாகி நீயும்
வக்கிரமமான வன்புணர்வுகளால் - உன்
வரலாற்றை கறைபடுத்துவதும் ஏனோ?

வீராப்புடன் வேகக்கட்டுப்பாட்டை விஞ்சி
வலிந்தே விபத்தை தழுவி
உடற்பாகத்தை உருக்குலைத்தே நீயும்
கல்லறைக்கு விரைவதேன்?

மாதவம் செய்யாமலே மாதராய்ப் பிறந்து
வாடகைக் கலாசாரத்தில் மூழ்கியே
ஆடைக்குறைப்போடு அநாகரிகமாகி
கற்பை களங்கப்படுத்தி கருக்கலைப்பு வரை செல்வதேன்?

கண்கண்ட தெய்வங்களும் , கல்வி தந்த ஆசானும்
தம் உடல், பொருள், ஆவியால்
உருவாக்கிய உத்தமர் நீங்கள்
திக்கற்று திசைமாறி தொலைத்து விடாதீர் உங்கள் முகவரியை
வீழ்ந்தே கிடந்தால் வரலாறும் வசைபோடும் உன்னை
மூவேழாம் நூற்றாண்டின் முதுகெலும்பு நீ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திர மண்டலத்தில் சாதிக்கப் பிறந்தவன் நீ
விதி எழுதிய உன் கதையை காவியமாக்கிடு

பெற்றோரும், பெரியோரும், பெரிதுவக்க
கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டோடு
மானம், குலம், கல்வியை - உன்
உயிருக்கு நிகர் என பேணிடு

தடங்கள் மாறி, யுகம் பல வந்தாலும்
பிறந்த பொன்னாட்டின் பெருமைக்காக
தூய உள்ளத்தோடு உறுதி கொண்டே
நவீனத்திலும் நலிவுறாத பண்பாட்டோடு
பயணிப்பீர் பார்போற்ற

நாம் கடந்து செல்லும்
ஒவ்வொரு மனிதனுக்கும்
நம்மைப் போலவே
ஓராயிரம் பிரச்சினைகள் இருக்கும்
முடிந்த வரை
புன்னகையாவது
பரிமாறிக் கொள்வோம்!!!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்பாட்டுடன் ஒன்றி வாழாமையால், நவீன உலகில் நாம் எதிர்கொள்ளும் சவால்கள்.........



**திருமதி. பெனட் கிறிஷாந்தி**
அபிவிருத்தி உத்தியோகத்தர் (உளவளத்துணை)
பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்



பண்பாடு என்றால் "பண்பட்டு ஒழுகுதல்" என்று பொருள். மேலும் பண்பாடு என்பது மக்கள் குழுவொன்று தமது சமூகத்தின் வரலாற்று வளர்ச்சிப் படியினூடாக உருவாக்கிக் கொண்ட பௌதீகப் பொருட்கள், ஆன்மீகக் கருத்துக்கள், மத அனுஸ்டானங்கள், சமூக விழுமியங்கள் என்பனவற்றை ஒன்றிணைத்த ஒரு பல்கூட்டுத் தொகுதி ஆகும்.

உலக பண்பாட்டு வளர்ச்சிக்கான துறைகளில் ஐக்கிய நாடுகள் சபையின் யுனஸ்கோ நிறுவனம் கூடிய அக்கறை காட்டி வருகின்றது. உலக நாடுகளின் வளர்ச்சிக்கு பொருளாதாரமும், பண்பாடும் அடிப்படையாகும்.

இன்று அனைத்துலக சமுதாயம் முன்னேற்றம் எனக்கருதுவது பொருளாதாரக் கூறுகள், சமூகவியல் கூறுகள், பண்பாட்டுக் கூறுகள் அனைத்தும் பிணைந்த முன்னேற்றத்தையே. ஏனெனில் ஒவ்வொரு மனிதனுக்கும், ஒவ்வொரு மக்கட் கூட்டத்திற்கும் அவரவர் தம் பண்பாட்டைப் பொறுத்தே சிறப்பு அமைகின்றது. எனவே மனிதனின் தனித்துவப் பண்புகள் பேணப்பட வேண்டும்.

கலைப்படைப்புக்கள் மட்டுமன்றி, அறிவுத்திறன், உண்ணும் உணவு, உடை, உறையுள், குடும்ப உறவுகள், சமுதாய உறவுகள் போற்றும் நெறிமுறைகள், கல்விமுறை, சிந்தனை, எதிர் பார்ப்புக்கள், நம்பிக்கைகள், புதியவருடன் பழகுதல் போன்ற வாழ்க்கையின் பல்வேறு அம்சங்களிலும் பண்பாடு வெளிப்படுத்தப்படுகின்றது. ஆகவே ஒரு இனத்தின் உயர்வு அதன் பண்பாட்டுப் பாரம்பரியங்களிலேயே தங்கியுள்ளது.



அந்தவகையில் உலகில் உள்ள பண்பாடுகளுள் சிறந்ததும், முதன்மையானதும் தமிழ்ப் பண்பாடே ஆகும். தமிழ் கலாசாரம் மொழி, இலக்கியம், இசை, நடனம், நாட்டுப்புறக் கலை, தற்காப்புக் கலை, ஓவியம், சிற்பம், கட்டிடக் கலை, விளையாட்டு, ஊடகங்கள், நகைச்சுவை, உணவு, ஆடைகள், கொண்டாட் டங்கள், தத்துவம், மதங்கள், மரபுகள், சடங்குகள் மூலம் தொன்று தொட்டு அறிவியலை வெளிப்படுத்தி வருகின்றது. மற்றும் பழம் தமிழரின் தொழில் நுட்பம் இன்றைய தொழில்நுட்ப வல்லுனர் களை அதிசயிக்கச்செய்கின்றது என்றே கூறவேண்டும்.

இன்றைய நவீன தொழில்நுட்ப வளர்ச்சியினால் பண்பாடுகள் பாதிக்கப்படுவதாகவும் விமர்சிக்கப்படுகின்றது. அதாவது புதிய உலகத் தொடர்புகள், தகவல் தொடர்பாடல் துறையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ச்சி, செய்திப் பரிமாற்றம் என்பன உலகப் பண்பாடுகளை அவற்றின் தனித்துவத்தைக் கடந்து ஒன்றோடொன்று நெருங்க வைத்துள்ளன. மேலும் உலகம் ஒரு கிராமமாக மாற்றப்பட்டு சர்வதேச ரீதியான பண்பாட்டுக் கோலங்களை சகலரும் அறிந்து ஒழுக இவை பூரணமாக உதவி வருகின்றன என்பதையும் மறுதலிக்க முடியாது.



பறவைகள், விலங்குகளுக்கும் கூட பண்பாடு உண்டென நினைக் கின்றேன். நான் பார்த்து வியந்த பறவையில் தூக்கணாங் குருவியும் ஒன்று. அதன் கூடு மிகவும் அற்புதமான ஒரு கலைநயமும், வியப்பும் ஊட்டும் ஒரு படைப்பு. தூக்கணாங்குருவி மிகவும் சிறிய பறவை என்பதுடன், அதன் அலகு மிகவும் சிறியது. அது தனது அலகினால் மிகவும் நுணுக்கமாகவும், நிதானத்துடனும். பொறுமை பிசகாமலும், நுண்ணறிவுடனும், கலைநயத்துடனும் அக் கூட்டை மழை வெயில் தாக்காமலும், எதிரிகள் உள் நுழையாமலும், தனது குஞ்சுகள் பாதுகாப்பாக இருக்க பஞ்சுகளைக் கொண்ட மெத்தையையும் உள்ளே உருவாக்கியிருக்கும். மேலும் தனது குஞ்சுகளுக்கு வெளிச்சம் கிடைப்பதற்காக, சிறிது மண் களியில் மின்மினி பூச்சிகளை ஒட்டி விடுவதையும் அவதானிக்க முடிகின்றது. ஆகவே இப் பறவைகள் காலம் காலமாக அற்புதமாக தமது பண்பாடுகளைக் கடைப்பிடித்து வருவதை அவதானிக்க முடிந்தது.

இன்றைய நவீன நாகரிக போட்டி மிக்க உலகில் ஒவ்வொரு தனியனும் தனது இருப்பைத் தக்க வைத்துக் கொள்வதற்காக, பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுத்தே ஆகவேண்டியுள்ளது. அந்த வகையில் ஒவ்வொருவரும் தத்தமது பண்பாட்டுக் குழுமங்களுடன் இணைந்தே தமது படிநிலை பருவ வளர்ச்சியில் ஒன்றித்து வாழ்ந்து வருவதுடன், தமக்கெனத் தனித்துவத்தைப் பேணி வருகின்றனர்.

ஆரம்ப காலங்களில் ஒவ்வொரு பிரதேசத்தின் காலநிலை, இடத்தின் தன்மை, பிரதேசத்தின் வளங்கள், தொழில், சமய நம்பிக்கையின் அடியாக ஒவ்வொரு பண்பாடுகளும் மிகச்சிறப்பாகக் கடைப்பிடிக்கப்பட்டு, ஆரோக்கியமான வாழ்க்கை முறையை வாழ்ந்து வந்தனர்.

நவீன தொலைத்தொடர்பு சாதனங்கள் இல்லாமையினால் பண்பாடுகள் கலப்பின்றியும், தேய்வின்றியும், தொய்வின்றியும், இறுக்கமான கட்டமைப்பினுள் காணப்பட்டமையால், பண்பாட்டினுள் மக்கள் மகிழ்வுடனே வாழ்ந்தார்கள் என்று சொல்ல வேண்டும்.

ஆனால் இன்றைய நவீன பண்பாட்டு நாகரீக உலகில் பண்பாடுகள் கடைப்பிடிக்கப்பட்டு வந்தாலும், ஆரம்ப காலம் போன்று அதற்காக செலவழிக்கும் நேரம் குறைவடைந்துள்ளதுடன், தமக்கான பண்பாட்டுடன் ஏனைய பண்பாடுகளில் சிலவற்றையும் உள்வாங்கி பண்பாட்டுக் கலப்புடன் இணைந்த வாழ்க்கை முறையை காணக்கூடியதாக உள்ளது. மேலும் இன்றைய வளர்ந்துவரும் நகரப்புறங்களை அண்டிய மக்கள், தமது பண்பாடுகளைக் கடைப்பிடிப்பதில் ஆர்வம் இன்றியும், அதை அநாகரிகமாகவும் பார்க்கும் தன்மையும் காணப்படுகின்றது. இதனால் நாகரிகம் என்ற பெயரில் ஒவ்வொரு தனியனும் தனிமைப்படுத்தலுக்கு உட்பட்டு காலப் போக்கில் சமூக ஆதரவின்றி மனஉளைச்சலுக்கு உள்ளாவதனை கண்கூடாக காண முடி கின்றது. ஆகவே ஒவ்வொரு தனியனதும் தனித்துவமான பண்பாட்டு நடைமுறை, ஒவ்வொரு தனியனதும் உடல் உள ஆரோக்கிய வாழ்க்கை முறைக்கு அடிப்படையாக அமைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இன்றைய எதிர்கால தலைமுறையினர் தமது பண்பாடுகளைக் கடைப்பிடிப்பதில் ஆர்வமின்மையும், பண்பாடுகள் எதிர்கால தலைமுறைக்கு கடத்தப்படுவதில் ஏற்படும் தடைகளும், இன்று பண்பாடுகள் பின்பற்றப்படாமைக்கு முக்கிய காரணங்களாக அமைகின்றது. மேலும் இன்றைய நவீன யுகத்தில் உலகமே ஒரு கிராமமாக மாறியுள்ள நிலையிலும், தேடல்கள் அதிகரித்துள்ள நிலையிலும், பண்பாட்டு இறுக்கமான கட்டமைப்புத் தளர்த்தப்பட்டு, ஒவ்வொருவரும் மற்றவரின் பண்பாடுகளில் சிலவற்றை ஆர்வமுடன் உள்வாங்குவதுடன், மதிக்கவும் செய்கின்றனர்.

உதாரணமாக மேலைத்தேய நாட்டவர் நல்லூர் ஆலயத்தைத் தரிசிக்கச் செல்லும்போது அதற்குரிய பண்பாட்டு உடையுடன் செல்வதையும், தமிழ் மொழியைக் கற்று பேசுவதையும், தமிழ் முறைப்படி திருமண சடங்குகளை நடாத்துவதில் ஆர்வம் காட்டுவதையும் அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது.

மேலும் பண்பாடுகள் பொருளாதாரத்திலும் செல்வாக்குச் செலுத்துகின்றது. உதாரணமாக நத்தார் காலங்களில் எந்தவித மதம் சார்ந்த பாகுபாடுமின்றி அனைத்து விற்பனை நிலையங்களும் நத்தாருக்காக அலங்கரிக்கப்பட்டிருப்பதை அவதானிக்கக் கூடியதாக இருக்கும். இவை எல்லாமே ஒவ்வொருவரின் பண்பாடுகளும் மதிக்கப்படுவதற்கான உதாரணங்கள் ஆகின்றது. மேலும் இன்று தேடல்கள் அதிகரித்த நிலையில் பலர் ஒவ்வொரு நாடுகளுக்கும் சென்று அவர்களின் பண்பாடுகளை அறிந்தும், அதை உள்வாங்கியும் கொள்கின்றனர். மேலும் நவீன தொலைத்தொடர்பு சாதனங்கள் வெளிநாட்டவரின் வருகை இவற்றாலும் புதிய பண்பாடுகளை அறிந்து கொள்வதுடன், தமது பண்பாட்டையும் உலகறியச் செய்கின்றனர்.

இவ்வாறாக பண்பாட்டுப் பரவுகையும், பண்பாட்டுக்கலப்பும் நாளுக்குநாள் இடம்பெற்று வருவதுடன், **"மாற்றமொன்றே மாறாதது"** என்ற கருத்துக்கு அமைய மாற்றங்கள் எம் ஒவ்வொருவரின் வாழ்விலும் தொடர்ந்து இடம்பெற்றே வருகின்றது.

இன்றைய நவீன தொழில்நுட்ப வளர்ச்சி, திறந்த பொருளாதாரம் மற்றும் நவீனத்துவம் என்ற போர்வைக்குள் மூழ்கி ஒவ்வொரு தனியனும் இரத்தமும் சதையும், உணர்வுகளும் உள்ள தமக்கு அருகில் உள்ள மனிதர்களுடன் தமது தொடர்பாடலை ஏற்படுத்தாது, இயந்திரங்களுடனும், நவீன தொடர்பு சாதனங்கள் ஊடாக இணைய வழித்தொடர்பாடல்களை ஏற்படுத்தி தமது நேரத்தையும், காலத்தையும் வீணாக்கிக்கொண்டு இருப்பதனால், மனிதர்களுக்கிடையிலான நேரடித் தொடர்பாடல் கலாசாரம் குறைவடைந்தும் வருகின்றது.

இதனால் ஒருவரை ஒருவர் பார்த்துப் புன்னகைக்க முடியாமலும் ரோபோக்கள் போன்று அருகில் உள்ளவரை மறந்து எங்கோ தொலைவில் உள்ளவருடன் தொடர்பாடலை ஏற்படுத்திக் கொண்டும் இருக்கின்றோம். இதனால் அருகில் வசித்துவரும் தாத்தா, பாட்டி, பெற்றோர், சகோதரர்கள், உறவுகள், நண்பர்களிடையே, எமது ஆரோக்கியமான தொடர்பாடலை வளர்த்துக்கொள்ளாது, எங்கோ இருப்பவர்களுடன் எமது இணையவழித் தொடர்பாடலை வளர்த்து வருவதனால், முரண்பாடுகள் வரும்போது சரியான தொடர்பாடல் வழியாக புரிந்துணர்வை ஏற்படுத்த முடியாது உறவுகள் முறிவடையும் போது, தனிமைப்படுத்தல் ஏற்படுகின்றது. இதனால் அன்பு தேவைகள் பூர்த்தி செய்யப்படாமலும், அவசர உதவிகள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரியான ஆலோசனைகளைப் பெறப்படாமலும், தனிமைப்படுத்தல், மனச்சோர்வு, தற்கொலை எண்ணம், தற்கொலைகள், வாழ்க்கையில் பிடிப்பின்மை, விரக்தி போன்ற உளவியல் சார் பிரச்சனைகளுக்கு முகம்கொடுத்தும் வருகின்றோம்.

அருகில் எத்தனையோ மனிதர்கள் உதவுவதற்கு தயாராக உள்ள போதும், நாகரிகம் என்ற பெயரில் 'ஸ்மாட் போணில் செல்பி' எடுக்கும் ஆர்வத்தில், மலைகளிலும், பள்ளத்தாக்கிலும், நீர் நிலைகளிலும், வீதிகளில் வாகனங்களிலும் அடிபட்டு இறப்பவர்கள் பலர். தமது புகைப் படங்களை இணையங்களில் உலவவிட்டு, அதற்காக எத்தனை விருப்புகள் கிடைக்கின்றது என மற்றவரின் அங்கீகாரத்திற்காக எதிர்பார்த்து ஏமாற்றமடைந்தும், மனஉளச்சலுக்கு இன்று எத்தனைபேர் ஆளாகிவருகின்றனர். மேலும் இணைய விளையாட்டுகளுக்கு ஆளாகி தமது நேரத்தையும், கல்வியையும், உறவுகளையும் தொலைத்து வருபவர்கள் எண்ணிலடக்க முடியாதோர்.

மேலும் தொடர்சியாக இலத்திரனியல் சாதனங்களின் திரைகளைப் பார்த்துக்கொண்டே இருப்பதனால், கண்கள் பாதிக்கப்பட்டும், மூளை அதற்கு பழக்கப்பட்டும், இரவில் நித்திரை செய்ய முடியாமலும், அதற்காக மருந்து உட்கொண்டு நித்திரை செய்ய முயற்சிப்பதனாலும், உடல் சோர்வு, சோம்பல், வேலையில் நாட்டமின்மை, மனச்சோர்வு, அதிகமாக கோபப்படுதல், கவனக்குறைவு போன்ற பல்வேறு சிக்கல்களுக்கு முகங்கொடுக்க வேண்டி உள்ளது. இதனைத்தான் கூறுவார்கள் உலகில் ஒருவன் எத்தனை கோடி சொத்தை வைத்திருந்தாலும், படுத்த உடனே நித்திரை செய்பவனே, உலகில் பெரிய பணக்காரன் என சொல்லக் கேள்விப்பட்டிருப்போம்.

போட்டியும், பொறாமையும், எதிலும் திருப்தியின்மையும், பணம் பொருள் சேர்ப்பது மட்டுமே வாழ்க்கை என நினைத்து, சக மனிதனை மதிக்காது வாழ்வதனால் இன்று பலர் உடல் உள ஆரோக்கியம் இழந்து வாழ்க்கையில் பிடிப்பின்றி வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

எமது ஆரம்ப கால வாழ்க்கை முறையை ஒரு சிறு புனைகதையூடாக கூறலாம் என விளைகின்றேன். ஒரு இளவரசன் தனது நாட்டை ஆட்சி செய்து வரும் போது, அவனது ஆட்சிக்காலத்தில் நாட்டில் மக்கள் தனது தந்தையின் காலத்தைப்போன்று செல்வச்செழிப்புடன் வாழாமை கண்டு மிகுந்த வேதனை அடைந்திருந்தான். இதனால் தனது மக்களின் பொருளாதாரத்தை உயர்த்துவதற்காக, மக்களைக்கொண்டே புதிய முயற்சிகளை எடுத்து வந்தான். அக்காலப்பகுதியில், ஒரு விவசாயி தனது வயலை உழும் போது விசித்திரமான முட்டை போன்ற அமைப்பு உடைய ஒரு பொருள் கிடைத்ததாகவும், அது என்னவென தெரியாது அரசனிடம் கொண்டு வந்தான். அரசனும் மந்திரிகளிடம் கொடுத்து அப்பொருளை என்னவென அறிய முயற்சித்தார். ஆனாலும் அது என்னவென்று யாருக்கும் தெரியவில்லை. ஆகவே ஊரில் உள்ள மிகுந்த வயதானவரிடம் அப் பொருளை கொண்டு சென்று விசாரித்தனர். அவ் வயதானவர் அப்பொருளைப் பார்த்துவிட்டு, இது எங்கள் காலத்தில் விளைந்த நெல்மணியில் வரும் அரிசி வகை என்றார். அதை மற்றவர்களால் நம்ப முடியாது பார்ப்பதை உணர்ந்து, அவ் வயதானவர் கூறினார். எமது காலத்தில், எமது மக்களிடையே போட்டி பொறாமை இல்லை, எங்களிடையே ஒற்றுமை காணப்பட்டது, ஒருவருக்கு ஒருவர் உதவி செய்தல், விட்டுக்கொடுத்தல், பழிவாங்காமை, கூட்டுணர்வு, பகிர்வு இவ்வாறான நற்பண்புகளுடன் நாம் ஒற்றுமையாக வாழ்ந்தமையால் இயற்கையும் எமக்கு அற்புதமான விளைவுகளைத் தந்தது. நாமும் மிகுந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வச்செழிப்புடனும், மகிழ்ச்சியாகவும் வாழ்ந்தோம். அதனால் கிடைத்த பயனே இவ் நெல்மணி என குறிப்பிட்டார்.

ஆகவே எமது பண்பாட்டினடியான வாழ்க்கை முறை எமது ஆரோக்கியமான வாழ்க்கை முறைக்கு வழிகோலுகின்றது.

இன்றைய நவீன உலகில் பண்பாடுகள் மறக்கப்பட்டுவரும் நிலையில், இன்றைய குடும்பங்களில் ஒரே கூரையின் கீழ் ஒரே குடும்பமாக வாழ்ந்தாலும், கணவன் மனைவியிடையான தொடர்பாடல்கள் குறைவடைந்து, தொலைக்காட்சித் தொடர் நாடகங்களுடன் பல பெண்களும், இணையங்களுடன் பல ஆண்களும் தமது நேரத்தைச் செலவழித்தும் வருவதனால் மூன்று நேர உணவில் ஒரு நேரம் கூட ஒன்றாக இணைந்து உணவு உண்ண நேரம் ஒதுக்காமையால், குடும்பத்தில் பல்வேறு குறை நிறைகளை அறிய முடியாமலும், பிள்ளைகளின் தேவைகளை, மாற்றங்களை அறியமுடியாமலும் பல குடும்பங்களில் பெற்றோர் காணப்படுகின்றனர்.

இதனால் இன்று பிள்ளைகளின் வளர்ச்சிப்படிநிலையில் ஏற்படும் மாற்றங்களைப் பெற்றோர் அவதானிக்காமையினால், பல பிள்ளைகள் தமது கட்டிளமைப் பருவ காலங்களில் தனிமையை கூடுதலாக விரும்புவதுடன், தமது வயதை ஒத்த நண்பர்களிடம் தமது சந்தேகங்களைத் தெளிவு படுத்த விளைவதுடன், தீய நண்பர்களின் சேர்க்கை, தனிமையில் இணைய விளையாட்டுக்கள் மற்றும் இணைய சமூக வலைத்தளங்களுக்கு அடிமையாகுதல், பெற்றோரின் சொல்லைக் கேட்க மறுத்தல் போன்ற பல்வேறு பிரச்சனைகளால், இன்றைய எதிர்கால சந்ததி போதைக்கும், சமூக வலைத்தளங்களுக்கும், கொலை. கொள்ளை போன்ற தீய பழக்கங்களுக்கும் ஆழாகி வருகின்றனர்.

மேலும் இன்றைய வளர்ந்து வரும் எம் பிள்ளைகள், தமது அநாவசியத் தேவைகளைப் பெற்றோர்கள் பூர்த்தி செய்யாத போது தற்கொலை செய்தும், தற்கொலை செய்து கொள்ளப்போவதாக மிரட்டல்கள் விடுப்பதும் அதிகரித்து வருகின்றது. அத்துடன் கட்டிளமைப் பருவத்தில் ஏற்படும் எதிர்பால் கவர்ச்சியை சரியாக கையாள முடியாது தற்கொலை செய்து கொள்வதையும், அதை சம்மந்தப்பட்டவரை நேரடியாக இணையம் ஊடாக பார்க்கச் செய்வதும் ஒரு கலாசாரமாக மாறிவருவது மிகவும் கவலைக்குரிய விடயமாக காணப்படுகின்றது.

இவ்வாறு பிள்ளைகள் பாதிக்கப்படுவதற்கு பெற்றோரும் காரணமாகின்றனர். ஆரம்ப காலங்களில் எமது பண்பாட்டுடன் இயைந்த வாழ்முறையுடனும், சமய விழுமியங்கள், அறநெறி, மறைஅறிவு, மற்றும் ஒழுக்க விழுமியங்கள். பெற்றோரின் கட்டுப்பாடு, பெரியவரின் அறிவுரைகள் என சிறுவயது முதல் நற் பண்பாடுகளுள் வாழ்ந்து வந்த நாம், இன்று பிள்ளைகளின் மீது அதீத அன்பு வைத்துள்ளோம் என்ற பெயரில், பிள்ளைகளைக் கண்டித்துத் திருத்தாது, பிள்ளைகளை சுயமாக சிந்திக்க விடாது, என் பிள்ளை எந்த கஸ்ரமும் படக்கூடாது என்ற பெயரில் பிள்ளை எதுவும் கேட்க முன்பே அனைத்துத் தேவைகளையும் நிறைவேற்றி வைக்கின்றனர்.

மேலும் சில பெற்றோர்கள் பிள்ளைகளை, ஏனைய பிள்ளைகளுடன் ஒப்பிட்டுக் கதைத்தல், மட்டம் தட்டுதல், அவர்களின் திறமைகளை இனங்கண்டு பாராட்டாமை இவற்றால் இன்றைய எதிர்கால சமூகம் தமது திறன்களையே இனங்காண முடியாத கையறு நிலைக்குள் சென்று கொண்டிருக்கின்றது. ஆகவே ஒவ்வொரு தனியனது வளர்ச்சிக்கும் பாராட்டுக்கள் மிகவும் அவசியமானது.. இன்று எமது சமூகத்தில் ஒருவர் ஒருவரைப் பாராட்டுவது, நன்றி தெரிவிப்பது போன்ற விடயங்கள் அருகிவருவதை அவதானிக்க கூடியதாகவுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் சிறு வயது முதல் பிள்ளை தமக்குத் தொந்தரவு தரக்கூடாது என்பதற்காக, ஸ்மாட் கையடக்கத் தொலைபேசிகளை பிள்ளையின் கையில் கொடுத்தும், தனி அறையில் இணைய தொடர்புகளை ஏற்படுத்திக் கொடுத்தும், பிள்ளைகள் அவற்றைக் கையாள்வதை மற்றவருக்கு பெருமையாக சொல்லியும். அதை ஒரு அந்தஸ்தாக பெற்றோர் கருதுவதாலும், இன்று பிள்ளைகள் விடும் பிழைகளைக் கண்டு பிடிக்கும் அளவுக்குப் பெற்றோருக்கு கணனி அறிவு இல்லாமையாலும் பிள்ளைகளின் பிழைகளைக் கண்டு பிடிக்க முடியாது பெற்றோர் திண்டாடுகின்றனர்.

மேலும் பெற்றோர் தனது பிள்ளை படித்து நல்ல நிலைக்கு வரவேண்டும் என்ற நோக்கில் சமூக செயற்பாடுகளில் பிள்ளைகள் கலந்து கொள்வதைத் தவிர்த்தும், வெள்ளி மற்றும் ஞாயிறு தினங்களில் பிள்ளைகளை கோவிலுக்கு அழைத்துச் செல்லாது தனியார் கல்வி நிலையங்களுக்கு பிள்ளைகளை அனுப்புதல், இவ்வாறான எமது செயற்பாடுகளால் ஆன்மீக தேடலின்றி, ஒழுக்க விழுமியங்களுக்கு கட்டுப்படாது, மனச்சாட்சிக்குக் கட்டுப்படாது பிள்ளைகள் சரி எது பிழை எது என தெரியாது தமது எதிர்காலத்தை சரியாக அமைக்க முடியாது பிழையான வழியில் செல்கின்றனர். இதனால் இன்றைய பெற்றோர் பிள்ளைகளை வீட்டில் கண்டித்துத் திருத்தாமையால், வீதி தண்டிக்கின்றது.

இன்று பல பெற்றோர் பிள்ளைகள் கேட்கும் பொருட்களை மட்டும் வேண்டிக்கொடுத்தால் போதுமானது என நினைக்கின்றனர், பிள்ளைகள் அடிப்படைத் தேவைகளை மட்டுமல்ல அன்புத் தேவையையும் பெற்றோரிடம் எதிர்பார்த்து நிற்கின்றனர். இன்று எம்மில் பலர் வேலை வேலை என்றும், பிள்ளைகளுக்கு உழைத்துச் சேர்க்க வேண்டும் என்றும் தினம் தினம் ஓடிக்கொண்டு இருக்கின்றோமே தவிர பிள்ளைகளுடன் போதுமான நேரம் செலவழிப்பதில்லை. சிறுபராயத்தில் அன்பு, அரவணைப்பு கிடைக்காத பிள்ளைகள் அன்புக்கு ஏங்குபவர்களாகவும், சமூக விரோத செயற்பாடுகளில் பின்பு ஈடுபடுபவர்களாகவும் மாற பெற்றோர்களே காரணமாகின்றனர்.

ஆகவே பிள்ளைகளை அன்புடனும் , கண்டிப்புடனும் , ஒழுக்க விழுமியங்களை கற்றுத் தந்தும், எமது பண்பாட்டுடன் இயைந்த வாழ்க்கையை சிறுவயது முதல் வாழக் கற்றுத்தர வேண்டியதும் பெற்றோர்களின் கடமையாகும்.

இன்று பிள்ளைகள், சிறு ஏமாற்றத்தையும் தாங்கிக்கொள்ளும் சக்தி அற்றவர்களாகவும், தமக்கு வேண்டிய பொருள் உடனே கிடைக்காமையால் பெற்றோரை மதிக்காமலும், தற்கொலை மிரட்டல்களைப் பெற்றொருக்குக் கொடுப்பவர்களாகவும் மாறியதற்கு காரணம், பெற்றோர் பிள்ளைகளைக் கண்டிக்காது வளர்த்துவிட்டு, பிள்ளையின் பிரச்சனைகள் அதிகமானதும் திடீர் என கண்டிக்க விளையும் போது பிள்ளையால் அதை ஏற்றுக்கொள்ள முடிவதில்லை. இதனைத்தான் பெரியவர்கள் கூறுவார்கள் "நீண்ட கயிற்றில் விட்டுவிட்டு இப்ப இறுக்கி கட்டினால் இப்படித்தான் ஆகும்" என்று கூறுவதைக் கேட்டிருப்போம்.

இன்று சிறைச்சாலைகளிலும், சிறுவர் சீர்திருத்தப் பள்ளிகளிலும் வாடும் சிறுவர்கள், இளையோர் பெற்றோராலும் பெரியவராலும் கண்டித்துத் திருத்தப்படாமலும், அநாதரவாகவும், தண்டனை அற்ற அன்பினாலும் கொலை, கொள்ளை, கற்பழிப்பு மது மற்றும் போதைப் பாவனை போன்ற சமூக விரோத செயல்களால் சிறைவாசம் அனுபவிக்கின்றனர்.

இவற்றிற்கு இன்றைய முதியோர் தமது கடமை முடிந்தது என ஒதுங்கும் நிலையும் ஒரு காரணமாகும். முதியோர் தாம் சொல்ல வேண்டிய கருத்துக்களைச் சொல்லவேண்டிய இடத்தில் சொல்லி இன்றைய இளம் சமூகத்தை நல்வழிப்படுத்த துணிவுடன் முன் வர வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகவே என்ன பழக்க வழக்கமானாலும் சிறுவயது முதல் பிள்ளைகள் பெற்றோரைப் பார்த்துக் கற்றும், பெற்றோர்கள் நற்பண்புகளைக் கற்பித்தும் வரவேண்டும். கல்வியை மட்டும் கொடுத்து நற்பழக்கவழக்கங்களையும், பண்பாட்டையும் பிள்ளைக்கு கொடுக்காமல் விடும்போது. அப்பிள்ளை எதிர்காலத்தில் என்ன பதவியில் இருந்தாலும் பண்பாடு தெரியாதவர் என புறந்தள்ளப்படுவதை எமது அனுபவத்தில் கண்டிருப்போம்.

ஆகவே ஒரு சிறு கதையூடாக விளக்கலாம் என நினைக்கிறேன். பழிங்குச் சிலைகள் உள்ள ஒரு காட்சியகத்தில் உள்ள ஒரு அழகிய சிலையைப் பார்ப்பதற்காக உலகம் பூராகவும் உள்ள ஆர்வலர்கள் அவ் காட்சியகத்திற்கு வருகை தந்து அச் சிலையை வியப்புடன் பார்வையிட்டுச் சென்றனர். அப்போது அருகில் உள்ள சிலை, அவ் வியப்புக்குரிய அழகிய சிலையிடம் கேட்டது, ஏன் உன்னை மட்டும் பார்ப்பதற்கு அலை அலையாய் மக்கள் வருகின்றனர், என்னை மட்டும் யாரும் திரும்பியே பார்ப்பதில்லை என அவ் அழகிய சிலையிடம் கேட்டது. அதற்கு அவ் அழகிய சிலை கூறியது. நாம் இருவரும் ஒரே பழிங்குப் பாறையில் உடைக்கப்பட்டு, ஒரே ஆயுதங்களைக் கொண்டு, ஓரே சிற்பியால் செதுக்கப்பட்டோம். ஆனால் உன்னை சிற்பி செதுக்கும் போது பொறுமையாக அனைத்து வலிகளையும் தாங்க முடியாது உன் பொறுமையை இழந்தமையால், உன்னை முழுமையாக சிற்பியால் செதுக்க முடியவில்லை. ஆனால் என்னை சிற்பி செதுக்கும் போது அனைத்து வலிகளையும் தாங்கிக்கொண்டு, முழுமை அடையும் வரை பொறுமையுடன் அனைத்தையும் சகித்துக்கொண்டு எனது இலக்கை அடைந்தேன். அதனால் இன்று மற்றவர் என்னைத் திரும்பி பார்க்கும் அளவுக்கு அற்புதமான சிற்பமாக காட்சியளிக்கின்றேன் என்று கூறியதாம்.



இப்படித்தான் எமது வாழ்க்கையும். வாழ்க்கையில் இன்பமும் துன்பமும் மாறி மாறியே வரும். எமக்கு வரும் கஸ்ரங்களை நல்லமுறையில் எதிர்கொள்வதற்கு நாமும் பழகிக்கொள்ளும் போது, தோல்விகள் ஒவ்வொன்றும் அனுபவங்களாக நம்மை வாழ்க்கையின் உயரத்துக்குக் கொண்டு செல்லும்.

பனைமரங்களுக்கு யாரும் தண்ணீர் ஊற்றுவதும் இல்லை, பராமரிப்பதும் இல்லை. ஆனாலும் பனைமரங்களில் இருந்து முழுப்பயனையும் மனிதர் பெற்றுக்கொள்வதுடன், கற்பகதரு எனவும் அழைக்கின்றார்கள் அவ்வாறு யாரிடமும் தங்கி நிற்காது தானே தனக்கான சரியான முடிவுகளை எடுக்க பிள்ளைகளை சிறுவயது முதல் பழக்கப்படுத்த வேண்டும்.

இன்று பெரும்பாலான திருமணமான குடும்பங்கள், திருமணமாகி ஆறு மாதம் முதல் மூன்று வருடத்திற்குள் விவாகரத்துக் கோருவதற்கான முக்கிய காரணங்களாக, புதிய குடும்ப உறவுகளுக்கு முகங்கொடுக்க முடியாமை, விட்டுக்கொடுத்துப் போக முடியாமை, குடும்பத்தில் இரண்டாம் நபரது தலையீடு, தமது குடும்ப பிரச்சனைகளுக்கு தாம் முடிவெடுக்காமை, பணம் மற்றும் சொத்து தொடர்பான ஆசை, கணவனோ மனைவியோ வேறு தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ளல், விட்டுக்கொடுக்காமை, அன்பை விட அதிகாரம் மேலோங்குதல், உளவியல் உடலியல் தேவைகள் பூர்த்தி செய்யப்படாமை, போதைப்பாவனை, பாலியல் விலகல் செயற்பாடுகள் இவற்றால் குடும்ப பிரிவுகள் தற்போது அதிகரித்து வருகின்றன.

இவற்றிற்கு அடிப்படைக் காரணங்கள் பெற்றோர் பிள்ளைகளை சிறுவயது முதல் முடிவெடுக்க விடாமை. அதாவது பிள்ளை அணியும் உடை முதல் உணவு, நண்பர்கள், கல்வி மற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்கால இலக்கு அனைத்தும் பெற்றோரே தெரிவு செய்து கொடுக்கின்றனர். திருமணத்தின் பின்பு புதிய நடைமுறைகளையுடைய குடும்பத்தினுள் பிள்ளை வாழ முடியாது தத்தளிக்கும் போதும், பிள்ளை அதற்குள் பழக்கப்படும் முன்பு, அன்பு அரவணைப்பு என்ற பெயரில் மற்றவரின் குடும்ப பிரச்சனைக்குள் தலையிட்டு, சிறிய பிரச்சனையை பெரிதாக்கி விடுவதுடன், பெற்றோரின் ஆதரவு அடிக்கடி கிடைப்பதனால் பிள்ளை நிரந்தரமாக தனது கணவனையோ மனைவியையோ பிரிந்து விவாகரத்து வரை செல்கின்றனர். இதற்கு அடிப்படை எமது எதிர்கால சந்ததிக்கு நம் பண்பாடுகள் செல்லித்தரப்படாமையே ஆகும்.

மேலும் இன்று பொருளாதாரத் தேவைகளுக்காக, வெளிநாடுகளில் உள்ளவர்களைத் திருமணம் செய்து, குறிப்பிட்ட காலத்திற்குள் அவ் நாடுகளுக்குச் செல்ல முடியாதும், வேலைக்காக வெளிநாடு சென்றவர்களின் வாழ்க்கைத் துணையினர், தமது தொடர்பாடலை இணையங்கள், மற்றும் தொலைபேசி ஊடாகவே ஏற்படுத்திக்கொள்கின்றனர். இவர்களில் சிலர் தமது வாழ்க்கைத்துணையை சந்தேகப்பட்டோ, கோபப்பட்டோ, அது சண்டையில் முடியும்போது. கணவனோ மனைவியோ நேரடியாக இணையத்தினூடாக பார்த்துக்கொண்டு இருக்கும்போது தற்கொலை செய்வதும், இதைத் தடுக்க முடியாது வாழ்க்கைத்துணை தவிப்பதும், இன்றைய பரிதாபங்கள். மேலும் கணவனை மனைவியும், மனைவியைக் கணவனும், தாயைப் பிள்ளையும், பிள்ளையை தாயும், சகோதரங்களை சகோதரங்களும், காசுக்காகவும், போதைக்காகவும் இரக்கமற்ற முறையில் கொலை செய்வதும், இன்று பண்பாட்டுடன் மக்கள் வாழாமைக்கான அடிப்படைகள் ஆகின்றது.

இவ்வாறான சவால்களை எதிர்கொள்வதற்கு, ஒரு பிள்ளை கருவில் உருவானதில் இருந்து அத் தாய் உடல் உள ஆரோக்கியத்துடன் இருக்க வேண்டும் என சொல்லக் கேள்விப்பட்டிருப்போம். ஒரு குழந்தையின் உருவாக்கம், கரு உருவாக்கத்தில் தான் தங்கியுள்ளது என பல ஆராய்ச்சிகளினால் நிரூபிக்கப்பட்டாலும் கூட, குழந்தை ஒன்றைப் பெற்றெடுக்க உறவு கொள்ளும் போது பெற்றோருக்கு இருக்கும் மனநிலையானது குழந்தையின் ஆரோக்கியத்தில் பங்காற்றுகின்றது. பெற்றோரின் மனநலம், உடல்நலம் குழந்தையின் உடல், உள ஆரோக்கியத்தில் செல்வாக்கு செலுத்துகின்றது.



எதிர் மறையான உணர்வுகளுடனும், எதிர் மறையான மனப்பதிவுகளுடனும் இருந்தால் அது கருவைப் பாதிக்கும். ஆகவே தாழ்வு மனப்பான்மை, பயம், கோபம், விரக்தி போன்ற எதிர் மறையான உணர்வுகளைக் கொண்ட பெற்றோர்கள் ஆரோக்கியம் குன்றிய குழந்தைகளையே பெற்றெடுக்கின்றனர். பெற்றோர்கள் அன்புடனும் , புரிந்துணர்வுடனும், உணர்வுகளைப் பகிர்ந்து கொண்டும், அவ் உணர்வு நிலையில் குழந்தையைப் பெற்றெடுக்க இணையும் பெற்றோர் ஆரோக்கியமான குழந்தையைப் பெற்றெடுக்கின்றனர்.

மேலும் கருவானது உருவாகி ஏழு நாள் வரை ஆண், பெண் வேறுபாடின்றி வாழ்ந்து பின் ஆண் கருவாகவோ, பெண் கருவாகவோ மாற்றமடைகின்றது. இதனால் ஏற்படும் தாக்கங்களும் கருவைப் பாதிக்கின்றது. ஒரு தாய், பெண் பால் கருவைச் சுமக்கும் போது அதை ஆண் கருவாக கற்பனை செய்து சுமப்பதும், திட்டமிடல் இன்றி உருவாகிய கருவை, கருவிலேயே அழிக்க நினைத்து, அக் குழந்தை அதிஸ்ரவசமாய் பிறக்கும் போதும் அக் குழந்தை கருவிலேயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புறக்கணிக்கப்படுகின்றது. இதனால் குழந்தையின் மனதில் அவ் விடயம் பதிக்கப்பட்டு, வளர்ந்து வரும் பிற்பட்ட காலங்களில் தாழ்வு மனப்பான்மை, கோபம், பழிவாங்கும் உணர்வுடன் கூடிய நடத்தைக் கோலங்களுக்கு குழந்தை உள்ளாகியுள்ளமையை அவதானிக்க முடிகின்றது.

இன்று ஹிப்நோட்டிச உளவியல் மருத்துவர்கள், ஒருவரின் உளவியல் சார்ந்த பிரச்சனையைத் தீர்ப்பதற்காக, துணைநாடியை ஆழ்துயில் நிலைக்குக் கொண்டு சென்று, குழந்தை கருவில் இருநத காலப்பகுதியை கேள்விகள் மூலம் கேட்டு அறிந்ததில் இருந்து, பலர் கருவில் தம்மை தம் பெற்றோர் அழிக்க நினைத்ததாக கூறி அழுததாகவும் குறிப்பிடுகின்றனர். ஆகவே கர்ப்ப காலத்தில் ஏற்படும் புறக்கணிப்புக்கள் பிற்பட்ட காலங்களில் குழந்தையின் நடத்தையில் செல்வாக்குச் செலுத்துகின்றது. இத்தகைய பிறழ்வான நடத்தைகளை எமது உளவளத்துணை அமர்வுகளின் போது அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

குழந்தைகள் வளர்ந்து வரும்காலத்தில், பெற்றோரே அவர்களின் முன்மாதிரிகைகளாக இருப்பதனால், பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு நல்ல முன்மாதிரிகையாக திகழ முயற்சிக்க வேண்டும். அக் காலப்பகுதியில் குழந்தை பெற்றோரிடம் இருந்தே பெரும்பாலான நடத்தைகளை உள் வாங்குகின்றது. மேலும் பெற்றோர்கள், குழந்தைகள் பொருட்களால் மட்டும் திருப்தி அடைவார்கள் என்ற மனநிலையில் இருந்து விடுபட்டு, குழந்தைகள் எதிர்பார்க்கும் அன்பு அரவணைப்புக்காக கூடிய நேரம் ஒதுக்க வேண்டும். ஆகவே ஒரு தனியனின் உருவாக்கத்தில் குழந்தைப்பருவம் முக்கிய பங்காற்றுகின்றது.

ஆகவே இன்றைய காலங்களில் இடம்பெறுகின்ற சமூக சீர்கேடுகள், பாலியல் சார் பிறழ்வான நடத்தைகள் அனைத்தும் நவீன உலகில் ஏற்படுத்தப்பட்ட தொடர்பு சாதனங்களின் வளர்ச்சியையே மூலமாகக் கொண்டுள்ளதைக் காணமுடிகின்றது. அத்துடன் ஆரம்பகால மக்கள் பண்பாட்டுடன் இணைந்தே தமது வாழ்க்கைமுறையை வடிவமைத்துக் கொண்ட தன்மையினைக் காணமுடிகின்றது. ஆனால் இன்றைய நவீன காலத்தில் வாழ்கின்ற மக்கள் சிறுசிறு விடயங்களுக்கு கூட சமூகவலைத்தளங்களைப் பயன்படுத்துவதனால் எமது பண்பாட்டுகள் அருகி வருவதனை நாம் கண்கூடாக அறியமுடிகின்றது.

உதாரணமாக ஆரம்ப காலங்களில் பண்டிகைக்காலங்கள் என்னும் போது அக்காலங்களில் வாழ்த்து தெரிவிப்பதற்காக ஒவ்வொருவருடைய இல்லங்களுக்கும் சென்று வாழ்த்துக்களைப் பரிமாறுகின்ற போது அவர்களுடைய உணர்வுகளை நாம் நேரடியாகவே அவதானிக்க முடிந்தது. ஆனால் இவ் நவீன யுகத்தில் தொலைபேசியைப் பயன்படுத்தி தகவல் அனுப்புவதும், முகப்புத்தகத்தில் அவர்களுடைய புகைப்படங்களை பதிவிடுவதன் மூலமும் நாம் தகவல்களைப் பரிமாறிக்கொள்கின்றோம். இங்கு அவர்கள் எவ்வாறான மனநிலையில் இருக்கிறார்கள் என்பதனை எம்மால் அறியமுடியாதுள்ளது. ஆனால் இதுவே நவீன யுக பண்பாடாக மாற்றம் பெறுகின்றது. இவ்வாறான நிலமைகளே, இன்று அதிகளவான மக்கள் உளரீதியான மற்றும் உடலியல்ரீதியான மெய்ப்பாட்டு அறிகுறிகளை வெளிப்படுத்துவதற்கு மிக முக்கியமான காரணம் எனின் அது மிகையன்று. எனவே இன்றைய உலகில் எமக்கே உரித்தான பண்பாடுகளுடன் சேர்ந்து பயணித்தால் ஆரோக்கியமான மகிழ்ச்சியான வாழ்க்கைமுறையை வாழமுடியும் எனின் அது மிகையன்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொ(ல்)லை பேசி



ஜாயிஷா அப்ரார்
யாழ்ப்பாணம்

அன்று சோயாவின் பிறந்தநாள் என்பதால் பெற்றோர் சோயாவிற்கு இன்ப அதிர்ச்சிகளை ஏற்பாடு செய்திருந்தனர். ராஜாவுக்கும், கமலாவுக்கு சோயா ஒரே பிள்ளை என்பதால் செல்லமாகவே வளர்க்கப்பட்டாள்.

அதே நேரம் அன்று க. பொ. த. சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறுகளும் வெளியாகி இருந்தன. சோயாவின் பரீட்சைப் பெறுபேறு மிகவும் நல்ல முறையில் இருந்தது. பெற்றோருக்கு தம் மகள் மேல் இரட்டிப்புச் சந்தோசம் ஊற்றெடுத்தது. எனவே மகளுக்கு மிகவும் உயர்வான பெறுமதியான பரிசுப் பொதியைத் தயார் செய்து கொண்டனர். இரவு பன்னிரண்டு மணிக்கெல்லாம் அலார மணியோசையோடு சோயாவின் தூக்கத்தோடு சோயாவை எழுப்பி கேக் வெட்டிக் கொண்டாடினார்கள் பெற்றோர்கள்.

அந்த நேரம் தான் சோயாவின் பிறந்த தினப் பரிசுப் பொதியும் திறக்கப்படுகின்றது. உள்ளே மிகவும் விலை உயர்வான தொலைபேசி.. சோயாவிற்கு சந்தோசம் தாங்க முடியவில்லை. துள்ளிக் குதித்தாள் பெற்றோருக்கு நன்றி கூறிக் கொண்டாள்.

மறுநாள் காலை பாடசாலையிலும் பிறந்தநாள் இனிப்புப் பண்டங்கள் பரிமாறப்பட்டதுடன், சோயாவின் கைத்தொலைபேசிக் கதையும் வெளியாகியது.... நண்பர்கள் ஒன்று கூடி இணையத்தள வடிவமைப்பு தொடர்பில் சோயாவிற்கு பூரண விளக்கத்தைக் கொடுத்தனர்.

பாடசாலை விட்டவுடன் வீட்டிற்குள் வந்த சோயா எதையும் கவனிக்கவில்லை உடனடியாக தொலைபேசியை எடுத்தாள் நண்பர் கூட்டம் சொன்ன அறிவுரைகளுக்கு அமையவே இணையத்தள நண்பர்களோடு தன்னையும் இணைத்துக் கொண்டாள் .

உணவு கூட உண்ணாமல் பிள்ளை வீட்டுக்குள் என்ன செய்கின்றாய் வாம்மா சாப்பிடு என்று தாயின் குரல் ஒலித்தது.... மிகவும் தாமதமாக சோயா உணவிற்கு வந்தாலும் சிந்தனைகள் முழுதும் தொலைபேசியிலே இருந்தன.

காலம் வேகமாக ஓடியது. தொலைபேசி மூலமாக முகவரி தெரியாத நண்பர்கள் அறிமுகமாகி இருந்தனர் சோயாவிற்கு அதில் ராஜேஸ் என்பவர் மிகவும் நெருக்கமானான் அன்போடு சிரித்துப் பேசி பழகி சோயாவின் நினைவலைகள் முழுவதும் ராஜேஸ் மீது சுற்றியது. சோயா பாடசாலை விட்டு வந்தவுடன் அறைக்குள் நுழைந்து கொள்வார். ஊண் உணவு இன்றி பேஸ்புக் நண்பன் உள்ளத்தில் விரிந்தாகிக் கொண்டான்.

பாடசாலைக்குச் சென்றாலும் பாடங்களைப் பற்றி கதைப்பதை விட "பேஸ்புக் இணையம்" பற்றி கதைப்பது அதிகமாகியது. படிப்பில் ஆர்வம் குறைந்தது அவள் தனிமையையே அதிகம் விரும்பினாள் தாயின் அன்பான உணவு உண்ணும் போது கூட தொலைபேசி தகவல் சத்தம் கேட்டு விட்டால் போதும் உணவைக் கூட விட்டு விட்டு தொலைபேசியை நோக்கி விரையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகளின் நிலைகள் பெற்றோரை வேதனைப்படுத்தியது. இருந்தாலும் பிள்ளை தவறு விடமாட்டாள் என்ற நம்பிக்கை அதிகமாக பெற்றோர் மனதில் வேரூண்றி இருந்தன.

சோயா தன்னை மிகவும் அலங்கரிப்பாள். விதவிதமான ஆடைகளை அணிவாள். தன்னை விதவிதமான புகைப்படங்களை தொலைபேசியில் எடுத்து "பேஸ்புக்கில்" போட்டு வந்தாள். இவளின் புகைப்படங்களைப் பார்த்து நிறைய விமர்சனங்களும் எழ ஆரம்பித்தது. சோயா இரவு நேரத்திலும் நித்திரை கொள்ளாது தொலைபேசியைப் பார்த்துக் கொண்டே இருக்கலானாள்.

ராஜேஸ் சோயா நெருக்கம் அதிகமாகியது. அன்பு வார்த்தைகள் பரிமாறப்பட்டதை நளினங்களும் சாடைகளும் சிரிப்புகளாகியது. சிரிப்புகள் காலம் செல்ல செல்ல காதலாக மாறியது.

ஒரு நாள் சோயாவின் அறையில் தாய் திடீரென வந்து விட்டாள் சோயாவின் மெய் மறந்த பேச்சு தாய்க்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியது. கணவனிடம் விடயத்தைச் சொல்லி கவலைப் படலானார் கமலா .

சோயா பாடசாலை சென்றவுடன் தொலைபேசியை எடுத்துப் பார்த்த பெற்றோர் அதிர்ந்து போய் விட்டனர். ராஜேஸ் தொலைபேசிக்கு விதவிதமான புகைப்படங்கள் பரிமாறப்பட்டிருந்தன. புன்னகை முதல் குளியல் அறைவரை அரை குறை ஆடை அலங்காரங்கள் மூலம் புகைப்படங்கள் பரிமாறப்பட்டிருந்தன.

பெற்றோர் தலை தலையாக அடித்தனர். கதறி அழுதனர் ஐயோ! நம்மட பிள்ளைக்கு தெரியாமல் தொலைபேசியை வாங்கிக் கொடுத்து விட்டோமே..... நாமளே தலையில் மண்ணை அள்ளிப் போட்டு விட்டோமே என்று கூறி கூறிப்புலம்பிக் கொண்டிருந்தனர்.

இறுதியில் தொலைபேசியை திருடன் கொண்டு போய் விட்டான் என்று கூறி விடுவோம். ராஜேனின் காலில் விழுந்தாவது தடயங்கள் முழுவதும் அழிந்து விடலாம். என்று கூறிய ராஜா கதறிக் கதறி அழுதான்..........

அந்த நேரம் உள்ளே வந்த சோயா, வீடே அமைதியாக இருப்பதைக் கண்டு அதிர்ந்தாள். அம்மா.. என்று அருகில் வந்த சோயாவை அனைத்து தாய் கதறிக் கதறி அழுதான் ..... தாயின் அழுகை சோயாவிற்குப் புரியவில்லை ..... என்னம்மா .............. என்று தாயை கேட்ட போது .... தாய் அழுகை பாதி கவலை பாதியாக திருடன் வீட்டிற்குள் புகுந்து திருட்டுப் போனதாக பொய் சொல்லியவுடன் திருடனா...... என்று தனது அறையை நோக்கி ஓடிச் சென்றாள் சோயா தனது தொலைபேசியை காணாததால் என் தொலைபேசியையும் காணவில்லை அம்மா என்று அழுகின்றாள்.

மகள் திருடன் வந்த செய்தியை நம்பிவிட்டாள் என்பதை உணர்ந்த பெற்றோர் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தனர் கதை கதையாகவே இரவாகி விட்டது. சோயா அறையில் தூக்கம் வராமல் புரண்டு கொண்டிருந்தாள். பெற்றோர் இருவருக்கும் தூக்கம் வராமல் முன் அறையில் இருந்து புலம்பிக் கொண்டிருந்தனர்.

அவர்கள் புலம்பல் எல்லோமே ராஜேஸிடம் எப்படி புகைப்படங்களையும், தொலை பேசிகளையும் பெறுவது என்பதை பற்றி கண்ணீருடன் கதைத்த செய்தி சோயாவின் காதில் விழுந்து கொண்டிருந்தன.

ஐயோ! என் அம்மா அப்பாவுக்கு என் விசயம் தெரிய வந்து விட்டதே என்று கலங்கினாலும் அதே விடயத்தை தனக்கு சாதகமாக்கிக் கொண்டாள். அப்பா ராஜேஸ் மிகவும் நல்லவன் அப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறு செய்ய மாட்டான். என்னை மிகவும் நேசிக்கிறான். நம்புங்க அப்பா நம்புவங்க அம்மா என்று தாயின் தந்தையின் கண்ணீரும் ஏக்கத்திற்கும் நடுவே புலம்புகின்றாள் சோயா .

உடனே தந்தை தனது தொலைபேசியை கொடுத்து ராஜேஸிடம் பேசி வீட்டுக்கு அழைக்கும் படி கூறுகின்றார். சோயாவும் ராஜேஸிற்கு அழைப்பு இலக்கத்தை நம்பிக்கையோடு அழுத்துகின்றாள்.

தொலைபேசியை எடுத்த ராஜேஸிடம் சோயா நடந்த விடயத்தை கூறி தந்தை திருமணத்திற்கு ஒத்துக்கொண்டார் என்பதை கூறியவுடன் ராஜேஸ் வாய் விட்டே சிரிக்கின்றான் திருமணமா? யாருக்கு நான் சும்மா தானே பேசினேன் சும்மா பொழுதுபோக்கிற்காக நேரத்தை கடத்த சும்மா பேசினா - யாருக்கு கலியாணம் என்று ராஜேஸ் சிரிக்கிறான்.

ராஜேஸ் விளையாடதே நான் உண்மையாக பேசுகின்றேன். அப்பாவும் அம்மாவும் கலங்கிப் போய் நிக்கின்றாங்க ராஜேஸ் நீ அப்பாவோடு பேசு ராஜேஸ் என்று கூறும் போதே ராஜேஸ் தொலைபேசியை நிறுத்தி விடுகின்றார்.

மீண்டும் சோயா தொலைபேசியை எடுக்கின்றாள் அடேய்! ஏன்டா! என்னை ஏமாற்றினாய் அடப்பாவி பொறு போலீஸில் உன்னை என்ன பண்ணுகிறேன் பார் என்று கத்தினாள். ராஜேஸ் போய் சொல்லடி மறு நிமிசம் உன்ட புகைப்படம் முழுவதும் இணையத்தளத்தில் மிதக்கும் என்று கூறி விரட்டி விடுகின்றான்.

ஐயோ! என்று அழுகின்றாள் சோயா பெற்றோர் முகத்தில் முழிக்க முடியாமல் ஓடிச் சென்று தனது அறையை மூடிக் கொள்கின்றாள். பின்னால் பெற்றோர் சோயா சோயா என்று அழுது அழுது கொண்டே கதவை தட்டுகின்றார்கள் கதவு திறக்கப்படவில்லை.

யன்னல் வழியாக பார்க்கும் போது தூக்கில் சோயா துடிதுடித்து கொஞ்சம் கொஞ்சமாக உயிரை மாய்த்துக் கொண்டிருந்தாள். ஐயோ சோயா என்று கதறிக் கொண்டே கதவு உடைக்கப்படுகிறது. கதவை திறந்த போது சோயா பிணமாக தொங்குகின்றாள்.

தலையில் அடித்துக் கொண்டனர். தங்கள் பிள்ளைக்கு தாங்களே துரோகம் செய்து விட்டோமே என்று கதறினார்கள் தொலைபேசி இவ்வளவு பெரிய தொல்லையாகி விட்டதே என்று கதறிய பெற்றோருக்கு பிள்ளையின் பிரிவை தாங்க முடியவில்லை பொலீஸ் மூலம் சகல முறைப்பாடுகளையும் வழங்கிய பெற்றோர்கள் இரவிலேயே தாங்களும் விஷத்தை குடித்து உயிரை மாய்த்துக் கொள்கின்றார்கள்.

ஒரு குடும்பமே இந்த தொலைபேசி தொல்லையால் அழிந்த செய்திகள் பத்திரிகை மூலமும், இணையத்தளம் மூலமாகவும் தகவல் பரப்பப்படுகின்றன. ராஜேஸ் புலனாய்வுப் பிரிவில் கைது செய்யப்பட்டு புகைப்படமும் தொலைபேசியும் பெறப்பட்டு அழிக்கப்படுகின்றன. ராஜேஸ் தண்டிக்கப்படுகின்றான்.

அழிந்த குடும்பம் மீண்டும் வரப் போவதில்லை ஆனால் இவர்கள் வாழ்க்கைப் பாடம் எங்களுக்கு ஒரு படிப்பினையாகின்றது.

அன்பின் பெற்றோர்களே கல்வி கற்கும் பிள்ளைகளுக்கு எதற்கு தொலைபேசி, வலைத்தளங்கள். இந்த வலைத்தள காட்டில் நிறைய மிருகங்கள் வேட்டையாட காத்திருக்கின்றன. ஜாக்கிரதை!

முற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் - பிரதேச கலாசார பேரவை

பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்.

## JAFFNA DIVISIONAL CULTURAL COUNCIL

DIVISIONAL SECRETARIART, JAFFNA.

## நன்றிகளுடன்



யாழ்ப்பாண பிரதேச செயலத்தின் யாழ்ப்பாண பிரதேச கலாசாரப் பேரவையின் வெளியீடாகிய யாழ்பாடி - 04 கலாசார மலர் வெளியீடு செய்யப்படுவதையிட்டு மலருக்கான மன பதிவுகளை இவ்விடத்தில் பகிர்வதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

யாழ்பாடி கலாசார மலர் இவ்வருடமும் தொடர்ச்சியாக வெளியீடு செய்யப்படுவதையிட்டு மகிழ்ச்சியடைவதோடு இம்மலர் இம்முறை "நவீன உலகில் பண்பாட்டுடன் பயணிப்போம்" எனும் தொனிப்பொருளில் யாழ்ப்பாண பிரதேச எழுத்தாளர்கள், கலைஞர்கள் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்களிடமிருந்து கிடைக்கப் பெற்ற ஆக்கங்களை இன்றைய காலத்தின் தேவைக்கேற்ப நவீன காலத்தில் பண்பாட்டுடன் வாழ்தல் குறித்தும் அதனைப் பேணி காத்தல் குறித்ததுமான பொக்கிஷமாக இந்நூலில் உள்ள ஆக்கங்கள் செய்திகளை கூறி நிற்கின்றது. இப்பிரதேசத்தின் வரலாற்று ஆவணமாகவும் எமது எதிர்கால சந்ததியினர் மேம்பாடடைவதற்கான கருவியாகவும் அமைவதை நோக்காகக் கொண்டு எழுத்தாளர்கள், கலைஞர்களுக்கு களம் அமைத்து கொடுத்து இந்நூல் தொகுக்கப்பட்டுள்ளது. இம் மலரிலே பல்பரிமாண நோக்கில் ஆக்கங்கள் மலர்க்குழுவினரால் தொகுக்கப்பட்டு உள்ளடக்கப்பட்டுள்ளது. இம்மலரிலுள்ள ஆக்கங்களுக்கு படைப்பாளிகளே பொறுப்பாவர்.

இப்பிரதேச மலர் வெளியீட்டிற்கு வழிகாட்டியாய் அமைந்த பிரதேச செயலரும் கலாசாரப் பேரவைத் தலைவருமாகிய திரு.எஸ்.சுதர்சன் அவர்களுக்கும் ஆசிச்செய்திகளை வழங்கிய மதகுருமார்களுக்கும் வாழ்த்துச் செய்தியை வழங்கிய மாவட்டச் செயலாளர், கல்வி அமைச்சின் செயலாளர், பண்பாட்டலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் ஆகியோருக்கும் ஆக்கங்களை வழங்கிய படைப்பாளிகளுக்கும் ஆக்கங்களை தொகுத்து நெறிப் படுத்த உதவிய மலர்க்குழுவினருக்கும் மலரின் அட்டைப்படத்தினை வடிவமைத்து வழங்கிய கலாபூஷணம் ம. அன்ரன் யோசப் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இம்மலர் வெளியீட்டிற்கு கலாசார அபிவிருத்திச் செயற்றிட்டம் 2020ன் கீழ் நிதி உதவி வழங்கிய வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்திற்கு நன்றி தெரிவிப்பதுடன் இணை நிதி அனுசரணை வழங்கி உதவிய விளம்பரதாரர்களுக்கும் விளம்பரங்களை சேகரித்து வழங்கி ஒத்துழைத்த கிராம சேவையாளர்களுக்கும் இம் மலரினை சிறப்பாக குறுகிய காலத்தில் வடிவமைத்து அச்சிட்டு வழங்கிய குரு அச்சகத்தினருக்கும் மலர் வெளியீட்டிற்கு சகல வழி களிலும் ஒத்துழைப்பு வழங்கிய மலர்க்குழு மற்றும் கலாசார பேரவை உறுப்பினர்கள், கலைஞர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் உளம் கனிந்த நன்றிகள் தெரிவித்து நிற்பதோடு யாழ்பாடி தொடர்ந்தும் பாடிக்கொண்டிருக்க இம் முயற்சி மேலும் தொடர அனைவரினதும் மேலான ஒத்துழைப்புக்களை எதிர்பார்த்து நிற்கின்றேன்.

**திருமதி ம. மேர்சி சுஜந்தினி**


கலாசார உத்தியோகத்தர்

பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பண்பாட்டுப் பெருவிழா - 2019
## கலைத்துவமான அரங்க வடிவமைப்பு



## பண்பாட்டுப் பெருவிழா - 2019 வரவேற்பு நடனம்
## யா/கொட்டடி நமசிவாய வித்தியாலய மாணவிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பண்பாட்டுப் பெருவிழா - 2019
### வாத்திய பிருந்தா நிகழ்வு - கீதவாகினி இசைக்கல்லூரி



## பண்பாட்டுப் பெருவிழா - 2019
### யாழ்ப்பாண பிரதேச செயலக உத்தியோகத்தர்களின் 'உருமாறிய கவிதைகள்' நாடகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பண்பாட்டுப் பெருவிழா - 2019
## கலை இலக்கியப் போட்டி - சான்றிதழ் வழங்கல்



## பண்பாட்டுப் பெருவிழா - 2019
## யாழ் ரத்னா விருது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org














Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ்ப்பாண பிரதேச செயலகத்தின்
யாழ்ப்பாண பிரதேச கலாசார பேரவையினால்
வெளியிடப்படும் யாழ்பாடி கலாசார மலர் - 04
நூலுருவாக்கத்திற்கு அனுசரணை வழங்கிய
வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்திற்கும்
இணை நிதி அனுசரணை வழங்கிய
விளம்பரதாரர்களுக்கும் எமது
மனம் நிறைந்த நன்றிகள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org